"புகழ் மாலை"

469



469
43167
O-,3MKN, P
N47
104344

...தைநாயகி அம்மாள்

...54-வது நாவல்

ஜகன்மோகினி

கடைந்தெடுத்த தமிழ் அமுதம்

நந்தவனம்

நாரீமணிகளின் கற்பனாலங்காரம்

பாலர்மோகினி

சிறுவர் அறிவு வளர்ச்சித் தொகுதி.

பாலர் மோகினி

பதிப்பாசிரியர்

வை. மு. ஸ்ரீநிவாஸன், எம்.ஏ.பி.எல்.

புகழ்மாலை

டாக்டர் தொழிலில் ஒருவர் —அதிலும் ஒரு பெண்மணி— வெற்றிபெற்று புகழ்மாலை சூடுவ தென்றால் சாமான்யமானதல்ல. எத்தனையோ விதமான இன்னல் களுக்கும், விபத்துக்களுக்கும் பயப்படாமல் நீந்தி ஜெயித்து பர்த்தாவுக்கும் முகங்கோணாது குடும்ப ராணியாயிருந்து புகழ் மாலை சூடுகிறதென்றால் வியப் பல்லவா? ரமாவின் வாழ்க்கைச் சித்திரம் இதை நிரூபிக்கின்றது.

மூன்றாம் பதிப்பு ரூ. 1—12

★

ஜகன்மோகினி காரியாலயம்.

"வைத்தமாநிதி"

ஸ்டேஷன் ரோட், சிங்கப்பெருமாள்கோவில்.

சென்னை: 26 தேரடித்தெரு, திருவல்லிக்கேணி.

OF THE ... 30 MAR 194.. MADRAS

இந்த நாவலின் சகல உரிமைகளும் ஆசிரியையுடையவை

104344

..., MADRAS

54th "*JMO*" *Publication*.

ALL RIGHTS BELONG TO THE AUTHORESS

SRIMATHI V. M. KOTHAINAYAKI AMMAL.
"*Jaganmohini*" *Building*, *26, Car St.*,
Triplicane, Madras.
NOW AT "VAITHAMANIDHI"
Station Road,
Singaperumal koil.

"ஜகன்மோகினி" பிரஸ், சிங்கப்பெருமாள்கோவில்.

ஸ்ரீ

புகழ் மாலை

அன்பிற் பூத்த அருமலர்

"உலகத்தில், மக்கள் பலவிதமான கேளிக்கைகளையும் சந்தோஷங்களையும் அநுபவிக்கச் செய்வதற்காகவே அநேக பண்டிகைகள், திருவிழாக்கள் கல்யாணங்கள் முதலியன ஏற்பட்டிருக்கின்றன. பண்டிகை, உத்ஸவம் இரண்டிலும் சம பாகத்தைப் பெற்று விளங்குவது பங்குனி உத்திரமல்லவா! அது ஒவ்வொரு கோயிலிலும் வெகு விசேஷமாக நடக்கின்றது. இவ்வருடம் விடுமுறை தினத்தில் அந்த பங்குனி உத்திரம் வருவதால் நாங்களெல்லோரும் சம்பங்கிபுரிக்குப் போகப்போகிறோம்.

உங்கள் உபதேசமென்ன?" என்று ஒரு அழகிய யுவதி தன்னெதிரில் உட்கார்ந்திருந்த இளம் வாலிபனை நோக்கிக் கேட்டாள்.

இதைக்கேட்ட தேவராஜன் நகைத்துக்கொண்டே, "என்ன மனோரமா என்னை விளையாட்டு காட்டுகிறாயா! நீ போகும் சம்பங்கிபுரிக்கு நானும் வரக்கூடாதா! அதற்கு 144 சட்டம் விதிக்கப்போகிறாயா?"—என்று கூறிச் சிரித்தான்.

மனோரமா:—144 சட்டம் விதிக்க நான் அதிகாரி அல்லவே! உங்களைப்போல் நானும், நோயாளிகளுக்குச் சாப்பாட்டிலும் மற்ற விஷயங்களிலும் அடக்குமுறைச் சட்டம் விதிக்கும் ஒரு டாக்டர் தானே! என் சட்டம் உங்களிடம் பலிக்குமா!

தேவ:—ஏன் பலிக்காது? மனிதன் என்றால் வியாதி வராதா! அம்மாதிரி எனக்கு ஏதாவது வந்தால் நீ வைத்தியம் செய்யமாட்டாயா! அப்போது நானும் உன் சட்டத்திற்குள் அடங்கியவன்தானே! என்ன ரமா—என்று கண்ணைச் சிமிட்டினான்.

அப்போது சுவரில் மாட்டியிருந்த கடியாரம், 'கணீர் கணீர்' என்று மணியை அடித்து 'ஆமாம்; அது வாஸ்தவம்' என்று பதில் கூறித் தலையை அசைப்பதுபோல் நாக்கு ஆடியது, இதைக்கண்டு இருவரும் ஒன்றும் பேசாமல் ஒருவரையொருவர் வெகு கூர்மையாகப்பார்த்தவாறே களுக்கென்று நகைத்தார்கள். இருவருடைய கண்களிலும் பிரேமையின் ஜ்வாலை கொழுந்துவிட்டு வீசி இதயத்தில் பளிச்சென்று மின்னி தேகம் முற்றும் ஒரு மின்சாரம் போல் தாக்கியது அடுத்த விநாடியே இருவருடைய தலைகளும் மேஜைமீது பார்வையைச் செலுத்தின.

தேவராஜனின் மனத்தினின்று பொறுமை என்ற பொருள் சற்று விலகியது. ஆவலும் துடிதுடிப்பும் அவனை மீறி உச்சஸ்தாயியை எட்டியதால் அவன் தன்னையே மறந்து, "ரமா!" என்று கூறியவாறு அவள் கரங்களைப் பற்ற வந்தான்.

ரமா முகத்தைச் சுளித்தபடியே "ப்ளீஸ் டோண்ட் டச். கிணற்று நீரை வெள்ளம் கொண்டு போகாது. நாம் உயர்ந்த படிப்பைப்படித்தவர்களாயினும் நமக்கு விலங்கைப் பூட்டிவைக்க நமக்குமேல் உயர்ந்த பெரியோர்களிருக்கிறார்கள் என்பது ஞாபகமிருக்கட்டும். உயர்ந்த படிப்பின் அடையாளம் உயர்ந்த போக்குத்தான் என்பதை நானா சொல்ல வேண்டும்? நாம் என்ன அதீதமான போக்கையுடைய சில மேனாட்டாரின் சுபாவத்தைச் சேர்ந்தவர்களா? அல்லது பெரியார் பொன் விலங்கிடுமுன் காட்டு விலங்கின் சுபாவத்தைச் சேர்ந்தவர்களா! இரண்டுமில்லையே!" என்று ஊடலாகக் கூறி, தேவராஜன் முகத்தைப்பார்த்தாள்.

அவனுக்கு ஒருபுறம் வெட்கம் தலைமீது அறைகிறது. ஒருபுறம் ரமாவின் கம்பீரமான வார்த்தையைக் கேட்டு சந்தோஷமும், தான் தலைகால் தெரியாது ஆத்திரப்பட்டதை எண்ணி அவமானமும் ஒன்றன் மீதொன்றாய்ப் பாதித்தன. சிறிது நேரம் மௌனம் குடிகொண்டது. பிறகு ஒருவாறு பேசத்தொடங்கி, "ரமா! உன் பொன்மொழியால் என்னுள்ளம் பூரிக்கிறது. என் செய்கைக்கு நான் வருந்துகிறேன்; என்னை மன்னிக்கவேண்டும். பொருள் என்னுடையதுதானே என்கிற சொந்தத்

தின் வேக உணர்ச்சி என்னை அப்படிச் செய்துவிட்டது. இனி அம் மாதிரி நேராது; பயப்படாதே. பிரேமை நதியின் பிரவாகத்தின்வேகத்தில் அகப்பட்டவர்களின் நிலை இது. ரமா! என்மீது கோபமா?'' என்று கொஞ்சலாகக் கேட்டான்.

ரமா வாய்திறந்து பதில் பேசவில்லை, எனினும் அவளுடைய பிரகாச மான விழிகளை விசாலமாகத் திறந்து மனத்தை அள்ளும் ஒரு பார்வையில் அவன் உயிரைக் கவ்வுவதுபோல் சுழற்றினாள். ஒரே ஒரு மோகனச் சிரிப்பு, அவ்வளவுதான். முல்லையரும்பைப் பழிக்கும் பல்வரிசைகள் சில விநாடிகள் துல்லியமாகப்பிரகாசித்தன. சூரியன்மறைந்ததும் தாமரை குவிவதுபோல அடுத்த விநாடியே அவள் வாய் குவிந்தது.

தேவராஜனின் இதயத்துடிப்பு பின்னும் பதினாயிரம் மடங்கு அதிகரித் தது. அந்த சிங்காரவதனியின் கூர்மையான பார்வையும், அவனது மனோ வேகத்தைக் கிளறி வேதனையை அதிகப்படுத்தியதேயன்றி குறைக்க வில்லை. கண்களில் இன்ப ஒளி வீச, ''ரமா! இந்த மின்வெட்டுப் பார் வையும் உள்ளத்தைக் கொள்ளை கொள்ளும் பார்வையும் சாமானியமான தல்ல. என்னிதயத்தைத் துளைக்கும் பாணங்களென்றே நினைக்கிறேன். என்னைப் பித்தனாக்கி விடுகிறாய். ரமா!...என்னைப் பயித்தியம் என்று பரிகஸிக்கின்றாயா! ஒரு வார்த்தை சொல்லு. இந்தப் பார்வையாகிய பாணத்தால் என்னைக் கொல்லாதே. ரமா...மனோரமா!''...என்று கேட் கும்போது மனோவேகத்தின் பிரதிபிம்பம் குரலில் த்வனித்தது.

ரமா ஒரு விசித்திரமான தோற்றத்துடன் கடகடவென்று நகைத் தாள். ''ஏதேது! நாவல்களில் வரும் பதங்களையெல்லாம் கொட்டி யளக் கின்றீர்களே!...உம். ஆடவர்களை இவ்வளவு இலேசில் நம்பலாமா! ரமா வைவிட ஒரு ப்ரேமா கிடைத்தால் இந்த பதங்களெல்லாம் இன்னும் விசே ஷமாகக் கிளைத்துச் செழித்து அங்கு பிரகாசிக்கும்போலிருக்கிறது... என்று முடிப்பதற்குள், அவனால் தாங்கமுடியவில்லை.

''ஆ! ஆ! ரமா! போதும்; நிறுத்து. நீயும் உன் கணவனும் சேர்ந் தாற்போல் டாக்டராக இருக்கவேண்டுமென்று நீயும் உன் தகப்பனாரும் ஆதிமுதல் பிரியப்படுவதாய் நான் அறிந்தேன். என்னை வக்கீலுக்குப் படிக்க வைக்கவே என் பிதா மிகவும் விரும்பினார். ஆனால் நான் உன் விருப் பத்தை நிறைவேற்றி, உன்னை மணந்து இருவரும் பூவும் மணமும் போலும், மணியும் ஒலியும் போலும் இன்பமாக இல்லரசு புரியவேண்டு மென்கிற தடுக்கமுடியாத வேட்கையினால்தான் இந்த தொழிலுக்கு வந் தேன். ரமா!...இது சத்தியம். சில முட்டாள்களைப்போல் நான் பச் சோந்தியல்ல, என்னை நோகச் செய்யாதே. ரமா! என்னிதயத்திலுள்ள அன்பின் ஆழத்தை நீ இன்னும் தெரிந்துகொள்ளவில்லையா!'' என்று கேட்கும்போது கண்ணீரும் முட்டியது.

அச்சமயம் ரமாவின் கார்–ட்ரைவர் 'பும்பும்' என்று பெரிதாக ஹாரன் செய்து தன் வரவைத் தெரிவித்ததும், ரமா அலறியதுபோல் ''ஓகோ! கார் வந்துவிட்டது. நான் போய் வரட்டுமா! என்னை மன்னி யுங்கள். பகவான் நமக்குள் பிணைத்துள்ள பாசச் சங்கிலியை அவனால் கூட இனி அறுத்தெறியமுடியாது. என் ஜீவியம் உள்ளளவும் நான் உங்கள்

நிழல் அதைப் பிரிக்க யாராலும் முடியாது. பயப்படாதீர்கள். ஆனால், நம் பெரியவர்கள் நிச்சயம் செய்து அக்கினி சாக்ஷியாக நம்மைப் பிணைக்கும்வரையில் நவீனநாகரிகச் சந்திப்பும், உறவும் வேண்டாம். அதில் ஏதோ ஆனந்தமிருப்பதாக நினைக்கலாம். அத்தனைக்கத்தனை ஆபத்துமிருக்கிறது என்பது நினைவிருக்கட்டும். நான் வரட்டுமா?...ஏன்? நீங்களும் வாருங்கள். உங்கள் வீட்டில் இறக்கிவிட்டுப் போகிறேன்'' என்றாள்.

தேவராஜனின் உள்ளம் குளிர்ந்தது. உடனே மறு பேச்சின்றி காரில் ஏறினான். இருவரும் பேசாப்பதுமைகளாகவே இருந்தார்களெனினும் மனத்தில்மட்டும் சொல்லவறியாத எண்ணங்கள் அலைபோல் கொந்தளித்துக்கொண்டே இருந்தன. வீடு கிட்ட நெருங்கநெருங்க அவன் மனத்தில் ஏக்கம் உண்டாகியது. மௌன விருதத்தை நிறுத்தி ''ரமா!...நானும் உங்களுடன் ஊருக்கு வரலாமா! எனக்கு அந்த பாக்யம் கிடைக்குமா?''...

ரமா:—தாராளமாய் வரலாம். ஸ்வாமியும் அம்மாளும் எழுந்தருளியிருக்கும் கண்கொள்ளாக் காக்ஷியைத் தரிசித்து இன்பமடைவதற்கு ஒருவருடைய அனுமதி வேண்டுமா! கட்டாயம் வாருங்கள். நாங்கள் கார்லேயே தான் போகப்போகிறோம். நான் அப்பாவிடம் சொல்கிறேன்—என்றாள்.

இதற்குள் வீடு வந்துவிட்டதால் தேவராஜன் இறங்கிவிட்டான். ''குட் ஈவினிங் மேடம்! போய் வருகிறேன்'' என்று மரியாதை வார்த்தைகள் கூறினான். ரமாவும் விடைபெற்று உள்ளே சென்றாள். இதுகாறும் எத்தனையோ முறையில் ரமாவும் தேவனும் சந்தித்துப்பேசியிருந்தும், ஒன்றாக காலேஜுக்குப்போயிருந்தும் இன்று சந்தித்துப் பேசியபேச்சின் உணர்ச்சி இருவருடைய உள்ளத்திலும் கூறத்திறமற்ற ஒரு பூகம்பத்தை உண்டாக்கியதால் அந்த அதிர்ச்சியிலேயே இருவரும் அன்று போராடிக் கொண்டிருந்தார்கள்.

ரமாவின் தகப்பனார் மிகவுங் கண்ணியமானகுடும்பத்தைச்சேர்ந்தவர். அவர் உயர்ந்த உத்யோகத்தை வகித்து பட்டங்களும் பெற்ற செல்வாக்குடன் விளங்குபவர். அவருக்குக் கண்ணான பெண் ரமா ஒருத்திதான். ரமாவின் சிறு பிராயம் முதல் அவளை வெகு நல்ல முறையில் பழக்கி உயர்தரமான போக்குடன் வளர்த்துவந்ததனால் அவளுடைய வாழ்க்கை ஒரு மாசு மருவின்றி நடந்துவந்தது.

அனேகத் தொழில்களுக்குள் மிகவும் உயர்ந்ததும் பரோபகாரமானதுமான டாக்டர்தொழிலில் தன் மகளைப் பழக்கி அதில் அவள் மேன்மையடைந்து தினேதினே அபாரமான வெற்றியுடன் புகழ்மாலை சூட்டிக்கொண்டுத் தாம் பார்த்துக் களிக்கவேண்டுமென்று ரமாவின் தாயார் சிறு பிராயம் முதல் ஆசைப்பட்டதால் அவள் விருப்பப்படியே ரமாவை டாக்டருக்குப் படிக்கும் முறையில் அவளது கல்வித் திட்டத்தை வகுத்தார்கள்.

ஆனால், ரமாவின் தாயார் அந்த சந்தோஷத்தைப் பரிபூரணமாய் அனுபவிப்பதற்குள் | காலமாகிவிட்டாள். அந்தத் துயரத்தில் ரமா தன் படிப்பையே நிறுத்திவிடவும் எண்ணினாள். ஆனால் தன் தாயார் விரும்பி எதிர்பார்த்த உத்யோகத்தைத் தான் செய்து அவள் ஆத்மாவையாவது திருப்தி செய்விக்கவேண்டும் என்கிற எண்ணம் உதித்ததால் மீண்டும் படிக்கத் தொடங்கினாள்.

ரமாவின் அத்தையே அவளுக்குத் தாய்போல அன்பு செலுத்தி வளர்த்துவந்தாள். ரமா மரியாதையுடனும் பயபக்தியுடனும் பெரியாரின் பழக்க வழக்கங்களில் முக்யமானதை விடாமலும், நாகரிகத்தின்மோகத்தில் அதிதமாய் ஈடுபட்டு மூழ்கிவிடாமலும் வெகு பாரபுத்தியுடன் படித்தாள்.

தேவராஜன் ரமாவின் தாய் வழியில் தூரத்து பந்துவாகையால் இவ் விருவரும் சிறு பிராயம் முதல் பழகுவதும் விளையாடுவதும், அப்போ தெல்லாம் பெரியவர்கள் இவர்களை தம்பதிகள் என்று பரிகஸித்துச் சிரிப் பதும் இருவரையும் பேசவிட்டு வேடிக்கை பார்ப்பதும், ஒன்ருக உட்கா ரச் செய்து நலங்கிடுவதுமான கேளிக்கைகள் வெகு சகஜமாய் நடந்து வந்தன. இருதரத்தினருக்கும் இந்த சம்மந்தத்தில் அபாரமான திருப்தி யும் சம்மதமும் இருந்ததால் ஒருவர் மனத்தை யொருவர் அறிந்து ஒரே தொழிலுக்குப் படிக்க முற்பட்டார்கள். எத்தனை உறவுக்காரர்களாயிருந் தும், நாகரிகமாகப் பழகியும் அவ்விருவரும் இது பரியந்தம் தனித்து மனத்தை விட்டுப் பேசியது கிடையாது. இருவரையுமறியாது இன்றுத் தமது அந்தரங்க விஷயமான பேச்சுத் தானுக வெளிப்பட்டதை எண்ணி இருவரும் வியந்தார்கள். தாங்கள் விரைவில் தம்பதிகளாகி வாழ்க்கை யிலும் தொழிலிலும் ஒன்ருகப்பிணைத்து ஒருமனப்பட்டு இன்பமாக காலத் தைக் கடத்தவேண்டும் என்று தம்தம் மனத்திற்குள் எண்ணி எதிர்காலத் தின் திட்டத்தை வகுத்தபடியே இரவைக் கடத்தினர்கள். இன்பக் கன வுகள் இருவருடைய இதயத்திலும் பேரானந்தத்தைக் கொடுத்தன.

2

பங்குனி உத்திரமும், மங்களத் திருமணமும்

பங்குனி உத்திர உத்ஸவ வைபவம், கோயில்களிலும் வீடுகளிலும் மகிழ்ச்சி மயமாய் நடக்கின்றது. அம்மனும் ஸ்வாமியும் கோயி லில் எழுந்தருளியிருக்கும் கண்கொள்ளாக்காட்சியில் பக்தகோடிகள் ஈடு பட்டு மெய்மறந்து ஸ்தோத்திரம் செய்து ஸேவித்துக்கொண்டிருந்தார்கள்.

ரமாவின் வீட்டாரும் அந்த பக்தகோஷ்டியில் கலந்து பகவானை ஸேவித்துக்கொண்டிருந்தார்கள். ரமாவுக்கு பங்குனி உத்திரம் என்ருலே ஒரு அலாதி பிரேமை, ஆர்வம், பக்தி முதலியன உண்டு. ஏனெனில் அவள் பங்குனி உத்திரத்தன்றுதான் பிறந்தாள்; ஆதலால், அவளுடைய தாயார் ஒவ்வொரு பங்குனி உத்திரத்தன்றும் ரமாவை கோயிலுக்கு அழைத்து வந்து அர்ச்சனை முதலியன செய்து பகவானை தரிசித்துச் செல் வது வழக்கம்.

ரமாவின் தாயார் பகவானை ஸேவிக்கும்போதெல்லாம், "என்னரு மைக் குழந்தை வளர்பிறை மதியம்போல் வளர்ந்து நன்ருகப் படித்து பரோபகாரத் தொழிலாகிய டாக்டர் தொழிலில் ஈடுபட்டு அவளை உலகம் மெச்சிப் போற்றும்படி அருள் பாலிக்கவேண்டும். எனது கோரிக்கை

அதுதான். அதைப் பரிபாலித்து எனது குறையைத் தீர்க்க வேண்டும்'' என்று வேண்டுவாள்.

தாயின் பிரார்த்தனையைக் கேட்கும்போதெல்லாம் ரமாவுக்குத் தான் எப்போது பெரியவளாகி அம்மாதிரி ஓர் சந்தோஷத்தைத் தன் தாயாருக்கு அளிக்கப்போகிறோம் என்கிற ஏக்கம் உண்டாகும். அதனால் வெகு சுரு சுருப்புடன் படித்து வருவாள். ஆனால் தன்னுடைய துர்ப்பாக்கியம் தாயாரை மறைத்துவிட்டதை அவளால் வெகு நாட்கள் வரையில் பொறுக்கமுடியாதிருந்தது. பிறகு தன் தாயாரின் ஆத்மார்த்த பிரார்த்தனையை ஈடேற்றும் பொருட்டுத் தன்னைத்தானே தேற்றிக்கொண்டாள்.

ரமாவின் தகப்பனுக்குமட்டும் தன் மகள் ஒரு பெரிய உபாத்தியாயினியாயிருக்கவேண்டுமென்கிற ஆசையே இருந்தது. ஏனெனில் உபாத்தியாயினித் தொழிலில், மாணவிகளுக்குக் கல்வியை போதித்து ஏணியைப்போன்று அவர்களை உயர்த்தி அனுப்பிக்கொண்டே இருப்பதில் ஒரு இன்பங் காணலாம் என்பது அவருடைய கருத்து. மேலும், டாக்டர் தொழில் மிகவும் கடினமானது. நம்பிக்கைக்குப் பாத்திரமானது, ஒரு சமயம்போல் ஒரு சமயம் இருக்கமுடியாது. தப்பித்தவறி ஏதோ நினைவில் ஒன்றுக்கொன்று மருந்து கொடுத்துவிட்டால் பேராபத்தாகும். நோயாளிகளின் உயிருக்கே இவர்கள் ஜவாப்தாரியாக வேண்டிய தொழிலாகும். குணமானால் 'கைராசிக்காரி, கெட்டிக்காரி' என்றுபோற்றி புகழ்மாலையைச் சூட்டுவார்கள். குணமாகா விட்டால் உடனே திட்டவும், 'பாவி, படுபாவி, கைராசியற்றக் கட்டை; இவளிடம் காட்டாதிருந்தால் பிழைத்திருக்கக்கூடும்; நாசகாலி. வைத்தியம் செய்யத்தெரியாது கொன்று விட்டாள்' என்கிற பட்டத்துடன் இகழ்மாலையை அரை விநாடியில் சூட்டித்தலையெடுக்கமுடியாதபடிச் செய்துவிடுவார்கள். இதற்கெல்லாம் தன்னருமை மகள் ஆளாகாமல் கல்விக்கடலிலேயே திளைந்துகொண்டு ஆனந்மாயிருக்கட்டும் என்று எண்ணினார்.

ரமாவுக்குமட்டும் தன் தாயாரின் விருப்பத்தின்படிப் படிக்க ஆசைப்பட்டதோடு தானும் தன் கணவனும் ஒரு மனப்பட்டு ஒரே தொழிலில் உழைத்து இருவரும் வெற்றிச் சிகரத்தை எட்டவேண்டும் என்று வெகு ஆவலாயிருந்தது. ஏற்கெனவே தெரிவித்தபடி, தேவராஜனுக்கும் இவளுக்கும் பாலியம் முதற்கொண்டே விவாகத்தைப்பற்றிப் பேச்சு நடந்து வருவதாலும், இருவருடைய வீட்டாரும் சம்மந்தம் செய்ய ஆவல் கொண்டதாலும், தம்பதிகளாகப்போகிறவர்களும் பரஸ்பரம் அன்பு கொண்டதாலும் தொழிலில் ஒன்றாகப் படித்து முடித்தார்கள்.

இப்போது இருவரும் தனியாகவே தொழில் நடத்தும் பக்குவத்திற்கு வந்துவிட்டார்கள். பகவான் சேவிக்கும்போது ரமாவின் விழிகளில் நீர் அருவிபோல் ஓடியது. தன் தாயாரின் ஆகிப்பிராயத்தனைகளும் அவள் இதயம் வெகு ஆவலுடன் எதிர்பார்த்த அன்பின் வேகமும் இன்னும் மற்ற பழைய விஷயங்களும் மனத்தில் தோன்றி வருத்தின.

'என்னுடைய தாயார் இருந்து சந்தோஷிக்கும் பாக்யம் எனக்கில்லாதுபோனாலும், அவளுடைய பிரார்த்தனையின்படிக்கு எனக்கு அருள் புரியவேண்டும். என்னுடைய தொழிலால் பொதுமக்கள் திருப்தியடையும்

படியான சக்தியை எனக்களிக்கவேண்டும். சாந்தமும் சகிப்புத்தன்மையும் எனக்குக் கொடுத்து ரக்ஷிக்கவேண்டும். நானும் என் கணவரும் தேனும் பாலும்போல் ஒற்றுமையாய் இல்வாழ்க்கையிலும், தொழில்முறையிலும் இன்பமடைய கடாக்ஷிக்கவேண்டும்' என்றெல்லாம் வேண்டினள்.

தேவராஜனும் அங்கு வந்திருந்தான் என்று குறிப்பிடுவது மிகையாகும். அவனும் தன் வெற்றிக்கும் தன் தர்ம பத்தினியின் வெற்றிக்கும், இன்ப வாழ்க்கைக்கும், பகவான் அருள்புரியவேண்டுமாய்ப் பிரார்த்தனை செய்தான். பிறகு ஸ்வாமி புறப்பாடும், மங்களாரத்தி வைபவமும் ஸேவித்துக்கொண்டு ஆனந்தமாய் ஒரு பங்களாவில் தங்கினர்கள். கோவில் பிரசாதத்தை எல்லோரும் சந்தோஷமாக உண்டு தாம்பூலந் தரித்தபின் ரமாவை சற்று இனிமையாகப் பாடச்செய்தார்கள்.

ரமாவும் தனது சங்கீதத் திறமையுடன் இன்னிசை குன்ருது சில பாடல்களைப் பாடி எல்லோருக்கும் செவிக்கு அமுத விருந்தளித்தாள். ரமாவின் தகப்பனரும் தேவராஜனின் தகப்பனரும் பாட்டு முடிந்தபிறகு மீண்டும் வெளியே போனர்கள். மற்றவர்கள் சற்று நித்திரைசெய்ய வாரம்பித்தார்கள்.

தேவராஜன்:—ரமா! உனக்கும் தூக்கம் வருகிறதுபோல் தோன்றுகிறதே. நீயும் படுத்துக்கொள்ளேன்.

ரமா:—(பெரிதாக நகைத்துவிட்டு) அடாடா! ஏதாவது பேசவேண்டுமே, இதற்கு என்ன சாக்கு அகப்படும் என்று தூக்கத்தைப்பற்றி ஆரம்பித்தீர்களா? வேறு வார்த்தை அகப்படவில்லையா?

தேவ:—ஏதேது ரமா! உன்னிடம் நான் முட்டாள் பட்டந்தான் பெறுவேன என்ன! வார்த்தைக்கு வார்த்தை எடுத்துக் கவிழ்த்துவிடுகிருயே! இப்போது வேறு எதைப்பற்றிப் பேசமுடியும்? ரமா!

ரமா:—அட ராமச்சந்திரா! எதைப்பற்றிப் பேசமுடியாது? நான் எப்படித் தனியாக தொழில் ஆரம்பிக்கின்றது, என்ன செய்வது என்றெல்லாம் பேசக்கூடாதா! தூக்கமும் மூதேவியுந்தான அகப்பட்டது? உங்கள் பிதா என்ன தீர்மானம் செய்திருக்கிருர்? தனியாக டிஸ்பென்ஸரி வைக்கப் போகிருரா, அல்லது யாரிடமாவது பழகவிடப்போகிருரா!

தேவ:—உன்னுடைய தீர்மானம் எப்படி? உங்கப்பா என்ன சொல்கிருர்?

ரமா:—முதலில், ஒரு வருஷகாலம் எனது பெரிய டாக்டரிடம் இருந்துவிட்டுப் பிறகுதான் தனியாக ஆரம்பிக்கவேண்டுமென்று எனது அபிப்பிராயம், நீங்களும் அப்படியே செய்தால் நல்லதல்லவா! அதன்பிறகு இருவரும் ஒன்ருகவே சிறிய ஆஸ்பத்திரிகூட ஆரம்பிக்கலாம்.

தேவ:—உன்னுடைய முஸ்தீப்பு பெரியதாக இருக்கிறதே. ஏன் நாம் முதலிலேயே தனித்து ஆரம்பித்துவிட்டால் என்ன! ஒருவர்கீழ் ஏன் இருக்கவேண்டும்?

ரமா:—ஹாஹா!... நல்ல யோசனை செய்கிறீர்கள். இந்தத் தொழிலே வெறும் விளையாட்டுத் தொழில் என்று நினைத்து விட்டீர்களா! ஒருவரிடம் படிக்காமல் நாமே இந்தப் பட்டத்தைப் பெற்றுவிடலாம் என்றுகூடக் கூறுவீர்கள்போலிருக்கிறதே. எத்தனை படித்தாலும் ஒரு பெரிய அநு

பவசாலியிடம் முதலில் பழகி அநுபவபூர்வமான பாடங்களைக் கசடறக் கற்றபிறகுதான் நாம் தனியான தொழிலில் இறங்கவேண்டும். குருவில்லாது நாம் விருத்திக்கு வரமுடியாது. இதை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு பழகுங்கள்.

தேவ:—தேவி! உன் சட்டப்படியே யாவும் ஆகுக. உன் பேச்சைக் கேட்கும்போதே பயமாயிருக்கிறதே, நீ யாரிடம் இருக்கப்போகிருய்?

ரமா:—யாரிடமா! எங்கள் குடும்பத்து லேடி டாக்டராகிய ஸ்ரீமதி வஸுந்தராதேவியிடந்தான் நான் பழகப்போகிறேன். அவர்களிடம் இது பற்றிப் பேசி ஏற்பாடுகூடச் செய்தாயிற்று.

தேவ:—ஆனல் உன் காரியம் முடிந்துவிட்டது. உனக்கு மட்டுந்தான் ஏற்பாடு செய்தாயாக்கும். எனக்கு?

ரமா:—அடடா! உங்களுக்குச் செய்வதற்குப் பிதா மலேபோலிருக்கையில் நான் எதற்கு? அவருக்குத்தெரியாததா! அவர் எங்கப்பாவை கேட்டால், அவர் ஸ்ரீமான் ஆத்மநாதனுக்கு சிபார்சு செய்வதாய் எண்ணியிருக்கிறூர்.

தேவ:—ஓகோ! அதையும் தீர்மானம் செய்துவிட்டாயா?'' என்று இவர்கள் பேசும்போது ''அது மட்டுமல்ல. உங்களிருவருக்கும் விவாகத்தைச் செய்து கண்குளிரப் பார்ப்பதற்கும் தீர்மானம் செய்தாயிற்று'' என்று கூறிக்கொண்டே இருவருடைய பிதாக்களும் வந்தார்கள். அன்புமயமான இந்த வார்த்தையைக் கேட்ட ரமாவுக்கும் தேவராஜனுக்கும் வெட்கத்தால் முகம் கவிழ்ந்தது. உள்ளத்தில் ஆனந்தமயமாய்ப் பொங்கியது. ஈச்வர சம்மதத்துடன் பெரியாரின் சம்மதமும் சேர்ந்ததால் அந்த பங்குனி மாதத்திலேயே 25-ந் தேதி முகூர்த்தத்தில் விவாகத்தை நடத்தத் தீர்மானமாகியது.

குறித்த சுப முகூர்த்தத்தில் மனோரமாவுக்கும் தேவராஜனுக்கும் வெகு விமரிசையாய் விவாகம் நடந்தேறியது. வஸுந்தராதேவியும் ஆத்மநாதனுங்கூடத் தம்பதிகளை ஆசீர்வதித்தார்கள். தம்பதிகளின் இன்ப வாழ்க்கையில் த்வஜாரோஹணம் ஆரம்பமாகியது. இருவருடைய உள்ளங்களும் பிரேமைநதியாக மாறிப் பிரவாகமாய் ஓடின.

ரமா வஸுந்தராதேவியிடமும், தேவராஜன் ஆத்மநாதனிடமும் முறையே பழகிவந்தார்கள். வஸுந்தராவைப்பற்றியும் ஆத்மநாதனைப் பற்றியும் ஏற்கெனவே தெரிந்த நேயர்களுக்கு அதிகம் சொல்லவேண்டாம். அறியாதவர்கள் 'கஸ்தூரீதிலகம்' என்கிற நாவலே வாங்கிப்படித்தால் அவர்களின் வரலாற்றை நன்கறிந்து ரஸிக்கலாம்.

அவ்விருவருடைய உத்தம குணத்தையும் தயாள சிந்தையையும், பரோபகாரச் செய்கைகளையும் அப்படியே ரமா கவர்ந்துகொண்டு பணிவு, தன்னடக்கம், சாந்தம் முதலிய நற்குணங்களில் தினேதினே உயர்ந்து வந்தாள். ஆனல் தேவராஜனுக்கு அத்தனே பரிபக்குவம் அடைய அவனது மனது இடந்தரவில்லே. படாடோபம், கம்பீரம், முடுக்கு கொஞ்சம் கர்வம், தானும் ஓர் பெரிய டாக்டர் என்கிற எண்ணம் முதலியவை வளர்ந்துவந்தன.

ஒரு வருடம் பழக எண்ணிய ரமா, தான் கற்றுக்கொள்ளவேண்டியவை அபாரமாயிருப்பதை அறிந்து பின்னும் ஒரு வருடம் நீடித்தாள். இதற்குள் தம்பதிகளின் அன்யோன்ய பாவத்திற்கும் அன்பிற்கும் பிரதிபலனைக் கடவுள் ஒரு அழகிய பெண்குழந்தையை அளித்தார். ரமா கர்ப்பவதியாகியதும், சில குட்டி டாக்டர்கள் அவளைப் பரிகஸித்து, "ஐயையே! டாக்டர் கூடவா உடனே இப்படி வேஷம் போட்டுக்கொள்வது?" என்று ஏசி நகைத்தார்கள்.

அதைக்கேட்ட ரமா நகைத்துக்கொண்டே "சகோதரிகளே! நீங்கள் நினைப்பது போல் நான் நினைக்கவில்லை. எந்த ஒரு சிறிய விஷயமும் தனது சொந்த அநுபவத்தில் கண்டால்தான் அதைப்பற்றிய சகல விவரமும் நாம் நன்கறியக் கூடுமல்லவா! "தலைவலியும் சுங்கடமும் தான் பட்டால்தானே தெரியும்" என்ற பழமொழியை மறந்தீர்களா! அப்போது தான் பிறருடைய நோயின் சிரமம் எப்படி என்று அறியவும், பச்சாத்தாபப்படவும் முடியும். இது என்னுடைய மனப்பான்மையின் கருத்து. மற்றவர்களுடைய கருத்து வேறாயிருக்கலாம்."

என்று முடிப்பதற்குள் அவர்கள் "ஓகோ! அப்படி என்றால் ஒவ்வொரு வியாதியும் டாக்டருக்கு வரவேண்டும்; அப்படி வந்தால்தான் அதன் கஷ்டம் தெரியும் என்கிறாபா?" என்று குறும்பாகக் கேட்டார்கள். அப்போதும் ரமா கோபிக்காது சாந்தத்துடன் பேசத்தொடங்கி "அவசரப்படாதீர்கள். நான்தான் முதலிலேயே சொன்னேனே! ஒவ்வொருவருடைய மனோபாவம் ஒவ்வொரு தினுசு. அந்தந்த நோயில் அடிபட்டவர்களுக்கு அதைப்பற்றி சகல ச்ரமமும் கட்டாயம் தெரிந்து அநுதாபத்துடன் சிகிச்சை செய்யத்தான் தூண்டும்.

இதற்கு ஒரு நிதர்சனம் சொல்லுகிறேன் பாருங்கள், என் மாமாவுக்குக் கடுமையான சீதபேதியும் ஜுரமும் வந்து மிகவும் கஷ்டப்பட்டு அந்த நோயால் ஆளே உருமாறிப் போய்விட்டார். ஆபீஸில் லீவு கேட்டபோது இவருக்கு மேலதிகாரி லீவுகொடுக்க மறுத்துவிட்டாராம்.

என் மாமனுக்குக் கடுங்கோபம் வந்தது. அவருக்கு மேலதிகாரியை நேரில் பேட்டிகண்டு விஷயத்தைச்சொல்லி லீவு கேட்டாராம். அந்த அதிகாரி இதே நோயினல் பீடிக்கப்பட்டு ஒரு மாதம் அவஸ்தைப்பட்டவராம். இதைக்கேட்டவுடன், லீவு கொடுக்கமாட்டேனென்ற கிழுதிகாரியை அழைத்துத் தாறுமாறாகத் திட்டி உடனே லீவு கொடுத்து அனுப்பினர். இது எங்க குடும்பத்திலேயே நேரில் நடந்த விஷயமாகும் அப்படித்தான் ஒவ்வொன்றும்.

நீங்களே பாருங்கள். இந்த கருநோயின் பாதையறியாத சில டாக்டர்கள், சில நர்ஸ்கள் ஆஸ்பத்திரியில் வரும் கர்ப்பிணிகளை எப்படிச் சீறிச் சிள்ளென்று விழுவதோடு அசம்பாவிதமாகவெல்லாம் பேசுவதைப் பார்க்கவில்லையா! எனக்கதைப்பற்றி அவமானமே இல்லை. நானும் தாயாகவேண்டும் என்றுதான் ஆசைப்பட்டேன். என்னுடைய போக்கு இது. இதை நீங்கள் ஒப்புக்கொள்ளவேண்டுமென்று நான் கட்டாயப்படுத்தமுடியுமா!

ஒரு பெண்மணி ஒரு குடும்பத்துக்குரிய தர்ம பத்தினியாயும் பிறகு தாயுமானால் அவளுடைய அறிவும் மதிப்புமே வேறுதான். ஏட்டுப் படிப்பினாலும் கண் பார்வையினாலும் எத்தனை கற்றாலும் இம்மாதிரி விஷயங்களை அனுபவத்தில் கண்டு உணர்கிறவர்களின் நிலைமையே வேறுதான். எனக்கு இம்மாதிரி பதவிகளை வகித்துக்கொண்டே தொழிலும் நடத்த வேண்டுமென்று ஆசை; பகவானும் அருள்புரிந்தார்'' என்று ஆணி அறைந்ததுபோல் பேசினாள்.

அதோடு அந்த சம்பாஷணைக்கு முற்றுப்புள்ளி விழுந்தது. ரமாவின் தொழில் முறையைக்கண்டு வஸுந்தரா மிகவும் மெச்சினாள். பின்னும் ஒரு வருஷத்திற்கெல்லாம் ரமாவும் அவள் கணவனும் தனியாக டிஸ்பென்ஸரி வைத்துக்கொண்டார்கள். தேனும் பாலும்போல் இருவரும் ப்ரேமையுடன் இன்பமாகத் தம் குழந்தையுடன் விளையாடி மகிழ்வதும், தொழில் செய்வதும், தினம் தவறாது கோயிலுக்குப் போவதும் பார்ப்பவர்களுக்கு ஒரு மனப்புரட்சியை உண்டுபண்ணும்படி அவர்களுடைய வாழ்க்கைச் சுடர்ஜோதி அமைந்தது.

முதல் இரண்டு வருடகாலம் இருவருக்குமே அதிகமானப் பிரபலத்வம் ஏற்படவில்லை. இதற்குள் ரமா மீண்டும் ஒரு ஆண் குழந்தைக்குத் தாயானாள். அது ரமாவுக்கும் தேவராஜனுக்கும் தாங்கவியலாத சந்தோஷத்தை அளித்தது. ரமாவின் தகப்பனாருடைய ஏராளமான சொத்துக்களுக்கு அவளே அதிகாரியாதலால் அவள் ஓர் சிற்றரசிபோல் காலந்தள்ளலாம். ஆனால் அவள் அப்படி உடம்பு தேயும்படி உட்கார்ந்திருப்பவளல்ல. அதிகாலையில் எழுந்து பகவத் பிரார்த்தனையை நடத்திப் பின் தனது சொந்த காரியங்களைச் செய்துகொண்டு குழந்தைகளுக்கு முக்கியமான ஆகார விஷயங்களைத் தானே கவனித்துக்கொடுத்துவிட்டு, சமையல் கட்டிலும் ஒரு தரத்திற்குப் பலதரம் சென்று எல்லோரும் சுத்தமாயும் சுறுசுறுப்பாயும் நடக்கிறார்களாவென்று பார்ப்பதும் தன் டிஸ்பென்ஸரியைக் கவனிப்பதும், பிறகு நோயாளிகளைப் பார்ப்பதும், வெளியில் போய் பார்க்கவேண்டிய நோயாளிகளைப் பார்ப்பதுமாக, சாப்பாட்டிற்குப் பிறகு பத்திரிகைகள், வைத்திய சம்மந்தமான புத்தகங்கள் முதலியன படித்துப் பின் சற்று கண்ணயருவாள்.

பிறகு குழந்தைகளுக்குச் செய்யவேண்டியதைச் செய்துப் பின் கணவனுடன் டிபன் சாப்பிட்டுவிட்டு மாலை 3 மணி முதல் 5 மணிவரை நோயாளிகளைக் கவனிப்பதும், பின்னர் வெளியில் சென்று வீடு திரும்புவதும், அதற்குமேல் குளித்துவிட்டு கணவன் குழந்தைகளுடன் போஜனம் செய்துவிட்டு கொஞ்சநேரம் தமாஷாகப் பேசிக்கொண்டிருந்து 10 மணிக்குமேல் படுக்கைக்குச் செல்வாள்.

இம்மாதிரி நேரத்தை வகுத்துக்கொண்டு கணக்காக வேலை செய்வதைக்கண்ட டாக்டர்களே வியந்தார்கள். தேவராஜனுக்கும் சந்தோஷம் கூறத்திறமில்லை. மனமொத்த வாழ்க்கையைக்கண்ட ரமாவின் தகப்பனாரும் உள்ளம் பூரித்தார். இந்த ஆனந்தத்தை அநுபவிக்கப் பேராவல் கொண்டிருந்த தன் மனைவி இப்போது பார்த்து சந்தோஷிக்காமல் போய் விட்டாளே என்று எண்ணி வருத்தமுற்றார்.

3

உதவாக்கரையின் அதம போதனை

தேவராஜனின் ஆப்த நேசனும், தூரத்து உறவினனுமாகிய நாகராஜனுக்கும் டாக்டர் தொழில் என்கிற அடையாளத்திற்கு ஒரு போர்டு வாசலில் தொங்குகிறது. உள்ளே கன்ஸல்டிங் ரூம், என்பதற்கு அடையாளமாக ஒரு படுக்கை, எடைபோடும் மெஷின், கையலம்பும் டப்பு ஒன்று, இன்னும் சில சின்னங்கள் இருப்பதைப் பார்த்தால் இவன் கட்டாயம் டாக்டர் என்று யாரும் கூறிவிடுவார்கள்.

அதைத்தவிர ஒரு நோயாளியைக்கூட அங்கு பார்க்க முடியாது. இந்த ஏக்கத்தில் டாக்டரே நோயாளியைப்போல் காணப்பட்டான். ஒரு மெடிகல் சர்டிபிகெட் வாங்குவதற்காக ஒரு கிழவர் இவனிடம் வந்தபோது நாகராஜன் ஈஸிச்சேரில் படுத்திருந்ததைக் கண்டதும் 'இவன் ஒரு நோயாளி; டாக்டரிடம் காட்டவந்திருக்கிறான்' என்று எண்ணி அவனிடம் சென்று "ஏன் சார்! டாக்டர் வெளியே போயிருக்கிறாரா! வர நேரமாகுமா!... ஐயோ பாவம்!... உங்களுக்கென்ன உடம்பு? மிகவும் மெலிந்திருக்கிறீர்களே! இருமல் நோயோ!"... என்று கேட்டார்.

ஐயோ பாவம்! அந்த டாக்டருக்கு மனது எப்படித்தான் இருக்கும்? தன்னுடைய நிலைமையைக் கண்டுத் தான் வருந்துவது போதாமல் பார்ப்பவர்களும் இப்படியா மானத்தை வாங்குவதுபோல் கேட்கவேண்டும், என்று மனத்திற்குள் எண்ணி முடிப்பதற்குள் அந்தக் கிழவர் மீண்டும் பேசத் தொடங்கி, 'ஏன் சார்! இவரிடம் இப்பதான் வந்தீர்களா, எற்கெனவே இவர் வயித்தியந்தானு!... இதோ பாருங்கள். கோபித்துக் கொள்ளாதீர்கள். நான் வயதில் பெரியவன்; அநுபவசாலி. உங்களைப் பார்த்தால் சிறு பிராயமாயிருக்கிறது. இந்த் டாக்டருக்கு கைராசியுமில்லை; மண்ணுமில்லை. ஏதோ போர்டை மாட்டிக்கொண்டு காலக்ஷேபம் செய்கிறார் பாவம்! ஒருகால் உங்களுக்குத் தெரியாதிருந்தால் நான் சொல்லக்கடமைப்பட்டிருக்கிறேன். எங்க சொந்தக்காரர்களில் சிலர் இவருடைய வைத்தியத்தின் பலனுல், இந்த மகானுடைய இனிஷல் தி. மு. என்ற எழுத்துக்களின் திட்டமான அமைப்புப்படி, தி. திரும்ப மு. முடியாத ஊருக்குப் போய்விட்டார்கள். ஆகையால் இவரிடம் ஜனங்களுக்கு நம்பிக்கையே இல்லை. ஏதோ பிராக்டிஸ்தான் இல்லையே, ஸர்டிபிகேட்டாவது நயமாய்க்கொடுப்பார் என்று சிலர் சொன்னுர்கள்; அதனுல் வந்தேன். ஆசாமியும் காணவில்லை... நீர் இப்போதே ஆத்மநாதனிடம் போங்கள். இல்லாவிட்டால் லேடி டாக்டர் ரமாதேவியிடம் போனுல் வெகு கெட்டிக்காரி, கைராசிக்காரி, ஒரு வேளை மருந்திலேயே குணப்படுத்திவிடுவாள். குட்டி டாக்டர்தான் என்று அலக்ஷியமே வேண்டாம். வெகு நன்றாகப் பார்க்கிறாள். எங்க வீட்டிற்கு அந்தம்மாள்தான் குலதெய்வம். அவளுடைய புருஷனும் டாக்டர்தான். ஆனுல், ஊஹூம். உபயோகமத்த மனுஷர். இந்த டாக்டருக்குத் தம்பிதான். கைராசியும் இல்லை. அநுபவமும் போதாது. தலைக்கிறுக்கும் மண்டைத் திமிரும்மட்டும் குறைவே

இல்லை. அவர் ஒரு நாளும் ஒக்கமாட்டார்...ஐயையோ! மணி போய்க் கொண்டே இருக்கிறதே" என்று தன்போக்காகத் தன் அபிப்ராயம் முழுவதையும் கூறிவிட்டார்.

தன்னைப்பற்றிய மதிப்புரைகளைக் கேட்கும்போது பாவம், அவனால் என்னதான் செய்யமுடியும்? "இந்த நிலைமையில் நான் நோயாளியாகவே நடித்துவிடுவதுதான் மேல். அவமானப்பட்டது போதும்; அதை வெளியில் பகிரங்கமாகக் காட்டக்கூடாது. என் இனிஷலுக்கு உலகத்தில் இந்த அர்த்தமா உலாவுகிறது? ஐயோ விதியே! எனக்கு வரும் பட்டத்தைப் போல் தேவராஜனுக்கும் வந்துகொண்டிருக்கிறதே... அந்த முட்டாள் தனக்குச் சரியான நிலைமையில் மனைவியைப் படிக்கவைத்திருக்கக் கூடாது. கேவலம் ஒரு பொட்டச்சி உயர்ந்துவிடுவது: மீசைமுளைத்த ஆண் சிங்கம் தாழ்ந்துவிடுவதா! சீச்சீ! என்னைப்போல் அவனும் ஒரு பட்டிக்காட்டுப் பெண்ணை மணந்திருந்தால் மனைவியால் வரும் அவமான மாவது குறைந்திருக்குமல்லவா!" என்றெல்லாம் யோசனையிலாழ்ந்தான். கிழவருக்குப் பதிலே சொல்லவில்லை.

கிழவரும் "சரி... இவனை விட்டால் இவனுக்குத் துணையானவர்கள் எத்தனையோ பேர் இருக்கிறார்கள். அங்கு நான் போகிறேன்" என்று முணுமுணுத்துக்கொண்டே போய்விட்டார்.

'கிழவரை அப்படியே குத்திவிடலாமா!' என்று நாகராஜனுக்குக் கோபம் துடித்தது, அப்போது, இவன் பார்த்துவரும் ஒரு நோயாளிக்கு அத்யாபத்தாக இருக்கிறது; உடனே வரவேண்டுமென்று ஆள் வந்தது, அலறிக்கட்டிக்கொண்டு ஓடினான். ஆனால் அந்தத் தெருக்கோடியில் போகும்போது அந்த நோயாளி திரும்பமுடியாத ஊருக்குப் போய்விட்டதை அறிவிக்கும் அலறலைக்கேட்டுத் திடுக்கிட்டபடியே வீடு திரும்பினான்.

அவன் காது கேட்கும்படியே "மகானுபாவன், கை வெச்சா சரி தான். உருப்படுவதேது? இவன் ஒத்தன்; இவனுக்குத் துணை தேவ ராஜன் ஒத்தன். அவன் பார்த்து வந்த ஆசாமி நேற்று டும்போட்டுவிட் டான். இவருடைய ஸ்னேகத்தின் ஒற்றுமை இதில்தான் தெரிகிறது" என்று சிலர் கூறுவதைக் கேட்டதும் தலைநிமிராது அப்படியே வந்துவிட் டான். மனத்தில் சகிக்கமுடியாது வாட்டுகிறது.

"இந்த கேஸாவது கட்டாயம் ஜெயிக்கும். பிழைத்துக்கொள்ளலாம் என்று எண்ணினேனே! அதுவும் வீணாகிவிட்டதே" என்று வருத்தப்பட்டுக் கொண்டிருக்கையில் தேவராஜன் வந்தான். "என்னடா ராஜா! 'இது வும் ஸைபர் போலிருக்கே. அழுகுரல் கேட்கிறதே, அடப்பாவமே!" என்று உபசாரம் கூறுவதுபோல் கூறினான்.

இதைக்கேட்டதும் நாகராஜனுக்குக் கோபம் பீறிக்கொண்டு வந்து விட்டது. "போடா போ! உன் பவிஷுக்கு எனக்கு துக்கம் விசாரிக்க வந்து விட்டாயோ! நீ பார்த்த கேஸ்கூட நேற்றே டும்போட்டுவிட்ட செய் தியை வேண்டுமென்று என் காது கேட்கத் தெருவில் பேசிக் கொண் டார்கள். என் மானம் சிந்திப்போயிற்று. நம்முடைய தோல்விக்குப் பாதி காரணம் உன்னுடைய தர்மபத்தினிதான்டாப்பா! உலகத்தில் எத்தனையோ லேடி டாக்டர்கள் இருக்கிறார்கள். அவர்களில் அனேகர்

நிம்மதியாய் விவாகமே இல்லாது தனிக்காட்டு ராணியாய் அரசுசெலுத்து கிருர்கள். சிலர் கல்யாணம் செய்துகொண்டாலும் தொழிலில் வேறு முறையிலிருக்கிருர்கள். எங்கோ ஒரு சிலர்தான் இருவரும் ஒன்ருக முட்டிக்கொண்டு அழுகிருர்கள்; அவர்களில் சிலர் ஏற்றத்தாழ்வின்றியே இருக்கிருர்கள். உன் மனைவியைப்போல் புருஷனின் கௌரவத்திற்குப் பங்கத்தை விளைவிப்பவர்கள் யாருமே இருக்கமாட்டார்கள்'' என்று சரமாரியாய் அடுக்கிக்கொண்டே போனுன்.

இதைக்கேட்ட தேவராஜனுக்குக் கோபம் வந்துவிட்டது. ''ஏண்டா எந்தமட்டுந்தான் போகிருய் என்று பார்த்தேன். 'தன் காசு செல்லவில்லை என்ருல் தட்டானைக்கட்டியடித்தானும்' என்பது பழமொழி. அதுபோல் உன்னுடைய தோல்வியின் வயித்தெரிச்சலில் நீ என் மனைவியைப் பற்றி அதிகப்ரசிங்கித்தனமாகப் பேசாதே! அவளுடைய புத்திசாலித்தனமும் பொறுமையும் அவளுக்கு வெற்றியைக் கொடுக்கின்றன. இனிமேல் நீ இம்மாதிரி அசம்பாவிதமாய்க் குலைத்தால் எனக்குக் கோபம் வரும். பக வானை வேண்டு. அவரிடம் போய் முறையிடு.... என் கௌரவத்தை ஒருபோதும் அவள் குறைக்கமாட்டாள். போடா பைத்தியக்காரா!' என்று கடுமையாகவே கூறினுன்.

நாகராஜனுக்குப் பின்னும் ஆத்திரம் மூண்டது. ''நான் பைத்தியக் காரனு! நீ பைத்தியக்காரனு! நன்ருக யோசித்துப் பாரு. ஏதோ லேடி டாக்டர் என்கிற முறையில் வைத்தியம் செய்துவிட்டுப் போகாமல் எந்த குப்பத்தில் என்ன அவதி வந்தாலும் சரி, திறப்பு விழா. தலைமை வகித் தல், லெக்ச்சர் கொடுத்தல், சுகாதாரவாரக் கொண்டாட்டம். பள்ளிக் கூடங்களில் பேசுதல் முதலிய வியாபாரங்கள் எதற்கு என்கிறேன். இந்த மாதிரி யெல்லாம் எடுப்பார் கைக்குழந்தையைப்போல் அவளைப் போக விட்டுக்கொண்டே இருந்தால் அவள் எல்லோருக்கும் நல்லவளாகிவிடு கிருள். அவளும் எல்லோரையும் காக்காய்ப் பிடிக்கிருள். அவளையும் எல்லோரும் காக்காய்ப் பிடிக்கிருர்கள். உன் கௌரவம் என்ன? அவள் கௌரவந்தான் என்ன? யார் எதற்கு அழைத்தாலும் மஞ்சள் குங்குமத் திற்குப் போவதுபோல் போய்க்கொண்டேயிருந்தால் கண்ணியமும் மதிப்பும் குறைந்து போகாதோ!'' என்று அவன் ஏதேதோ பேசுவதை தேவராஜனுல் பொறுக்கமுடியவில்லை.

''சீச்சீ! போடா! முட்டாள்தனமாகப் பேசாதே. நான் உன்னிடம் வாதிக்கவோ, சண்டை போடவோ வரவில்லை; போகிறேன்'' என்று கூறிக்கொண்டே வீட்டிற்குத் திரும்பினுன்.

''ரமாவினிடம் நான் கொண்டிருக்கும் ஆழ்ந்த பிரேமையின் எல் லையை அந்த மடையன் எங்கு அறியமுடியும்? அவளை தூஷித்தால் நாக்கை அறுத்துவிடுவேன்'' என்று தனக்குள் முணுமுணுத்தவாறு வந்தான்.

அப்போது வீதியிலேயே ரமா தயாராகக் காத்திருந்தவள், நகைத்துக் கொண்டே ''டாக்டர்! அரைமணி நேரமாகக் காருக்குக் காத்திருக்கிறேன். அருகிலிருந்தால் நடந்தோ ரிக்ஷாவிலோ போயிருப்பேன். 5 மைலுக்கு

அப்பாலுள்ள பேட்டையில் ஆபத்தான ப்ரஸவகேஸாம். அதற்குப்போய் வருகிறேன்'' என்றாள்.

தேவராஜனுக்குச் சந்தோஷம் பொங்கியது. "சித்தம் தேவிரா! பகவான் கிருபையால் ஜெயத்துடன் திரும்ப வேண்டும். நானே ட்ரைவிங் செய்யட்டுமா! ட்ரைவர் வரட்டுமா?'' என்று கேட்டான்.

ரமா:—என்ன டாக்டர் பரிகஸிக்கிறீர்கள்! நீங்கள் ட்ரைவிங் செய்ய நான் பாக்யம் செய்திருக்கிறேன்; எனினும் நான் கேஸை முடித்துக் கொண்டு வருமளவும் நீங்கள் தனித்திருப்பது சரியா! தெரிந்தவர்கள் வீடாயின் அவர்களிடம் பேசிக்கொண்டிருக்கலாம். இது புதிய இடமாயிற்றே! ஆகையால் ஒன்று செய்யுங்கள். என்னை அங்கு கொண்டு விடுங்கள். எத்தனை நேரமாகும் என்று சொல்லுகிறேன். அப்போது மறுபடி காரை அனுப்புவதோ, நீங்கள் வருவதோ செய்யலாம். என்ன! சரிதானா?—என்றாள்.

அதற்கு தேவராஜன் ஆமோதித்தான். உடனே அவனே காரை ஓட்டிக்கொண்டு சென்றான். ரமா அவன் பக்கத்திலேயே அமர்ந்து ஆனந்தமாய்ச் செல்கிறாளேயன்றி போகுமிடத்தில் தனக்கு ஜெயத்தைக் கொடுக்க வேண்டுமே என்று பகவானை வேண்டியபடியே யிருந்தாள்.

இவள் வரவை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்த அவ் வீட்டார் ரமாவைக் கண்டதும், "வாருங்கள்! வாருங்கள். எங்கள் வயிற்றில் பாலை வாருங்கள். உங்களைப் பார்க்கும்போதே எங்கள் மனத்தில் தைரியமும் சந்தோஷமும் பொங்குகின்றன. நீங்கள்தான் எங்களுக்கு இச்சமயம் குலதெய்வம். குழந்தையின் வேதனையைக் கண்டதும், முதலில் உங்களைக் கூப்பிடும்படியாக எத்தனை பேர்கள் சொன்னார்கள் தெரியுமா? உங்களைப்பற்றி நாங்கள் கேள்விப்பட்டிருக்கிறோமேயன்றிப் பழகியதில்லை பாருங்கள். உங்களுடைய புகழை கேட்கக்கேட்க எங்கள் கவலையே நீங்கியது'' என்று தம்மை மீறிய உணர்ச்சியுடன் மழை பெய்வதுபோல், —காரைவிட்டு ரமா இறங்குவதற்குள்—கொட்டிவிட்டார்கள்.

ரமாவின் சந்திரபிம்பம்போன்ற முகத்தில் சந்தோஷத்தினால் ஒரு புன்னகை அரும்பியது. அவர்களுக்கு வந்தனம் செய்தவாறே தன் கணவனை நோக்கி, "டாக்டர்! ஒரு நிமிடம்; இதோ வந்து சொல்லுகிறேன்'' என்று கூறியவாறு உள்ளே சென்றாள்.

தேவராஜன் சேர்முகமாகத் தன் மனைவியைப் பிறர் புகழ்வதை இன்று கண்ணாரக்கண்டு, காதாரக் கேட்கும்போது உள்ளம் ஆனந்தமயமாய்ப் பொங்கியது. "நாம் என்ன பாக்கியம் செய்தோ இத்தகைய அருமைக் கண்மணியை அருந்துணைவியாக அடைந்தோம்'' என்று புலகிதமடைந்தான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் ரமா திரும்பி வந்து, "டாக்டர்! குறைந்தது மூன்று மணி சாவகாசம் பிடிக்கும். இப்போது ஒன்பது மணியாகிறது, சரியாகப் பன்னிரண்டு மணிக்கு வாருங்கள் அல்லது வண்டியை அனுப்புங்கள்'' என்றாள். தேவராஜனும் சந்தோஷத்துடன் சிரித்துக் கொண்டே போய்விட்டான்.

தன் மனைவி இன்னும் சாப்பிடவில்லையே என்று வருத்தம் உண்டாகியது. அதனால் அவனுக்கும் சாப்பிடப்பிடிக்கவில்லை. ஏதோ கொஞ்சம் பழங்களைச் சாப்பிட்டுவிட்டு 12 மணிக்குமேல் அவளுடன் சாப்பிடலாம் என்று முடிவுகட்டி மணியை ஆவலுடன் எதிர்பார்த்துக்கொண்டிருந்து, தானே காரில் கிளம்பினான்.

வழியில் தென்பட்ட சில வாயாடிகள், "அதோ பாருடா! காரை ஓட்டிக்கொண்டு சூரப்புலி போகிறான். இவனும் டாக்டராம் டாக்டர்! காலணா வருமானமில்லாத கௌரவ டாக்டர். அந்தம்மாளின் நல்ல குணத்திற்கு ஏராளமான கேஸ் வருகிறது" என்று உரக்கப்பேசினார்கள்.

கார் அப்போது ஒரு முட்டுச் சந்தில் சென்றதால் வெகு நிதானமாகச் செல்லவேண்டியதாயிற்று. இந்த வீணர்களின் வார்த்தைகள் காதில் விழுந்ததும், "தூத்தூ!" என்று அவர்களிருந்த பக்கம் காரி உமிழ்ந்துவிட்டுக் காரை ஓட்டிச் சென்று அந்த வீட்டு வாசலில் நிறுத்தினான்.

உடனே இரண்டு ஜவான்கள் இரண்டு தட்டுகள் நிறைய கற்கண்டு, பாதங்கொட்டை, ஆரஞ்சு, ஆப்பில், மாதுளை, மலைவாழை முதலியவைகளைக்கொண்டு காரில் வைத்தார்கள். பின்னாலேயே ஒரு பட்டாளம் பேர் புடைசூழ ரமா நகைத்துக்கொண்டே வந்தாள். அவளை வழியனுப்பும் முறையில், "டாக்டர்! மெனிமெனி தாங்ஸ், எங்களுடைய சந்தோஷத்தை எப்படித் தெரிவிப்பதென்றே தெரியவில்லை. நீங்கள் எங்கள் வயிற்றில் பாலைவார்த்தீர்கள். அதிலும் ஆண் குழந்தையாகப் பிறந்தது பற்றி மிகமிகச் சந்தோஷம்... சாயங்காலம் வருகிறீர்களா? ஜுரம் வராதிருக்குமா!" என்று வயதான அம்மாள் கேட்டாள்.

ரமா சிரித்துக்கொண்டே, "அம்மணீ! இனிமேல் ஒரு பயமும் கிடையாது. நான் முன்னெச்சரிக்கையாகவே இஞ்செக்ஷன் கொடுத்திருக்கிறேன். இன்றுமட்டும் கொஞ்சம் ஜுரம் வரும்; பயப்படவேண்டாம். இன்று ஏற்பட்ட அதிர்ச்சியினால் அதுகூட வராதிருக்காது. அதுக்காக பயந்துவிடாதீர்கள். நான் 5 மணிக்குமேல் வருகிறேன். மீதி எல்லாம் நான் சொல்லியபடியே ஜாக்கிரதையாய் நர்ஸ் பார்த்துக்கொள்வாள். பகவான் காப்பாற்றுவார். நான் வரட்டுமா!" என்று வணக்கமாகக்கூறியவாறு, 'அப்பாடா!' என்று அலுப்புடன் வண்டியில் உட்கார்ந்தாள். காரும் கிளம்பியது.

"என்ன ரமா! உன்னைப் பார்த்தால் மிகவும் சோர்வாகக் காணப்படுகிறாயே! கேஸ் ஒன்றும் அபாயமில்லையே!" என்றான் தேவராஜன்.

ரமா;—ஒன்றும் பயமே இல்லை. நார்மல் ஹெல்தாகவே இருக்கிறாள் குழந்தையும் நல்ல தாட்டி, 9 பவுண்டு இருக்கும்; நன்றாயிருக்கிறது. அவர்கள் காப்பி சாப்பிடும்படிப் பலவந்தஞ்செய்து கொடுத்தார்கள். ராமா! ராமா! ஒரே எட்டுப் பாலைக்கொட்டி கலக்கலும் கரிசலும் பார்ப்பதற்குக்கூடப் பிடிக்கவே இல்லை. வாங்கிகூடப் பார்க்காது மறுத்துவிட்டேன். பிறகு 'கலராவது சாப்பிட்டால்தான் திருப்தியாகும்' என்றார்கள். அதனால் கலர் கொஞ்சம் குடித்தேன்... குழந்தைகள் சாப்பிட்டாயிற்று! நீங்கள் இன்னும் சாப்பிடவில்லையே!

தேவ:—இல்லே ரமா! வரவர உன்னேடு சாப்பிடுவதுதான் அரிதாகி விடுகிறதே! கூடச் சாப்பிட வேண்டுமென்று காத்திருக்கிறேன். இந்த பழத்தில் ஒன்று சாப்பிடேன்.

ரமா:—ஊஹூம்...வேண்டாம். வீட்டுக்குப்போய் ஸ்நானம் செய்து விட்டுச் சாப்பிடவேண்டும்—என்ருள்.

இதற்குள் காருக்கு எதிரில் வேகமாக இன்னெரு கார் வந்து, இதை நிறுத்தும்படியாய்க் கையை ஆட்டி டிரைவர் சைகை செய்தான். உடனே தேவராஜன் காரை நிறுத்தினன். அந்த காரும் நின்றது. அதிலிருந்து ஒரு ஆள் இறங்கி, "டாக்டர்! உங்களுக்காக வீட்டில் அரைமணி காத்திருக்கிறேன். செட்டியார் வீட்டில் உடனே கையோடு அழைத்து வரும்படிச் சொல்லியனுப்பினர்கள். நவநீதத்திற்கு உடம்பு சரியில்லையாம். காலேமுதல் நோவாம், அவசரம்" என்று பதைக்கக் கூறினன்.

ரமா என்னதான் செய்வாள் பாவம்! 'இப்போதுதான் ஒரு ஆயுத கேஸ் பார்த்து உடம்பு அலுத்துவிட்டது. மறுபடியும் உடனே போவதென்ருல் என்ன செய்வது? கையில் வலுவுவேண்டுமே?' என்று முதலில் தோன்றியது; உடனே, 'சீ! இம்மாதிரி ஆபத்து சமயத்தில் உதவாது மறுப்பதற்காகவா இந்த உத்தியோகம் செய்வது? பசியாலை இருக்கட்டும்' என்று தீர்மானித்துத் தன் கணவன் முகத்தைப் பார்த்தாள்.

அவன் முகமும் வாடித் துவண்டுபோயிற்று. 'இவளுக்காகப் பட்டினி கிடந்ததுபோக, இன்னமும் சாப்பாட்டுக்கு வழியில்லேயே!' என்று எண்ணி, "சாப்பிடவேண்டாமா ரமா!" என்ருன்.

ரமா:—என்ன செய்வது? இந்தத் தொழிலின் நிலைமை தெரியாதா! நீங்கள் முதலில் இவர்கள் வீட்டிற்குப் போங்கள். அங்குள்ள நிலைமையை அறிந்து சொல்கிறேன்—என்ருள்.

தேவராஜனுக்கு தர்மசங்கடமாகிவிட்டது. தன் மனைவியின் வாக்கைத் தட்டவும் மனம் வரவில்லே. பசியும் அபாரமாய் எடுத்துவிட்டது. திரும்பவும் அங்கு போவதும் வருவதும் ஏதோ ஒரு மாதிரியாய்த் தோன்றியது. எனினும் தன் தர்மபத்தினியின்பால் கொண்டுள்ள அளவிலாப் பிரேமையின் வேகத்தில் அந்த எண்ணம் அடுத்த நிமிடமே மாறி "ஆல் ரைட்" என்று கூறியபடியே காரை விட்டான்.

கார் குறித்த இடத்தில் நின்றதும் வீட்டுக்காரர்கள் முன்பு நிகழ்ந்ததுபோலவே மரியாதையுடன் ரமாவை வரவேற்ருர்கள். ரமா உள்ளே சென்று 10 நிமிடங்கழித்துத் திரும்பிவந்தாள். 'அவள் என்ன சொல்லப் போகிருளோ!' என்று எதிர்பார்த்த தேவராஜன் அவள் முகத்தை உற்று நோக்கினன்.

ரமா:—(நகைத்துக்கொண்டே) டாக்டர்! இன்னும் ஒருமணி காலத்தில் ப்ரஸவமாகிவிடும். நீங்கள்போய் சாப்பிடுங்கள்; பட்டினி கிடக்க வேண்டாம். இப்போது மணி பன்னிரண்டரை ஆகிறது. 2 மணிக்குள் என் வேலேமுடிந்து விடும்; நான் போகிறேன்" என்று கூறி உள்ளே சென்ருள்.

மூணம்பேஸ்து வைத்ததுபோல் தேவராஜனின் முகம் அழுதது. தலையைத் தடவிக்கொண்டே "சரி!" என்று கிளம்பினன். கார் நகர்ந்து

செல்வதற்குள் காருக்குச் சற்று ஓரமாகவிருந்த ஒரு கூட்டம் கடகட வென்று நகைத்துக்கொண்டே, "ஐயோ! வயத்தெரிச்சல் டாக்டரே! இத்தனை பணத்தைச் செலவிட்டு டாக்டருக்குப் படிப்பானேன்? சொல்ப செலவில் ட்ரைவர் வேலைமட்டும் கற்றிருந்தால் பெண்டாட்டிக்கு ட்ரைவிங் செய்யும் உத்யோகத்துடன் நிற்கலாமே! வெட்கக்கேடே!' என்றார்கள்.

இதைக் கேட்ட தேவராஜனின் மனத்தில் சுறுக்கென்று தைத்தது. சரியான படிப்பு படித்துவிட்டுத் தான் இம்மாதிரி வண்டியோட்டுவது இளப்பந்தானு?' என்று ஒரு விநாடி தன்னையே கேட்டுக்கொண்டான். அவன் மனமே அவனைக் கேலி செய்வதுபோல் "ஆமாண்டா! மடப் பயலே! நீயும் ஒரு டாக்டரா?' என்று ஒரு பக்கம் கூறியது.

இன்னொரு பக்கம், 'சிச்சி! முட்டாள்! உன் மனைவியின் பெருமை உனக்கும் பெருமையல்லவா! ஒருவருக்கும் கிடைத்தற்கரிதான மாணிக்கம் உனக்கும் கிடைத்திருக்கையில் அவளுடைய புகழ் உனதுபுகழ். சகதர்மணியல்லவா! சளைக்காதே!" என்றது. இரண்டிலும் போராடியவாறு வீட்டிற்கு வந்தான். அவனல் அறியவும் கூடாது, ஒருவிதமான குழப்பம் மனத்தில் எழுந்து வருத்தியதால் ஒன்றும் தோன்ருது அப்படியே சோபாவில் சாய்ந்தான். மணி டங்கென்று ஒன்றடித்தது.

டெலிபோன் மணி கணகணவென்று அலறியது. உடனே எழுந்து போய் ரிஸீவ் செய்தான். "ஹல்லோ! ஹல்லோ! யாரது? முதலியார் வீடா!... ஆம். நான்தான் டாக்டர் தேவராஜன் பேசுகிறேன். என்ன சமாச்சாரம்? உமது மகளுக்கு ஜுரமா!...லேடி டாக்டரா! வீட்டிலில்லை. கேஸுக்குத்தான் போயிருக்கிருர்கள், எப்போது வருவார்களோ தெரியாது. அவசரமா! நான் வருகிறேன். ஜுரந்தானே! என்ன!... அவர்களே வரவேண்டுமா... அவர்கள் இப்போது வரமுடியாது... உம். அப்றம். உடனே ஒரு ஊசிபோட்டால் சரியாகிவிடும்... அப்படியா! அவர்கள்தான் வரவேண்டுமென்று நோயாளி சொல்கிருர்களா! சரி....

டக்கென்று ரிஸீவரை வைத்துவிட்டான். ஏற்கெனவே குழம்பிய மனத்திற்கு இந்த டெலிபோன் செய்தி மின்னும் தூண்டுகோல் போடுவது போல் மனத்தைக் கலக்கியது. "நானுக வருகிறேன் என்றுல்கூட வேண்டாம் என்று கூறினுனே! அவள்தான் வரவேண்டுமாம். நோயாளியின் இஷ்டமாம்... அடடாடா! இது அவமானத்திலும் பெரிய அவமானமல்லவா! சீச்சீ! என் படிப்பும் முயற்சியும் பாழாகிப்போவதா என் முடிவு?" என்று தனக்குள் எண்ணுததும் எண்ணி மனம் தவித்தான். கூண்டிலடைபட்ட சிங்கம்போல் அப்படியும் அப்படியும் உலாவினுன்.

OF THE REGISTRAR OF BOOKS
3 - MAR 1947
MADRAS

4

உல்லாசத் தம்பதிகளின் சல்லாபப் பேச்சு

மணி இரண்டடித்தது. ரமாவின் வேலை முடிந்து கார் வரவுக்காகக் காத்திருந்தாள். ஏற்கெனவே இருந்த களைப்பு மின்னும் அதிகமாகியது. 'எப்போது வீட்டுக்குப் போகப்போகிறோம்?' என்று எதிர்பார்த்தாள். வண்டியோ வரவில்லை. ஏதனால் வண்டி வரவில்லை என்று தனக்குள் யோசித்தாள். டெலிபோன் செய்வதற்கு அது அவர்கள் வீட்டிவில்லை. அவர்களுக்குக் காரும் கிடையாது. பிறருடைய காரில் முதலில் வந்து அழைத்ததைத் திருப்பியனுப்பிவிட்டார்கள். டாக்ஸி கொண்டுவரும்படிக் கூறினாள். அதற்கு ஆள் போனான்.

தேவராஜன் சாப்பாட்டைக்கூட மறந்து கலக்கத்திலாழ்ந்திருக்கையில் ஒரு பிரமுகர் கையில் பத்திரிகையுடன் வந்தார். "என்ன டாக்டர் சார்! பத்திரிகையைப் படித்துப் பரம சந்தோஷமடைந்தேன். இதை தங்களிடமும் ரமா தேவியிடமும் நேரில் தெரிவிக்கவேண்டுமென்ற ஆவலுடன் இப்போதே ஓடிவந்தேன். டாக்டர்! நீங்கள்தான் பாக்கியசாலி. ஒரு மலருடைய மணத்தைப் பிறர் ஆனந்தப்படுகிறோமேயன்றி மலருக்கு ஏதாவது தெரியுமா! உபயோகம் உண்டா! அந்த கருத்தை இந்த பத்திரிகையில் வெகு அழகாய் எடுத்து எழுதியிருக்கிறார்கள். இதோ படித்துப் பாருங்கள்" என்று கொடுத்தார்.

தேவராஜன் பத்திரிகையை வாங்கிப் படித்தான். அதில், தன் மனைவியைப்பற்றி வெகுவாய்ப் புகழ்ந்து எழுதியிருந்ததைப் படித்ததும் சற்று முன்பு இருந்த கலக்க மாசும் சற்று விலகத் தொடங்கியது.

"இத்தகைய உயர்ந்த அம்சங்களையுடைய லேடி டாக்டர், குடும்பத்தில் எத்தகைய பற்றும் அக்கரையுங்கொண்டு கவனிக்கிறார்கள் என்பதை நேரில் ப்ரத்யக்ஷமாய்ப் பார்த்தோம். பதிசேவையும் கூறத்திறமில்லை. தன் கணவனை உயிராகவும் கடவுளாகவும் கொண்டாடிப் பேசும் அருமையே போதும். அந்தம்மாளை மனைவியாய் அடைவதற்கு அவரும், அவரைப்பதியாய் அடைவதற்கு அந்தம்மாளும் தபஸ் செய்திருக்கவேண்டும்" என்றெல்லாம் எழுதியிருந்ததைத் திரும்பத் திரும்பப் படித்தான்.

'முட்டாள் மனமே! உனக்கு நீயே ஒரு வழியை நிர்ணயிக்காது ஏதேதோ குழப்பத்திலாழ்ந்தாயே! என் கண்மணி ரமாவின் புகழ் என் புகழல்லவா?...ஐயையோ! மணி இரண்டேகாலாகிவிட்டதே! அவள் காத்திருப்பாளே!......முட்டாள்தனம் செய்துவிட்டோமே!'......என்று மனத்தை நொந்துகொண்டான்.

"சார்! நீங்கள் இங்கேயே இருங்கள். நான் போய் அழைத்து வந்துவிடுகிறன்" என்று கூறி அதிவேகமாகக் காரை ஓட்டிச்சென்றான். அப்போதுதான் டாக்ஸியும் அங்கு வந்து நின்றது; ரமா ஏற வரும்போது இந்தகாரைப் பார்த்ததும் சந்தோஷம் பொங்கிய முகத்துடன் "டாக்ஸி வேண்டாம். ஏதாவது கொடுத்தனுப்பிவிடுங்கள்" என்று கூறிவிட்டுத் தன் காரில் ஏறினாள். அவள் முகத்தையொருமாதிரி அன்புடன்

நோக்கியபடியே, "நேரமாகிவிட்டதென்று கோபிக்கிருயா! யாரோ வந்து விட்டார்கள். நேரமாகியதே தெரியாதுபோய்விட்டது. வெகு நேரமாய் காத்திருக்கிருயா?...

ரமா:—இதென்ன கேள்வி? எனக்குக் கோபம் வந்தால்கூட அதைத் தணிக்கும் குளிர்ந்த முகம் என்னருகிலேயே இருக்கையில் கோபமாவது, தாபமாவது? உங்களுக்கு இன்று சற்றுகூட ஓய்வே இல்லாது செய்து விட்டேன்... அது கிடக்கட்டும். சாப்பிட்டீர்களா, இல்லையா!

தே:—இல்லே ரமா! இன்று உன்னுடன் கூடவே சாப்பிடவேண்டுமென்று காலைமுதல் எதிர்பார்க்கிறேன். நேரமானுலும் பரவாயில்லையென்றிருக்கிறேன். சீக்கிரம் குளித்துவிட்டு வா!—என்ருன்.

ரமா வீட்டிற்கு வந்ததும் ஸ்நானம் செய்து பகவத் பிரார்த்தனையை முடித்துக்கொண்டு "மிகவும் அகாலமாகிவிட்டதால் சாப்பாடு வேண்டாம்; ஏதாவது டிப்பன் சாப்பிட்டுவிடலாம்" என்று தீர்மானித்து, இருவரும் அதையே சாப்பிட உட்கார்ந்தார்கள்.

டெலிபோன்-கால் வந்த விஷயத்தைச் சொன்னுல் எங்கே மறுபடியும் போய்விடுவாளோ? என்கிற எண்ணத்தால் அவளிடம் சொல்லாமலேயே தீவிரமாகச் சாப்பிட்டவாறு பேசிக்கொண்டிருந்தான்.

தேவ:—இன்று உன்னைப்பற்றிப் பிரமாதமாகப் புகழ்ந்து ஒரு பத்திரிகையில் எழுதியிருப்பதைப் படிக்கும்போது என் உள்ளம் பூரித்துப் புலகிதமடைந்தது. ரமா! புகழ்தேவதை தன் ஆசி மலர்களைக் கோத்துக் கட்டிய அழகிய புகழ்மாலையை உனக்குத் தினே தினே சூட்டி வருவதைக் காண என் பாக்கியத்தை எண்ணி நானே வியக்கிறேன்.

ரமா:—அடடா! இதொரு பிரமாதமா! இந்த புகழ்தேவதை தங்களையும் ஸ்வீகரித்துவிட்டால் அப்போதுதான் என் மனது சாந்தியை அடையும். அதையே நான் அல்லும் பகலும் ஆண்டவனை வேண்டுகிறேன்.

தேவ:—என்ன ரமா! டிப்பன்கூடச் சரியாய் சாப்பிடவில்லையே! எனக்கே தள்ளிவிடுகிருயே! பசி மந்தித்துவிட்டதா!

ரமா:—வாஸ்தவம். அவர்கள் வீட்டில் எனக்குப் பசி பொறுக்க முடியாதுதான் இருந்தது. ஆனுலும் தண்ணீர்கூடக் குடிக்கவில்லை. அந்த வேளை தவறியது; பசியும் மந்தித்துத்தான் போயிற்று. நீங்கள் சாப்பிடுங்கள்—என்று அன்பொழுகக் கூறியபடியே, ஜிலேபித் துண்டை அவன் வாயில் போட்டாள். தேவராஜனின் ஆனந்தம் கரை புரண்டது. அதைக் குலைக்கும் சத்ருவைப்போல் டெலிபோன் மணி அலறியது. இதைக்கேட்டு ரமா சடக்கென்று எழுந்து டெலிபோனிடம் போகப் போனுள்

தேவராஜனுக்குக் கோபம்கூட வந்துவிட்டது. "என்ன ரமா! ஒரு க்ஷணநேரம் கூட இருக்கலாம் என்ருல் இந்தப்பாழும் போன் இப்படி அடித்துக்கொள்கிறதே! வேலை என்ன? அது அலறட்டும். நீ உட்காரு ரமா!" என்று கையைப் பிடித்து இழுத்தான்.

ரமாவுக்குச் சந்தோஷத்தினுல் நகைப்பு வந்துவிட்டது. "என்ன டாக்டர்! தாங்களே இப்படிப் பேசினுல் நான் என்ன பதில் சொல்வது? நம் குழந்தை உடம்பு சரியில்லாது படுத்திருக்கையில் டாக்டர் வஸுந்தரா

தேவியையும், ஆத்மநாதனையும் நாம் ஒரு நிமிடமாவது வெறுமை இருக்கவிட்டோமா! நாமே டாக்டராகவிருந்தும் எத்தனை பயப்பட்டோம்? எத்தனை நடுங்கினோம்? ஐயோ பாவம்! அவர்களுடைய கவலையும், பாதையும் கூறவேண்டுமா! கேட்டுவிட்டு வருகிறேன். கையை விடுங்கள்'' என்றாள்.

தேவ:—ஊஹூம். நான் விடமாட்டேன். உனக்குப் புகழ் அதிகமாக ஆக எனக்குத்தான் கஷ்டமாகிறது. உன்னைப்பார்க்கவும் உன் அருமை வார்த்தைகளைக் கேட்கவும் உன் இனிய காணம்ருதத்தைப் பருகவும் எனக்கு துர்லபமாகிவிடுகிறது. கல்யாணத்திற்கு முன்பாவது காலேஜிலும் ஆஸ்பத்திரியிலும் அடிக்கடி சந்தித்து இன்பமாகப் பேசிவந்தோம். அப்போதெல்லாம் அதுவும் திருப்திப்படாமல் மனக்குறையாகவே இருந்தது. கல்யாணமானால் தாராளமாய் எப்போதும் ஆனந்தமாயிருக்கலாமே என்று தோன்றியது. விவாகத்திற்குப் பிறகு நீ தாயாகவும், நான் தந்தையாகவும் ஆகும் வைபவத்தில் நாட்கள் கடந்தன. தொழில் உயர்ந்த பிறகோ, அம்மாளின் பேட்டிக்குக்கூட நான் மனு போட்டுக்கொள்ள வேண்டி வந்துவிடும்போலிருக்கிறது. ரமா! இன்று அதிகமாய் களைப்புற்றிருக்கிறாய். இப்படி உட்காரு. டெலிபோனை நான் ரிஸீவ் செய்கிறேன். உன்னை அழைப்பதாயின் நீ இல்லை என்று சொல்லிவிடுகிறேன். உனக்கென்னவோ, உன் தந்தையின் சொத்து ஏராளமாயிருக்கிறது. ஏன் இப்படி கஷ்டப்பட்டு விழுந்து விழுந்து சம்பாதிக்கவேண்டும்?''

என்று கூறியபடியே அவள் கையைப் பிடித்து இழுத்துத் தன் பக்கலில் உட்காரச் செய்ய முயன்ருன்.

ரமாவுக்கு ஆனந்தம் ஒருபுறம், வெட்கம் ஒருபுறம் தோன்றி பெரிதாக நகைப்பு வந்துவிட்டது. "டாக்டர்! நோயால் அவஸ்தைப்படும் மக்களின் நோயைத்தீர்த்து அவர்களுக்கும் அவர்களைச் சார்ந்தார்க்கும் பேரானந்தத்தை விளைவிக்கும் ஒரு ஒப்புயர்வற்ற பதவியை, சக்தியை பகவான் நமக்குக் கொடுத்திருக்கிருர். அந்த ஆனந்தத்தை நாம் இழக்கலாமா! அதனல் எத்தனை பேருடைய இதயங்கள் சந்தோஷத்தில் தேங்கி நம்மை வாழ்த்தும்? அந்த வாழ்த்தல்லவோ நமது பிறவியின் சார்த்தகம். தொழிலின் வெற்றி. இது உங்களுக்குத் தெரியாதா! ஐயோ பாவம்! டெலிபோன் அலறுகிறது. நீங்கள்தான் ரிஸீவ் செய்யுங்கள். ஆனல், நான் இல்லை என்றுமட்டும் சொல்லிவிடாதீர்கள். யாருக்கு என்ன ஆபத்தோ!" என்ருள்.

தேவராஜனே கையை உதறித் துடைத்துக்கொண்டு ரிஸீவ் செய்தான். 'ஆமாம்... டாக்டரம்மா இருக்கிருர்கள். என்ன சமாச்சாரம்... வேலையாயிருக்கிருர்கள்... என்ன... மீட்டிங்கா... எங்கே... அம்மாளுக்குத் தெரியும்...தேதி மாறிவிட்டதா? சரி சொல்லிவிடுகிறேன்... உம்... அப்படியே எழுதிவைக்கிறேன்... 15-ந் தேதி... சரிதான்... கட்டாயம் 4 மணிக்கே வரச்சொல்கிறேன்... குட் ஈவினிங்...

'அப்பாடா! ரமா! இப்பவே எங்காவது கூப்பிடுகிருர்களோ என்று பயந்தேன். நல்லவேளையாக ஏதோ மீட்டிங்காம். 12ந் தேதி இருந்தது 15ந் தேதிக்கு மாறிவிட்டதாம். கட்டாயம் 4 மணிக்கே தேவியை அங்கு பிரசன்னமாகும்படி வேண்டிக்கொண்டார்கள். சித்தம் தேவிரா!' என்றேன்.... எங்கே மீட்டிங்கு? என்ருன்.

'மருத்துவக் கல்லூரியில் ஏதோ விசேஷமாம். அதில் கட்டாயம் பேசவேண்டுமென்று எங்க டாக்டர் வற்புறுத்திச் சிபார்சும் செய்தார்கள்; தட்டமுடியாது ஒப்புக்கொண்டேன். என்ன செய்வது?' என்ருள்.

தேவ:—பேஷ்! ரமா! நீ பெரிய லெக்சராராகக்கூட வந்துவிடுவாய். உன்பாடு குசால்தான். நோயாளிகளைப் பார்க்கப்போவது போதாமல் அங்கு திறப்புவிழா, இங்கு மூடுவிழா... ஆலு தோலு என்று சதா அது வேறு உபத்திரவந்தான். ஏதேது? இனிமேல் என் கண்மணியின் தரிசனங்கூட அருமையாகிவிடுமா என்ன!

ரமா:—அப்படியொன்றும் பயப்படாதீர்கள். சதா உங்கள் நிழலாய்த்தானிருப்பேன். நீங்கள் சொல்லியதுபோல் திறப்பு விழாவைவிட மூடுவிழாக்கள்தான் நிறைய வரவேண்டுமென்பது எனது அவா...

தேவ:—(வியப்புடன்) அதென்ன மூடுவிழாக்கள்? நான் தமாஷாகல்லவா சொன்னேன். நீயும் கேலிக்காகச் சொல்கிருயா!

ரமா:—இல்லை! இல்லை; உண்மையாகவே சொல்கிறேன். இக்காலத்தில் எத்தனைக் கெத்தனை ஓட்டல்கள் அதிகரித்ததோ, அத்தனைக்கத்தனை வியாதி உலகில் வியாபித்துக்கொண்டது; ஏதோ ஒரு சில ஓட்டல்களைத் தவிர மற்ற ஓட்டல்களினுலும், தெருவில் விற்கும் பலகாரங்களினுலும், மிட்டாய்க்கடைகளினுலும் அநேகவிதமான தொத்து வியாதிகள் அதிக

மாய்ப் பரவுகின்றன. அவைகளையும், கள்ளுக்கடைகள், ப்ராத்தல் ஹவுஸ்கள், சீட்டாட்ட விடுதிகள், சோம்பேறி மடங்கள் முதலிய இடங்களை யும் முதலில் மூடிவிட்டால் வியாதியையும், பிறகு சண்டை, மனஸ்தாபம், த்வேஷம், குத்து, கொலை, அடிதடி, வறுமை முதலிய பல சத்ருக்களையும் ஓட்டிவிடலாமல்லவா!

தேவ:—பேஷ்! பேஷ்! சரியான மூடுவிழாக்கள்தான். ரமா! உன் வார்த்தையைக் கேட்டுக்கொண்டே இருந்தாலும் தேவாமிருதம் பருகுவதுபோலிருக்கிறது. இந்த சுகாநுபவமும், நித்யானந்தமும் எனக்கு நீடித்திருக்கப் பகவான் அருள்புரியவேண்டும். ரமா! என்னை பைத்தியம் என்று பரிகஸிக்காதே. நீ இத்தனை புத்திசாலியாயும், மேதாவியாயுமிருக் கிறாயே! உனக்கு ஒருவரும் த்ருஷ்டி வைக்காதிருக்கவேண்டுமே! உனக்கொரு குறைவும் வராதிருக்கவேண்டுமே! என்று எனக்கு ஓயாது கவலை சில சமயம் மூடிவிடுகிறது; சில சமயம் ஏதோ பயமாயும் திகிலாயு மிருக்கிறது...

ரமா:—(கணவனின் தோள்மீது கைபோட்டுத் தழுவியவாறு) டாக் டர்! இதென்ன குழந்தைபோல் பேசுகிறீர்கள்? இத்தனை அன்பை ஆதி முதல் நமக்கு உண்டாக்கி ஒன்றுபிணைத்த கடவுள் ஒருபோதும் குறைவு செய்யவேமாட்டார். வீண் கவலை எதற்கு? இதனால் உடம்பு கெட்டுவிடும். வீண் யோசனையும் சோர்வும் வேண்டாம். டாக்டர்! நாம் இருவரும் உயிரும் உடலுமல்லவா! பூவும் மணமுமல்லவா! ஒன்றையொன்று பிரிக்க முடியுமா! திடீரென்று ஏன் இப்படித் தோன்றுகிறது?

தேவ:—எனக்கே தெரியவில்லை ரமா! ஒவ்வொரு சமயம் உன்னை இழந்துவிடுவேனே!' என்று ஒரு பயங்கர எண்ணம் தோன்றும்போது என்னிதயமே வெடித்துவிடும்போலிருக்கிறது. ஏனிந்தப் பயம் என்று நானே என் மனதைக் கேட்டுக்கொள்கிறேன். ஒரு சமயம் சமாதான மாகிறது. ஒரு சமயம் சங்கடம் செய்கிறது. என்ன செய்வது ரமா!

ரமா:—ஒருவிதமான பயமும் வேண்டாம் டாக்டர்! நான் அல்பாயுஸ் மனுஷியல்ல. என் ஜாதகத்தில் எனக்கு 75 வயது எழுதியிருக்கிறது. தெரியுமா! வீணே கவலையே வேண்டாம்—என்று கூறும்போது மீண்டும் டெலிபோன் மணி அடித்தது. "பார்த்தீர்களா மணி அடிக்கிறது. நீங் களேபோய் ரிஸீவ் பண்ணுங்கள்" என்றாள்.

தேவராஜனே சென்று ரிஸீவ் செய்தான். அவனுடைய பேஷண்டு அவனையே வரும்படியாகச் செய்தி கிடைத்தது. "ரமா! எனக்குத்தான் கால் வந்திருக்கிறது. நான் போய்வருகிறேன். உனக்கு இன்று எங்கும் எங்கேஜ்மெண்டு கிடையாதே?" என்றான்.

ரமா:—நோயாளிகளைப் பார்க்கவேண்டிய வேலைதான் இருக்கிறது. வேறு விசேஷமாய் ஒன்றுமில்லை.

தேவ:—அப்படியானால் இன்று ஒரு சினிமாவுக்குப் போய்வரலாமா! வெகு நாட்களாகிறது நாம் போய். தயார்தானா!

ரமா:—ஓ எஸ்! நான் ஆறுமணிக்குள் பேஷண்டுகளைப் பார்த்துவிடு கிறேன். அவசரமில்லாத இடங்களுக்கு நாளைக்குப் போகலாம்.—என்றாள்.

சந்தோஷத்துடன் தேவராஜன் ரமாவைத் தட்டிக் கொடுத்துவிட்டு "ரமா! கொஞ்சம் ரெஸ்டு எடுத்துக் கொள்ளு, நான் வருகிறேன்" என்று வெளியே சென்றான். ரமாவும் மகிழ்ச்சியுடன் அப்பாடாவென்று சோபாவில் சாய்ந்தாள்.

அவளுடைய மூன்று வயது ஆண்குழந்தை ஓடிவந்து தாயின்மீது முகம் பதித்து, "அம்மா! அம்மா"......என்று ஏதேதோ கூறித் தன் சந்தோஷத்தைத் தெரிவித்தது. ரமாவின் களைப்பெல்லாம் ஒரு கணத்தில் பறந்தோடிவிட்டது. உடனே குழந்தையைத் தூக்கி அணைத்து முத்தமிட்டு அப்படியே அந்த நிகரிலா புத்திரவாத்ஸல்யத்தில் மெய்மறந்து போனாள்.

5

வீர ப்ரசங்கம், விஷவிதை ப்ரயோகம்

ஒரே ஆனந்தம்! யாரைப் பார்த்தாலும் கும்மாளமடித்து இன்புறுகிறார்கள். நூற்றுக் கணக்கில் கூட்டம் குழுமிவிட்டார்கள். கூட்டத்தை நடத்தும் காரியதரிசி முதலில் எழுந்து, எல்லோரையும் அறிமுகப்படுத்திப் பின் தன் கருத்துகளைப் பேசிவிட்டு, "இன்று ஸ்ரீமதி வஸுந்தராதேவி தலைமை வகிக்கவும், ரமாதேவி பேசவும் அமைந்ததானது நமக்கெல்லாம் ஒரு பெரிய பாக்யமென்றே கூறுவேன். நீங்கள் எல்லோரும் கடைசிவரையில் பொறுமையாயும், சாவதானமாயும், இருந்து, விழாவை சிறப்பாக நடத்திக்கொடுக்கும்படி வேண்டுகிறேன்" என்று கூறினாள்.

பிறகு வஸுந்தராதேவி தனது தலைமையுரையை முடித்துக் கொண்டு, "ஸ்ரீமதி ரமாதேவி பேசுவார்கள்" என்று கூறியதோடு ரமாவைப்பற்றிச் சில வார்த்தைகள் சொன்னாள்.

"சிநேகிதர்களே!

ஸ்ரீமதி ரமாதேவி வயதில் மிகவும் சிறியவர்கள்தான் ஆனால் "மூர்த்தி சிறியதாயினும் கீர்த்தி பெரியது" என்ற பழமொழி ரமாதேவிக்கு மிகவும் பொருந்தும். அவர்களுடைய தங்கமான குணமும், ஒழுக்கமும், நோயாளிகளிடம் எல்லையற்ற வாஞ்சையும், அவர்களுடைய பிணியை முதலில் அகற்றும்வரையில் அதே நினைவாக உழைக்கும் உத்தமப்போக்கும், குடும்பத்தில் சிரத்தையும், தமது பதிபக்தியும் எல்லாம் ஒருங்கே அமையப்பெற்ற தருணீமணி அவர்களென்றால் அது மிகையாகாது. இத்தனை சிறு வயதில் இத்தகைய புகழ் வளர்ந்துவருவதற்குக் காரணம், மேற்குறித்த நல்ல அம்சங்களேயாகும், இங்குக் கூடியிருப்பவர்கள் எல்லோரும் மிகவும் மேன்மையானதும், பரோபகாரமானதுமான டாக்டர் தொழிலையே மேற்கொண்டவர்களும், கொள்ளப்போகிறவர்களுமாதலால் உங்களுக்கு முக்கியமான பல விஷயங்களை ரமாதேவி இப்போது பேசுவார்கள்" என்றாள்.

ஒரே கரகோஷத்திற்கிடையே ரமா பேசவாரம்பித்தாள்.

"எல்லோருக்கும் வந்தனம்"

நமது தலைவியவர்கள் ஏதோ பிரமாதமாகப் புகழ்ந்து பேசியதற்கு நான் அருகதையேயல்ல. சிறியவளாகிய எனக்கு ஊக்கத்தையும் உத்ஸாகத்தையும் அளிப்பதற்காகவே அவர்கள் பேசியிருக்கிறார்கள், அதற்காக அவர்களுக்கு எனது வந்தனம்.

எந்தத் தொழிலில் யார் ஈடுபட்டபோதிலும் அந்தத் தொழிலில் முதலில் அந்த நபருக்கு ஒரு நம்பிக்கையும், உத்ஸாகமும், திருப்தியும் உண்டாகவேண்டும். அவை இல்லாவிட்டால் தொழிலில் அவர்கள் வெற்றியை காண்பதற்கே முடியாது, மேற்குறித்தவைகள் பூரணமாக நிரம்பியிருப்பதோடு முயற்சி, கடமை இவ்விரண்டும் அவற்றிற்குத் தூண்டுகோலாக அமையவேண்டும்.

முக்கியமாக, யார் எந்தத் தொழிலைச் செய்தாலும் அதை சிரத்தையுடன் செய்வதோடு 'அது இழிவு; இது தாழ்வு' என்ற பேதாபேதங்களை விளைவித்துக்கொண்டு கலக்கத்தை விலைக்கு வாங்கக்கூடாது. உலகத்தில் கடவுளால் படைக்கப்பட்ட தொழில்கள் பல்லாயிரம் இருக்கின்றன. அகதற்கு ஒவ்வொரு பொறுப்பைக் கொடுத்திருக்கிறார். நம்முடைய தொழிலோயெனின் மிகவும் பொறுப்பு வாய்ந்ததாகும். பிறரின் உயிரே நம்மிடமிருப்பதுபோன்ற அத்தனை பொறுப்புக்குப் பாத்திரமானதாகும். உயிருக்கு மிஞ்சியல்லவா மற்றவை.

இந்தத் தொழிலை மேற்கொண்ட யாவரும் தன்னைத்தான் ஒருபிரமாதமாக நினையாமல் தான் ஒரு ஊழியன், சேவகன்; மக்களுக்குப் பலவிதத்திலும் உதவி புரிய கடமைப்பட்டுள்ளவன்' என்று நினைக்கவேண்டும். நான் பொதுப்படையான விஷயத்தைச் சொல்வதால் யாரும் கோபிக்கக்கூடாது. டாக்டர் என்று ஒரு போர்டை மாட்டியவுடனே தனக்கேதோ இந்திரப் பதவி கிடைத்துவிட்டதுபோல் சிலர் நடக்கின்றார்கள். ஆனால் அந்த நடப்பு அவர்களை ஒரு படிக்கட்டுகூட உயர்த்தாது.

நோயாளிகளின் தாஸனாகத் தன்னை எண்ணி சிரமத்தைப் பாராது இரவோ, நள்ளிரவோ, விடியற்காலையோ, மண்டை வெடிக்கும் வெய்யிலோ, கொட்டும் மழையோ, பல்கிட்டும் குளிரோ எதுவாகவிருப்பினும் நோயாளிகளின் ஆபத்துக்காலத்தில் சற்றும் சலிக்காமல், தியங்காமல், சோம்பாமல், ஸ்ரீமத்கம்பீரம் பார்க்காமல் ஓடவேண்டும். ஏழை என்றும் பணக்காரர் என்றும் பார்க்கக்கூடாது. கடவுள் நம்மை இந்தத் தொழிலின்மூலம் மக்களுக்குச் சேவைபுரிய நியமித்திருக்கிறார் என்பதை நாம் நன்கு உணரவேண்டும். 'கூப்பிட்டபோதெல்லாம் போவதா! கண்ட இடத்திற்கும் போவதா! நினைத்த நேரமெல்லாம் போவதா! குறைந்த பணம் வாங்குவதா!' என்றெல்லாம் சிலர் நினைக்கிறார்கள். அந்த நினைப்பு தொழிலின் வெற்றியை வெட்டும் வாளாகவே அமைகிறது. (கரகோஷம்)

சாந்தம், பணிவு, இன்சொல், மனந்தளராத தைரியம் இவைகளே நோயாளிகளுக்கு ஔஷதத்தைவிட ஆயிரம் பங்கு அதிகரித்த சுகத்தைக் கொடுக்கின்றன என்பது எனது அனுபவமாகும். (கரகோஷம்) எல்லாவிதமான தொழிலுக்குமே பணிவும் சாந்தமும் அத்யாவச்யம். அதிலும் இந்த தொழிலுக்கு அவையில்லையெனில் ஒன்றுமே பிரயோஜனமில்லை.

சில டாக்டர்கள் தம்மிடம் வரும் நோயாளி எந்த சமயத்திலும் வேறு எந்த டாக்டரிடமும் காட்டக்கூடாது என்று நினைக்கிறார்கள். இது சுத்த பிசகு. நாம் ஊரிலில்லாத சமயம் நமது வழக்கப்பட்டவர்களுக்கு நோய் வந்தால் வேறு என்ன செய்யமுடியும்? "அன்று அவரிடம் போனாயே இன்றும் அங்கேயே போ!" என்று சிலர் கண்டிதமாய்க் கூறுகிறார்கள். இது உயர்ந்த நோக்கத்தின், குணத்தின் அழகல்ல.

அவர்களுக்கு 'இன்னொருவரிடம் காட்டினால் குணமாகும்' என்ற நம்பிக்கை தோன்றலாம். அப்போது அவர்களிஷ்டத்திற்கு விரோதமாகப் பார்த்தால் வியாதி அதிகப்படுமேயன்றி குறையாது. இம்மாதிரி நோக்க மிருப்பதை நாமே சமத்காரமாக அறிந்துகொண்டு அந்த பேஷண்டை நாமே அந்த டாக்டரிடம் அனுப்பினால் அது எவ்வளவு பெருந்தன்மையாக யிருக்கிறது பாருங்கள். நோயாளிக்கும் நம்மிடத்தில் நம்பிக்கை அதிகமாகிறது; திருப்தி ஏற்படுகிறது. இன்னொரு டாக்டருக்கும் நமக்கும் சிநேகபாவமும் சகஜபாவமும் உண்டாகின்றன. இதைச் சிலர் அறிவதே இல்லை. (கரகோஷம்)

முக்யமாக இதில் இன்னொரு விஷயத்தை என் சகோதரிகள் கவனிக்க வேண்டும். எங்கு தொழில் செய்யப்போனாலும் வேலை முடிந்ததும் ஒரு வினாடிகூட அங்கு வீண் பேச்சுப் பேசக்கூடாது. அனாவசியமாக யாரிடமும் பேசக்கூடாது. அதிலும் ஆடவர்களிடம் வெகு ஜாக்ரதையாகப் பேசிப் பழகவேண்டும். ஏனெனில், சோதாக்களும், போக்கிரிகளும், சபலபுத்தியுடைய சில பணக்காரர்களும், உலகத்தில் ஆயிரத்தெட்டு ஆண்பிள்ளை டாக்டர்கள் இருந்தும், வேண்டுமென்று பெண்பிள்ளைகளிடம் வைத்தியம்செய்துகொள்ள வருவதும், பல்லிளிப்பதும், விஷமபுத்தியுடன் நடப்பதுமாக அற்பத்தனம்செய்கிறார்கள். தலை போவதாயினும் ஆயிரமாயிரமாய்ப் பணம் வருவதாயினும் அத்தகைய இழிகுணத்தவர்களுக்கு வைத்தியம் செய்யவே கூடாது. நமது வாடிக்கையான பெண்மணியின் வீட்டில் ஒரு சமயாசமயம் அவளுடைய கணவனுக்கோ, தகப்பனுருக்கோ நோய் வந்து, நாம் அப்போது அங்கு செல்லும் சந்தர்ப்பமும் ஏற்படுமானால், அந்த மனிதர்கள் யோக்யர்கள் என்று தெரிந்தால், மனதுக்குப் பிடித்தால் அப்போது வைத்தியம் செய்யலாம். இல்லையேல் புருஷ டாக்டரிடம் காட்டும்படி நாமே சிபார்சுசெய்து அனுப்பிவிடவேண்டும். (கரகோஷம்.)

உதாரணமாகப் பாருங்கள். ஒரு சமயம் ஒரு பணக்காரர் தனக்கு ஏதோ வியாதி என்றும், பார்க்கவேண்டுமென்றும் வந்தார். நான் கண்டிப்பாகப் பார்க்கமுடியாதென்றும், என் கணவரும் டாக்டர் அவரிடம் காட்டுங்கள்; அவர் நாளை ஊரிலிருந்து வருவார் என்றும் கூறியனுப்பினேன். ஆனால் அந்த மனிதர் இன்னும் வரவில்லை. உண்மையில் வியாதியா அல்லது கொழுப்பா! நீங்களே சொல்லுங்கள். (கரகோஷம்) ஆகையால் இது விஷயத்தில் மிகவும் உஷாராயிருங்கள்.

இன்னொரு முக்ய விஷயம். அதாவது—எந்த டாக்டருக்கும் எந்த வித வியாதிக்கும் வைத்தியம் செய்யத்திறமை உண்டு என்று சிலர்

நினைத்துக் கேஸைக்குட்டிச்சுவரடித்து விடுகிறார்கள், பெரிய பெரிய ஆபரேஷன் செய்வதற்குச் சிலருக்குப் போதிய பயிற்சியும் தைரியமும் இருக்கலாம்; சிலருக்குக் குறைவாக விருக்கலாம். அவர்கள் அந்த சிகிச்சையில் கை தேர்ந்தவர்களிடம் தாமே சிபார்சுசெய்து அனுப்பிவிட வேண்டும். அதேபோல் இலும்புருக்கி வியாதி, கண்களில் வரும் வியாதி முதலியவைகளில் பிரபலமானவர்களிடம் அவற்றை ஒப்படைத்துவிட்டு, நமக்கு நிர்ப்பயமானதும் சக்திக்கு மீராததுமான நோயை நாம் குணப் படுத்த ஒப்புக்கொள்ளவேண்டும்.

இத்தொழிலை மேற்கொண்டுள்ளவர்களிடம் கருணை, தயை, பச்சாத் தாபம், தர்மகுணம் முதலியன பரிபூர்ணமாய் இருக்கவேண்டும். பணம் சம்பாதிப்பதற்காகத்தான் நாம் தொழில் செய்கிறோம் என்று எண்ணவே கூடாது. பணமும் சம்பாதிக்கவேண்டும்; நல்ல பெயரும் சம்பாதிக்க வேண்டும்; பணத்தைக் கறப்பதற்கு இதுதான் நல்ல முறை என்று ஒரு சிலர் நினைக்கிறார்கள். ஒரு உதாரணம் பாருங்கள். ஆபரேஷன் செய்வ தற்கு ஒப்புக்கொண்ட ஒரு டாக்டர் கத்தியை வைக்கும்போது "மேலும் 100 ரூபாய் கொடுத்தால்தான் இதைச் செய்யமுடியும்" என்று சொன்னா ராம். அந்தோ பாவம்! இம்மாதிரி கிராதகத்தனமாய்ச் சொல்வதைக் கேட்ட நோயாளியின் மனமோ, மற்றவர்களின் உள்ளமோ எப்படித் துடித்திருக்கும்? ஆபத்து நீங்கினால் போதுமென்று ஒப்புக்கொண்டு தலை யையாவது அடகுவைத்துப் பணத்தை வயிறெரிந்தவாறே கட்டினார்கள்.

பணக்காரர்களிடம் ஒருவிதமாக வாங்கவேண்டும். நடுத்தர மனிதர் களுக்கு உபகாரார்த்தம் வாங்கவேண்டும். பரம ஏழைகளுக்குக் கூடுமான வரையில் இனாமாகவே வைத்தியம் செய்யவேண்டும். இதில் இன்னொரு சங்கடமும் உண்டு. 'இனம் வைத்தியம்' என்று ஆரம்பித்தால் ஆயிரக் கணக்கில் கூட்டம் கூடிவிடுவார்கள். அவர்களுக்கு எப்படி மருந்து கொடுத்துக் கட்டுப்படியாகும் என்று கேட்கலாம்.

அதற்கும் நாம் தீர்க்கமாக யோசனை செய்து சுலபமான வழிகளைக் கண்டுபிடித்து வெகு சொல்ப செலவில் ஆகக்கூடிய மருந்துகளை உபயோ கத்திற்குக் கொண்டுவரவேண்டும். உதாரணமாக, நம் பாட்டிமார்களும், பெரியவர்களும் கை வைத்தியம் செய்யும் முறைகளை ஒரு சிறிது கூடு மானவரையில் நாம் கைப்பற்றவேண்டும். சிரங்குக்கான மருந்துகளைச் சேகரித்து சுலபமாகச் செய்து அவர்களுக்கு உபயோகப்படுத்தவேண்டும். இன்னொன்று ஞாபகத்திற்கு வருகிறது. நான் சிறியவளாய் இருக்கை யில் ஒரு டாக்டர் வந்து ஏதோ வியாதிக்கு மருந்து கொடுத்தார். அதில் குணமாகவில்லை. எங்க பாட்டி, தன் கை மருந்தாகிய கரிசலாங்கண்ணி பச்சிலையுடன் சில மூலிகைகள் சேர்த்து மாத்திரைசெய்து பத்திய முறை யுடன் கொடுத்தாள்; வியாதி சொஸ்தமாகிவிட்டது. அதேபோல் பிரண்டை சூரணம் செய்து இன்னொரு வியாதிக்குக் கொடுத்தாள். அதுவும் குணமாகியது.

இதையறிந்த வைத்தியர் "ஏன் என்னிடம் வரவில்லை? என்ன மருந்து கொடுத்தீர்கள்?" என்று கேட்டதற்குப் பாட்டி, தான் செய்த கைவைத்தியத்தைக் கூறினாள். அவர் அதை நன்றாக மனத்தில் உருப்

போட்டுவிட்டார். சில மாதங்கள் சென்று எங்கள் சொந்தக்காரர் வீட்டுக் குழந்தைக்கு இதேமாதிரி உடம்புக்கு வந்தபோது அதே வைத்தியரிடம் மருந்து வாங்கிவந்தாள். அதைப் பார்த்து என் பாட்டி ஆச்சரியப்பட்டாள். தான் செய்த கரிசலாங்கண்ணி மாத்திரையும், பிரண்டை சூரணமும் ஒரு மாத்திரை ஒரு அணா, ஒரு சூரணப்பொட்டலம் ஒரு அணா விலையில் அந்த டாக்டர் விற்பதை அறிந்து பெரும் வியப்படைந்தாள். பின்னும் சில மாதங்களில் அந்தப் பச்சிலைகள் அதே டாக்டர் வீட்டுப் புறக்கடைத் தோட்டத்தில் பயிராயிருப்பதை என் பாட்டியே பார்த்தாளாம்.

அந்த டாக்டர் என்னமோ நம்மைப்போன்ற இங்கிலீஷ் டாக்டர்தான். ஆகையால் கை மருந்துகளில் கண்கூடாகக் குணமாகும் மருந்துகளையும் சுலபமான சரக்குகளையும் நாம் ஏழைகளுக்குத் தாராளமாக உபயோகப்படுத்தலாம். முடிந்தால் விலை உயர்ந்த மருந்துகளுக்குக் கட்டுப்படியான விலை வாங்கலாம். இம்மாதிரி நாம் அந்த வகையைக் கையாண்டால் எத்தனையோ நல்லதாகவிருக்கும்.

இந்த முறையை என் தலைவிகூட ஆமோதித்ததால் நான் அனேக ஏழைகளுக்குக் கை வைத்தியத்தையும் சொல்லித்தான் வருகிறேன். உதாரணமாகப் பாருங்கள். ஒரு கட்டி பழுப்பதற்கு ஆண்டிபிளஜஸ்டினும் இன்னொன்றும் ஏழைகளுக்குப் போடமுடியுமா? வெகு சுலபமான அரிசி மாவு, யாளிவிதை மாவு, எள்ளு, மஞ்சள் முதலியவைகளை அறைத்துக் கிளறிக் கட்டச் செய்தால் கட்டி பழுத்து உடைந்து போகிறது. அதற்குப் பிறகு நாம் அதை க்ளீன் செய்து பிளாஸ்திரி போட்டால் குணமாகி விடும். இம்மாதிரி சில்லரை விஷயங்களைக்கூட நாம் கவனிக்க வேண்டும்; அலக்ஷியம் செய்யக்கூடாது என்பதுதான் என்னுடைய கருத்து. இம்முறையில் ஏழைகளுக்கு ஏன் வைத்தியம் செய்து அவர்களையும் மகிழ்விக்கக்கூடாது? நாம் இங்கிலீஷ் வைத்தியம் செய்வதனாலேயே நாட்டு மருந்துகளை அவமதிக்கக்கூடாது.

எல்லாவற்றிற்கும் சிகரம் வைத்ததுபோல் கடவுளிடம் பக்தியும், சத்தியத்திற்குக் கட்டுப்பட்ட குணமும் அத்யாவச்யமாகும். அவரவர் மதத்திற்கேற்றபடி பகவானைத் தொழுது நான் மேற்சொல்லியபடி, தன்னை ஒரு பணியாள் என்று பாவித்துச் சேவைசெய்தால் வெற்றி கைம்மேல் கிடைப்பது நிச்சயம். புகழ்தேவியும் ஸ்வீகரிப்பாள். நாமும் இன்பமடையலாம். தலைவியின் வாக்கைத் தட்டக்கூடாதென்று தெரிந்தமட்டும் உளறினேன். பிழைகள் பொறுக்க வேண்டுகிறேன்.'' என்று கூறிவிட்டு உட்கார்ந்தாள்.

ஒரே இடிஇடிப்பதுபோல் கரகோஷமும் ஆரவாரமும் சில விநாடிகள் ஒலித்தன. எல்லோருக்கும் பேராச்சரியமாயிருந்தது.

ரமா பேச ஆரம்பித்ததுமுதல் நாகராஜனுக்கு வயிற்றெரிச்சல் சொல்லமுடியாது. தேவராஜன் பக்கத்திலேயே அவன் உட்கார்ந்திருந்ததால் ஒவ்வொரு வார்த்தைக்கும் ஒவ்வொரு குட்ரயுக்தி அர்த்தம் செய்து, "தேவா! பாருடா! பாரு. இத்தனை பெரிய சதஸில் சொல்லாததுபோல் சொல்லி உன்னையும் என்னையும் சுட்டிக்காட்டுகிறாள் பார்த்தாயா! அட முட்டாளே! இத்தனை அவமானப்படுத்தியும் உனக்கு உறைக்கவில்லையா!

கர்வப்படுவது, ஸ்ரீமத்கம்பீரம், பணிவு கிடையாதது என்ற வார்த்தைகளெல்லாம் யாருக்கு என்று நினைத்தாய்? எல்லாம் உனக்குத்தான். பணிவும், சாந்தமும், இன்சொலும் கொண்டொழுகுவதால்தான் அவள் புகழ்மாலையை அணிந்துவிட்டாள் என்றும் அதெல்லாம் இல்லாததனால் தான் நீ இகழ்மாலையை அணிந்திருக்கிறாய் என்றும் கூறினாள். என்ன தைரியம்! என்ன நெஞ்சழுத்தம்! ஆனாலும் ஒரு பொம்மனாட்டிக்கு இவ்வளவு தலைக்கிறுக்கா! ஊஹூம்...எல்லா ஆண்பிள்ளைகளையும் ஏசிப் பேசுவதற்கு இவள் யாரு என்று கேட்கிறேன். நீதான் உணர்ச்சியற்ற மூண்டம்! எல்லாவற்றையும் கேட்டுக்கொண்டு பல்லைஇளிக்கிறாய். எங்களுக்கெல்லாம் என்னடா வந்தது?

தேவா!... அதோ பாரு. எத்தனை ஆண்பிள்ளைகள் இந்த அழகான லெக்சருக்காகப் பல்லைப் பிளந்துகொண்டு அவளிடம் பேசுகிறார்கள் பாருடா பாரு. ரெண்டு கண்ணையும் திறந்து பார்; உன் உடம்பு எரியவில்லையா! மனம் பதைக்கவில்லையா! என் மனைவியாயிருந்தால் நான் இப்படி விட்டே இருக்கமாட்டேன். அப்படி ஏதாவது இம்மாதிரி பேசியிருப்பாளோ, ஒரே வெட்டு வெட்டித் தள்ளியிருப்பேன்'' என்று தூபம் போட்டுக்கொண்டே இருக்கிறான்.

தேவராஜனின் மனம் நிஷ்களங்கமாயிருந்ததை ஒரு கலக்குக் கலக்கி விட்டதனால் ஒரே குழப்பத்தை யடைந்து தத்தளிக்கவாரம்பித்தது. ''யார் கூப்பிட்டாலும், எந்த நேரத்திலும் போகக்கூடாது'' என்று நான் பலதாமும் அவளிடம் சொல்லியதை அவள் பெரிய சபையில் குத்தலாகக் கூறி, என் மானத்தை வாங்கத்தானே பேசினாள்' என்ற முள் அவன் மனத்தில் தைத்து களங்கத்திற்கு இடத்தையும் உண்டாக்கியது.

நாகராஜன் மேலேமேலே சொல்வதெல்லாம் அவனுக்கு வெகு நியாயம்போலும், ரமா பேசுவதெல்லாம் மகா தவறு என்றும் அவனையறியாது ஒரு எண்ணம் உண்டாகியது, 'ரமாவா நம்மைப்பற்றிக் குத்தலாகப் பேசுவாள்?'.ு. என்று நினைக்கும்போது ஒருவிதமான சங்கடஞ்செய்து வாட்டுகிறது. உட்கார்ந்த இடத்திலேயே பித்தன்போலானான்.

தேவ:—நாகராஜா! இல்லை; இல்லை, நீ சொல்லுகிறபடி ஒருபோதுமில்லை. உண்மையில் என்னைப்பற்றி ரமா குறும்பாகப் பேசவேமாட்டாள். வீணாக என் மனத்தைக் கலைக்காதே... என்னை ஏதோ செய்கிறது.

நாக:—ஐயோ! அஸமஞ்சமே! நானடா உன் மனத்தைக் கலைக்கிறேன்? உனக்குக் காது கண்ணு ஒன்றுமே இல்லையா! கண்டவர்கள் வீட்டிற்கும் கண்ட நேரமும் போகக்கூடாது என்றும், கண்ணியமாய் இருக்கவேண்டுமென்றும் நீ அடிக்கடி உன் மனைவிக்குச் சொல்வதாகச் சொன்னாயே! இப்போது அந்த ரகஸ்யவார்த்தை அம்பலத்தில் வந்த வேடிக்கையை நீயே பாரேண்டா! அவளுடைய தகப்பனாரின் பணத்திமிரில் அவள் உன்னை எங்கேடா இனி மதிக்கப்போகிறாள்!... அந்த டாக்டர் அவளைப்பார்க்கும் பார்வையைப் பாரேன்... ஐயோ வெட்கக்கேடே!'' என்று பின்னும் தூண்டிவிட்டான்.

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையுமல்லவா! தேவராஜனின் மனம் எண்ணெயில் விழுந்த ஈயைப்போல் தத்தளித்தது. கூட்டம் முடிந்

ததும் ஒவ்வொருவரும் ஆண் பெண்கள் அடங்க, ரமாவிடம் வந்து, தமது சந்தோஷத்தைத் தெரிவித்துப் புகழ்ந்தார்கள். எல்லோருக்கும் பணி வாயும் சாந்தமாயும் பதில் சொல்லியனுப்ப அரைமணி நேரமாகியது.

ரமாவின் பிரஸங்கத்தைக் கேட்டுப் பரம த்ருப்தியடைந்த ஒரு கன வான் அவளிடம் வந்து பணிவுடன் "தாயே! உங்களுடைய இன்றைய பிரஸங்கம் அபாரமான சுவையுடன் இருந்தது...நாங்கள் எங்கள் பேட் டைக்கடுத்துள்ள சேரியில் சுகாதார வாரம் நடத்தப்போகிறோம். தாங்கள் தயவு செய்து தலைமை வகித்து அந்த ஜனங்களுக்கு அறிவுக் கண்ணைத் திறந்து வைக்கவேண்டும்" என்று கேட்டுக் கொண்டார்.

ரமா மிகவும் சாந்தத்துடன் "ஆகா! அப்படியே வருகிறேன்" என்று கூறிப் பின் மற்றவர்களுக்கும் பதில் சொன்னாள். வெல்லப் பானையை ஈ மொய்ப்பதுபோல் அவளை மொய்த்துக்கொண்ட ஜனங்களை ஒருவாறு சமாளித்துக்கொண்டு வஸுந்தராவிடம் வந்து விடை பெற்றுக்கொண்டு கிளம்பினாள். அதுவரையிலுங்கூட தேவராஜன் தன்னிடம் வராததால் அவன் எங்கிருக்கிறான் என்று நாலாபக்கமும் பார்த்தாள்.

நாகராஜன், தன் தூபத்தால் கலங்கிக்கிடக்கும் தேவராஜனை மீண் டும் பார்த்து, 'டேய்! எத்தனை நேரமாகிறது. கண்ட தடியன்களுடனும் பேசிக்கொண்டிருக்கிறாளேயன்றி உன்னுடைய ஞாபகமாவது இருக்கிறதா பார்த்தாயா! படிப்பது பகவத்கீதை; இடிப்பது பெருமாள் கோவில் என்பதுபோலிருக்கிறது அம்மாளின் பிரஸங்கமும் செய்கையும்" என்று இடித்துக்காட்டினான்.

அதே சமயம் நாகராஜனின் சிநேகிதன் இன்னொருவன் வந்து "என்ன நாகராஜா! உனக்கும் ஐயா அவர்களுக்கும் சரியான டோஸ் தான் விழுந்ததே!"...என்று கூறிய வார்த்தைகள் வெறும் வார்த்தைக ளாக இல்லாமல் பாணம்போல் இதயத்தில் பாய்ந்தன. முகத்தில் அசடு வழிகிறது. ஒருபுறம் எரிச்சல் தாண்டவமாடுகிறது. தெளிவாயிருந்த குட்டை ஜலத்தைக் கலக்கிவிட்டதுபோலாயிற்று

ரமாவின் லெக்சரால் மிகவும் சந்தோஷத்தையடைந்த வஸுந் தராதேவி அவளைத் தட்டிக்கொடுத்துப் புகழ்ந்தவாறே "ரமா! என்னோடு வருகிறாயா! இன்று ஒரு விநோதமான கேஸ் வந்திருக்கிறது. அதை உனக்குக் காட்டவேண்டும். வா; அங்கு போய்விட்டு உன் வீட்டில் கொண்டுவிடுகிறேன்" என்று கூப்பிட்டாள்.

தன் தலைவியின் வார்த்தையைத் தட்டமுடியவில்லை. கணவனும் கூட வந்திருப்பதால் அவனிடம் சொல்லாமல் வருவதற்கும் மனம் வர வில்லை. ஆகையால் மீண்டும் அவனை அவள் கண்ணில்படாதவாறு மறைவான இடத்திலேயே நிறுத்திப்பேசியதால் இவள் கண்ணுக்குப் புலப்படவில்லை. 'ஒருவேளை அவர் முன்னால் போய்விட்டாரோ!' என்று நினைத்தாள். ஏனெனில், சில சமயம் வேலை இருந்தால், தான் முன்னால் போய்க் காரை அனுப்புவதும் உண்டு; தலைவியுடன் ரமா வருவதும் உண்டு. ஆகையால், போய்விட்டதாகவே எண்ணி அவள் வஸுந்தரா தேவியின் காரில் ஏறிக்கொண்டு, தன் வண்டி வந்தால் திருப்பியனுப்பும் படியாக அங்குள்ளோரிடம் சொல்லிச்சென்றாள்.

இதைப் பார்த்துக்கொண்டிருந்த நாகராஜன் 'பார்த்தாயாப்பா பெண்டாட்டியின் மரியாதையை? வஸுந்தரா, ஆத்மநாதன், சுமதி, இன்னொரு தடியன் ஆக எல்லோரும் எத்தனை ஷோக்காகப் போகிறார்கள் பாருப்பா! பாரு. உன்னை மதிக்கிற மதிப்பு போதுமா! அட அப்பாவி மனுஷா! மூட்டாளே!' என்றான். அவ்வளவுதான். எரிகிற அடுப்பில் எண்ணெயை வார்த்ததுபோல் தேவராஜனின் உள்ளம் போராடுகிறது. ரமா தனக்குப் பெரிய துரோகம் செய்துவிட்டதாயும், அவள் இதுகாறும் பேசியதெல்லாம் வெறும் ஹம்பக்கு, நடிப்பு, வேஷம் என்றும் ஒரு விசித்திர எண்ணம் தோன்றியது. ரமாவிடத்தில் நிமிடத்திற்கு நிமிடம் ஒரு இன்பத்தைக் கண்டு புலகிதமடைந்திருந்த அதே தேவராஜனுக்கு இச்சமயம் அவளிடம் காளகோடி விஷத்தைக் காண்பதுபோன்ற ஓர் வெறுப்பும் கசப்பும் ஆத்திரமும் தோன்றின. ஆத்திரம் தலைக்கேறிவிட்டால் மனிதனின் நிலைமை தடுமாறுவதற்குக் கேட்கவேண்டுமா! விஷவிதை இதய நிலயத்தில் சிதறியது.

நேரே வீட்டிற்கு வந்தான். என்றுமிருக்கும் பிரஸன்ன வதனத்தைக் காணமல் கடுகடுத்துக் கோபஜ்வாலை வீசியதைக்கண்ட ரமாவின் தகப்பனருக்கு ஒன்றுமே புரியவில்லை. அவர் வழக்கம்போல் "ரமா எங்கே? இன்னும் பிரஸங்கம் முடியவில்லையா?...வழியில்கூட ஏதாவது கேஸ் வந்துவிட்டதா?...யாரோ அவசரமாக டெலிபோனில் அழைத்தார்கள்" என்றார்.

தேவராஜன் முகத்தை நேரே பார்த்துப் பதில் சொல்லாமல் "பிரஸங்கமா? கட்டிய கணவனை சதஸ்ஸில் அவமானப்படுத்தும் அதிகப்பிரசங்கம் முடிந்துவிட்டது. அவளுக்கு இஷ்டமான தடியன்களுடன் காரில் ராணி ஜம்மென்று போய்விட்டாள்... என்னுடைய முட்டாள்தனத்தின் விபரீதம் இப்போதுதான் தெரிகிறது" என்று சொல்லிக்கொண்டே உள்ளே போனான்.

ரமாவின் பிதாவுக்குத் தூக்கிவாரிப் போட்டது. "தேவராஜ்! இதென்ன பேச்சு! நீயா இப்படி ரமாவைப்பற்றிப் பேசுகிறாய்? உண்மையாகவா பேசுகிறாய்? தேவா! நில்லு... நில்லு"... என்று மிக்க கவலையுடன் கேட்டுக்கொண்டே பின்னால் ஓடினார். எதிரில் வந்த குழந்தை "அப்பா!" என்று ஆவலுடன் கூவிக்கொண்டே ஓடிவந்து, வழக்கம்போல் காலைக் கட்டிக் கொண்டது.

கண்ணு மண்ணு தெரியாத மூட ஆத்திரத்தின் வேகத்தில் "அப்பா! கூப்பிடும் மூஞ்சியைப் பாரு" என்று ஒருவிதமான வெறுப்புடன் நங்கு காட்டிக் கூறியபடியே, காலால் ஒரு உதை கொடுத்துக் குழந்தையைத் தள்ளினான். வீரென்ற சப்தத்துடன் குழந்தை உருண்டுபோய் ஒரு சோபாவில் மோதியதைக் கண்ட ரமாவின் பிதாவுடைய இதயத்தில் குத்துவதுபோல் சுரீலென்றது. அவர் நிற்கும் இடமே கிடுகிடென்று ஆடுவதுபோல் தோன்றியது. இந்த விபரீதம் எந்தப் படுகுழியில் வீழ்த்துமோ! யார் கண்டது?

6

ஆனந்த வருகையும் அதிர்ச்சி சம்பவமும்

ஆனந்தமாகப் பாடிக்கொண்டே ரமா வீட்டிற்கு வந்தாள். மணி டாங் டாங்கென்று 10–அடித்தது. "ஓ! இதற்குள்ளாகவா மணி பத்தடித்துவிட்டது! அடடா! நேரம் போனதே தெரியாது பேசிக்கொண்டிருந்தேனே! குழந்தைகளெல்லாம் சாப்பிட்டாயிற்றோ என்னவோ?" என்று தனக்குள் சொல்லியபடியே உள்ளே சென்று குளித்து உடைகளை மாற்றிக்கொண்டு வந்தாள்,

வீட்டில் சந்தடி இல்லாது நிச்சப்தமாகவிருந்ததால் "எல்லோருமா தூங்கிவிட்டார்கள்?" என்கிற சந்தேகம் உதித்தது. தன் கணவனின் அறைக்குப் போய் பார்த்தாள்; திறக்கவில்லை. ஜன்னலால் எட்டிப்பார்த்தாள். கட்டிலின்மீது தேவராஜன் குப்புறப் படுத்திருந்ததைக் கண்டு உண்மையில் தூங்கிப்போனதாக எண்ணி, நேரே குழந்தைகள் படுத்திருக்கும் ஹாலுக்கு வந்தாள். ஒரு குழந்தைமட்டும் தூங்கிக்கொண்டிருந்தது. இன்னொரு குழந்தை எங்கேயென்று தாதியைக் கேட்டாள். வீட்டில் நடந்த விஷயங்கள் முற்றும் அவளுக்குத் தெரியுமாயினும் எஜமானி எதிரில் நின்று தைரியமாகச் சொல்லப் பயந்து மெல்லிய குரலில் "பெரிய அய்யாகிட்டே இருக்குதுங்க. ஒடம்பு சரியில்லே" என்று இழுத்தாள்.

வார்த்தை முடிவதற்குள், 'என்ன! உடம்பு சரியில்லையா!' என்று பதைக்கப் பதைக்கக் கூறிக்கொண்டே, தன் பிதாவின் அறைக்குச் சென்றாள். தலையில் கட்டும், முகத்தில் மருந்துமாகக் குழந்தை படுத்திருந்தது. அதன் பக்கத்தில் குழந்தையைத் தடவியவாறு அவளுடைய தகப்பனார் உட்கார்ந்திருந்தார். அவர் முகத்தில் ஆழ்ந்த யோசனையும், துக்கமும், கவலையும் குடிகொண்டிருந்தன.

ரமாவுக்கு இந்த காக்ஷி தூக்கிவாரிப்போட்டது. 'அப்பா! குழந்தைக்கு என்ன உடம்பு! எங்கே இந்த அடிபட்டது?' என்று கேட்டபடியே குழந்தையைத் தொட்டுப் பார்த்தாள். ஜுரம் காய்கிறது. பல்ஸ் வேகமாய் அடித்துக்கொள்ளுகிறது. ரமாவின் இதயத்தில் திக்கென்று அதிர்ச்சியும் சங்கடமும் உண்டாயின. திடீரென்று தன் மருமகப்பிள்ளைக்கு இத்தகைய பேதபுத்தி வந்ததுபற்றி அளவற்ற விசாரத்துடனிருந்த அவளது பிதாவின் கண்ணில் மளமளவென்று ஜலம் வந்துவிட்டது.

ரமா:—அப்பா! இதென்ன கண்ணீர்! ஏன்? என்ன? குழந்தை எங்கே ஓடி விளையாடி விழுந்தான்? அதிகமா அடிபட்டுவிட்டதா? அவர் தானே கட்டுகட்டினார். இஞ்செக்ஷன் கொடுத்தாரா!

தகப்பனார்:—உம்... எல்லாம் காலதேவதையின் கோலம். அவனே குழந்தைக்கு இந்த கதியை உண்டாக்கிவிட்டுப் பிறகு எட்டிகூடப் பார்க்கவில்லை—என்று நடந்ததைக் கூறினார்.

ரமாவுக்கு ஒன்றுமே புரியாது பெருந் திகில் பிடித்துக்கொண்டது. "என்ன! என்ன! என்னைப்பற்றியா அப்படி இழிவாகப் பேசினார்! குழந்தையை அவரா பிடித்துத் தள்ளினார்! ஐயையோ! என்ன விபரீ

த்திற்கு இம்மாதிரி நடந்திருக்கிறதோ தெரியவில்லையே! அப்பா! நான் வழக்கம்போல் வஸந்தராதேவியுடன்தான் போய்வந்தேன். வேறு ஒரு குற்றமும் எனக்குத்தெரியாது...குழந்தையைப் பார்க்கக்கூடவாயில்லை?

தக:—நான் பலமுறை கூப்பிட்டேன். அவன் எட்டிப் பார்க்க வில்லை. கம்பவுண்டரைப்போய் கட்டுகட்டச் சொல்லிவிட்டான். என்னுடன் பேசவுமில்லை; சாப்பிடவும் இல்லை வேலைக்காரர்களையெல்லாம் சீறிவிழுந்து திட்டினான். என் தலைவிதியம்மா! விதி.

ரமாவின் தளிர்போன்ற இதயம் அனலில் இட்ட சருகுபோல் கருகியது. ஓட்டமாக ஓடினாள்; தன் பெட்டியைக் கொண்டுவந்து குழந்தைக்கு ஊசி குத்தினாள். "ராஜா! ராஜா! என் கண்மணீ! வாயைத் திறடா! கண்ணா!" என்று வெகு அன்புடன் கூறியவாறு குழந்தையை அணைத்துக்கொண்டு உள்ளுக்கு மருந்தைக் கொடுத்தாள்.

நன்றாகப் புத்தி தெரிந்த குழந்தையாகையால் அம்மாவைப் பார்த்ததும் அழுகை விக்கிக்கொண்டு வந்துவிட்டது. 'அம்மா!' என்று ஒரு கத்து கத்தி, அவள் மடியில் தாவிக் கட்டிக்கொண்டு பெரியதாகப் புலம்பினான். "அப்பா தள்ளி உட்டுட்டாம்மா! ரத்தம் வந்துடுத்தும்மா!" என்று கதறுவதை அவளால் கண்டு சகிக்கமுடியவில்லை. "கண்ணா! என்னடா ராஜா! உனக்கு உடம்புக்கு என்ன செய்கிறதம்மா! வலிக்கிறதாடா கண்மணீ! இதோ தேவலையாயிடும். பயப்படாதேடா செல்லம் ராஜா!" என்று சமாதானம் செய்துக் குழந்தையை அணைத்துக்கொண்டு முத்தமிட்டாள்.

கம்பவுண்டரை அழைத்து 'சரியா கட்டினையா! என்ன மருந்து போட்டாய்? எவ்வளவு ரத்தம் வந்தது!" என்றெல்லாம் விசாரித்தாள். கம்பவுண்டர் தான் செய்த சிகிச்சைகளைக் கூறி "ரத்தம் அதிகமாகத் தான் போயிற்று. அதற்குள்ள மாத்திரையைத் தங்கள் உத்தரவின்றி நானே கொடுத்துவிட்டேன். எஜமான் என்னவோ இப்பக்கமே வரவில்லை. நான் போய்க் கூப்பிட்டதற்கு என் ஜென்மத்திலேயே நான் கேட்டறியாத ஒரு இழிவான வசைச் சொல்லால் என்னைத் தாக்கினார். அதாவது, 'சீ ப்ரோக்கர்! வெளியே போ!" என்றார். இதைக்கேட்டதுமுதல் என்னுள்ளம் தவிக்கின்றது, எஜமானுக்கு என்ன உடம்போ! கோபமோ! தெரியவில்லை" என்றான்.

ஆனந்தமாகக் கூட்டத்தில் பேசிவிட்டுச் சந்தோஷமாய்த் திரும்பி வந்த ரமாவுக்கு இந்த சம்பவங்களைப் பார்க்க மூளையே குழம்பியது. கண்ணீர் உதிர்ந்துகொண்டே இருக்கிறது. குழந்தைக்கு வலி தெரியாது தூங்குவதற்கான மருந்து கொடுத்துவிட்டு நேரே சமையற்கட்டிற்குப் போனாள். மணி பத்துக்குமேலாகிவிட்டதால் சமையல்காரன் ஒரு மூலையில் தூங்கிக்கொண்டிருக்கிறான்; சமையல் செய்தது அப்படியே இருந்தது கண்டு "வைத்தீ! வைத்தீ!" என்று அவனை எழுப்பினாள்.

வைத்தி அலறியடித்துக்கொண்டு எழுந்து 'எஜமான்! எஜமான்!' என்று குளறினான். ரமா சற்று நிதானமாய் "பதறாதே வைத்தி! எஜமான் சாப்பிட்டாரா! நீ கூப்பிட்டாயா! குழந்தைகளுக்குச் சாதம் ஊட்டினாயா!" என்றாள்.

வைத்:—அம்மா! குழந்தைகளுக்குப் பொழுதோடு வழக்கம்போல் ஊட்டியாயிற்று. எஜமானுக்கு இலைபோட்டுவிட்டுக் கூப்பிட்டேன். "சோற்றைக்கொண்டு குப்பைத் தொட்டியில் கொட்டு. எனக்கு வேண்டாம். ஒங்க எஜமானியம்மாளுக்கு வேண்டியவர்களுக்கெல்லாம் தண்டமிண்டங்கொட்டிக் கூத்தாடு" என்று கர்ஜித்தார். நான் பயந்துபோய் வந்துவிட்டேன்.

அதற்குமேல் ரமாவால் அங்கு நிற்கமுடியவில்லை. "வைத்தி! அப்பாவுக்கு முதலில் ஆகாரத்தைக்கொடு" என்று சொல்லிப் பின் தன் கணவனின் அறைக்குச் சென்றாள். அப்போதும் கதவு திறக்கப்படவில்லை. குப்புறப் படுத்திருப்பதால் தூங்குவதும் தெரியவில்லை; விழித்திருப்பதும் தெரியவில்லை. ஒன்றும் தோன்றாது சில விநாடிகள் குழம்பினாள்.

மீண்டும் தகப்பனாரிடம் ஓடிவந்து, "அப்பா! அவர் என்னதான் சொன்னார்? விவரமாகச் சொல்லுங்களேன்" என்றாள்.

தக:—கோபத்தால் அவன் வாயிலிருந்து வரும் வார்த்தைகள் கொடிய பாணம்போலிருந்ததம்மா! நீ அவனை சதஸ்ஸில் அவமானப் படுத்திப் பேசினாயாம். கட்டிய கணவனை அவமதிக்கும் அதிகப்பிரசங்கம் செய்துவிட்டு இஷ்டமான தடியனுடன் போய்விட்டாயாம். இந்த கோரமான வார்த்தைகளை என் காதால் கேட்கவே முடியவில்லை.

ரமா:—அவருடன் யாராவது வந்தார்களா!...குழந்தையைப் பார்க்கக் கூப்பிட்டதற்கு என்ன சொன்னார்?

தக:—ஏனம்மா அதையெல்லாம் கேட்கிறாய்? என் மனது துடிக்கின்றது. என்ன காரணத்தினால் இந்த தடுமாற்றம், புத்தி மாறாட்டம் என்று எனக்கே புரியவில்லை. குழந்தையைப் பார்க்க அழைத்ததற்கு "நான் சப்பை வைத்தியன். அவளுக்கு வேண்டிய பெரியபெரிய கைராசிக்கார டாக்டர்களும், உத்தமமான குணமுடைய டாக்டர்களும் ஏராளமாயிருப்பதால் அவர்கள் வந்து பார்க்கட்டும், அதற்குள் பிராணன் போய்விட்டது" என்று வெடுக்கென்று கூறினான். என் மனம் பதைத்தது. இதற்குள் குழந்தை அழுது அழுது அடித்ததால் கம்பவுண்டரையாவது அழைத்து கட்டு கட்டுவோம் என்று நான் வந்துவிட்டேன்.

வஸந்தா வீட்டிற்குப் போன்செய்து பார்த்தேன். அங்கு நீ இல்லை என்று பதில் கிடைத்தது. உடனே ஆத்மநாதன் வீட்டிற்குப் போன்செய்தேன். அங்கும் அதே பதில்தான் கிடைத்தது. பிறகு என்ன செய்வது! நீ யாருடன் எங்கு போயிருக்கிறாயென்றும் தெரியாது குழந்தையை கம்பவுண்டரிடமே விட்டுவிட்டு அவனிடம் போய் "என்னப்பா சமாச்சாரம்? நடந்ததுதான் என்ன சொல்லேன். எனக்கொன்றுமே புரியவில்லையே" என்று கெஞ்சினேன். "என்னோடு இப்போ பேசவேண்டுவதில்லை. தயவு செய்து போய்விடுங்கள்" என்று கடுகடுப்பாகக் கூறியதானது என்னை அடிப்பதுபோலிருந்தது. நான் வந்து விட்டேன்...என்ன நடந்ததம்மா?

ரமா:—ஒன்றுமே நடக்கவில்லையப்பா! வழக்கம்போல் நான் பேசியானதும், இவரை நாலாபக்கமும் பார்த்தேன். எங்கும் இவரைக் காண

வில்லை. எங்கேயாவது போய்விட்டாரோ என்று நினைத்தேன். என் பெரிய டாக்டர் என்னைக் கூட வரும்படி அழைத்தார். அம்மாதிரி எத்தனையோ முறை போயிருக்கின்றேன்; அதுபோலத்தான் இன்றும்போனேன். எனக்குத் தெரிந்து இவ்வளவுதானேப்பா நடந்திருக்கிறது. இங்கு யாராவது வந்தார்களா!

தக:—வைத்தியத்திற்கு யாரோ வந்தார்கள்.

ரமா:—அவர்களை நிதானமாகப் பார்த்தாரா! மருந்து கொடுத்தாரா?—என்று கேட்டுக்கொண்டே 'கம்பவுண்டர்! கம்பவுண்டர்!' என்று கூப்பிட்டாள். உடனே கம்பவுண்டர் வந்து நின்றான்..."இப்போது யார் மருந்துக்கு வந்தது? டாக்டர் பார்த்து எழுதிக்கொடுத்தாரா! மருந்து செய்துகொடுத்தாயா? எங்கே ப்ரிஸ்கிருப்ஷன்? கொண்டா!"...

கம்:—அம்மணி! எஜமானுக்கு என்ன கோபமோ தெரியவில்லை. அந்தக் கலவரத்தில் கொஞ்சநேரம் நோயாளியைப் பார்க்கவே இல்லை. பிறகு பார்த்து ஏதோ எழுதிக் கொடுத்தார். அதைப் பார்த்ததும் எனக்குப் பெரிய அதிர்ச்சியாகிவிட்டது. நான் இதைக் காட்டிக்கொள்ளாமல் சந்தேக நிவர்த்திக்காக அவர்களையே என்ன உடம்பு என்று பேச்சுக்கொடுப்பதுபோல் கொடுத்தேன். ஜுரம் அதிகமாகக் காய்கிறதென்றும், ஜலம், மலம் இரண்டும் போகவே இல்லை என்றும், தலைவலி, வயிற்றுச் சங்கடம் என்றும் கூறினன். 'கடவுளே!' என்று எனக்குள் சொல்லிக்கொண்டேன். அந்த ப்ரிஸ்கிருப்ஷனை அப்படியே வைத்துவிட்டு, சும்மா ஜுரத்திற்குக்கொடுக்கும் குயினுமிக்ஸ்சர் ஒரே டோஸ் செய்துகொடுத்துப்பின் தங்கள் வரவுக்காகக் காத்திருக்கிறேன். இதோ ப்ரிஸ்க்ருப்ஷனைப் பாருங்கள்" என்று கொடுத்தான்.

அதை வாங்கிப் பார்த்த ரமாவுக்குத் தூக்கி வாரிப்போட்டது. "ஐயையோ! மலத்தைக் கட்டுவதற்கல்லவா மருந்து கொடுத்திருக்கிறார்! ஏற்கெனவே கட்டியதால் அவஸ்தைப்படுவதற்கு இதுவா மருந்து?...ஹா!.. ஈசா! இதென்ன சோதனை!...கம்பவுண்டர்! இதோ நான் எழுதும் இந்த மருந்தைச் செய்துகொண்டுபோய் அந்த நோயாளிக்குக் கொடுத்துவிட்டு ஒரு எனிமாவும் கொடுத்துவிட்டு வா! காலையில் நோயாளியை அழைத்து வர முடிந்தால் வரட்டும். இல்லையேல் அங்கு வந்து பார்ப்பதாகச் சொல்லித் தேற்றிவிட்டு வா...உம். உடனே போ"...என்றாள்.

கம்பவுண்டர் மருந்தைச் செய்துகொண்டு ஓட்டமாக ஓடினன். ரமாவின் குழப்பம் இந்த விபரீத சம்பவத்தினால் பின்னும் அதிகரித்ததேயன்றிக் குறையவே இல்லை. 'அந்த நோயாளியின் நிலைமை எப்படி இருக்கிறதோ!' என்கிற திகில் வேறு பிடித்துக்கொண்டது. குழந்தையோ, 'அம்மா! அம்மா!' என்று முனகிக்கொண்டே இருப்பதால் அதை விட்டுப் போகவும் மனம் வரவில்லை. இரண்டு மூன்று முறை கணவன் எழுந்துவிட்டானு என்று பார்த்து வந்தாள். அவன் அசையாப் பதுமைபோலவே படுத்திருந்ததைக் கண்டு ரமாவுக்கு ஏதேதோ எண்ணமெல்லாம் தோன்றியது. மனதில் நிமிடத்திற்கு நிமிடம் அவளையறியாத சங்கடம் செய்தது.

எத்தனையோ உயர்ந்த படிப்புப் படித்த நாகரிக நங்கையர் சிலரைப்போல் அவள் தன்னை நினைக்கவில்லை. ஒரு சாதாரண குடும்பத்தில்

உழலும் தர்மபத்தினி, கணவனிடம் பயபக்தியுடன் எப்படி நடப்பாளோ அப்படியே நடந்து கொள்ளும் நாரீமணியாதலால் அவளுடைய இதயம் அடித்துக்கொண்டது. "திடீரென்று இத்தகைய மாறுதல் எக்காரணத் தினல் ஏற்பட்டிருக்கும்? பிரஸங்கத்தில் என் மனப் பூர்வமாய் ஒரு சிறிய குறையும் இவரைப்பற்றி நான் பேசவில்லையே! அப்படியிருக்க என்மீது ஏன் இம்மாதிரி வித்தியாஸம் உதயமாகவேண்டும்?" என்று குழம்பும் போது கணவன் ஆதியில் சொல்லிய வார்த்தைகளும், அவன் காட்டிய அன்பும், அவனுடைய பிரேமையின் உச்சமும் அவளுக்குக் கண்முன்பு அப்படியே தோன்றி அவளை ஒரு கலக்கு கலக்கியது. ஒன்றுமே தோன் ருது துவண்டுபோய் அருகிலிருந்த ஆசனத்தில் சாய்ந்தாள்.

டெலிபோன் மணி கணகணவென்று அடித்தது. உடனே எழுந்து போய் ரிஸீவ் செய்தாள். வெகு ஆப்த்தான கேஸ்; க்ளோரோபாரம் கொடுப்பதற்காக அர்ஜண்டாய் வரும்படி வஸுந்தராதேவி டெலிபோன் செய்ததைக் கேட்டு ரமாவுக்குப் பின்னும் தர்மசங்கடமாகிவிட்டது. தன் தலைவி அழைத்திருப்பதால் உடனே போகவேண்டுவது தன் கடமை. 'அப்படிப்போவதா! கணவனின் கோபத்தை அறிவதா!' என்று கவலை யுற்று சில விநாடிகள் அப்படியே தம்பித்து நின்ருள்.

7
மாசிலா மங்கையும் பாசத்தின் மூடலும்

"அம்மா! அம்மா! உவ்வா வலிக்கிறதே! தாகம் எடுக்கிறதும்மா! தீர்த்தம் வேணும்" என்று குழந்தை அழுதது. எண்ணெ யில் விழுந்த ஈயைப்போல் குழம்பியிருந்த ரமா குழந்தையின் குரலைக் கேட்டு ஓடினள். குழந்தைக்குத் தீர்த்தம் கொடுத்துச் சற்று சமாதானப் படுத்தித் தூங்கச்செய்தாள். கம்பவுண்டரைக் கூப்பிட்டு "உடனே காரை எடுக்கச் சொல்லு" என்ருள்.

கம்பவுண்டர் ஓட்டமாக ஓடி ட்ரைவரைக் கூப்பிட்டான். டிரைவர் பயத்துடன் நடுக்கியவாறு வந்து 'அம்மா! காரின் சாவி வேணும் என்று நான் கேட்டதற்கு "மடையா! பேசாது போடா!" என்று ஒரே அதட்டுப் போட்டுவிட்டு உள்ளே சென்ருர். என்ன செய்வது?" என்ருன்.

இந்த விஷயம் ரமாவின் வியப்பை இன்னும் தூண்டியது. "கார் சாவியை எதற்காக இவர் வைத்துக்கொள்ளவேண்டும்? இதென்ன விப ரீத குணம்? எக்காரணம் பற்றி இவர் இம்மாதிரி இருக்கவேண்டும்? இவரை எழுப்பி சாவியைக் கேட்பதா! இன்றி அவசரம் என்று கூறிய காரியத்தைக் கவனிக்கச்செல்வதா! நேரமாகிவிட்டால் ஒருகால் அந்த ஆபத்து அதிகரித்து விபத்தில் முடிந்துவிடுமாயின்... ஐயோ! வேண்டாம்... தாமதிக்கவேண்டாம். சாவகாசமாய் இவருடைய கோபத்தைப்பற்றி விசாரிக்கலாம். முதலில் ஆபத்திலிருப்பவர்களுக்கு உதவி புரியவேண் டும். இதுதான் தற்சமயம் முதல் கடமை" என்று தன்னையேதான் தேற்

றிக்கொண்டு உடனே டெலிபோனிடம் சென்று, தன் காரில் ஏதோ ரிப்பேர் இருப்பதால் தனக்கு உடனே கார் அனுப்பும்படிக்கு வஸுந்தரா தேவிக்கே டெலிபோன் செய்தாள்.

பத்து நிமிஷத்திற்கெல்லாம் கார் வந்துவிட்டது. "அப்பா! அவசரமான கேஸுக்கு நான் போகிறேன். அவர் எழுந்துவந்து கேட்டால் சொல்லுங்கள். குழந்தையை ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கொள்ளுங்கள் நர்ஸை வரச்சொல்லி ஆளனுப்பியிருக்கிறேன்: வந்துவிடுவாள். நான் போய் வருகிறேன்" என்று கூறிச் சென்றாள்.

உண்மையில் அயர்ந்து தூங்காதவர்களை எவ்வளவு எழுப்பினால்தான் என்ன? அவர்கள் எழுந்திருப்பதேது? யானையேறி மிதித்தாலுங்கூட அசையாது பொறுமையாய்த்தான் படுத்திருப்பார்கள். அந்த கோஷ்டியில் சேர்ந்துள்ள தேவராஜனுக்கு விழிப்பு எப்படி உண்டாகும்? கண்ணை மூடிக்கொண்டு படுத்திருக்கிறானேயன்றி இங்கு நடக்கும் சகல விஷயங்களையும் கவனிக்காமலில்லை.

ரமாவுக்கு டெலிபோன்கால் வந்ததும், காரை அனுப்பச்சொல்லி அவள் சென்றதும் இவனுடைய ஆத்திரத்தைப் பின்னும் கிளறின. தன்னிடம் சாவி இருப்பதை சற்றும் லக்ஷ்யம் செய்யாமல் கார் கெட்டுவிட்டதாகக் கூறியதைப் பெருங் குற்றமாக எண்ணி அதற்கோர் உருவத்தை ச்ருஷ்டித்துக்கொண்டு ஏற்கெனவே மூண்டுள்ள ஆத்திரத்துடன் பன்மடங்கு அதிகரித்த ஆத்திரத்திற்கும், வேற்றுமைக்கும் மனத்தில் விபரீதமான இடத்தைக் கொடுத்துவிட்டதால் வேதனை அதிகரித்தது. எழுந்து கட்டிலின் மீதே உட்கார்ந்தான்.

யோசனைகளோ, எண்ணிக்கைக்கு அடங்காமல் வெகுதூரம் போய் அலைந்து அவனைப் பித்தனாக்குகின்றன. "சீச்சீ! நாம் முட்டாள்தனம் செய்தோம். சரிக்குச் சரியான தொழிலில் இருக்கவேண்டுமென்று பட்ட ஆசையின் மோகம் இப்போதல்லவா தெரிகிறது. பெண் கட்டைகளை அடக்கி வைக்கவேண்டிய இடத்தில் வைக்காது போனால் நம்முடைய திண்டாட்டத்தின் கதி இதுதான். எனக்குச் சரியான தொழில் அவள் தினே தினே உயர்வது, நான் முண்டம்போல் நிற்பதா! இந்த வெட்கக்கேட்டை இத்தனை நாள்தான் அறியாதிருந்ததுமட்டுமின்றி இதையோர் பெருமையாகவும் எண்ணி மதிகெட்டு மகிழ்ந்தேனே, இந்த அவமானத்திற்கு என்ன செய்வது என்று தெரியவில்லையே! வெட்கம்! வெட்கம்... நினைத்தாலும் வெட்கம்" என்று ஏதோ நினைக்கிறான்.

இருக்கைகொள்ளாது ஆவேசத்துடன் எழுந்தான். கைகளைப் பின் கட்டு கட்டிக்கொண்டு அப்படியும் இப்படியும் உலாவினான். பல்லைக் கடித்தான். "இத்தனைத்திமிருக்கும் காரணம் அவளுடைய தகப்பனார்தான். அவர் கொடுக்கும் அதீதமான செல்லத்தினால்தான் இப்படியாகிவிட்டது. அவள் என்னிடம் காட்டும் பிரியமெல்லாம் வெறும் நடிப்பு என்றல்லவா தோன்றுகிறது. எல்லாம் சாகஸமா! எல்லாம் வெறும் புரட்டா!" என்று தனக்குள் குழம்பித் தவித்தான்.

ஏதோ எண்ணியவனாய் தடதடவென்று மாமனிருக்கும் அறைக்கு வந்தான். இவனுடைய முகத்தையும் பார்வையையும் கண்டு திடுக்கிட்ட

அவர் "தேவா! குழந்தை எப்படியிருக்கிறது பாரு. அலறி அலறி அழுகிருன். ஏன் உனக்கு இத்தனை கோபம்? காரணம் என்ன!" என்று வெகு சாந்தமாகவே கேட்டார்.

தேவ'—போதும், உம்முடைய உபசார வார்த்தைகள். கேவலம் ஒரு பெண்பிள்ளைக்கு இத்தனைத் திமிரை ஊட்டி வளர்த்த அருமைத் தகப்பனுராகிய உம்மை உலக மக்களுக்கு அறிவு புகட்ட உபாத்தியாயராய் அனுப்பலாம். என்னதான் பணமிருந்தாலும் இத்தனை செல்லங்கொடுத்து மகளைக் குட்டிச்சுவராடித்திருப்பது கொஞ்சங்கூட நன்ருயில்லை—என்று ஒன்றுமே புரியாதவாறு சொன்னுன்.

அப்போது தான் கண்ணைத் திறந்து பார்த்த குழந்தை அலறிப் பயந்தவாறு "அப்பா! அடிக்காதே! அடிக்காதே! வலி தாங்கலேப்பா!" என்று கத்தியது. இத்தனை நாளுமில்லாது கல்லினுங்கொடிய இதயமாக மாறியிருப்பினும் குழந்தையின் பரிதாபமும், அதன் வார்த்தையும் ஒரு க்ஷண நேரம் தேவராஜனையும் பொறிகலங்கச் செய்தன. புத்திரவாத்ஸல்யம் குபீரென்று பீறிக்கொண்டு இதயத்தில் பொங்கி எழுந்தது. அந்த அணை கடந்த அன்பின் வேகத்தில் தனது ஆத்திரத்தைக்கூட ஒரு க்ஷண நேரம் மறந்து போய் குழந்தையை வாரி அணைத்துக்கொண்டான்.

அதன் உடம்பு அனல் போல் சுடுவதைக் கண்டு திடுக்கிட்டான். உடனே தர்மாமீட்டரை வைத்துப் பார்த்தான். அவ்வளவு சின்ன குழந்தைக்கு ரமா எத்தனையோ மருந்துகள் கொடுத்து, ஊசியும் குத்தியிருக்கையில் 104 டிகிரி ஜுரம் இருக்கிறதென்ருல் அவன் குடல் அவனையறியாது நடுங்கியது. "இன்னும் கொஞ்சம் அதிகரித்து விட்டால் குழந்தைக்கு முதலுக்கே மோசம் வருமே! என்ன செய்வது?" என்று துடித்தான். சற்று முன்பு தான் குழந்தையை முரட்டுத்தனமாய் பிடித்துத் தள்ளிய கோரக்காக்ஷி கண்முன்பு வெகு பயங்கரமாகத்தோன்றி கதிகலங்கச்செய்தது. குழந்தையைத் தூக்கித் தோள்மீது போட்டுக்கொண்டு டெலிபோனிடம் ஓடி, டாக்டர் ஆத்மநாதனை உடனே வரச்சொல்லிவிட்டு வந்து, குழந்தையை மடியில் போட்டுக்கொண்டு சோபாவில் உட்கார்ந்தான். "தாஞடாவிட்டாலும் தன் சதையாடும்" என்கிற பழமொழிப்படி அவன் இதயத்தில் சித்ரவதைசெய்து கண்ணில் நீரை முட்டச் செய்தது.

கலகத்தின் வேகம் இன்னும் நன்ருக ரத்தத்தில் ஊறுதிருக்கும் வரையில் மக்களின் மனத்தில் இத்தகைய மாறுதல்களும், க்ஷணத்திற்கு க்ஷணம் வித்தியாஸபுத்திகளும், உணர்ச்சிகளும் மாறிமாறித் தோன்றுவது மனித இயல்பல்லவா? அந்த விதிக்கு தேவராஜனும் கட்டுப்படாதிருக்க முடியுமா! ஸ்வர்ண விக்ரகம் போன்ற குழந்தையின் நிலைமையைப் பார்க்கும்போது மனம் எப்படித்தான் பொறுக்கும்?

தான் பிரமாதமாக ஆரம்பித்துக்கொண்டு வந்த அதிகப்பிரஸங்கத்தை அம்மட்டுடன் மறந்துவிட்டானென்றே சொல்லலாம். தானும், தன் மனைவியும் டாக்டராகவிருப்பினும் தன்னம்பிக்கை யற்று, சாதாரண மனிதர்களைப்போல் டாக்டர் வருகைக்கே அவனுள்ளமும் துடித்தது. இன்னும் டாக்டர் வரவில்லையே என்று கவலை தோய்ந்த கண்களுடன் வழி பார்த்துக்கொண்டிருந்தான்.

மனித ஜன்மாவின் மனப்போக்கின் விசித்திரம் எப்படியிருக்கிறது பாருங்கள். இதே ஆத்மநாதனைப்பற்றி சற்றுமுன் நினைத்த விபரீத நினைப்பு என்ன! அவன்மீது அநியாயமாய், துராகிருதமாய் எண்ணித் திட்டிய திட்டென்ன! அவனை விஷம்போல் வெறுத்த வியப்பென்ன? அடுத்த நிமிடமே தன் உரிமினும் இனிய மனைவியைப்பற்றி அவதூறுகக் கற்பனை செய்துகொண்டு விபரீதமாக நினைத்து அருமையிலும் அருமைக் கண்ணேபோன்ற குழந்தையின் உயிருக்கே கோபத்தை விளைவிக்கும்படிச் செய்த செய்கை என்ன! அத்தனையையும் அரைக்கணத்தில் மறந்து போய், தானே குழந்தையைத்தாவி அணைத்துக்கொண்டழும் அழுகைஎன்ன?

இவைதாம் இந்த மாயா உலகத்தின் விசித்திரங்கள். மக்களின் மனோ தர்ம விநோதங்கள், பிரபஞ்ச விலாஸத்தின் கேளிக்கைகள். இப்போதுள்ள மனமாற்றத்தில் அதே குடிகோலியாகிய நாகராஜன் எதிரில் வந்து கலகம் செய்து மீண்டும் மித்ரபேதத்தை விளைவிக்க முயன்றாலும் புத்திர வாத்ஸல்ய அன்பில் தோய்ந்துபோய் ஊசலாடும் தேவராஜனின் மனது இச் சமயம் மாறவே மாறுதெனலாம்.

குழந்தையின் பரிதாபத்தைப் பார்க்கப் பார்க்க அவன் இதயம் பாகாயுருகியது. தான் செய்த கண்மூடித்தனமான வேலையின் பலனால் குழந்தை இறந்துவிட்டால் என்னசெய்வது? "தானே ஒரு டாக்டராயிருந்து இம்மாதிரி தன் குழந்தையை தன் கையால் கொலைசெய்து விட்டான்... கொலைகாரன்...புத்தி கெட்டவன்'' என்று உலகம் நிந்திக்கும்போது, தான் எப்படி உயிர் வாழ்வது, என்று நினைக்கும்போது அவன் உயிர் அவன் உடலைவிட்டுப் போவதுபோல் ஒரு பயங்கரம் உண்டாகியது. அந்த வேகத்தில் தன்னை மறந்து கூ....வென்று கத்திவிட்டான்.

அதேசமயம் ரமா வஸுந்தரா தேவியை அழைத்துக்கொண்டு ஆவலேவடிவாய் வந்தாள். "டாக்டர்! குழந்தை தவறி விழுந்துவிட்டானாம். நல்ல அடி பட்டிருக்கிறது. அவா அப்பாவே ஏதேதோ மருந்துகள் கொடுத்து ஊசி ஏற்றி சிகிச்சைகள் செய்திருக்கிறார். நானும் எனக்குத் தெரிந்த மட்டில் கவனித்தேன். இருப்பினும் நீங்கள் பார்த்தால் பய மில்லாதிருக்கும். விளையாட்டுப் புத்தியில் ஓடினானாம். இந்த விபரீதம் நேர்ந்துவிட்டது. எங்கே பிராணன் போய்விடுமோ அன்றி மூளையில் அடி பட்டு மூளை கலங்கிவிடுமோ என்கிற பயம் அவா அப்பாவுக்கு வதைக்கிறது. அவர் பச்சை தீர்த்தம்கூடச் சாப்பிடவில்லை'' என்று ரமா தன் போக்காகச் சொன்னாள்.

இந்த வார்த்தைகளைக்கேட்ட தேவராஜனுக்குத் தூக்கிவாரிப்போட்டு, தேகம் சிலிர்த்து "குழந்தையை நானே தள்ளி இத்தகைய படுகாயத்தை உண்டாக்கியிருக்கையில், தானே தவறி விழுந்துவிட்டதாகக் கூறியதோடு, நானே மருந்து கொடுத்து சிகிச்சை செய்ததாகவும் சொல்லுவது ரமாவின் சாந்தத்தையும் பெருந்தன்மையான போக்கையும் வெட்ட வெளியாக எடுத்துக்காட்டுகிறதே......இத்தகைய உத்தமியின்மீதில் அபாண்டமான எண்ணங்கொண்டு கண்மூடித்தனமாய் எத்தனைக் கொடிய காரியம் செய்துவிட்டோம்? ரமாவின் பரிசுத்தமும் என்னிடத்திலுள்ள ப்ரீதியின் ஆழமும் தெரிந்துங்கூட அவன் வார்த்தையைக் கேட்டுக்கொண்டு க்ஷண

நேரத்தில் இம்மாதிரி மதிகலங்கிவிட்டோமே! இவளல்லவோ கிருகலக்ஷ்மி! பதிபக்தியில் சிறந்த உத்தமி என்பதையறியாது போய்விட்டோமே'' என்று தனக்குள் எண்ணினன்.

ரமா தன் கௌரவத்தை விட்டுக்கொடுக்காமல் வஸுந்தரா தேவியிடம் பேசிக்கொண்டு வருகிருளேயன்றி உண்மையில் தன் கணவனின் கோபத்தை வஸுந்தரா அறியாதிருக்கவேண்டுமே! என்கிற கவலையும் பயமும் உதறுகின்றன. அதை வெளிக்குக் காட்டிக்கொள்ளாது வரும்போது அவளே கண்டு பிரமிக்கும்படி தேவராஜன் குழந்தையை மடியில் போட்டுக்கொண்டு பரிதாபமும் வாத்ஸல்யமும் ததும்ப ''வந்தாயா ரமா! இன்னும் டாக்டரும் நீயும் வரவில்லையே என்று எதிர்பார்த்துக்கொண்டே இருக்கிறேன்...குட்நைட் டாக்டர்! குழந்தையைப் பார்த்தால் கவலையாகவிருக்கிறது. குழந்தையைப் பாருங்கள்'' என்று சற்றுமுன் தான் வெறுத்த வஸுந்தராதேவியிடம் தானே சொன்னன்.

உண்மையை அறியாத வஸுந்தராதேவி, குழந்தை உண்மையில் விழுந்துவிட்டது என்றே நம்பிப்பரீக்ஷித்தாள். உடனே ஐஸ் வரவழைத்து வைக்கச் சொன்னள். வேறு மருந்து மாற்றிக்கொடுத்து ஊசியும் ஏற்றினள்.

ரமாவின் ஆச்சரியத்திற்கு எல்லையேயில்லை. அவள் கடவுளிடம் பரம பக்தியும் நம்பிக்கையுங்கொண்டு பணியும் நாரீமணியாகையால் எல்லாம் அவன் செய்யும் லீலை; அவனுடைய கூத்து. சற்றுமுன் பயந்த பயத்திற்கு நேர்விரோதமாய் தன் கணவன் இத்தனை சடுதியில் மாறுதலடைந்ததானது அவளுடைய சந்தோஷத்தை இரட்டிப்பாய்ப் பெருக்கியது.

அதேசமயம் ஆத்மநாதனும் வந்து சேர்ந்தான். தேவராஜன் தடபுடலாக உபசரித்து வரவேற்ருன். ரமா, குழந்தை தடுக்கி விழுந்துவிட்டதென்கிற பாட்டைத் தாளுகவே பாடினள். ஆத்மநாதனும் வஸுந்தராவும் வெகு நேரம் அங்கிருந்து குழந்தைக்கு அதிக அக்கரையுடன் சிகிச்சை செய்து ஜுரம் கொஞ்சம் குறைந்த பிறகு ''இனி கொஞ்சங்கூட பயப்படவேண்டாம். நாளேக்காலேயில் அடியோடு ஜுரம் விட்டுவிடும். நிம்மதியாயிருங்கள். இதோ நர்ஸ் வந்துவிட்டாள். ஜாக்கிரதையாய் பார்த்துக்கொள்ளுங்கள். நாங்கள் வருகிறோம்'' என்று கூறிச்சென்றுர்கள்.

தம்பதிகள் இருவரும் வாசல்வரையில் வந்து அவர்களை வழியனுப்பிவிட்டு உள்ளேவந்தார்கள். தேவராஜனின் மனம் பதபதவென்று அடித்துக்கொள்கிறது. ரமாவுக்குத்தான் பெரும் தீங்கும் மனக்கஷ்டமும் விளேவித்துவிட்டதுபோன்ற எண்ணம் மனத்தில் நிமிடத்திற்கு நிமிடம் பொங்கி எழுந்தது.

ரமா கண்ணில் நீர் ததும்ப குழந்தையின் அருகில் வந்து நின்ருள். உத்தமமான குடும்பத்தலேவியின் பதவியிலுள்ள ஒரு நாரீமணியின் குணங்களில் ஒரு சிறிதும் இவளுக்குக் குறையவில்லை. பிறந்தகத்துச் செல்வியாய், செல்வச் சீமாட்டியாய் தகப்பனருக்கு ஒரே செல்லப் பெண்ணுயிருந்தும் அவைகளே ஓர் பொருட்படுத்தி அதையே மதிப்பாக எண்ணித் தலேகால் தெரியாது துள்ளாமலும், தன் சொந்த வீட்டையும் கணவனேயும் மாமியார் முதலியவர்களேயும் அலக்ஷியம் செய்து தலேதெறிக்கப்

பேசாமலும், தன் கணவனின் பெருமைதான் தன் பெருமை, தன்னுடைய வீட்டின் கண்ணியந்தான் தனக்கு கண்ணியம் என்று நம்பி இதய பூர்வமாய் பிரேமை செலுத்தும் வீராங்கனைகளில் ரமாவும் ஒருத்தியாவாள்.

தகப்பனர் வீட்டுச் செல்வத்திற்குத் தான் அதிகாரியாயிருந்தும் அதனுல் ஒரு அணுவளவும் கர்வமே கொள்ளாது வெகு சாதாரணமாக விருப்பதில்தான் அவளுக்கு ப்ரீதி. அவளுடைய தாயார் உயிருடன் இருந்த காலையில்கூட ரமாவுக்கு இம்மாதிரி நடக்கும்படி உபதேசம் செய்வாள்.

"கல்யாணமாகியபிறகு உன் கணவன் வீட்டாருக்குத்தான் நீ அதிக மரியாதை காட்டவேண்டும். தாயார் வீட்டுப்பணம் ஒரு பெருமையல்ல. தாயார் வீட்டாரைக் கண்டுவிட்டால் மற்றவர்களை அலக்ஷியமாக நடத்துவதும், பார்ப்பதும், பேசுவதும், நடக்கும் நடையே ஒரு விநோதமாகவிருப்பதுமாக இருக்கும் சில பெண்களைப்போல் நீ இருக்காதே! அது உனக்கு நல்ல பெயரைக் கொடுக்காது. ஏழை பணக்காரர் என்று வித்தியாஸம் பாராட்டி மமதையடையாதே.

தாயார் வீட்டுப் பணப்பெருமையோ மற்ற எந்த பெருமையோ இருப்பினும் அது கண்ணடியில் காணும்பொருளைப் போன்றதுதானுகும். தன் சொந்தபெருமையும் புகழும் தான் கண்ணெதிரில் காணும்பொருளைப்போல் பயன்படுவதாகும். இதைத்தான் நீ முக்கியமாய் நம்பவேண்டும். பெரியவர்கள் சிறியவர்கள் என்ற மதிப்பும் பக்தியும், வாஞ்சையுங் கொண்டு நடத்து. இவைகள்தான் உன் புகழை இன்னும் ஓங்கச்செய்யும். விவாகமாகிய பிறகு தாய்வீட்டை எண்ணி அடிக்கடி ஓடிவராதே. பெற்ற தாய் தந்தையர்களானுலும் அவர்களுடைய ஆசையும் வாத்ஸல்யமும் ஓங்கி வளரும்படி நடக்கவேண்டும். அதற்கு முக்கிய கருவி அவர்களிடம் மதிப்பாயும், மரியாதையாயும் இருந்து அவர்களே ஒரு முறைக்குப் பலமுறை அழைத்துப்போய் வருவதுதான் மகிமை. உன் கணவன் வீட்டின் பிகுவை விட்டுக் கொடுக்கக்கூடாது. அப்படி இருந்தால்தான் கணவனுக்கும் பெருமை; தாயார் வீட்டாருக்கும் அலக்ஷியமில்லாதிருக்கும் அடிக்கடி போய் புகுந்துகொள்வதால் எனக்குக்கூட வெறுப்பாகவே தோன்றலாம். ஆகையால் விவாகத்திற்குப் பிறகு கணவன் வீட்டாரிடந்தான் உன் கவனம் பூராவும் செலுத்தவேண்டும். ஒருகால் அவர்கள் சற்று ஏழையாகவிருப்பினும் அவமதிக்கக்கூடாது. அவர்களை அலக்ஷியம் செய்தால் அந்த அலக்ஷியத்தின் பலன் உன்னைத்தான் தாக்கும்,' என்றெல்லாம் அடிக்கடி ரமாவுக்குமட்டும் புத்தி சொல்வதில்லாமல் வேறு எந்த பெண்களைக் கண்டாலும் இப்படியே நற்போதனைகள் புகட்டுவாள்.

இம்மாதிரி நல்ல உபதேசம் செய்திருந்ததன் பலன் ரமாவின் ரத்தத்தில் ஊறிப்போயிருந்ததால் அம்மாதிரியே அவள் அணுவளவும் பிசகாது நடந்துவருகிருள். மாமியார் வீட்டாரைச் சேர்ந்த ஏழைகள் அனேகரிருக்கிருர்கள். அவர்களிடத்தில் அதிகமான மதிப்பும் விச்வாஸமும் கொண்டு பண உதவி முதல் செய்துத் தான் முதலில் பிரஸன்னமாகி நடத்துவதைக்கண்டு அவர்களுக்கெல்லாம் ரமா என்ருல் அத்யந்த ப்ரீதியும் மதிப்பும் உண்டாகி அவளைப் புகழ்ந்து பேசுவார்கள்.

அத்தகைய நாரீமணி தன்னுயிருக்கு உயிரான கணவனின் மாறுதலையும் அவனுடைய செய்கையையும் கண்டு உள்ளம் வியக்காது எப்படியிருக்கமுடியும்? கல்யாணத்திற்கு முன்பும், பின்பும் தேவராஜனையே தனது உயிர் நிலையாய், கடவுளாய் எண்ணியிருக்கும் உத்தமியின் உள்ளம் ஒரு சிறிது குழம்பியது.

கண்ணீர் வழிய நிற்கும் சமயம் தேவராஜன் அவள் ஒரு சிறிதும் எதிர்பார்க்காதவிதமாய் கெஞ்சிய குரலில் "ரமா!... ரமா!... இப்படி வா!" என்று அவள் கைகளைப் பிடித்துத் தரதரவென்று இழுத்துக்கொண்டு தன் தனியறைக்குள் சென்றான். இச் செய்கை ரமாவுக்கு இன்னும் புதுமையிலும் புதுமையாகத் தோன்றியது.

ரமாவை ஒரு சோபாவில் உட்காரச்செய்துத் தானும் அமர்ந்து அவளை அணைத்தபடியே, "ரமா! ஏதோ கனவில் நடக்கின்றதுபோல் சம்பவங்கள் ஒரு நொடியில் நடந்துவிட்டதற்காக நான் மிகவும் மனவருத்தப்படுகின்றேன், ரமா! நம்மிருவரையும் அறியாது ஏதோ ஒரு சனியன் பிடித்து ஒருக்ஷணநேரம் ஆட்டிவிட்டது. இனி அம்மாதிரி சம்பவம் நடக்காதென்று நினைக்கிறேன். ரமா!... கண்ணீர் விடாதே! உண்மையில் இன்று மாலை சபையில் என்னை நீ கேவலப்படுத்திப் பேசவில்லையே!

இதற்குள் ரமாவுக்குப் பொறுக்கவில்லை. "என்ன! என்ன! தங்களைப்பற்றி கேவலமாகப் பேசினேனா! ஐயோ! இதென்ன அபாண்டம்? என் கண்களை நானே குத்திக்கொள்வேனா! உங்களை நான் எனது ஆத்மக் கடவுளாக, என் குலதெய்வமாக எண்ணியிருக்கையில் உங்களையா நான் இழிவாய்ப் பேசுவேன்?... இம்மாதிரி உங்களுக்கு யார் கலகத்தை விளைவித்திருக்கிறார்கள்? அதான் இந்த விபத்திற்குக் காரணமாயிற்று!...... அடடா! சொல்லுவார் சொன்னாலும் என்னைப்பற்றித் தங்களுக்குத் தெரியாதா! தாங்கள் கூடவா அப்படி நினைத்துவிட்டீர்கள்?" என்று கூறும்போது கண்ணில் மளமளவென்று ஜலம் கொட்டியது.

தேவராஜன் ரமாவின் கண்களைத் துடைத்தவாறு, 'ரமா! இனி அந்த துர்ப்பாக்கியமான சம்பவங்களை அறவே மறந்துவிடு. மகாபாவி நாகராஜன் என் மதியைக் கலைத்துக் குட்டிச்சுவராக்கும் சண்டாளனாக அமைந்தான். என்னறிவும் மங்கியது. பெத்த தகப்பனாரைப்போல் பாதுகாத்துவரும் உன் பிதாவையும் உதாசீனம் செய்தேன். விலைமதிப்பற்ற மாணிக்கம் போன்ற குழந்தைக்கும் பேராபத்தை விளைவித்தேன். அன்பின் சிகரமாய் விளங்கும் உன் மனத்தையுங் கலங்கச்செய்தேன். என்னையும் நான் குழப்பத்திற்கும் விசனத்திற்கும் ஆளாக்கிக்கொண்டேன். ரமா! இனிமேல் என் புத்தி மாறாதென்று நினைக்கிறேன். நீ இந்த விஷயங்களையெல்லாம் மறந்து என்னை மன்னித்துவிடு ரமா!" என்று கெஞ்சிக் கேட்டான்.

ரமாவுக்கு மனது பதறியது, "நாகராஜனா இத்தகைய விபரீதத்தை விளைவித்தான்? அடடா! அக்ரம உலகமே! உங்களிடம் இத்தகைய மித்திரபேதத்தை விளைவித்தவாறு என்னிடம் என்ன உறவு கொண்டாடுவான்? இம்மாதிரியான விஷப் பூச்சிகளின் வார்த்தைகளை, கலகங்களை,

குடிகெடுக்கும் குண்டுணிகளைச் சற்றும் கூசாது நம்பி உயிருக்கு உயிராக விருக்கும் குழந்தையையும், உங்களுக்காகவே உயிர் வாழும் மனைவியை யும் த்ருணமாக மதித்துவிட்டீர்களே! அது மட்டுமல்லாமல் ஒரு நிரபராதி யான நோயாளியையும் இந்த மாயமயக்கத்தால் அதோகதியாக்கிவிடத் துணிந்தீர்களே !...

தேவராஜன் பதறியவாறு "என்ன ! என்ன ! நோயாளியை அதோ கதியாக்குவதா !... என்ன ரமா !... விஷயமென்ன சொல்லு"... என்று துடிதுடிக்கக் கேட்டான்.

ரமா:—இதோ இந்த ப்ரிஸ்க்ருப்ஷனைப் பாருங்கள். இதை யார் எழுதியது? இது எதற்குக் கொடுக்கும் மருந்து? சற்று நிதானமாய் பாருங்கள்—என்று கூறி அவன் கையில் கொடுத்தாள்.

இதை உற்றுக் கவனித்த தேவராஜனுக்கு முதலில் ஒன்றுமே புரிய வில்லை எனினும் சற்று முன்பு தான் எழுதிய சீட்டு என்பது மட்டும் வெகு தெளிவாய் புரிந்தது. இது மலத்தைக் கட்டுவதற்கான மருந்து என்றும் தெரிந்தது. ஆனால் ஒன்றும் விளங்கவில்லை. 'ரமா !... இது எனக்கொன் றும் விளங்கவில்லையே ! மலத்தைக் கட்டும் மருந்து என்று தெரிகிறது. ஏன் ! எதற்காகக் கேட்கிறாய்?' என்றான்.

ரமா:—நோயாளியின் நிலைமையை அறிந்தல்லவா மருந்து கொடுக்க வேண்டும்? ஏற்கெனவே ஜலம், மலம் இரண்டையுங் கட்டிவிட்டதென் றும், ஜுரம் அதிகமாகக் காய்கிறதென்றும் சொல்லியதற்கு இந்த மருந்து அவனுக்கு அனுகூலமா பிரதிகூலமா ! பாருங்கள். உங்கள் கலவரத்தில் இதைக்கூடப் பார்க்கவில்லை. நம்முடைய நல்ல காலத்திற்கு நம் கம் பவுண்டர் கவனித்து இந்த மருந்தைக் கொடுக்காது நிறுத்தி என் னிடம் காட்டினான். நான் உடனே மாற்று மருந்து கொடுத்து கம்பவுண் டரை நேரில் அனுப்பி எனிமாவும் கொடுக்கும்படிச் சொல்லியிருக்கிறேன். கடவுள்தான் இந்த பேராபத்திலிருந்து காத்திருக்கிறார். மனித எத்தனத் தில் இந்த காரியம் நடக்கவேயில்லை...

என்றதைக் கேட்டதும் தேவராஜனின் உடம்பு கிடுகிடென்று நடுங் கியது. ரமாவை அப்படியே அணைத்துக்கொண்டு, "ரமா !...எனக்கு இப் பொழுது பேசக்கூடத் தெரியவில்லை, நான் எத்தகைய பாதகத்தை விளை விக்கவிருந்தேன். ஆஹா!... இந்த ஆபத்திலிருந்து காத்த கடவுள் தற் சமயம் நீதான். நீதான். சந்தேகமே இல்லாமல் நீதான் ரமா!"...என்று குளறினான்.

ரமா;—டாக்டர்! இனிக் கவலைப்படாதீர்கள். நாமெல்லோரும் கட வுளின் கீழ் குடியேயன்றி மனிதர்களின்கீழ் குடியல்ல. நாம் எந்த நிமி ஷம் எந்த காரியத்தைச் செய்தாலும் அவனுக்கு உகப்பாக அவனுக்கே அர்ப்பணமென்று செய்யவேண்டும். அப்போதுதான் அதன் பலனை அவன் சரியாகக் கொடுப்பான். ஐயோ, பாவம்! ஒரு ஏழைக் குடும்பத்தின் தலைவனான அந்த நோயாளிக்கு, உங்களுடைய தடுமாற்ற நிலைமையில் கொடுத்துவிட்ட மருந்தால் ஏதேனும் ஆபத்து விளைந்திருக்குமாயின் அந்த பாதகம் நம்மை மட்டுமின்றி நம் குழந்தைகளையுமல்லவா ஏழேழு தலை முறைக்கும் தாக்கும்? பெத்த குழந்தையொன்று, அன்னிய மனிதன்

ஒன்று ஆக இரு உயிர்களை, இன்று உங்கள்பால் கடவுள் இரங்கிக் காத்தார் என்றுதான் நினைக்கிறேன். இனி இம்மாதிரி நடக்காமல் அந்த பரந்தாமன் என்றென்றும் காக்கவேண்டி அவனடி தொழுகின்றேன்,

தேவ:—ரமா! நீ சொல்வதெல்லாம் எனக்குக் காதில்விழவில்லை. மணி ஒன்னரையாகிறது இன்னும் கம்பவுண்டர் வரக்காணோம். குழந்தை என்னவோ தூங்குகிறது. நர்ஸ் இருக்கிறாள். நான் காரை எடுக்கிறேன். நாம் இருவரும் சேர்ந்து அந்த நோயாளியின் வீட்டிற்குப் போய் வரலாம் வா... எனக்கு மனது ஏதோ சங்கடத்தில் தத்தளிக்கின்றது. அந்த நோயாளியை நானே நேரில் பார்த்தால்தான் மனது நிம்மதியடையும்போல் தோன்றுகிறது, கிளம்பு...ரமா! கிளம்பு; தாமதிக்காதே'' என்று கூறியவாறு ஓட்டமாக ஓடி காரை எடுத்தான். ரமா பதில் பேசாது இம்மட்டுமாவது கணவனுக்குப் புத்தி திரும்பியதை யெண்ணி உள்ளம்பூரித்து, கூட வந்து வண்டியில் ஏறினாள், நல்ல நடுநிசியில் காரும் பறந்தது.

8
தீ விபத்தும் தீன ரக்ஷணையும்

“என் வரையில் எனக்கு யார் உயர்வாயிருந்தாலென்ன, தாழ்வாயிருந்தாலென்ன? என் குடும்பத்திற்கு என்னவோ ஆதரவு கொடுக்க அண்ணனும் உதவவில்லை; மன்னியும் உதவவில்லை. அதற்கென்ன, விதியற்றுப்போய் அவர்கள் வீட்டில்போய் விழுந்துவிட்டால் சோறும் தண்ணீரும் வார்க்கிறார்கள். இதுவா போதும்? மன்னியின் கீர்த்தி நாளுக்குநாள் உயர்ந்தால் எனக்கென்ன, தாழ்ந்தால் எனக்கென்ன? “ஊரெல்லாம் வெள்ளமாய் ஓடினாலும் நாய் நக்கித்தானே குடிக்கவேண்டும்'' என்கிற பழமொழியை பொய்யாக்க முடியுமா! என் தலைவிதி இது'' என்று விசாலம்மாள் தன்னெதிரில் நிற்கும் பாட்டியிடம் முணுமுணுத்தவாறு மூக்கைச் சிந்தினாள்.

பாட்டிமார்களின் வாய்க்கு ஏதாவதொன்று அகப்பட்டுவிட்டால் அதை இலேசில் அவர்கள் விடுவார்களா! எமன் வந்து பாட்டியை இழுத்தால்கூட “அப்பா! எமதர்மராஜா! கொஞ்சநேரம் இருடாப்பா! என்னிடம் அகப்பட்டுள்ள விவகாரத்தை முடித்துவிட்டு அடுத்த க்ஷணமே வந்துவிடுகிறேன்'' என்றுகூடத் தைரியமாயும் தாராளமாயும் சொல்லி எமனையும் ஏய்த்துவிடுவார்களேயன்றி அப்போதும் இதுபோன்ற ருசிகரமான விஷயங்களை விடவே மாட்டார்கள்; இந்தப் பாட்டி மட்டும் இலேசில் விட்டுவிடக்கூடியவளா! தன் பொக்கை வாயை அனேக விதமான பாவங்களுடன் அசைத்தபடியே வழவழ கொழகொழவென்ற சப்தத்துடன் பேசத்தொடங்கி, “ஏண்டியம்மா விசாலம்! என்னதானிருந்தாலும் ஒங்கப்பா உசிரோடே இருந்தாக்கா இப்படி கொழந்தையும் குட்டியுமா நீ அல்லாடுவதைப் பார்த்துச் சகிப்பாராடியம்மா! பெண்டாட்டிக்குப் பெரியபோரம். அந்த மூடக் கம்மனாட்டி அதிலே முழுகிப்போய் தன் கூடப்

பிறந்தவர்களைக்கூட கவனிக்காமே இப்படி இருக்கிறனே! வெக்கமில்லையா!'' என்று ஆரம்பித்தாள்.

விசா:—அந்த வெட்கக்கேட்டை ஏன் கேக்கறீகள் பாட்டீ!...ரெண்டு பேரும் டாக்டர்தான். ஆனல் அவன் ஒரு பொம்மை டாக்டர்தானும். அவளுக்குத்தான் பணமும் புகழும் தினே தினே வளருகிறதாம். அவளுக்குத் தான் மாலையாம். மரியாதையாம். தினம் மீட்டிங்காம். என்னென்னமோ ப்ரவர்த்தகமாம். தினம் அவளுடைய புகைப்படங்கள் பத்திரிகையில் வருகிறதேயன்றி அவன் பெயர் கூட வருகிறதில்லை. இத்தனை படிப்பும் படித்துவிட்டு பெண்டாட்டிக்குக் கீழே கேவலமாயிருப்பதில் அவனுக்கு வெக்கமோ, சூடோ, சுரணையோ இருந்தால் இம்மாதிரி நடப்பானு! அவள் பெருமை என்னமோ! அவன் என்னமோ...

பாட்:—விசாலம்! என்னவிருந்தாலும் நீ கூடப்பிறந்தவள்தானே உன் அண்ணனுக்கு நீயாக ஒரு கடிதம் எழுதித்தான் பாரேன். ''கல்யாணத்திற்குப் பெண் குதிரைபோல் நிற்கிறது. ஜீவேஜியோ கிடையாது. கல்யாணம் செய்யாவிட்டால் நாலுபேர் பரிகஸித்து இழிவாகப் பேசுகிறர்கள். அவமானம் தாங்கமுடியவில்லை. நிலத்தில் விளைவும் ஒன்றுமில்லை. குழந்தைகளுடன் தனியாய்த் திண்டாடுகிறேன். எப்படியாவது அந்தப் பெண்ணின் கல்யாணத்தை முடித்துவைத்து நீதான் உதவ வேண்டும்'' என்று எழுதேன். அதோடு 'உன் பேர் மங்குவதும் அவள் பேர் பொங்குவதும் வெறும் கேலிக்கூத்தாக இருக்கிறது' என்றும் எழுதிப் பாரேன். என்னதான் பதில் வருகிறதோ பார்க்கலாம்—என்று பிரமாதமான மந்திரி மதியுடன் யோசனை கூறினள்.

இதைக் கேட்ட விசாலம் உண்மையில் அந்த யோசனையை ஆமோதித்துசபாஷ்போட்டு மெச்சினள். அதே நிமிடம் பாட்டியின் எதிரிலேயே அவளது மணிபோன்ற கருத்துக்களை அமைத்து எழுதுவதற்கு உட்கார்ந்தாள். இருவருமாக கூடிக் கலந்து யோசித்து எழுதி எழுதி அடித்தும் கிழித்தும் திருத்தியும் மாற்றியும் ஒருவாறு அன்று இரவுக்குள் கடிதத்தை முடித்துத் தபாலில் போட்டார்கள்.

அப்படி எழுதித் தபாலில் போட்டதுமே விசாலத்திற்கு ஏதோ ஒரு சாம்ராஜ்யத்தையே பிடித்துவிட்டதுபோன்ற பரம த்ருப்தியும் சந்தோஷமும் உண்டாயின. தன் விலையிலாத யோசனையை விசாலம் அங்கீகரித்து எழுதிய சந்தோஷமானது செங்கோலையே தன் கையில் தாங்கியது போன்ற பெருமை கிழவிக்கு உண்டாகியது.

தேவராஜனுக்கு உடன்பிறந்தவர்கள் நாலைந்துபேர்கள் இருக்கிறர்களேயன்றி அவரவர்கள் தனித்தனியே வயிற்றுப் பிழைப்பின் நிமித்தம் வெவ்வேறு ஊர்களில் இருக்கிறபடியால் ஒருவருக்கொருவர் பற்றுதலற்றுவிட்டது. விசாலம் ஒருத்திதான் பட்டிக்காட்டானுக்கு வாழ்க்கைப்பட்டு பட்டிக்காட்டிலேயே கிடக்கிறள். அவளுடைய துரதிருஷ்டவசத்தால் குழந்தைகளுக்குக் கால் வயிறு கஞ்சியாவது வார்த்துக் காப்பாற்றும் அவள் கணவனுக்கு பாரிச வாயுவு வந்து விழுந்துவிட்டான்.

நோயாளியாயிருந்தாலே, ஒருவனை எல்லோரும் அலக்ஷியம்செய்து வெறுப்பது வெகு சகஜம். அதிலும் கையும் காலும் ஸ்வாதீனமற்றுப்

பாயும் படுக்கையுமாய் பேசக்கூட வாயற்ற ஓர் முண்டத்தை யார்தான் லக்ஷியம் செய்வார்கள்? நிலங்களை கவனிக்கும் சோவாசிமுதல் ஏய்த்து விட்டார்கள். விசாலத்திற்கும் புருஷனிடம் வெறுப்பும் அலக்ஷியமும் குடிகொண்டு பக்ஷமும் அனுதாபமும் நாளடைவில் மறைந்தது என்றே கூறலாம். நாலைந்து குழந்தைகளை வைத்துக்கொண்டு மிகவும் சிரமப்படு வதையறிந்து ரமா, தன்னாலான உதவிகளை எத்தனையோ செய்துவந்திருக்கி றாள். சில ப்ரக்ருதிகளுக்கு எத்தனை செய்தாலும் திருப்தியோ, நன்றியோ கடுகளவும் கிடையாது. நிற்பதுமில்லை. அத்தகைய கோஷ்டியில் விசாலம் முதல் தாம்பூலம் பெற்றவள்.

ஏதேதையோ சாக்குவைத்துப் பணமாக அனுப்புவதும், சாமான்களா யும், துணிமணிகளாயும் அனுப்புவதுமாக எத்தனைசெய்தும் ஒரு நன்றி விச்வாசமான கடிதங்கூட எழுதுவது கிடையாது, இம்மாதிரியான போக்கு அனேக பெரிய மனிதர்களிடத்தில் குடிகொண்டிருக்கின்றதை எத்தனையோ விதத்தில் நாமே நேரில் காண்கிறோம்,

காரியம் ஆகும்வரையில் கால் தேயவும், கார் தேயவும் நடப்பார்கள். காரியம் ஆகச் சற்று தாமதமானாலுங்கூட ஏதோ இவர்களுக்கு நாம் செய் யக் கடமைப்பட்டவர்கள் போல் ஒரு அசட்டு அதிகாரம், தாமதமாகியதற் குக் கோபம் இவைகளை தாக்ஷிண்யமின்றி உதிர்ப்பார்கள். காரியமாகிய பிறகோ, எட்டிக்கூடப் பார்ப்பது கிடையாது. ஒரு கடிதம் எழுதவும் மரியாதை தெரிவதில்லை. எத்தனையோ வேலைகளுக்கு மத்தியில் தமக்கு இத்தகைய உதவிகள் செய்திருக்கிறார்களேயென்ற எண்ணங்கூட அவர் களது மனத்தில் உதிப்பதில்லை என்றே கூறலாம்.

உலகத்தில் மக்களுடைய தன்மை அங்ஙனமிருக்க, விசாலம்மாள் வெறும் ஏழை. விடியாத தரித்திரம். தீராத சங்கடம், அழாத குறை இதற்கு யார் உதவிசெய்துதான் பூர்த்தியாகப்போகிறது. 'ஔவையார் கிழவிக்கு அலங்காரம் செய்வதென்றால் அரைஞாண்கயிறு முதல் இரவல் வாங்கவேண்டும்' என்பது பழமொழி. அதேபோல் விசாலம்மாளின் குடும்பத்தைக் காப்பதென்றால் இது போதுமா!

தேவராஜன் அந்த சம்பவத்திற்குப் பிறகு ரமாவிடம் பழயமாதிரியே வெகு அன்பாயும் வித்யாஸமில்லாத பிரேமையுடனும் பழகிவரத்தொடங் கினான். இந்த நிலைமையைக்கண்டு ரமாவின் தகப்பனாருக்கு உள்ளம் பூரித்த தெனினும், "கலகத்திற்கு காதைக்கொடுத்து ஒருதரம் ஆடிவிட்ட மனிதனின் புத்தி மீண்டும் திரும்பாமல் ஒரே ஸ்திரமாக இருக்க வேண்டுமே! பின்னும் எந்த புண்ணியவான்களாவது தோன்றி மனத்தை மாற்றாதிருக்கவேண்டுமே!" என்ற கவலையும் கூடவே இருந்து வாட்டியது.

ரமாவுக்கும் அதுவே மனத்தில் வேலை செய்து வந்தது; எனினும் அதை வெளிக்குக்காட்டாது நடந்து வந்தாள். ஒற்றுமையின் பிணைப்பில் பிரேமை நிறைந்த வாழ்க்கை நடந்துவரும் சமயம் ஒரு நாள் தம்பதிகள் சினிமா பார்த்துவிட்டு ஆனந்தமாகப் பேசிக்கொண்டே இரவு 12 மணிக்கு காரில் வந்துகொண்டிருந்தார்கள்.

கொஞ்சதூரத்தில் ஒரே கூக்குரலும், ஆகாயத்தையளாவிய தென்னை மரம்முதல் கொழுந்துவிட்டெரியும் கோரக்காக்ஷியும் கண்டு "ஐயையோ!

எங்கேயோ தீப்பிடித்து எரிகிறதே. அகோரமான தீயாக விருக்கின்றதே! டாக்டர்! காரை நேரே அங்கு திருப்புங்கள்!'' என்று ரமா பதைக்கப் பதைக்கக் கூறினாள்.

தேவராஜனும் காரைத் திருப்பினான். எதிரில் வரும் ஜனங்களை மடக்கி "அங்கென்ன விபத்து? உங்களுக்குத் தெரியுமா!'' என்று கேட்டதற்கு அவர்கள் "அங்கு ஹரிஜனங்களின் சேரி இருக்கிறது. அதில் ஏதோ அகஸ்மாத்தாகத் தீப் பிடித்துவிட்டதாம்'' என்று சொன்னதைக் கேட்டதும் ஓட்டமாக காரை விட்டுக்கொண்டு போனார்கள். பறச்சேரியில் அல்லகல்லோலப்படுகிறது. எங்கு பார்த்தாலும் ஒரே இரைச்சல். ஒரே தீனக்குரல். தீயின் விபரீத வெடி சப்தமும் தீக்ஷிண்யமும் கோரமான எரிச்சலும் எல்லோருடைய இதயத்தையும் துடிக்கச் செய்கின்றன.

எத்தனையோ பேர்கள் தம்தம் உயிருக்கும் துணிந்து தீயில் புகுந்து ஆபத்தில் சிக்கியவர்களையெல்லாம் காப்பாற்றியும் தீயை அணைக்கப் பல பிரயத்தனங்கள் செய்தும் வருகிறார்கள்.

ஏழை ஹரிஜனங்களின் புலம்பலும் தவிப்பும் காணச் சகிக்கவில்லை. "ஐயோ! உள்ளே கொயந்தெ தூங்கிகிட்டுக்கிதே...சாமானெல்லாம் போச்சே...துணிமணி போச்சே. நேத்துதானே சம்பளம் வாங்கிவெச்சேன்...கெயவி உள்ளே ஆப்பிட்டுகினாளே!'' என்று பலர் பலவிதமாகக் கதறுகிறார்கள்.

ரமா வெகு இளகிய மனத்தையுடைய தருணீமணியாதலால் மனம் பதைக்கக் காரிலிருந்து இறங்கி தலைதெறிக்க ஓடவாரம்பித்தாள்.

தேவராஜன் ரமாவைத் தடுத்துக் கையைக் பிடித்துக்கொண்டு "இதென்ன ரமா! இந்த நடுநிசியில் இவ்விபரீதத் தீயின் மத்தியில் நீ எங்கே போகிறாய்? இசகுபிசகாய் நீ எங்காவது அகப்பட்டுக்கொண்டால் கஷ்டம். ரமா! தூரவிருந்து என்ன செய்யமுடியுமோ செய்யலாம் வா!'' என்று தடுத்தான்.

ஆனால், ரமா அதற்கு இசையவில்லை. "டாக்டர்! இத்தகைய கோர விபத்தில் எத்தனைபேர்கள் உயிர்விட்டார்களோ! இன்னும் விடப்போகிறார்களோ! இச்சமயம் நம்முடைய உயிரை வெல்லமாக நினைக்கலாமா! வாருங்கள். நீங்களும் கூட வாருங்கள். இச்சமயம் எத்தனைபேர்கள் உதவிசெய்தாலும் போதாது'' என்று கூறியவாறு அவனையும் பிடித்து இழுத்துக்கொண்டு ஓடினாள்.

இதற்குள் தீயணைக்கும் மோட்டார்களும், ஆம்புலன்ஸ் கார்களும், சாரணர்கள், போலீஸ்காரர்கள் முதலிய பலபேர்கள் வந்து குழுமிவிட்டார்கள். தன் குடிசை எரியும்போது ஒரு தாயார், குழந்தைகள் உள்ளே அகப்பட்டுக்கொண்டதை யறிந்து பெத்த பாசத்தின் வேகத்தினால் உள்ளே நுழைந்து இரு குழந்தைகளையும் இரு கைகளில் இடுக்கிக்கொண்டு தலைதெறிக்க உடம்பும் தலையும் தீயால் பொசுங்கியவாறு ஓடிவருவதைப் பார்த்த ரமாவின் வயிற்றில் கபீரென்று செய்து கலக்கியது.

அந்த மனுஷி பிரக்ஞையற்றுக் குழந்தைகளோடு கீழே விழுந்து விட்டாள். ரமா, கீழே இருந்த மண்ணை வாரிப் போட்டுத் தீயை மெல்ல அணைத்தாள். இதற்குள் இன்னும் பலபேர்கள் இப்படிகுத்துயிர் குலை

உயிராயிருப்பதைக் கண்டு பதறியவாறு தன்னால் முடிந்தவரையில் பம்பரமாய்ச் சுழன்று வெளியேற்றமுடிந்தவர்களையெல்லாம் தானும் தன் கணவனுமாய்ச் சேர்ந்து வெளியில் கொண்டு வந்தாள். உயிர் போய் விட்டவர்போக, ஆபத்தான நிலைமையிலுள்ள நாலைந்து கர்ப்பிணிகள், கிழவர்கள், குழந்தைகள் முதலியவர்களைத் தானே சிகிச்சை செய்து காப்பாற்றவேண்டுமென்கிற பேராவல் உண்டாகியதால் தன் காரில் போட்டுக்கொண்டு நேரே தன் பங்களாவில் வந்திறங்கி, பின்புறமுள்ள பெரிய ஹாலை ஒழித்துப் படுக்கைகள் தயார்செய்து அந்த ஹரிஜனங்களுக்குத் தக்க சிகிச்சை செய்தாள்.

தனக்குத் தெரிந்த நர்ஸ்களை வரவழைத்து பிரத்யேகமாக வேலையில் நியமித்து எல்லோரையும் சரியாகக் கவனிக்கும்படிக்குச் செய்தாள். தேவராஜனும் கூடவிருந்து சகலமான உதவிகளும் செய்தான். ரமாவும் தேவராஜனும் இரவு முற்றும் காரில் சுற்றி அலைந்தபடியே எத்தனை விதத்தில் உபகாரம் செய்யமுடியுமோ அத்தனையும் செய்தார்கள்.

பெருத்த தீ விபத்தானதால் விடியற்காலை வரையில் தீ அணையவில்லை- சுமார் 200 ஹரிஜனங்களின் குடிசைகளும் அதனுள்ளிருந்த சாமான்களும் அக்கினி பகவானுக்கு இரையாகிவிட்டன. உயிர்ச்சேதம் மட்டும் அதிகமில்லை என்றும் ஆனால், அனேகருக்கு ஆபத்தான நிலைமை ஏற்பட்டதாயும் தெரிவதாய் விஷயம் எட்டியது.

சுமார் 10 பேருக்குமேல் ரமா தன் வீட்டையே ஆஸ்பத்திரியாக்கி சிகிச்சைசெய்துகொண்டு வந்ததானது, ஜனங்களுக்கு வியப்பாயும் கூறத் திறமற்ற சந்தோஷமாயுமிருந்தது. 'அந்தோ! பரிதாபம்! பரிதாபம்! அன்றாடம் கூலிவேலை செய்து ஆனந்தமாய் காலங்கடத்திவந்த ஹரிஜனங்களின் பரிதாபமும் திண்டாட்டமும் அப்பப்பா! நாலும் கூறத்திறமில்லை.

நிற்க, நிழலின்றி, குடிக்கக் கஞ்சியின்றித் தத்தளிக்கும் பரிதாபத்தை வேடிக்கை பார்க்கவரும் ஜனங்களின் எண்ணிக்கை அளவிடமுடியாது. கையை நீட்டி ஒரு காசு கொடுக்க மனமில்லையெனினும், இந்த பரிபவக் காக்ஷியைப் புகைப்படமெடுத்து அதை பத்திரிகைகளுக்கு அனுப்பி அதன் மூலம் பணமும், புகழும் சம்பாதிக்கும் நோக்குடன் கையில் காமெராக்களுடன் மூலைமூலையாய்ச் சுற்றி அலைந்து, எரிந்த சாம்பலையும், அலறும் ஜனங்களையும், சின்னபின்ன மடைந்த இடங்களையும் புகைப்படங்கள் எடுக்கும் போட்டி பலத்துவிட்டது.

சில பெரிய மனிதர்கள் "ச்ச்ச்ச் என்ன அநியாயம்! காணச் சகிக்கவில்லையே. இத்தனை ஆயிரம் ஜனங்களுக்கும் இன்று எப்படிக் கஞ்சி வார்ப்பது? ஆளுக்கொரு காலணாவாவது சேர்த்து தர்மத்திற்கு ஏற்பாடு செய்யுங்கள்" என்று வாய் ஒழுங்காய் சொல்லிக்கொண்டே 'பிரசாரம் செய்யும் புண்ணியமே போதும்' என்ற நோக்கத்துடன் போய்க்கொண்டிருக்கிறார்கள்.

உண்மையில், அதிக தனவந்தர்களில் சிலருக்கு 'செல்லாக் காசு பிறருக்குக் கொடுத்தால்கூட தம்முடைய லக்ஷ்மி தம்மைவிட்டு அந்தக் காசு மூலம் பிறருக்குப் போய்விடுவாளோ!' என்கிற பயம் வந்துவிடுகிறது போலும். அதனால் கொடுக்க மனமே வருவதில்லை. 'இறைக்கிற கிணறு

தானே சுறக்கும்' என்பது பழமொழி. அப்படித் தன் சக்திக்கு இயன்ற மட்டும் தர்மம் செய்தால்தானே தனம் சுறக்கும் என்று நினைக்கிற பிரபுக்கள் ஏதோ கொடுக்கவும் முற்படுவார்கள். கொடுக்கவும் கொடுப்பார்கள். உலகத்தின் விசித்திர லீலை ஒன்று இரண்டா! ரமா காலையில் இந்த காக்ஷிகளைப் பார்த்துவந்தாள். ஜனங்களின் பரிதாபத்தைக் காணமுடியாது உள்ளம் உருகியது. அனேக பெரிய மனிதர்கள் வாயுபசாரத்துடன் வந்து நிற்பதையும் பிறரைப்போடும்படிக் கூறிவிட்டுத் தாங்கள் கையை இழுப்பதையும் பார்த்த ரமாவுக்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை.

மணியோ 10 இருக்கும். வெய்யில் தீக்ஷிண்யமாகக் காய்கிறது. "இத்தனை ஜனங்களுக்கும் வீடு வாசல், சாப்பாடு இத்தனைக்கும் எப்படிதான் ஏற்பாடு செய்வது? யார்தான் இதற்கு முன்னின்று முனைய முடியும்? ஐயோ! பின்னர் நடக்கவேண்டியதிருக்கட்டும். இன்றைய ஆகாரம் ஒரு உப்புக்கஞ்சிக்காவது வழி செய்யவேண்டுமே. என்ன பண்ணுவது?" என்று குழம்பினாள்.

உடனே ஒரு யோசனை தோன்றியது தன் கணவனின் குல்லாயை எடுத்தாள். "மகா ஜனங்களே! தம்தம் சக்திக்குத் தக்கவாறு இதில் யார் யார் எதைப் போட்டாலும் பரிபூர்ண சந்தோஷத்துடன் அவைகளைக் கொண்டு இந்த ஏழைகளுக்கான கஞ்சிக்கு ஏற்பாடு செய்யலாம். இதோ, முதலில் என்கைவளையலைக்கழட்டிப்போடுகிறேன். இந்த தர்ம கைங்கரியத்திற்காகக் கொடுத்தபிறகு இனி நான் வளையலே போட்டுக்கொள்வதில்லை" என்று சபதம்செய்தபடி மடமடவென்று வளையலைக் கழட்டிப்போட்டாள்.

தன் கணவன் முகத்தை உற்று நோக்கினாள். அவனுடைய கடியாரத்தை மட்டும் எடுத்துக்கொண்டு சங்கிலியை அதில் போட்டான். பிறகு அவளுடைய தகப்பனார் தம்முடைய புராதன சொத்தும், வெகுகாலமாய்த் தான் அணிந்திருந்ததுமான கடுக்கன்களைக் கழட்டித் தாராளமாய்ப் போட்டார்.

'என்ன ஆச்சரியம்! என்ன உதாரம்!' என்று மூக்கின்மீது விரலை வைத்துக்கொண்டு நிற்கும் சீமான்களும் சீமாட்டிகளும் சற்று தயங்கிய போதிலும் அவர்களுடன் வந்திருந்த சிறுமிகள் சிறுவர்கள் பெரியவர்களைத் தூண்டி மோதிரங்கள், சங்கிலிகள், வளைகள், நோட்டுகள், ரூபாய்கள் ஆகப் பலவிதமான பொருள்களைச் சேர்த்தார்கள்.

9

உத்தம யோசனையும், உறுதி ப்ரதிக்ஞையும்

பத்திரிகையைத் திருப்பித் திருப்பிப் படித்த ரமாவின் தகப்பனார் ஆனந்தக் கண்ணீர் உதிக்கிறார். ரமாவின் புகைப்படத்தையும், அவள் அன்று சேரியில் உண்டாகிய தீ விபத்தில் செய்த சேவையைப் பற்றி எழுதியிருக்கும் புகழுரையையும் தான் மட்டும் கண்டு சந்தோஷமடைவது அவருக்குத் திருப்தியே இல்லை, இம்மாதிரியான ஒரு காலத்தை ரமாவின் தாயார், ரமா சிறு குழந்தையாயிருந்த காலம் முதல் ஏங்கி எதிர்

பார்த்தவள் மறைந்துவிட்ட துக்கம் அவருக்கு முன்னைவிட இப்போதுதான் அதிகமாகத் தெரியவாரம்பித்தது.

அதைப்பற்றியே அவர் சிந்தித்துக்கொண்டு உட்கார்ந்திருக்கையில் ரமா, நோயாளிகளைக் கவனித்துப்பின் தகப்பனாரிடம் வந்தாள். தகப்பனாரின் நிலைமையைக்கண்டு நகைத்தபடியே "என்னப்பா! கண்ணீர் விட்டால்மட்டும் என் கண்ணான தாயார் எழுந்து வந்துவிடுவார்களா! எல்லாம் எனது துரதிருஷ்டந்தான்! இல்லாவிட்டால் அவர்கள் காலம் முடியவேண்டுமா! சரி! இனி அதைப்பற்றிக் கவலைப்பட்டு என்ன பயன்! என் அன்னையின் ஆத்மாவாவது சந்தோஷமடைந்து என்னை ஆசீர்வதித்துக்கொண்டிருந்தால் போதும்.

அப்பா! நான் இந்த இரண்டு மூன்று நாட்களாய் வெகு தீவிரமாக யோசனைசெய்து, என் மனது ஒரு முடிவுக்கு வந்துவிட்டது. அதைத் தங்களிடம் தெரிவிக்கவே நான் இந்த நேரத்தில் இங்கு வந்தேன். இன்னும் விளக்கு எரிவதால் நீங்கள் தூங்கவில்லை என்பதையறிந்தேன்... அப்பா! ஒரு மனிதன் உலகத்தில் பிறந்தால் அவன் அடையும் நித்திய மான இன்பம் எது அப்பா?" என்று விடுகதையைப்போல ஒரு வெடிகுண்டை எறிந்தாள்.

இதைக் கேட்ட அவள் தகப்பனாராகிய சீதாபதிக்கு ஒன்றுமே புரியாது பிரமிப்பு உண்டாகியது. 'ரமா! இதென்ன கேள்வியம்மா! எந்த மனிதனுக்கும் அரிதாகிய பகவத்சரணாரவிந்த சேவையே நித்யமானது. அந்த சரணங்களை நம்புவதால் இகத்தில் நிச்சலனமான சுகத்தைக் கொடுத்து, பரத்திலும் அழியாத இன்பத்தைப் பயக்கும். அவனது அதே சரணத்தடியில் நம்மைச் சேர்த்துக்கொள்வான். இதுதான் ஒரு மனிதனின் உண்மையான பிறவியின் சார்த்தகமாகும். ஏன் கேட்கிறாயம்மா?' என்றார்.

ரமா:—(தகப்பனாரின் கைகளைப் பிடித்துக்கொண்டு) அப்பா! அத்தகைய பரம்பொருளின் சரணகமலங்களை அர்ச்சித்துச் சேருவதென்றால் அது நேராகவே கிடைத்து விடுமா! அன்றி ஏதேனும் ஒரு மார்க்கம் வேண்டுமா!

சீதாபதி:—ரமா! உன் கேள்விகள் என்னைப் புலகிதமுறச் செய்கின்றனவம்மா! பகவானுடைய சரணாரவிந்தம் என்பதற்கு இன்னொரு சூக்ஷ்மப் பொருளை நீ அறியமாட்டாயா! சரணம் அடையும் அந்தப் பொருளின் பெயரைக் கவனி. அரவிந்தம் என்றால் தாமரை. தாமரை மலர்கள் எங்கு கிடைக்கும்? தடாகத்தில். தடாகத்தில் நேராக நடந்துசென்று ஒரு தாமரையைப் பறிக்கமுடியுமா!

தடாகத்தில் உள்ள நீர்வாழ் ஜந்துக்களின் உபத்திரவத்தை ஜெயிக்கச் சக்தி வேண்டும். ஏதேனும் ஒரு செடிகொடி காலில் சிக்கிக்கொண்டு இழுத்தால் அதை அறுத்தெறியத் தைரியம் வேண்டும். இத்தனைகளையும் சமாளித்துச் சென்றால் தாமரையை அடையலாம்.

அதேபோல் சம்சார பாசபந்தங்களில் சிக்கி உழலாமல் எந்த காரியத்தைச் செய்தபோதிலும் அது அவனுடைய சக்தி என்று அவனுக்கே

அர்ப்பணஞ்செய்து கூடுமான வரையில் அநவரதமும் அவனை பஜித்து நற்கிருத்யங்களையே செய்துவந்தால் அந்த சரணாரவிந்தத்தை அடையலாம்.

ரமா:—அப்பா! நற்கிருத்யங்கள் என்றால் எவை? அவனுக்கு உகப்பான பணிகள் என்று அலாதியாய் இருக்கின்றனவா! கோயில் கட்டுவதும், உத்ஸவாதிகள் செய்வதுந்தான் அவனுக்கு ப்ரீதியா!

சீதாபதி:—அதில்தான் 'ப்ரீதி' என்று நான் சொல்லவில்லை. ஏராளமான பணமிருப்பவர்கள் அதுபோன்றகைங்கரியங்கள் வேண்டியதுசெய்யலாம்.

ரமா:—கோயில் பெருச்சாளிகளைப்போன்று கோயிலிலுள்ள பலரும் பலவிதமாக பகவத் சொத்துக்களைப் பகிர்ந்து தின்றுவிடுவதில் அந்த பரம்பொருளுக்குச் சந்தோஷமுண்டாகுமா! அகண்டாகாரமாகிய பரந்தாமன் அடியார்க்கடியனல்லவா! எளியார்க்கும் எளியனல்லவா! அவனுடைய குழந்தைகளாகிய பிரஜைகளின் சுகத்திற்கும் க்ஷேமத்திற்கும் அவன் பாத்தியப்பட்டவனல்லவா! ஆயிரக்கணக்கான ஜனங்கள் அவதியுறும்போது அவன் மட்டும் ஏழடுக்கு கோபுரத்தின்கீழ் நிம்மதியாய்த் தூங்குவது தருமமா!...

என்று முடிப்பதற்குள் சீதாபதிக்கு விஷயம் ஒருவாறு விளங்கிவிட்டது. ரமாவின் முதுகில் தட்டிக்கொடுத்தவாறு' "ரமா! புரிந்துகொண்டேன். நான் நமது கிராமத்து ஜனங்களுக்கு ஒரு கோயில் கட்ட வேண்டுமென்று சொல்லி இருக்கிறேனே! அதற்காக நீ இத்தனை விஷயங்களைக் கிளறிக்கேட்கிறாய். உன் கருத்து இன்னதென்று தெரிந்துவிட்டது. ஒரு கோயிலைக்கட்டி எம்பெருமானை பிரதிஷ்டை செய்வதைவிட நூற்றுக்கணக்கான குடிசைகளைக்கட்டி அவனுடைய பக்தர்களுக்கு நிழல் கொடுத்து அவன் மனத்தைக் குளிரச் செய்யலாம்'' என்றுதானே சொல்லவந்தாய்... என்னம்மா விஷயம் இதுதானே!...

ரமாவின் வியப்பு கரை புரண்டது. தகப்பனாரின் இருபாதங்களையும் பிடித்துக்கொண்டு சாஷ்டாங்கமாய் விழுந்து நமஸ்கரித்தாள்; ஆனந்த பாஷ்பம் கண்ணில் தாரை தாரையாய் விழுந்தது. பேச நா எழாது தொண்டை அடைத்துக்கொண்டது. சற்றுநேரம் திக்குமுக்காடினாள். பிறகுபேசத்தொடங்கி, "அப்பா! கடவுளின் சித்தம் எப்படியோ அப்படித்தான் மனிதர்களின் உணர்ச்சிகளையும் மாற்றி எண்ணங்களையுங்கொடுப்பான். இது சந்தேகமின்றி கடவுளின் சித்தம் என்பதற்கு ஐயமேயில்லை.

ஏதோ அவனருளாலும், உங்கள் ஆசியாலும் நமக்கு ஒரு குறைவுமின்றி என் தொழிலில் படியளக்கிறான். உங்கள் சொத்தோ லக்ஷத்திற்குமேல் உருளுகிறது. உங்களுக்கும் வயதாயிற்று. நல்ல காரியங்களைச் செய்து கண்ணாறக்கண்டு சந்தோஷமடைவதைவிட உங்களுக்கு வேண்டியதொன்றுமில்லை. ஆயிரக்கணக்கான ஏழை ஜனங்கள் நிற்க நிழலின்றித் தவிக்கிறார்கள்.

அப்பா! சர்க்காரிலும் உதவி செய்வார்கள். நகரபரிபாலன சபையின் தலைமைப் பதவியில் நீங்கள் இப்போது இருக்கையில் உங்களுடைய தொகையை அதிகம் போட்டு இந்த ஏழைகளுக்குக் குடிசைகள் கட்டிக் கொடுப்பதோடு அவர்களுக்கு ஒரு சிறிய ஆஸ்பத்திரி, பள்ளிக்கூடம் முதலியவைகளை நிரந்தரமாக ஏற்பாடு செய்தால் அதுதான் பகவானுக்கு உகப்

TAMIL NADU ARCHIVES LIBRARY No. 104344 MADRAS

பான கைங்கரியமாகும் என்று எனக்குத்தோன்றுகிறது. இதைத் தாங்கள் நிறைவேற்றவேண்டும்.

இதைக்கேட்ட சீதாபதியின் இதயமும் ஆனந்தத்தினால் நிரம்பியது. தன் புதல்வியின் யோசனையும், உபகாரச் சிந்தையும், கூரிய மதியும் கண்டு மகளைப் பெற்ற பேரின்பத்தை இன்றே அடைந்தார். "அம்மா! உன்னுடைய சந்தோஷத்திற்குப் பாடுபடவே நான் உயிர் வாழுகிறேனே யன்றி என்னக்காக ஏதுமில்லை. என்னுடைய பிறவிப்பிணி நீங்குவதற்கும் அந்த அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகனின் சரணாரவிந்தத்தில் சேர்ந்து இன்புறுவதற்கும் நான் காத்திருக்கின்றேன். உன் தாயாரின் பெயராலேயே இந்த தர்மகைங்கரிய நிதிக்கு ஒரு லக்ஷ ரூபாய் நன்கொடை நானே கொடுக்கிறேன். அதற்கு மேன்மேலும் நிதி சேகரிக்க ஓர் கமிட்டியும், சங்கமும் ஏற்படுத்துகிறேன். அதன் காரியதரிசியாக பொறுப்பு வாய்ந்த ஒரு பெரியமனிதரை நியமிக்கிறேன். பொக்கிஷதாரியாக உன்னையே ஏற்பாடு செய்கிறேன்.

ரமா:—ஆ ஆ!...அதற்கு நான் ஒப்பமாட்டேன். எல்லாவற்றிற்கும் நல்ல யோக்கியமான பெரிய மனிதர்களையேதான் நியமிக்கவேண்டும். அப்பா! இன்னொரு காரியங்கூடச் செய்யலாம். இந்த முதல் வைத்து, மேலும் சேருவதையும் சேர்த்து இதையோர் பெரிய ஸ்தாபனமாக்கி இதன் மூலம் பலருக்கு வேலை கொடுக்கும்படியான கைத்தொழில்களை ஆரம்பிக்கலாம்.

அதாவது:-அனேக சர்க்காக்களைப் போட்டு நூல் நூற்கச்செய்வது, தறிபோடுவது, சாயம்போடுவது, பாய் கூடைகள் முதலிய குடிசைத் தொழில்களை விருத்திசெய்து இவை போன்ற கிராமீத் தொழில்கள் அபிவிருத்திக்கான ஸாதகங்களைச் செய்தால் எத்தனையோ ஏழைகள் பிழைக்கலாம்; எத்தனையோ ஏழைகளுக்கு வேலை கிடைக்கும். நிரந்தரமான ஸ்தாபனமாக விளங்கும். அழிந்துபோன அனேக கிராமத் தொழில்களைப் புனருத்தாரணம் செய்லாம். இனிமேல் எவ்விதமான தாமதமும் வேண்டாம். நாளையே வேலையை ஆரம்பித்துவிடுங்கள். நாளைய பத்திரிகையிலேயே உங்கள் உத்தேசங்களைப் பிரசுரித்துவிடுங்கள்—என்றாள்.

மேற்குறித்த சகலமான வேலைகளும் அத்யாவசியமானதும், உபயோகத்துக்குரியதுமானவைகளானதால் இதற்கு உடனே சம்மதித்தார். பிறகு ரமா உத்திரவு பெற்றுக்கொண்டு படுக்கைக்கு வந்தாள். தேவராஜன் ஒரு அடுக்கு பத்திரிகையை வைத்துக்கொண்டு புரட்டிப் பார்த்தபடியேயிருந்தான்,

ரமா—இன்னுமா தூங்கவில்லை மணி ஒன்றாகப்போகிறதே!

தேவ:—ரமா! எத்தனை விதங்களில்தான் நீ இந்தப்பத்திரிகைகளில காட்சி கொடுக்கிறாய் தெரியுமா! அவைகளைத் திரும்பித் திரும்பிப் பார்க்கும் ஆனந்தத்தில் தூக்கமே வரவில்லை. நீயும் உன் பிதாவும் ஏதோ தீர்க்காலோசனை செய்துகொண்டிருந்ததை அறிந்தேன். உங்களை நடுவில் தடுக்கக்கூடாதென்றே பேசாதிருக்கிறேன். உன் பேட்டிக்கு யாரோ ஜமீன்தார்வீட்டு ஆள் வாசலில் காத்திருக்கிறான். உம்...புறப்படு. இந்த தொழிலிலுள்ளவர்களுக்கு—அதிலும், உன்னைப்போன்ற பிரபலமானவர்

களுக்கும், கைராசிக்காரர்களுக்கும்—ஓய்வு ஏதம்மா! ஏது? சாப்பாட்டிற்கு உட்கார்ந்தால்கூட மத்தியில் ஆபத்து என்று ஆள் வந்தால் எழுந்து ஓடவேண்டியதுதானே!'' என்று வெகு தமாஷாகவும் முதுகில் தட்டிக் கொடுத்தபடியும் கூறினன்.

ரமாவும் நகைத்துக்கொண்டே அவன் தோள்களைப் பிடித்து உலுக்கியவாறு ''குட்நைட் டாக்டர்! போய் நல்ல ஜெயத்துடன் திரும்ப வேண்டுமென்று ஆசீர்வாதம் செய்யுங்கள்'' என்று ஒரு உத்திரவு போடுவதுபோல் போட்டாள்.

தேவ:—கடவுளே! ஸ்ரீமதி ரமாதேவி போகும் காரியத்தில் பரிபூரண ஜெயம் பெற்றுத் திரும்பி வரவேண்டும்படி அருள் பாலிக்கவேண்டும்—என்று கூறியவாறு கையைக் கூப்பிப் பின் கன்னத்திலும் போட்டுக் கொண்டு கபகபவென்று சிரித்தான். ரமாவும் தாங்கமாட்டாத சிரிப்புடன் தேவனின் முதுகில் தடவியவாறு புள்ளிமான்போல் துள்ளிப் பறந்து மறைந்தாள். அடுத்த நிமிடமே கார் செல்லும் சப்தமும் கேட்டது. தேவராஜன் இதயத்தில் கொந்தளிக்கும் ஆனந்தத்துடன் கட்டிலில் படுத்தான்.

10

கலகக் கொள்ளியின் கடூர ஜ்வாலை

''அடேயப்பா! பார்த்தாலும் பார்த்தேன்! இவனைப்போல் பேமானி யாரையும் பார்க்கவில்லை. சுயநலப்புலி என்பதையறியாது மானங்கெட்டுப் பல்லைப் பிளக்கிருனே! அந்த தீ விபத்தில் அவனுந்தான் அந்தக் கூட்டத்தில் அந்த மாதரசியுடன் பாடுபட்டான். அவனுந்தான் தன் கைக்கடியாரச் சங்கிலியைக் கழட்டிக் கொடுத்தான். அவனுந்தான் வீட்டில் நோயாளிகளைக் கவனித்தான். என்ன அநியாயம்! இந்தப் பத்திரிகைக்காரர்களுக்குத்தான் என்ன வஞ்சனை? 'ஸ்ரீமதி ரமாதேவி அதைச்செய்தார்கள்; இதைச்செய்தார்கள். பணம் வசூல் செய்யத் தன் கைவளையல்களைக் கழட்டிக் கொடுத்தார்கள். தகப்பனரின் வைரக்கடுக்கன்களையும் கணவனின் சங்கிலிகளையும்தானே பிச்சை எடுத்தார்கள். தட்டுப்பிச்சை எடுப்பதற்கொப்ப அந்த உத்தமி இந்த ஏழை ஹரிஜனங்களுக்காகக் கையை நீட்டி பிச்சை எடுத்த காக்ஷி கண்கொள்ளா ஆனந்தமாகவிருந்தது'' என்றெல்லாம் நாவல்களில் வர்ணிப்பதுபோல் வர்ணித்து எழுதியும் தினுசுக்கொரு புகைப்படங்களைப் போட்டுமிருக்கிறார்களேயன்றி ஸ்ரீமான். தேவராஜனும், இதில் கூட பங்கெடுத்துக்கொண்டு உழைத்தான் என்கிற வார்த்தையாவது போட்டிருக்கிறதா பாரு.

வரவர அநியாயம் அதிகரித்துவிட்டது. ஹரிஜனங்களையாவது, வீட்டில்கொண்டு வைத்துக்கொள்வதாவது? புகழ் சம்பாதிப்பதற்கு ஒரு வரம்புகூட அற்றுவிட்டதா! அந்த மடையனுக்குத்தான் புத்தி எங்கு

போயிற்று? அவன் தகப்பனரும் முன்னேர்களும் இருந்த பெருமைஎன்ன. ஆசாரவிலக்ஷணமும் உயர்ந்த குலத்தின் மகிமையும் கொஞ்சங்கூட கவனிக்காமல் கேடுகெட்ட பறப்பசங்களை—ஐயோ ராமா! ஹரிஜனங்கள் என்று சொல்லவேண்டுமாம். அவர்களை—வீட்டில் வைப்பதாவது, அந்தச் சிறுக்கி வேலை செய்வதாவது. சீச்சீ! இந்த அவமானம் சகிக்கமுடியாது. இந்த இழிவைத் தாளவே முடியாது.

கூடப்பிறந்தவன் என்கிற ஒரு பாவத்திற்காக எங்கள் மானம் போகிறது. எங்கள் வீட்டில் சம்மந்தம் செய்வதற்கும் நாள் கிழமைகளுக்கு ஜனங்கள் வருவதற்கும் இனிமேல் ஆக்ஷேபனையும் கட்டுமல்லவா பிறக்கும்போலிருக்கிறது. இதென்ன அக்ரமம்! இன்றே ஒரு கடிதம் எழுதிவிட்டு மறுபேச்சு பேசுகிறேன். இல்லாவிட்டால் நேரில் போய் அவனைக் கண்டிக்கிறேன்'' என்று தேவராஜனுடன் பிறந்த சகோதரர் இருவரும் விசாலத்தம்மாள் முன்னிலையில் இன்னும் பல சிநேகிதர்களுடன் கூடி மேற்படி சம்பாஷணையை நடத்தினர்கள்.

இதுபோன்ற வயித்தெரிச்சல் ப்ரக்ருதிகளும் வீண் வம்புக்கு முதல் தாம்பூலம் பெற்றுக்கொண்டு முன்னணியில் நிற்கும் அபூர்வ ஆத்மாக்களும் ரமாவுக்கு அவள் வசிக்கும் ஊரிலே பஞ்சமில்லாமல் கிளம்பினர்கள். எங்கு பார்த்தாலும் ரமாவின் பேர் அடிபடாத இடமே இல்லை.

இந்த விஷயத்தை ஆதரிப்பவர்கள் புகழ்வதும், வயிற்றெரிச்சலும் த்வேஷபுத்தியும் உள்ளவர்கள் இகழ்வதும் வெகு மும்முரமாய்த் தலையெடுத்துவிட்டது. தினம் ஒரு காரணம் வைத்து ரமாவின் புகைப்படத்துடன் அவள் சேவையைப் பாராட்டிப் பத்திரிகையில் வருவதைப் பார்த்தபிறகு இனி கேட்கவேண்டுமா!

ரமா தன் தகப்பனரிடம் ஏற்பாடு செய்ததுபோல் முக்யமான பெரிய மனிதர்களை நியமித்து, அவள் தாயாரின் பெயராகிய வேதவல்லியம்மாள் தர்ம ஸ்தாபனம் என்ற பெயரில் புதிய சங்கம் ஆரம்பித்துத் தான் முதன் முதல் ஒரு லக்ஷ ரூபாய் நன்கொடை கொடுத்ததையும், அதற்குத் தகுந்த ஆட்களை நிர்வாகக்கமிட்டி ஏற்படுத்தியதையும், ரமாதேவி தனது தாயாரின் நகைகளில் அவளுடைய திருமங்கல்யம் தவிர மற்றவைகளையும் தன்னுடைய சில நகைகளையும் விற்று 10000 ரூபாய் அந்த நிதிக்கு நன்கொடை கொடுத்ததையும், தன் தகப்பனரின் வீடு இனி பொதுஸ்தாபன ஆபீஸாக மாற்றப்பட்டதையும், தான் தனியாக "ரமா தேவ்'' என்கிற பங்களாவை வாங்கிக்கொண்டு குடியேறப் போவதையும் சகல விவரங்களுடனும் பல பத்திரிகைகளிலும் பிரசுரம் செய்துவிட்டார்கள்.

ரமா, தன் காரியங்கள் வெற்றிமேல் வெற்றியாக ஜெயமாவதைக் கண்டு உள்ளம் பூரித்தாள். தேவராஜனும் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தான். இந்த சமயத்தில் அவனை அவசரமாக ஒரு முறை வரும்படி ஒருநாளும் இல்லாமல் திருநாளைப்போல் அவன் தமயனிடமிருந்து ஒரு தந்தி வந்தது.

தந்தி என்றால் முதலில் ஆபத்தை நினைத்துதானே பிறகு தேறவேண்டும். அடிக்கடி ஒருவருக்கொருவர் அதிகப்பற்றுதல் இல்லாதிருப்பினும் தந்தி என்றதும் அண்ணனுக்கு ஏதோ ஆபத்தான உடம்பு வந்துவிட்டதோ என்ற கவலை உதித்தது. அண்ணனின் மூத்த மகன் சிறு குழந்

தையாயிருக்கையில் தேவன் அவனைக்கீழே விடவேமாட்டான்; அப்படி அன்புடன் வளர்த்தான். "அவனுக்குத்தான் ஏதேனும் உடம்புக்கு வந்து விட்டதோ!" என்ற பல யோசனைகள் உண்டாகியதால் உடனே வைத்திய சந்தத்துடன் கிளம்பி "ரமா! எனக்கேதோ மனது குழம்புகிறது. யாருக்கு என்ன உடம்போ என்று கவலையாயிருக்கிறது. ஆகையால் நான் போய் பார்த்துவிட்டு நாளையே திரும்பிவிடுகிறேன். ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்ளு" என்று கூறிப் பின் காரிலேயே பிரயாணமானான்.

ஊர் போய்ச் சேரும் வரையில் தேவராஜனின் உள்ளத்தில் கடுக்கவும் விபரீத யோசனையுமே குடிகொண்டு வாட்டின. ஏதேதோ எண்ணியபடியே ஊரை அடைந்தான். வாசலில் கார் நின்றதும் "நாம் என்ன சமாச்சாரம் கேட்போமோ!" என்ற கவலையுடன் கவனித்தான். வீட்டு வாசலில் நிறைய கோலமிட்டிருந்ததால் அதைப் பார்த்ததும் ஒரு சிறிது சந்தோஷமும் தெம்பும் உண்டாயின.

அடுத்த விநாடியே, இவன் உயிராக வளர்த்து வந்த பையன் வாசற் பக்கத்து ஜன்னலருகிலேயே உட்கார்ந்து படித்துக்கொண்டிருந்ததைப் பார்த்ததும் முழு கவலையும் நீங்கியது. எப்போதாவது இவன் அங்கு வந்தால் இவனைக் கண்டதும் "சித்தப்பா!" என்று ஓடி வந்து காலைக் கட்டிக்கொள்ளும் பையன் இன்று பார்த்தும் பார்க்காததுபோல் உட்கார்ந்திருப்பதைக் கண்டு வியப்புடன் "பாபூ!" என்று கூப்பிட்டவாறு காரை விட்டிறங்கி உள்ளேபோய் அவனை கட்டிக்கொள்ளப்போனான்.

பையன் சற்று அலறி எழுந்து "சித்தப்பா! தொடாதே! தொடாதே! நீ தீட்டு" என்று கூறி நகர்ந்துகொண்டான். இந்த வார்த்தை தேவராஜனுக்கு முன்பிருந்த பீதியைக் கிளப்பியது. யாரோ செத்துவிட்டதாகத் தீர்மானமாக எண்ணி விலகிக்கொண்டான். "என்னடா பாபூ! அப்பா எங்கே... என்ன தீட்டு?" என்று கேட்டான். இதற்குள் பாபுவின் தாயார் "அடேய் பாபூ! இங்கே வா!" என்று ஒரு அதிகார த்வனியுடன் கூறி உள்ளே அழைத்துச் சென்றுவிட்டாள்.

அப்போது தேவராஜனின் தமயனாகிய கிருஷ்ணன் வந்து 'சௌக்யமா?...உட்காரு' என்றான். உடனே வேலைக்காரனை நோக்கி "அடேய்! ஐயாவுக்கு வெளியில் தகரத் தொட்டியில் தண்ணீர் மொண்டு வை. ஸ்நானம் செய்யட்டும்" என்றான். இதுவும் தேவராஜனுக்குப் புரியவில்லை. எப்போது வந்தாலும் வென்னீர் அறையில் ஸ்நானஞ் செய்வது வழக்கம். ஏதோ தீட்டு என்றதால் அதற்காக இருக்கும் என்று நினைத்து அப்படியே ஸ்நானஞ் செய்து வந்தான்.

'அடீ! முற்றத்து ஓரத்தில் இலைபோட்டு வேலைக்காரனைப் பரிமாறச் சொல்லு' என்று கிருஷ்ணன் சொன்ன வார்த்தைதான் தேவராஜனை தூக்கிவாரிப்போட்டது, 'அண்ணா! என்ன இது! வந்ததும் வராததும் ஒருவிதமான வார்த்தையும் பேசாது ஏதேதோ சொல்கிறாயே? முற்றத்தில் இலை போடுவதென்ன? வேலைக்காரன் பரிமாறுவதாவது? இதென்ன விடுகதை?" என்று கேட்டான். இதற்குள் முற்றத்தில் இலைபோட்டாயிற்று. வேலைக்காரன் அழுக்குத் துணியும் பரட்டைத்தலையுமாய் சாதத்தைக் கையில் வைத்துக்கொண்டு நின்றான்.

இதைக்கண்ட தேவனுக்குக் கோபம் தலைக்குமீறி வந்துவிட்டது. தன்னை வரவழைத்துவேணுமென்று அவமானப்படுத்துவதுபோல் தோன்றியது. கடுகடுத்த முகத்துடன் 'எனக்குச் சாப்பாடும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம். இதெல்லாம் என்ன அவமானம்?'' என்று கேட்டாள்.

இதைக்கேட்ட கிருஷ்ணன் நகைத்துக்கொண்டே 'உம்...நீங்கள் செய்யும் அவமானத்தைவிட இது ஒரு அவமானமா! சகிக்கமுடியவில்லை, நீ பார்த்துச் சாப்பிடுவதுகூட இனிமேல் எங்களுக்குக்கூடத் தகாது. எங்களுடன் பிறந்த பாசந்தான் தொலைந்துபோயிற்று என்ருல் இப்படியா செய்வது? நம் பெரியவர்கள் சகிக்கமாட்டார்களடா?'' என்று பெரிதாக கர்ஜனை செய்தான்.

தேவ:—அண்ணு! எதுவாயினும் தெளிவாய் சொல்லு. பூடகமாய்ச் சொன்ருல் யாருக்குப் புரியும்? என்ன அநியாயமும் அவமானச் செய்கையும் நாங்கள் செய்துவிட்டோம்? எடுத்துச் சொல்லு.

கிருஷ்:—சீச்சீ! முட்டாளே! தன் முதுகு கோணல் தனக்குத் தெரியுமா! என்ன செய்துவிட்டீர்களா! ஹரிஜனங்களாம், ஹரிஜனங்கள்! ஹரியிடத்தில் நேரே வரப்பிரஸாதம் பெற்றவர்கள் பாரு. குப்பைக்காரக் கழுதைகளை உன் அழகான பெண்டாட்டி வீட்டில் கொண்டு வைத்துக் கொள்வதாம்; சேவை செய்வதாம், இதெல்லாம் என்னடா நாடகம்? சமயத்திற்குத் தக்கபடி காக்காய்ப் பிடித்தால் தனக்குப் புகழ்மாலைகள் ஏராளமாய் வரும் என்கிற திமிரால் இப்படி அவள் கூத்தாடுகிருள். முட்டாள்பயல் நீயும் தாளம் போடுகிருயே! உடன்பிறந்த சகோதரி ஏழ்மை நிலைமையில் தவிக்கிருள். அவள் போட்ட கடிதத்திற்குப் பதில் போடக்கூட மனமில்லை. தயவு இல்லை. இத்தகையவனுக்கு 'ஏழை ஜனங்கள் மீது கருணை வெள்ளமாய்ச் சுறந்துபோய்விட்டதோ?—என்ருள்.

விசால:—ஆமாண்டாப்பா! எனக்கு உபகாரம் செய்தால் அது பேப்பரில் அடிக்கொரு புகைப்படம் வருமா! மாலைகள் வருமா! என்ன வரும்? ஏதோ மூதேவி கிடக்கிருள் என்று நினைத்திருக்கிருன். வெட்கம், மானம் ஏதாவதிருந்தால் சரிக்குச் சரியான தொழிலில் அவள் இவனை அமுக்கிவிட்டு மேலே உயர்வதென்ன! படித்த முண்டம் இவன் போற போக்கென்ன! தனுக்கு மினுக்கான பொட்டச்சியானதால் அவள் இலும்பினலும் தும்மினலும் அதை பத்திரிகைக்காரர்கள் போடுவதற்குக் காத்திருக்கிருர்கள்.

ஏண்டா, தேவா! நான்தான் கேட்கிறேன். எங்கேயோ எரிந்ததாம் எழுவெடுத்ததாம், பறச்சேரியே வீட்டிற்கு வந்துவிட்டதாம். ஏதேதோ நடந்ததாமே. அதிலெல்லாம் நீயுந்தானே நாய்போல உழைத்தாய், நீயுந்தானே அவளுக்குச் சரியாய் படித்திருக்கிருய். தடியன்போல நீயும் உலாவியதற்கு உன் பேராவது பேப்பரில் வந்ததாடா! புகைப்படம் எந்த மூலையிலாவது இருந்ததா! ஊர் ஜனங்கள் சிரிக்கிருர்களே, உனக்கு உறைக்க வில்லையா! வெட்கமில்லையா! அவளை மயக்கிக்காக்கா பிடித்தால் இனமாக மருந்து கொடுப்பாள், அதற்கு இன்னும் கொஞ்சம் பேப்பரில் எழுதலாம் என்று ஜனங்கள் காத்திருப்பது உனக்குத்தெரியவில்லை. இதோ பாரடா! பத்திரிகைகளைப் பாரு' என்று ஒரு கத்தைப்

பத்திரிகைகளை தேவராஜன்முன்பு வீசி யெறிந்துவிட்டுப் பத்திரகாளி போல் நின்ருள்.

இதற்குள் எதிர்த்தவீட்டுக் கிழவர் அழையாவீட்டிற்கு நுழைகிற சம்மந்திபோல் முன்னல் வந்து, "ஏண்டியம்மா விசாலம்! நீ ஏன் இப்படி கத்துகிருய்? இந்த உடன்பிறந்தவனல் நீ ஒருவிதமான லாபமும் அடைய வில்லையென்ருலும் உன் பெண்ணுக்கு நிச்சயமாயிருந்த வரன் இவர்கள் செய்த பெரிய உதவியால் நின்றுவிட்ட லாபத்தை நன்கறிந்தாய். அது போதாதா!...ஏன் ஒத்தரைச் சொல்லவேண்டும்! இவன் தகுந்த அடிமுட்டாள் என்பதை தகப்பனும் பெண்ணும் அறிந்துதான் இப்படி இவனை மொட்டை அடித்திருக்கிருர்கள். தகப்பனும் சொத்துக்களை முன் ஜாக்கிரதையாகத் தானம் செய்துவிட்டான். அந்தம்மாளோ, தன் கையால் ஏராளமாய் சம்பாதிக்கும் தைரியமுடையவள். இவன்தானே சப்பாணி மாடு. திண்டாடட்டும். இன்னொரு வதந்தின்னு நான் கேள்விப்படுகிறேன். அந்த அழகியின் புத்திசாலித்தனத்தை மெச்சி கவர்மெண்டே அவளை சீமைக்கனுப்பி ஏதோ ஒரு வியாதிக்கு அவளை எக்ஸ்பர்ட்டாகச் செய்யப் போகிருர்களாம். இந்த வதந்தி ஊரெல்லாம் உலாவுகிறது. அம்மாள் ஜோராக சீமைக்குப் போவதற்காகத்தான் இன்னும் காக்காய்ப் பிடிக்கிருள். இவனை மட்டம் தட்டுகிருள். அது தெரியவில்லை?" என்று ஒரு பிரங்கி வெடிபோல் விட்டார்.

இதற்குள் தேவராஜன் வருகையை அறிந்த அடுத்த வீட்டு அந்தாரி மாமா, சாப்பிடுவதைக்கூட விட்டு, மாரடைக்க நெஞ்சில் சோறு விக்க, வேர்க்க விருவிருக்க அந்த காரியத்தை முடித்துக்கொண்டு கையலம்பிய சொம்பை வாசத் திண்ணையிலேயே போட்டுவிட்டு, "ஏண்டா கிருஷ்ணு! ஏ...ப்...என்று ஏப்பம் விட்டவாறு, தேவா வந்திருக்கிருனமே! ஏ...ப்... என்னடா சௌக்கியமா! பிரவர்த்தகமெல்லாம் ரொம்பதூரம் போயிருக்கிருப்பலே இருக்கே...ஐயோ! ராமா ராமா!...ஒங்கப்பா ஆசாரம் ஆசாரம்னு சொல்லிண்டு சக்கரையைக்கூட அலம்பணும் என்பார். எங்கம்மா நெருப்பையே அலம்புவாள்.

'நமக்கு இந்த பொணத்தே அறக்கற வேலே வேண்டாம். அது ஒதிவாது. வேறே எதாவது வேலைக்குப்போனல் போதும். எனக்கு இது கட்டோடே பிடிக்கவில்லை. விழுப்பா தீட்டா!—பிள்ளைபெத்த தீட்டா, பயிஷ்டக்காரி தீட்டா!சாவு தீட்டா!—ராம ராமா!...ஒரு எழவும் இந்த வேலெக்குக் கிடையாது. இது வேண்டவே வேண்டாம்' என்று ஒங்கம்மா முட்டிண்டாளேப்பா! அந்த உத்தமி வாயிக்கு சக்கரேதான் போடணும். அதெல்லாமாவது முழுகிவிட்டா தொலேஞ்சு போயிடும். பிராயச்சித்தம் பண்ணக்கூட தீராத பறத்தீட்டல்லவா நீ உண்டாக்கிக்கொண்டு எங்களே பிராணனே வாங்குகிருய்?...சீச்சீச்சீ!... இது சுத்தமா நன்ருகவே இல்லை. இதுக்குத்தான் பெண்களுக்கு அதிகப்படிப்பு கூடாதுன்னு நம்ப பெரியவா சொன்னு...என்று முற்றுப்புள்ளிவைக்காமல் போய்க்கொண்டேயிருந்தார். தேவராஜனுக்கு வாயைத் திறக்கவே விடாது அவுலிடிப்பதுபோல் ஒருவர் மாற்றி ஒருவர் மூச்சுவிடாது பேசுவதைக்கேட்க அவன் மூளையே குழம்பிப்போய்விடும்போலாயிற்று.

இதற்கிடையில் பாபு, சித்தப்பாவின் அருகில் வருவதற்கு வந்தான். அவனை அதட்டி "டேய்டேய்...தொடாதேடா! திருட்டுப்பயலே! தூர போடா!" என்று சுறுக்கென்று கூறிய வார்த்தைகள் தேவன் மனத்தைப் பின்னும் வாட்டின. ஒன்றுமே தோன்றவில்லை. தான் என்ன பதில் சொல்வதென்றே தோன்றாது திகைத்துப்போய் விழிக்கிறான். அவர்கள் சொல்லும் வார்த்தைகள் ஒவ்வொன்றும் அவன் இதயத்தில் ஊசிபோல் குத்துகிறது. செம்மட்டியால் மண்டைமீது அடிப்பதுபோல் தோன்றுகிறது.

பத்திரிகையில் தன் பெயரோ புகைப்படமோ ஒன்றும் இல்லாதிருப்பதை இதுவரையில் பொருள்படுத்தாதிருந்த அவன் மனத்தில் இப்போது அந்த குறை ஒரு பெருங்குறையாயும் தீராத இழிவாயும் அவமானமாயும் தோன்றியது. அவர்களுக்குத் தான் என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. அவர்கள் தன்னை இலேசில் விடுகிறவர்களாயும் காணப்படவில்லை. பசி எல்லாம் பறந்துபோய்விட்டது. ஸ்திரபுத்தியற்றத் தன்மை மீண்டும் தலைதூக்கி ஊசலாட வாரம்பித்தது.

தத்தளித்துக்கொண்டிருக்கையில் மீண்டும் விசாலம்மாள் தன் விச்வரூபத்தை எடுத்துக்கொண்டு "ஏண்டா தேவா! கல்லுப்பிள்ளையார்போல் இப்படி அசையாமலும், வாயைத் திறக்காமலும் உட்கார்ந்திருக்கிறாயே! நான் கேட்பது உனக்கு மனுஷியாய்த்தோன்றவில்லையே! நம்ப அப்பாவின் சொத்துக்கள் அதிகமில்லை என்பது தெரிந்தும் உன் தமையனார் காலணா மிச்சமில்லாமல் தானம் செய்தானாமே! தர்மம்! உனக்கும் வரும்படி இல்லை. உன் மனைவியோ மகாராணி. இந்த அவமானமெல்லாம் உனக்குத்தெரியவில்லையா? பணமிருந்தால் நீ உன் உடன்பிறந்தவர்களுக்கு வாரிக்கொடுத்துவிடுவாய் என்கிற பயம், சந்தேகம் இரண்டும் அந்த மனுஷனுக்கு உண்டாகிவிட்டது. அதனால்தான் அப்படிச்செய்தான்.

அது கிடக்கட்டும். நீயுந்தான் கல்யாணமாவதற்கு முன்பே அவர்களே சரணாகதி என்று விழுந்துகிடக்கிறாயே! இம்மாதிரி காரியம் செய்வதற்கு உன்னை ஒரு யோசனைகூடக் கேட்கவில்லையாமே! இதுகூட உன் மனத்தில் படவில்லையா! பறப்பசங்களை வீட்டில் வைப்பதும், கும்மாளமடிப்பதும் என்னடா வேண்டியிருக்கு?" என்று தாண்டவமாடினாள்.

கிருஷ்:—டேய் தேவா! நீ கூடப்பிறந்த தோஷத்திற்காக பாசந்தாங்காது தந்தியடித்தேன். இந்த அக்கிரமத்தையும், அவமானத்தையும் இனி எங்களால் சகிக்கமுடியாது. நீ உடனே உன் மனைவியைக் கண்டபடித் தன்போக்காக அலையவிடாது, திருத்தி அடக்கியாளவேண்டும், அந்த ஹரிஜனங்களையும் பிடைகளையும் வீட்டை விட்டுத் துரத்திவிட்டு நீங்கள் குடும்பத்துடன் பிராயச்சித்தம் செய்துகொண்டால்தான் நாங்கள் உன்னை ஜாதியில் சேர்த்துக்கொள்ளமுடியும். இல்லாவிட்டால் இனி உனக்கும் எங்களுக்கும் ஸ்நானப்பிராப்திகூட விட்டதென்று கண்டிப்பாய் தெரிவித்துவிட்டேன்.

உனக்குத்தான் மானஹீனமில்லையென்றால் எங்களுக்குக்கூடவா இல்லையென்று பார்த்தாய்? முடியாது. இனி இதைப்பொறுக்கவே முடி

யாது. இரண்டில் ஒன்று தீர்த்துவிடவேண்டும். கேவலம் ஒரு பெண் பிள்ளை சரிக்குச் சமமாகவுள்ள உன்னைவிட உயர்வது, நீ சாக்கடையில் விழுவதா! வெட்கம்! வெட்கம்! கேட்கப்பிடிக்காத வெட்கம்—என்று கத்தினான்.

தேவராஜனுக்கு உண்மையில் பயித்தியம் பிடித்துவிட்டதுபோலவே தோன்றியது. அங்கு நிற்கவும் பிடிக்கவில்லை; பேசவும் தோன்றவில்லை. வாயைத் திறக்காது ஊமைபோல், இருந்த இடத்தில் இருக்கச் சகியாது திடீரென்று எழுந்துவந்து காரில் உட்கார்ந்து காரை விறு விறென்று விட்டுவிட்டான். தடுமாற்றமான நிலைமையில் காரை விட்டுக்கொண்டு செல்லும் தேவராஜனைப்பற்றி இவர்களுக்கு மிகவும் பிரமிப்பாயும் திகிலாயும் தோன்றியது.

சாதாரணமான நிலைமையிலுள்ளவர்களுக்கே காரை ஓட்டும்போது எதிரில் மனிதர்களோ, வண்டிகளோ, குழந்தைகளோ, ஆடு மாடு முதலிய ஜந்துக்களோ வந்துவிடுமாயின் விலவிலத்துப்போய் கைகள் நடுங்கி ஆட்டமெடுத்துவிடுகின்றன. அந்த பயத்திலே சில சமயம் எதிர்பாராத விபத்துக்களும் நேர்ந்துவிடுகின்றன.

அங்ஙனமிருக்க, தன் புத்தி தனக்கு ஸ்வாதீனமற்றிருக்கும் நிலைமையில் தேவராஜன் 'வண்டியை எங்கு விடுகிறோம், எங்கு போகிறோம்?' என்பதே தெரியாது காரைவிட்டுக்கொண்டு போவதை அவனோடு வந்திருக்கும் டிரைவர் பார்த்து நடுநடுங்கி, "எஜமான்! எஜமான்! ஐயையோ! எத்தனை வேகத்தில் காரை விடுகிறீர்கள்?... நீங்கள் காரை நிறுத்துங்கள். நான் ஓட்டுகிறேன்" என்று கெஞ்சுகிறான்.

டிரைவர் காருடன்கூட வந்தானேயன்றி அவன் காரிலேயே உட்கார்ந்திருந்தான். உள்ளே நடந்த விஷயங்கள் ஒன்றும் விவரம் தெரியாது; ஆனால், உள்ளே ஏதோ இரைந்து பேசுவதுமட்டும் காதில் விழுந்தது. இவன் எழுந்துவந்த வேகமும் காரைத் தாறுமாருக விடும் விபரீதமும் கண்டு டிரைவரின் குடல் நடுங்கியது. "ஏதோ போதாக்காலத்திற்குத்தான் இப்படிக் காரைவிடுகிறார்' என்று தோன்றியது.

வேகத்தைக் குறிக்கும் கருவியைப் பார்த்தான். இன்னும் இதயம் வெடித்துவிடும்போலாகிவிட்டது 60...65...70...என்று ஏறுகிறது. டிரைவர் சொல்லியதற்கும் இவன் பதில் பேசவில்லை. நடு வீதியில் ஜன நடமாட்டமான இடத்தில் தலைதெறிக்க ஒரு வண்டி வந்தால் இதைக்கண்டு யார்தான் பயப்படமாட்டார்கள்?

கடையில் ஏதோ சாமானை வாங்கிக்கொண்டு தாயார் கூடையுடன் பின்னால் வருகிறாள்; 6...7 வயதுடைய குழந்தை முன்னால் வந்துகொண்டிருந்தது. தன் கையிலிருந்த கோலி கீழே விழுந்து உருண்டுவிட்டதால் அதை எடுப்பதற்காகப் பையன் ஓடிவந்து குறுக்கே பாய்ந்தான்.

கார் கனவேகமாக வருவதைக்கண்ட டிரைவர் பதறித் தவித்தவாறு, "எஜமான்! எஜமான்!...குழந்தை வந்துவிட்டது. காரைத் திருப்பி ஓடித்து ஓட்டுங்கள். ஐயோ! ஐயையோ!" என்று கதறியவாறு பின் ஸீட்டிலிருந்தபடியே ஸ்டீரிங்கைத் தானே திருப்பிக் காரை ஒடித்து வளைத்து விட்டான். வீதியில் போகும் ஜனங்களும் வரும் ஜனங்களும் "ஹா! ஹா!'

என்று பெரிய சத்தமிட்டு நடுங்கி நின்றார்கள். ட்ரைவர் காரை வளைத்து ஓட்டியபடியே முன் பக்கத்தில் தாவி உட்கார்ந்து ப்ரேக்கைத்தான்மிதித்து அழுத்தி, எஜமான்மீதே தன் கையை வைத்து,ஓட்டி காரைநிறுத்தினான்.

"பாவி! படுபாவி கொழுந்தெமேலே காரை ஏத்திக்கொல்லப்பார்த் தானே" என்கிற வசைமாரிகள் அபரிமிதமாகப்பொழிந்தன, அப்போது தான் தேவராஜனுக்குச் சிறிது ப்ரக்ஞை வந்தது. அச்சமயம் கூட்டத்தி லிருந்த இரண்டுபேர்கள், 'அடாடா! இந்த ப்ரகஸ்பதியா? இப்படிப் பட்ட மூளைகெட்டத்தனமிருப்பதனால்தான் பெண்டாட்டியைவிட ஒரு படிகூட உயரமுடியவில்லை. அந்தம்மாளின் குணமென்ன! புகழென்ன! கீர்த்தி என்ன! அடாடா! என்ன தங்கமானவர்கள்? அவளும் டாக்டர் தான். இவரும் டாக்டர்தான்...என்ன லாபம்" என்ற வார்த்தைகள் சுறீரென்று ஈயத்தைக் காய்ச்சிக் காதில்வார்ப்பதுபோல் தேவராஜன் காதில் விழுந்து மூளைக் குழப்பத்தை இன்னும் அதிகரிக்கச் செய்தன.

தான் பின்ஸீட்டில் உட்கார்ந்து "ட்ரைவர்!...வீட்டிற்கு விடு" என் றான். அதற்குமேல் பேசவே இல்லை யென்றாலும் தன் மனைவி வேண்டு மென்றே அவளுடைய புகழ் ஓங்குவதற்காக சுயகலம் காட்டிவருகிறாள் என்றும், தான் ஓங்கக்கூடாதென்கிற எண்ணத்துடன்தான் வேலை செய் கிறாள் என்றும் ஒரு எண்ணம் ஊர்ஜிதமாயும் உறுதியாயும் தோன்றியது, இனிமேல் கேட்கவேண்டுமா! அதே எண்ணத்தில் மூளை ஊன்றி முன்பு கலங்கியதைவிடப் பதினாயிரம் பங்கு அதிகமான கலக்கத்தை ஒரு கொடி யில் விளைவித்துக்கொண்டான். 'பறப்பசங்களை ஹரிஜனங்களாம்...நான் எவ்வளவு உழைப்பு அன்று உழைத்திருக்கிறேன்...ஏன் என்னுடைய சேவையைப் பாராட்டி எழுதாததை அவள் பொருட்படுத்தக்கூடவில்லை? ஆம்! ஆம்...சந்தேகமில்லாமல் தன் புகழின் வளர்ச்சிக்கே அவள் எதிர் பார்த்திருந்தாள் என்பது இனியும் சந்தேகமா!...சீ!...சீ... அவள் தினே தினே உயர்வது...நான் இப்படிக் கேவலமாகப் போவதா!...என்ன முட் டாள்தனம்?...என்ன மதியீனம்!...ஐயோ! நாகராஜன்வார்த்தையை அவ மதித்து அவனையும் விரோதித்துக்கொண்டோமே...ஆகட்டும். அந்தக் கழுதை ரமாவை இனி வைக்கிற திட்டத்தில் வைத்து வட்டத்திற்குக் கொண்டுவருகிறேன்" என்று பின்னும் ஏதேதோ எண்ணியபடியே மன தைக் கலக்கினான். ஒரு விநாடியில் மனது அளிந்த புண்ணிலும் கேவல மாயிற்று.

கார் வீட்டையடைந்ததும் இறங்கி நேரே நோயாளிகள் படுத்திருக் கும் இடத்திற்கு வந்தான், அப்போது நோயாளிகளை ரமா வெகு அக்கரை யுடன் கவனித்துவந்தாள், ஒரு நோயாளிக்கு ஊசி குத்துவதற்காகக் கையில் ஊசியை வைத்துக்கொண்டு நோயாளியின் கையைப்பிடித்துக் கொண்டிருக்கும் சமயம், கண்களில் தீப்பொறி பறக்க அவ்விடத்திற்கு வந்து, "இவர்களை யெல்லாம் முதலில் துரத்துகிறாயா அல்லது நானே தெருவில் பிடித்துத் தள்ளட்டுமா!' என்று ஒரு கர்ஜனை செய்தான்.

ரமாவின் காதில் இவ்வார்த்தைகள் விழுந்ததும் நடுநடுங்கிப்போய் "ஹா!...என்ன! என்ன! இவர்களையா! துரத்த வேண்டுமா? டாக்டர்! டாக்டர்!" என்று குரல் நடுங்கக் கூறினாள். அங்கிருந்த நர்ஸ்கள் தீயை

மிதித்ததுபோல் நடுங்கினர்கள். நோயாளிகளின் காதில் இவ்வார்த்தைகள் கூரிய பாணம்போல் விழுந்ததும் எல்லோரும் சர்ப்பத்தை மிதித்தவர்கள் போல் அலறியவாறு "ஐயோ! எஜமான்! எஜமான்!... இதென்ன பேச்சு!... நீங்களே வெச்ச மரத்தை நீங்களே வெட்டலாமா! நீங்களே காப்பாத்தி இட்டாந்து எங்களே கைவிடலாமா?... யம்மா! யம்மா! எங்களே கைவிடாதீங்க... பரதேசிங்க"... என்று கண்ணீர் வழியக் கெஞ்சினர்கள்.

அப்போதுதான் வெளியிலிருந்து வரும் சீதாபதி, இந்த விசேஷ நிகழ்ச்சிகள் ஒன்றும் தெரியாதாகையால் "ரமா... ரமா! நோயாளிகளுக்குக் கஞ்சியும் பாலும் கொடுத்தாயிற்று!" என்று கேட்டுக்கொண்டே வந்தார்.

இங்குள்ள அதிர்ச்சியையும் அலங்கோலத்தையுங்கண்டு கதிகலங்கினர். ஏற்கனவே பயந்திருந்ததற்கு அனுகூலமாக ஏதோ நடந்திருக்கிறதென்று தெரிந்து உள்ளம் பதறி "தேவா!... என்ன சமாச்சாரம்? என்ன நடந்தது?... ரமா!... என்னம்மா விஷயம்?"... என்றார்.

தேவராஜன் பல்லைக் கடித்தபடியே தடதடவென்று நோயாளிகளின் படுக்கையருகில் ஓடி ஒருவனைக் கையைப் பிடித்து இழுத்துத்தள்ள முயன்றதைக்கண்ட ரமா பதறிப்போய், "ஹா! ஹா!"... இதென்ன விபரீதம்! ஐயையோ! மகாபாதகமாயிற்றே!... நீங்களா இக்காரியம் செய்வது?" என்று அவன் இரு கால்களையும் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு தடுத்தாள். அவளுடைய இதயம் துடிதுடித்தது. கண்ணீர் வழிந்தோடியது. சீதாபதியின் உயிர் நடுங்கியது. நோயாளிகளின் நிலைமையைக் கூற வேண்டுமா? ஒரே அல்லோலகல்லோலம், ஒரே கூக்குரல். அந்தக் கூக்குரலின் எதிரொலி அக்கட்டடம் பூராவும் சூழ்ந்துகொண்டது.

11

வனிதையின் துடிப்பு—வைராக்ய முடிவு

தேவராஜன் உடைந்த மனத்துடன் சென்றுவிட்டபிறகு விசாலம், கிருஷ்ணன் முதலியவர்களுக்கு உள்ளுக்குள் சற்று உதைப்பாகவே இருந்தது. "வாய் திறக்காது கோபத்துடன் போய்விட்டானே! ஒரு விபத்தும் நேராதிருக்கவேண்டுமே" என்று மனது தம்மையறியாது தவித்தது. எனினும் தாங்கள் போட்ட தூபம் சரியானபடி தலைக்கேறி வேலை செய்யவாரம்பித்ததுபற்றிப் பரம சந்தோஷமும் த்ருப்தியும் உண்டாயின.

"எருதின் நோய் காக்கைக்குத் தெரியுமா?" என்கிற பழமொழிப்படிக்கு, இவர்கள் காக்கையைவிடக் கேவலமாய் தேவராஜனைக் குத்தியதின் பலன் எத்தனை தூரம் ரணமாகி ரணஜன்னி கண்டு விபத்தையுண்டாக்குமோ! யார் கண்டது?

விசா:—ஏண்டா கிருஷ்ணு! ஒருவேளை மோட்டாரில் ஏதாவது?...

கிருஷ்:—போடி பைத்தியம்! ட்ரைவர்தான் உலக்கைபோல் உட்கார்ந்திருந்தானே. சற்று பொறேன்...நாளைக்கே கடிதம்கூட வந்து விடும் பாரு.

விசா:—என்னமோப்பா! அவன் பட்டபட்டினியாய் போனதைப் பார்த்தால் எனக்குப் பயமாகவே இருக்கிறது. அவன் எப்படியிருந்தாலும் ஆயுசுடன் நன்றாக இருந்தால் போதும்—என்று கூறும்போது கண்ணீர் வந்துவிட்டது.

என்னவிருப்பினும் உடன்பிறந்த பாசத்தை அவளால் ஜெயிக்கமுடியவில்லை. உடன்பிறந்த ஆண்களைவிடப் பெண்களுக்குத்தான் பாசம் அதிகம். அவர்களையறியாது மனது சஞ்சலமடையும். அதை வெளியில் காட்டமுடியாத நிலைமையிலிருப்பவர்களானாலும் உள்ளுக்குள் வைத்துக் கலங்காதிருக்கமுடியாது,

ஆத்திரமும், ஜாதித்வேஷத்தில் உயர்வு தாழ்வு என்கிற பேதபுத்தியின் விபரீதமும், பொறுமையும் ஒன்றுகூடி மூட்டிய தீயுடன் வந்த தேவராஜன் கண்மூடித்தனமாய் முன்பின் யோசிக்காமல் சாந்தத்தை இழந்து நேரே தடதடவென்று நோயாளிகளிடம் சென்று கூறிய வார்த்தையானது அன்று சேரி பற்றி எரிந்த தீயைவிட அதிகமான தீயின் ஜ்வாலையைக் காட்டியது.

ரமாவின் கையிலிருந்த ஊசி தானாகவே நழுவிக் கீழே விழுந்து துக்கல் தூளாகச்சிதறியது. நோயாளிகள் தலைமீது செம்மட்டியால் அறைவது போன்ற ஒரு உணர்ச்சி தோன்றி திடுக்கிட்டு அலறினார்கள். ப்ரக்ஞையுடனிருக்கும் நோயாளிகள் தம்மை மீறிய சோகத்துடன் எழுந்து உட்கார்ந்து ரமாவின் முகத்தைப்பரிதாபமாய் பார்த்தார்கள்,

"ரமா! நான் சொல்வது உன் காதில் கேட்கவில்லை? தீண்டாத ஜாதி தரித்திரங்களை வீட்டிற்குள் வைத்துக்கொண்டு கூத்தடிக்கவும், உன் சுயநலத்தின் பெருமைக்குத் தாளம்போட்டுப் பல்லிளிக்கவும் இனி இந்த தேவராஜன் முட்டாள்தனமாக முன்னுக்கு வரமாட்டான். ஜாக்ரதை. பயமிருக்கட்டும். இந்தப் பீடைகளை வெளியேற்றுகிறாயா! அன்றி நானே கழுத்தைப் பிடித்துத் தள்ளட்டுமா?" என்று மறுபடியும் கர்ஜித்தவாறு ஒரு குழந்தையுடன் படுத்திருந்த தாயைப்புரட்டித்தள்ளிவிட்டுக் குழந்தையை நிர்த்தாக்ஷிண்யமாய் ஒரு கையைப்பிடித்துத் தூக்கினான்.

பெற்றமனம் கேட்குமா! ஏழைகளாயினும், பணக்காரர்களாயினும் உயர்ந்த ஜாதியாயினும் தாழ்ந்த ஜாதியாயினும் உணர்ச்சி, பாசம், அன்பு வாத்ஸல்யம், பசி, தாகம், சுகம், துக்கம், இன்பம், துன்பம் முதலிய யாவும் ஒரேமாதிரியான திராசு எடையில்தான் பகவான் எல்லோரும் அமைத்திருக்கிறார். நெருப்பினால் கையில் பொசுங்கிப்போய் கட்டு கட்டியிருப்பதைக் கூடப் பொருட்படுத்தாது அந்த ஹரிஜனப் பெண்மணி, கீழே தள்ளப்பட்டதும் உருட்டியடித்து எழுந்து ஓடிவந்து குழந்தையை தேவராஜன் பிடியிலிருந்து தடுத்துப் பிடித்துக்கொண்டு, "ஐயையோ! அடபாவி! எங்கொயந்தெயே கொல்லாதேடா! என் ராசாவே கொல்லாதேடா! உசிருக்கு நாங்க எமனிடம் மன்னடிகிட்டு கடக்கரோம், நீயே எமனாக வந்துட்டயே!" என்று கண்ணீர் வழியக் கூறியபடி குழந்தையை

வெடுக்கெனப் பிடுங்கிக்கொண்டு ரமாவின் காலில் விழுந்து, "தாயே! தர்ம லச்சுமி! பேராபத்துலே காப்பாத்தின தெய்வம் நீ தான். எங்களெ கைவிடாதே. எங்களெ காப்பாத்து. அனதெங்க திக்கற்ற பரதேசிங்க" என்று கதறினள்.

சீதாபதிக்கு மருமகனின் விநோதமான மாறுதலின் பயங்கரம் நெஞ்சைப் பதைக்கச் செய்தது. தேவராஜனிடம் ஓடிவந்து 'தேவா! இதென்ன கோபம்.... ஆத்திரப்படாதே! எதுவாயினும் ஒரு நிதானத்துடன் கேட்டுப் பதில் வாங்கிக்கொள்ளு. காரணமில்லாமல் திடீரென்று ஏன் இத்தனை கோபம்?' என்றார்.

தன் கையைப் பிடிக்கவந்த மாமனரின் கையை உதறிவிட்டு, சட்டா ரென்று முரட்டுத்தனமாகப் பிடித்துத் தள்ளினன், முன்பொரு நாள் கோபத்தில் தன் குழந்தையைத் தள்ளி மண்டையை உடைத்ததுகூட மறந்துபோய்விட்டது. இவன் தள்ளிய வேகத்தில் வயதுமுதிர்ந்த சீதா பதி எதிரிலிருந்த சுவரின்மீது தபாரென்று விழுந்தார். ரமாவின் குடல் நடுங்கியது. ஓட்டமாக ஓடிவந்து தன் பிதாவைத் தாங்கிப் பிடித்துத் தூக்கி நிறுத்தினள்.

ஆனல் சீதாபதி எக்காரணம் பற்றியோ, அந்த இடத்தில் நிற்காது விறுவிறென்று போய்விட்டார். "ஐயோ பாவம்! எத்தனை படித்திருந் தால் என்ன! செல்வத்தில் திளேந்தால் என்ன!! உயர்ந்த பதவியில் நிமிடத் திற்கு நிமிடம் உயர்ந்தால் என்ன! அவளுடைய தனிப்பட்ட வாழ்க்கை யில் எவ்வித ஸ்வாதந்த்ரமும் அசட்டு கௌரவமும் பாராட்ட அவள் மனம் இடங்கொடுக்கவில்லே.

கணவனுக்கு விரோதமாய்த் தகப்பனருடன் ஓடி அவரைச் சமாதா னம் செய்வதா! அல்லது அவரைக் கவனிக்காது கணவனைச் சாந்தியுறச் செய்வதா! அன்றி தான் வெகு ஆவலுடன் எடுத்துக்கொண்ட காரியத் தைக் கைவிட்டு நடுக்காட்டில் கழுத்தையறுப்பதற்கொப்ப அந்த நிர்ப் பாக்ய ஹரிஜனங்களை ஆபத்தான நிலேமையில் துரத்துவதா! என்னதான் செய்வாள் பாவம்?

அவளுடைய நிலேமை தடுமாறியது. உலகமே பந்துபோல் சுழன்றது. தன்னைப் பெற்று வளர்த்து ஆயிரம் பாடுபட்டுத் தன் ஒருத்திக்காகவே உயிர் வாழும் தகப்பனரின் பரிதாபம் அவள் இதயத்தைக் கிளறியது. "அப்பா! அப்பா! இருங்கள்! இருங்கள். எங்கே போகிறீர்கள்? வாருங்கள்! வாருங்கள்" என்று கத்தியவாறு பின்னல் ஓடினள். அவர் திரும்பிக்கூடப் பார்க்காமல், "ரமா! சாந்தியை இழக்காதே! உன் கடமை யைத் தவருதே! உன் பதி பாத சேவையிலீடுபடு. நான் உனக்குச் சாச் வதமில்லே. கனியை உண்டாக்கிக் கொடுக்கும் வரையில்தான் மரத்திற் குச் சுதந்தரம் உண்டு. கனி சொந்தக்காரனிடம் சேர்ந்த பிறகு மரத்திற் கும் அதற்கும் என்ன சம்மந்தம்? பழத்தையுடையவனுக்குத் தான் அது சுதந்தரம். அதேபோலத்தான் இனி உன் தத்துவமுமாகும். போ! போம்மா ரமா! உன் கணவனிடம் போ!" என்று கூறிக்கொண்டே போய்விட்டார்.

என்ன செய்வாள் பாவம்! கணவனிடம் ஓடிவந்து அவன் கால்களைக் கட்டிக்கொண்டு 'டாக்டர்! இதென்ன திடீரென்று உண்டாகும் பூகம்பத்தைப்போன்ற கோபம்! காரணமென்ன! தாங்களே இவ்வேழைகளைக் கொண்டு வந்து ஆதரிப்பதும், தாங்களே துரத்துவதும் எனக்கொன்றுமே விளங்கவில்லையே! டாக்டர்! மரம் வைத்தவர்களே மரத்தை வெட்டலாமா?' என்று கண்ணீர்பெருகக் கதறினாள்.

தேவராஜனின் கோபத்திற்கும் ஆத்திரத்திற்கும் எல்லையே இல்லை. "என்ன! உன்னிடம் நான் காரணங்கூறி கை கட்டி நிற்க வேண்டுமா! பொட்டைக்கட்டைக்குக் கொடுத்த இடத்தின்பலன் இது என்பதைக் கண்டு கொண்டேன். உன் பெருமைக்கும் உனது தற்புகழ்ச்சிக்கும் இனி இந்த தேவராஜன் ஆட்டம் ஆடமாட்டான். முதலில் இந்தப் பன்னடைகளைத் துரத்துகிறாயா, இல்லையா? ஒரு காரணத்தையும் உன்னிடம் தெரிவிக்க முடியாது, நான் சொல்கிறபடிச் செய்யப்போகிறாயா, இல்லையா?" என்றான்.

ரமா:—என்ன! என்ன! காரணத்தைக் கூறமுடியாதா! ஐயோ! நிராதரவான நிலைமையில் அவர்களைத் துரத்துவது நியாயமா! எழுந்திருக்கவும் சக்தியற்றவர்களும், ப்ரக்ஞையேயில்லாது கிடப்பவர்களும் அபாய நிலைமையில் இருப்பவர்களும் பார்த்தால் பரிதாபமாயில்லையா! அவர்களை எங்கே துரத்துவது? அவர்களுக்குப் போக்கிடமேது? இது தர்மமா! இது நியாயமா! இது கடவுள் சித்தத்திற்கு மகாபாதகமும் விரோதமானதுமல்லவா!

தேவ:—சிச்சி! உன்னுடைய புடலங்காய் புராணம் எனக்கு வேண்டாம். உன்னுடைய மித்திரபேத நாடகங்கள் முற்றும் எனக்குத்தெரியும். நீ தினேதினே புகழில் உயரவேண்டும்; நான் அடியோடு மங்கிச் சாக வேண்டுமென்ற கெட்ட எண்ணங்கொண்டு, இருக்கிற பத்திரிகைக்காரர்களையெல்லாம் வலையில் போட்டுக்கொண்டு உன்னைப் புகழ்ந்து எழுதுவதற்காக அவர்களிடம் நீ லஞ்சம் கொடுப்பதும், இனம் மருந்து கொடுப்பதும் போதும். உன் ப்ரக்யாதி எனக்கு முற்றிலும் தெரியும். இனி நீ என் கைப்பொம்மை. தெரிந்ததா? என் உத்திரவின்றி வெளியே போகக் கூடாது. என் அநுமதியின்றி எந்த காரியமும் செய்யக்கூடாது, உம்... துரத்து" என்று தாறுமாருக உளறுவதைக் கேட்ட ரமாவுக்கு உண்மையில் மூளை சுழன்று மயக்கம் வந்தது.

இந்த அபாண்ட வார்த்தைகளும் அநியாயப் பழிகளும் அடக்குமுறைச் சட்டங்களும் பரிசுத்தமான இதயத்தையுடைய தருணீமணியின் தளிர்போன்ற இதயத்தைப் பொசுக்கிவிட்டன. அப்படியே துவண்டுபோய் ஜலத்திலிருந்து கரையில் போடப்பட்ட மீனைப்போல் துள்ளி விழுந்துவிட்டாள். அவளே ஒரு பெரிய டாக்டரா யிருந்தும் அந்த அதிர்ச்சியை ஜெயிக்க அவளால் முடியவில்லை. ஒரு நாளும் கண்டறியாத மயக்கம் அவளை ப்ரக்ஞை இழக்கச் செய்தது.

அப்போதுதான் பள்ளிக்கூடத்திலிருந்து வந்த ரமாவின் பெண் இங்கு நடக்கும் கலாட்டாவையும் தன் தாயார் ப்ரக்ஞையற்று விழுந்திருப்பதை

யும் கண்டு நடுங்கிப்போய், "அம்மா! அம்மா!" என்று ரமாவைத் தட்டி எழுப்பியது. பேச்சு மூச்சில்லே. தகப்பனரிடம் ஓடி "அப்பா! அம்மாவுக்கு என்ன உடம்பு? ஏன் இப்படி கிடக்கிருள்?" என்று கத்தினள்.

தேவராஜன் குழந்தைக்கு பதிலே சொல்லாமல் "உம்......எழுந்து ஓடுங்கள். தர்ம ஆஸ்பத்திரியில் போய் படுத்துக்கொள்ளுங்கள்" என்று நோயாளிகளை அதட்டினன். நோயாளிகள் வாயில் வந்தவாறு திட்டி வயிறெரியக் கண்ணீர் விட்டார்கள்.

அப்போது கையில் ஒரு கடிதத்துடன் கம்பவுண்டர் அங்கு வந்து, கடிதத்தை தேவராஜனிடம் கொடுத்துவிட்டு, நோயாளிகளை நோக்கி, 'பயப்படாதீர்கள். உங்களை பகவான் கைவிடமாட்டார். நம்முடைய பெரிய எஜமான் இருக்கையில் உங்களுக்கு ஒரு குறைவுமில்லை" என்று தேற்றுவதைக் கண்டு நோயாளிகளின் உள்ளம் பூரித்தது. தேவராஜனின் இதயம் ஆத்திரத்தால் தத்தளித்தது. பல்லைக்கடித்தவாறு கையிலிருந்த கடிதத்தைப் பிரித்துப் படித்தான்.

"அன்பார்ந்த தேவராஜனுக்கு அனேக ஆசீர்வாதம்.

எந்த மனிதனுக்கும் ஸ்திரமான புத்தி இல்லாவிட்டால் அவன் வாழ் நாளில் தானும் சுகப்படமாட்டான்; அவனல் பிறருக்கும் கடுகளவு கூடச் சுகமில்லை; சந்தோஷமும் இல்லை. ஒரு மனிதனின் காலை வழுக்கிவிட்டு வேடிக்கை பார்க்கும் வீணர்கள் உலகில் பலருண்டு. காலை இழுக்கும்போது தன் காலைத் தான் உறுதியாய் ஊன்றி நின்று கீழே விழாது பார்க்கவேணுமேயன்றி காலை இழுத்தவனின் தோளை ஆதாரமென்று நம்பிப் பிடித்துக்கொண்டால் அவன் ஓடிவிடுகிருன்; பிறகு தான் கீழே விழுந்த சிறுமையும், புத்தியற்றதன்மையுந்தான் நிற்கும். ஸ்திரபுத்தியற்றவர்களின் வாழ்க்கை என்றும் உருப்படாது. ஸ்திரபுத்தியற்ற துர்யோதனன் சகுனியின் வார்த்தையைக்கேட்டு அடைந்த பலன் நினைவிருக்கட்டும். ஸ்திரபுத்தியற்றதன் சிறுமை இன்று தெரியாது. உன் மனைவியின் புகழும் யோக்யதையும் உனக்குப் பெருமையேயன்றி வேறு யாருக்குமில்லை. மனைவியின் பெருமையை உன்போன்ற ஸ்திரபுத்தியில்லாதவர்களுக்கு எடுத்துக் காட்டுவதற்குத்தான் ஸ்ரீமகாவிஷ்ணு தனது முக்கியஸ்தானமாகிய மார்பிலேயே மனைவிக்கு இடங்கொடுத்தார். பரமசிவன் விஷ்ணுவை விட ஒரு படிக்கட்டு அதிகமாகவே தனது வாம பாகத்தையே கொடுத்துவிட்டார். ப்ரம்மாவோ, தனது நாக்கையே உறைவிடமாகக் கொடுத்திருக்கிருர். இவைகளை மறந்தாயா தேவா! உன்னதிகாரம் சற்றும் நன்ருக இல்லை. அனவச்யமாக நீ இத்தகைய குழப்பத்தை உண்டாக்குவதால் நானும் கண்டிப்பாயிருக்க வேண்டியிருக்கிறது. இந்த ஏழைகளை விரட்ட உனக்கு யாதொரு அதிகாரமும் இல்லை. இந்த வீடும் மற்ற சகலமும் என்னுடையது என்பது ஞாபகமிருக்கட்டும். உன் மனைவியை வேண்டுமானல் நீ அவள் மகிமை தெரியாது மிரட்டலாம். அவள் உன் சொத்து. இந்த ஏழைகளுக்கு உழைத்து அந்த இன்பத்தை அடைவதற்கே என் உடல், பொருள் ஆவி மூன்றையும் தத்தம்செய்ய நான் ப்ரதிக்ஞை

செய்திருக்கிறதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கிறேன். மரியாதையாய் உன் காரியத்தைக்கவனி. வீண் ரஸாபாசம் செய்யாதே. உன் குடும்ப கௌரவத்தை இழக்காதே.

உன் மாமன்
சீதாபதி."

அந்த கடிதத்தைப் படித்து முடிப்பதற்குள் எரிகிற கொள்ளியை ஏறத்தள்ளி எண்ணெயும் ஊற்றியது போலாயிற்று. "ஆஹ்ஹா! இத்தனை மண்டைத்திமிரா வந்துவிட்டது? இந்த வீடும் மற்ற சொத்தும் அந்த மகா கர்வியினுடையதா! இருக்கட்டும். இவ்வீட்டில் இனி அரை விநாடிகூட இருக்கமாட்டேன்...உம். எழுந்திரு. அடங்கி, ஒடுங்கி, உலகத்துப் பெண்களைப்போல் என்னிடம் இருப்பதாயின் இப்போதே என்னுடன் வந்துவிடு. இல்லையேல் எக்கேடாவது கெட்டுப் போ!" என்று படபடப்பாகக்கூறியவாறு வெளியே சென்றுவிட்டான். புத்தி தடுமாற்றத்தின் கோளாறு எந்தப் படுகுழியில் தள்ளுமோ! யார் கண்டது!

12

மெல்லிய இதயத்தில் முள்ளும் பொத்தியது

ரமா நன்றாக ப்ரக்ஞை வந்து கண் விழித்துப் பார்க்கும்போது வஸுந்தரா தேவியின் வீட்டில் கட்டிலில் படுத்திருக்கவும் பக்கத்தில் ஒரு நர்ஸ் உட்கார்ந்திருக்கவும் கண்டு திடுக்கிட்டாள். "ஜீவா! நான் இங்கு எப்படி வந்தேன்? டாக்டரம்மா எங்கே?" என்று அதட்டியதுபோல் கேட்டாள்.

அடுத்த அறையிலிருந்து விசனம் தேங்கிய முகத்துடன் வஸுந்தரா தேவி அங்கு வந்து பக்கத்தில் உட்கார்ந்து ரமாவைத் தடவியவாறு "ரமா! பயப்படாதே! நீ எங்கு இருக்க ஸ்வதந்திரமோ, அங்குதானிருக்கிறாய். உனக்கு இப்போது உடம்பு சரியான நிலைமையிலிருக்கிறதா! மயக்கம் தெளிந்ததா?" என்று கேட்டாள்.

ரமாவுக்கு இந்த கேள்வி அதிசயமாகவிருந்தது. "டாக்டர்! எனக்கு மயக்கமா! ஏன் மயக்கம் வந்தது? என் கணவர் எங்கே? ஐயோ! அந்த ஏழை ஹரிஜனங்கள் என்னவானார்கள்? என் தகப்பனார் எங்கே! குழந்தைகள் எங்கே!" என்று அடுக்கடுக்காகக் கேள்விகளைக் கேட்டவாறு எழுந்து உட்கார்ந்தாள். பழைய விஷயங்கள் முற்றும் ஞாபகத்திற்கு வந்துவிட்டன.

வஸு:—ரமா! உன் கணவனுக்கு எக்காரணம்பற்றி இத்தகைய விபரீத புத்தி உண்டாகிறதோ எனக்குப் புரியவில்லை. நீ ப்ரக்ஞையற்றுக்கிடந்தபோது ஒரு விஷயத்தைக்கூற நான் தற்செயலாய் உன் வீட்டிற்கு வந்தேன். இந்த அலங்கோலம் என் மனத்தைக் கலக்கிவிட்டது. வழக்கம்போல் எனக்கு மரியாதை கொடுத்துப் பேசும் உன் கணவர் என்னைப் பார்த்தும் பார்க்காதவர்போல் பேசாதிருந்து எங்கேயோ போய்

விட்டார். உங்கள் கம்பவுன்டர் மூலம் சகல விஷயங்களையும் அறிந்து கொண்டேன். உன் பரிதாபம் எனக்குச் சகிக்கவில்லை. அதனால் உன்னையும் குழந்தைகளையும் நான் என் காரில் எடுத்துக்கொண்டு வந்துவிட்டேன். குழந்தைகள் சமாதானமாவதற்குள் உன் கணவர் வந்து ஒரு தகவலும் கூறாது அவர்களைமட்டும் தூக்கிக்கொண்டு போய்விட்டார்.

ரமா:—என்ன! குழந்தைகள் மட்டுமா? என்னை...

வஸு:—பதறாதே ரமா! உன்னைப்பற்றி ஒன்றுமே கேட்கவில்லை. "குழந்தைகளை அழ அழ ஏன் எடுத்துச் செல்லவேண்டும்? இங்குதான் இருக்கட்டும்" என்று நான் வலுவில் கூறினேன். அதற்கும் பதிலில்லை. பிறகு விசாரித்ததில் தனி பங்களா ஒன்று வாடகைக்கு எடுத்துக்கொண்டு நாளோ, நக்ஷத்திரமோ ஒன்றுமே பார்க்காது தன்னுடைய சாமான்களை அங்கு போட்டிருப்பதாயும், ஆட்கள் சிலரை முன்பின் யோசிக்காது அமர்த்தியிருப்பதாயும், புதிதாகக் கட்டிய அந்த பங்களாவில் இதுவரையில் யாருமே நிலைத்து ஒரு மாதங்கூடச் சேர்ந்தார்ப்போல் இல்லை என்றும் தெரியவந்தது.

அவ்வீட்டிற்கு மூன்று பேர்கள் இதுவரையில் குடிவந்ததாயும் வந்தவுடனே அவர்களில் யாரோ இறந்துவிட்டதால் அவ்வீடு பிடிக்காது வேறு வீட்டிற்குப் போய்விட்டதாயும், அவ்வீட்டில் ஏதோ ஒரு கெடுதல் இருப்பதாயும், யாரோ தற்கொலை செய்துகொண்டிருப்பதால் அந்த ஆத்மா அங்கு அலைவதாயும், ஏதேதோ நம் ட்ரைவர் முனுசாமி சொன்னான். எனக்கென்னவோ ஒன்றுமே புரியவில்லை.

தன் உயிருக்குயிரான மனைவியின் புகழைக் கண்டு கணவன் பெருமை பாராட்டி இன்னும் கை தூக்கிவிட வேண்டியதுபோக, இம்மாதிரி தாறுமாறாக ஆவது எனக்கு ஒரு புறத்தில் மிகவும் பயமாகவே இருக்கிறது. உனக்கு பகவானே சிபார்சு செய்து உன் பெயரை கவர்ன்மெண்டு ஜாபிதாவில் கொடுத்திருக்கிறார். அந்த ஜாபிதாவில் உள்ள பெயர்களில் நான்கு பெயர்களை கவர்ன்மெண்டு தேர்ந்தெடுத்திருக்கிறதாம். அதில் உன் பெயரும் ஒன்றென ஆத்மநாதன் தெரிவித்தார். ஸ்திரீகளுக்குள்ள வியாதிகளில் முக்யமான ஒன்றிற்கு உன்னை பிரத்யேகமாகப் படிக்கச் செய்து அதில் உன்னைத் தேர்ந்தவளாகச் செய்வதற்கு ஏற்பாடாகியிருக்கிறதாம். இந்த சந்தோஷச் செய்தியை உன் கணவரிடமும் உன்னிடமும் தெரிவிக்கவே நான் வந்தேன். வந்த இடத்தில் இத்தகைய அலங்கோலத்தைக் கண்டதும் எனக்கு மனது தாங்கவில்லை. உன்னைக் கொண்டுவந்தேன். உன் தகப்பனாரின் விஷயம் எனக்கு ஒருபுறம் சந்தோஷமாயும் ஒருபுறம் துக்கமாயுமிருக்கிறது.

ரமா:—ஐயோ! என்ன நடந்தது? அப்பா எங்கிருக்கிறார்? அவருக்கு ஏதாவது...

வஸு:—அவருக்கு ஒருவித கஷ்டமுமில்லை. உன் கணவன் செய்த செய்கையில் மனம் உடைந்துபோய் உடனே ஒரு ஸ்வாமியாரிடம் சென்று உபதேசம் பெற்றுக்கொண்டு தன் உடல், பொருள் ஆவி மூன்றையும் ஏழைமக்களுக்கு உழைப்பதற்கே—அதிலும் ஹரிஜனங்களுக்கு உழைத்து அவர்களின் முன்னேற்றத்தைக்கோரி சேவை செய்வதற்கே—

கங்கணம் கட்டிக்கொள்வதாயும், இனி தனக்கு ஒருவிதமான சம்சாரபந்தமும் வேண்டாமென்றும் சன்யாசமே இனி தனது முடிவான நிலை என்றும் ப்ரதிக்ஞை செய்துகொண்டு காஷாயந் தரித்துவிட்டதாயும், அந்த ஏழை ஹரிஜனங்களைத்தாமே காப்பாற்றுவதாயும் தகவல்கிடைத்திருக்கிறது.

ரமா:—ஹா!...நெடுநாட்களாகச் சொல்லிக்கொண்டிருந்ததை நிறைவேற்றிவிட்டாரா! சன்யாசியா!... இனிமேல் 'அப்பா!' என்று கூப்பிடுவதற்கும் எனக்கு அருகதையற்றுவிட்டதல்லவா! ஐயோ! இனி அவருடைய உடம்பைப்பற்றி யாருக்கு என்ன அக்கரை! யார் கவனிப்பார்கள்? பட்டினி இருக்கச் சற்றும் அஞ்சமாட்டாரே! ஏழைகளுக்கு உழைப்பதற்காவது அவர் நன்றாயிருந்தால் போதுமே! டாக்டர்! எனக்கு மூளை கலங்கிவிடும்போலத்தான் இருக்கிறது. என் மனக் குழப்பத்தை என்னால் சகிக்கமுடியவில்லை. தயவுசெய்து முதலில் காரைக் கொண்டுவரச் சொல்லுங்கள். நான் போய் என் கணவரையும், குழந்தைகளையும் ஏழை ஹரிஜனங்களையும், என் பிதாவையும் பார்க்கவேண்டும். எங்கே! எங்கே! காரெங்கே? தாமதம் வேண்டாம் டாக்டர்!" என்று பதறப் பதறக் கூறியபடியே படுக்கையிலிருந்து இறங்கி வெளியே ஓடினாள்.

வஸுந்தரா பின்னாலேயே ஓடிப்போய் ரமாவின் கையைப் பிடித்திழுத்து "ரமா! ரமா!...என் வார்த்தையைக் கேள். நீ இப்போது எங்கும் போகாதே! உன்னுடைய நிலைமை உனக்குத் தெரியவில்லை. அந்த மனிதன் எத்தனை படித்திருந்தும் கொஞ்சங்கூட அனுபவமோ, தெளிந்த ஞானமோ இல்லாதவனாயிருக்கிறான். இது எனக்குக் கொஞ்சமும் பிடிக்கவில்லை. உனக்கு நன்றாகத் தெளிவுண்டாகட்டும்; அப்புறம் போகலாம். நில்லு"...என்று கெஞ்சினாள்.

ரமாவின் மனது சமாதானமடையவில்லை. "டாக்டர்! எனக்கொரு விதமான ஆபத்துமில்லை. நான் முதலில் அவரிடம் சென்று என் குழந்தைகளையும் அவரையும் பார்த்தால்தான் என் மனது நிம்மதியடையும். எப்படியிருந்தாலும் நான் அவருடைய அடிமை......அவருடைய பொருள். அவருடைய கோபத்திற்கு நான் பாத்திரமாகிவிட்டால் என் கதி அதோகதியாகிவிடும். என்னைத் தடுக்காதீர்கள். நான் போய் பார்த்து வந்தபிறகு எனக்கு மனது தெளிந்துவிடும். விடுங்கள்" என்று வெகு பரிதாபத்துடன் கூறினாள்.

அதற்குமேல் கட்டாயப்படுத்தமுடியாது தன் காரைக் கொண்டுவரச் செய்து தன் நர்ஸைக்கூட அனுப்பினாள். மனதுமட்டும் ஏதோ தடுக்கமுடியாத வேதனையுடன் போராடியது. 'பார்த்துவிட்டுத் திரும்பிவிடு' என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டாள்... "என்ன நடக்குமோ! அந்த மூர்க்கன் என்ன செய்வானோ! நாமாவது கூடப் போகாதிருந்துவிட்டோமே!" என்று ஒரு திகிலும் பயமும் அவள் மனத்தில் பதிந்துவிட்டன. பகவானை வேண்டியபடியே உட்கார்ந்திருந்தாள்.

13

உத்தமியின் வேதனை—உறுதி ப்ரதிக்ஞை

சூரியாஸ்தமன சமயமாகையால் எங்கும் ஆனந்தமும், பறவைகளின் ஆரவாரமும், தன் கடமையைச் சரிவரச் செய்துவிட்டு நிம்மதியான மனத்துடனும் குளிர்ந்த முகத்துடனும் வீடு செல்லும் ஆதித்தனின் புன்சிரிப்பின் பொன்னே போன்ற ப்ரகாசமும் எங்கும் பரவி எல்லோருடைய இதயத்தையும் கவர்ந்து தம்வசப்படுத்தின.

ஆனால் தன்னிரையழிந்து சொப்பன உலகத்தில் சஞ்சரிப்பவள் போல காரில் செல்லும் ரமாவின் மனத்தை இவை எதுவும் அசைக்க முடியவில்லை. இவ்வுலகமும் இதில் காணும் மற்ற சகலமும் வெறும் சூனியமாகத்தோன்றின. ஒரு காலத்தில் இந்த அந்தி நேரத்தில் அவள் அநுபவித்த சுகமும் சந்தோஷமும் இன்று எங்கு மறைந்தனவோ! தளிர்த்த வனம்போல் காக்ஷியளித்த அந்திநேரம் இன்று வரண்ட பாலைவனமாகவும் சுவையற்றப் பாழுங் குப்பையாகவும் தோன்றியது. இந்த விநோத மாறுதலுக்குக் காரணம் அவளாலேயே அறியமுடியவில்லை. கண்ணீர் முட்டும் வேகத்தில் சூனியமான உலகத்தைக்கூட காணமுடியாது மறைத்தது. தன் வாழ்நாளில் இம்மாதிரி ஓர் நாள் வரும் என்று அவள் கனவுகூடக் காணவில்லையாதலால் அயோமயமான நிலைமையில் பொம்மையைப்போல அசையாது உட்கார்ந்திருந்தாள்.

தேவராஜன் புதிதாகக் குடி புகுந்திருக்கும் வீட்டைப் பார்த்ததும் ரமாவுக்குத் திக்கென்று தூக்கிவாரிப்போட்டது. முன்பு, தான் ஒரு கேஸ் பார்த்து அந்தம்மாளுக்குக் குணமாகாது இறந்துவிட்ட அதே வீடு என்று தெரிந்ததும் அவள் கண்கள் மங்குவதுபோல் தோன்றியது. அக் காலை இந்த வீட்டைப்பற்றிப் பலர் பலமாதிரி பேசியது அவளுக்கு ஞாபகத்திற்கு வந்துவிட்டது.

குழப்பத்துடன் இறங்கி, "ப்ரேமா!......துரைராஜ்!...,டாக்டர்!" என்று பித்துப்பிடித்தவள்போல் வீதியிலிருந்து கூவிக்கொண்டே, பேய் பிடித்தவள்போல் அலறியவாறு ஓடினள். பிச்சைக்காரக் குழந்தைகளை விட மோசமான நிலைமையில் தலையும் வேஷமுமாக அழுக்குப் படிந்த உடையுடன் இரண்டு குழந்தைகளும் ஓடிவந்து, "அம்மா! அம்மா! எங்களே உட்டுட்டு எங்கேம்மா போயிட்டே?" என்று கண்ணீர் வழியக் கதறியவாறு ரமாவின் கால்களைக் கட்டிக்கொண்டன.

"ஆஹாஹா!...என்ன அற்புதக் காட்சி!...என்ன அன்பின் மாட்சி! வாடித் துவண்டு தத்தளிக்கும் ரமாவின் இதயத்தில் புத்ர வாத்ஸல்யத்தின் வெள்ளம் அணைகடந்து பொங்கியது. "ஹா! என் செல்வக் கிளிகளே! ராஜரத்தினங்களே! என் கண்ணனைக் கண்களே!" என்று கூறியவாறு இரு குழந்தைகளையும் இரு கைகளில் தூக்கி முகத்தோடு முகம் பதித்து உச்சி முகர்ந்து மாறி மாறிப் பல முத்தங்களையிட்டுத் தன் மனப்புயலின் வெறியை ஒரு சிறிது ஆற்றிக் கொண்டாளெனினும் குழந்தைகளது பிகாரி வேஷத்தின் பரிதாபத்தைக் கண்டு அவளால் சகிக்க முடியவில்லை.

"நாம் உயிருடனிருக்கையில் குழந்தைகளை இத்தகைய பரிதாபத்துடன் பார்க்க மனம் கொதிக்கின்றதே" என்று கூறியவாறு குழந்தைகளின் முகத்தைத் தன் கைச் சவுக்கத்தினல் துடைத்துத் தலையைக் கோதினுள். 'கண்ணா! அப்பா எங்கே! நீங்கள் என்ன சாப்பிட்டீர்கள்? யார் சமையல் செய்தார்கள்? தாதா எங்கே? நீங்கள் பார்த்தீர்களா!' என்று கேட்டாள்.

குழந்தைகள் அழுதுகொண்டே, "தாதாவைப் பாக்கவே இல்லேம்மா! இங்கு யாருமே சமையல் பண்ணல்லே. ஒட்டல்லேந்து கொண்டுவந்து அப்பாவும் சாப்பிட்டார்; எங்களுக்கும் போட்டார். காரம் நாக்கு பத்திண்டுதும்மா! சாப்பாடே பிடிக்கலே! மத்தியானங்கூட ஒண்ணுமே கொடுக்கல்லே! காப்பி மட்டும் குடுத்தா... அதுகூட பிடிக்கல்லே! நாத்தம் நாறித்தும்மா! பசி உசிர் போறது" என்று கூறும்போது ரமாவின் வயிற்றில் சங்கடம் பிடுங்கித் தின்றது. இடமோ புதிய இடம். ஆகாரத்திற்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. குழந்தைகளைச் சமாதானம் செய்தபடியே மறுபடியும் "அப்பா எங்கேம்மா?" என்றுள்,

தாயாரைக் கண்ட சந்தோஷத்தில் பசியைக்கூட லக்ஷியம் செய்யவில்லை. "அப்பா அதோ அந்த உள்ளே இருக்கா. இன்னும் ரெண்டுபேர் கூட ஏதோ பேசிக்கொண்டே இருக்கா" என்றுர்கள்.

"ஹா! யாரு...அந்த த்ரோகி நாகராஜனு!...முன்பொருதரம் என் குடிக்குக் கோடாரிக்காம்பாய்த் தோன்றி அவருடைய புத்தியை அடியோடு கலைத்த சண்டாளனு இப்போது கூடக் குலாவுகிருன்! ஐயையோ! மறுபடியும் இவனுடைய விஷமபோதனை தலைக்கேறித்தான் திடீரென்று அவருக்கு புத்தி மாறியதா! அவனுடைய நட்பை அவரே ஒரு காலத்தில் வெறுத்துக் கூறியதை மறந்து இன்னும் இப்படி நேசம் காட்டுகிருரே! இதென்ன அநியாயம்! இந்த சாமியார் யாரோ தெரியவில்லையே?" என்று இடிந்துபோய் யோசித்தவாறு நின்றுவிட்டாள்.

இதற்குள் அவர்கள் வெளியே போய்விட்டார்கள். தேவராஜனின் காரில் அவர்களைத் தானே அழைத்துக்கொண்டு போனுன். ரமாவும் குழந்தைகளும் ஒரு ஒதுக்குப்புறமாய் இருந்ததால் தேவராஜன் முதலியவர்கள் இவர்களைப் பார்க்கவேயில்லை.

வீட்டில் நமோதானவர்கள் யாருமே இல்லை. குழந்தைகள் இருப்பதைக்கூடக் கவனிக்காமல் அவைகள் எக்கேடாவது கெட்டுப் போகட்டும் என்கிற முறையில் பேசாது போய்விட்டதைக் கண்டு ரமாவின் உள்ளம் பதறியது. டிரைவர் இருக்கும்போதே காரைத் தானே ஓட்டிச் செல்வதிலிருந்து ஏதோ ஒரு முக்கியத்வமும் சலுகையும் இருப்பதனுல்தான் இம்மாதிரி தானே ஓட்டிக்கொண்டு போயிருக்கிருர். என்ன கால வித்யாசமோ?" என்று ரமா கலங்கும்போது அங்கு வந்த டிரைவர் ரமாவைப் பார்த்ததும் கண்ணீர்வழிய நின்று, "அம்மணீ! உடம்பு குணந்தானு?" என்றுன்.

ரமா:—குணத்திற்கென்ன குறைவப்பா! பரிபூர்ண குணந்தான்; அது கிடக்கட்டும்; முன்னே போகிற சாமியார் யாரு, உனக்குத் தெரியுமா?

டிரைவர்:—சாமியாராவது மண்ணாங்கட்டியாவதம்மா! இந்தப் பாவி நாகராஜன் சினேகிதம் மறுப்படியும் ஐயாவுக்கு ஏற்பட்டுவிட்டதால் என்



னென்ன விபரீதம் உண்டாகுமோ தெரியவில்லை. திடீரென்று ஜோஸி யத்தில் ஒரு பயித்தியம் உண்டாகிவிட்டது. இன்று மூன்று நாட்களாய் அந்த ஜோஸியனுடனேயே பொழுது சரியாகிவிடுகிறது. என்ன ஜோஸி யமோ! எழவோ! தெரியவில்லை.

ரமா:—என்ன! நான் மயக்கமாக விழுந்து மூன்று நாளாகி விட்டதா! மூன்று நாட்களுக்குள்ளாக இத்தனை அலங்கோலமா! இந்த மகானு பாவன் உண்மையில் நல்ல ஜோஸியனா! வேஷக்கார ஜோஸியனா! அரை குறை ஜோஸியனா! ஆளை ஏமாற்றும் தளுக்கு ஜோஸியனா! கத்துக்குட்டி ஜோஸியனா! எப்படிப்பட்டவன்?

டிரை:—நல்ல உண்மையான ஜோஸியர்கள் ஒரு சிலர் இல்லாம லில்லை. யோக்கியமாயும், சொல்லியது தவறாது பலிப்பவராயும் சிலர் இருக்கிறார்கள். ஆனால் இந்த மகானுபாவன் பலே தகல்பாஜி. தான் பெரிய ஜோஸியன் என்கிற அகம்பாவத்தில் மனிதர்களை மதிக்காமல் பேசுவதும், பத்திரிகைகளில் பலத்த விளம்பரங்கள் செய்துகொண்டு தன் னைத்தானே புகழ்ந்துகொள்வதுமான தடபுடல் பேர்வழி. இவன் கையில் யாராவது மைனர்கள், சற்று புத்தியில்லாதவர்கள் அகப்பட்டுக்கொண் டால் அவர்களை விடவேமாட்டான். பணங்கறந்து வயிறு வளர்ப்பதே இவன் தொழில். எத்தனையோ உண்மையான பலன்களைச் சொல்லும் சில ஜோஸியர்கள் தமக்கு ஜோஸியம் தெரியும் என்றுகூடப் பிறருக்குத் தெரியாதவாறு அத்தனை மரியாதையாயும் ஆடம்பரமற்றுமிருக்கிறார்கள். காலணாகாசுகூட வாங்குவது கிடையாது. வேண்டியவர்களுக்குமட்டும் சொல்வது வழக்கம். அதுவே தொழில் கிடையாது. ஆனால் "யானைக் கும் அடி சறுக்கும்" என்பதுபோல் அத்தகையவர்களுக்கும் சில சமயம் பலியாது பழுதேற்பட்டுவிடுகிறது...

ரமா:—டிரைவர்! ஊர்க் கதையெல்லாம் எதற்காக இப்போது எனக்கு? யார் எப்படிப்போனால் எனக்கென்ன? நம்ம விஷயத்தைச் சொல்லு பார்க்கலாம். உலகத்தில் எத்தனையோ தொழில்கள், கலைகள் இருக்கின்றன. அதிலுள்ள உண்மையோ, ஊழலோ, மோசமோ, பொய் யும் பித்தலாட்டமுமோ கணக்கு வழக்கற்றதாய் இருக்கலாம். நமக்கென்ன தெரியும்? வீண் விவாதம் எதற்கு? இந்த ஆசாமி யாரு! இவன் எப்படி இங்குவந்தான்? எஜமானுக்கு இந்த பயித்தியம் எப்படி பிடித்தது?

டிரை:—அம்மணீ! அன்று அந்த சம்பவம் நடந்தவுடனே எஜமான் நேரே அந்த துரோகி நாகராஜன் வீட்டிற்குத்தான் போனார். உள்ளே என்ன சம்பாஷணை நடந்ததென்று தெரியாது. பிறகு இருவருமாக வெளியே வந்து இந்த வீட்டைப் பார்த்துப் பேசிமுடித்து உடனே சாமான் களைக் கொண்டு வந்து போட்டார்கள். அன்றே இந்த சாமியாரிடம் போய் ஏதோ பேசினார்கள். உடனே அவன் கூடவே வந்துவிட்டான். அன்றுமுதல் இதே லீலைதான்! அவன் வருவது அல்லது இவர்கள்போவது. என்னைக்கூட வண்டியோட்டக் கூப்பிடுவதில்லை. அவரே ஓட்டுகிறார், இல்லாவிட்டால் அந்த அயோக்கியன் ஓட்டுகிறான்...

என்று அவன் பேசி முடிப்பதற்குள் தேவராஜன் திரும்பி வந்ததை அறிந்த டிரைவர் போய்விட்டான். ரமா குழந்தைகளுடன் உள்ளுக்குள்

மறைந்து நின்ருள். குழந்தைகளைப்பற்றிய நினைவுகூட இல்லாது உள்ளே போய் ஈஸிச்சேரில் படுத்துக்கொண்டான்.

ரமாவின் உள்ளக் கிளர்ச்சியைச் சொல்லமுடியாது. குழந்தைகளை அங்கே விட்டுவிட்டுத் தான் மட்டும் தேவன் இருக்கும் அறைப்பக்கம் போனுள். கதவு பாதி சாத்தியதும் திறந்ததுமாக இருந்ததால் வெளியில் நின்றபடியே உள்ளே நோக்கினுள். அந்தோ! அவள் கண்ட காட்சியும், உணர்ந்த வாஸனையும் அவளைத் திடுக்கிடச் செய்தன. "என்ன! ஸிகரெட் பிடிக்கும் வழக்கம் எப்போது உண்டாயிற்று? ஐயையோ! இதென்ன போதாக்காலக் கொடுமை! இப்பொழுதுதான் கற்றுக்கொள்கிருர்போல் தோன்றுகிறதே!'' என்று மனங் குழம்பியபடியே சற்று நேரம் நின்ருள்.

பிறகு தைரியமாய் எதையோ எண்ணியவளாய் தடதடவென்று உள்ளே சென்று தேவராஜன் வாயிலிருந்த ஸிகரேட்டை வெடுக்கென்று பிடுங்கி ஜன்னலால் வெளியில் எறிந்தபடியே, "டாக்டர்! இந்த அற்புதமான வழக்கம் எத்தனை நாட்களாய் உண்டாகியிருக்கிறது? ஸிகரெட் பிடிப்பவர்களையெல்லாம் ஒருசமயம் பரிகஸித்தும் திட்டியும் கேலி செய்த நீங்களா இந்தக் காரியம் செய்வது? ஏழை ஹரிஜனங்களுக்கு ஆதரவு கொடுப்பதை வெகு கேவலமாயும், தீட்டு ஒட்டிக்கொள்ளும் என்றும் உங்களுக்கு கலகம் செய்து, குடிகெடுத்த பாவிகள் இந்த ஸிகரேட் பிடிப்பதை வெகு உத்க்ருஷ்டமான காரியம் என்று சிலாகிக்கின்ருர்களா?''

என்று ரமா ஆவேசத்துடன் கூறுவதை தேவராஜன் ஒருமாதிரி க்ரூரம் நிறைந்த கண்களால் பார்த்தபடியே "அடாடா! ஸ்ரீமதி ரமா தேவியா! புகழ்மாலைக்குரிய புனிததேவியா! கலியுக தந்வந்திரிபோல் அவதாரம் செய்துள்ள அபூர்வ சக்தி தேவதையா! வாருங்கள்! வாருங்கள்! இப்படி உட்காருங்கள்'' என்று கிண்டலாகக் கூறியவாறு ஒரு விகாரச் சிரிப்பு சிரித்தான். அந்த சிரிப்பின் கொடூரத்வனியின் ரீங்காரம் ரமாவின் இதயத்தில் சகிக்கக்கூடாத வேதனையை எழுப்பும் எதிரொலிபோல த்வனித்தது.

ரமா:—(நடுங்கியவாறு) டாக்டர்!—என்ருள்.

தேவன்:—(நக்கு காட்டிய முகத்துடன்)....டாக்டர்!...என்று அழகு காட்டினுன்.

ரமாவுக்கு இதயப் படபடப்பு அதிகமாயிற்று. கண்களில் நீர் தாரைகவே பெருகியது; "டாக்டர்! நீங்களா என்னை இவ்விதம் பரிகஸிப்பது? இம்மாதிரி நீங்களே பரிகஸிப்பதற்கா என்னை இத்தனை மேன்மையாக்கினீர்கள்?

தேவ:—மேன்மையாக்கினேனு!...உன்னை நானு மேன்மையாக்கினேன்? உங்கப்பனும் நீயும், பத்திரிகைக்காரப் பசங்களை யெல்லாம் காக்காய் பிடித்து, ஸலாம் போட்டு, லஞ்சக்கொடுத்து உன்னை உயர்த்திக்கொண்டு என்னைப்பள்ளத்தில் தள்ளிய ரகஸ்ய புராணம் தெரியாதென்று நினைத்தாயா?......

ரமா:—ஐயையோ! இதென்ன அபாண்டப்பழி!...இந்த அநியாய வார்த்தைகளைக்கூற உங்கள் மனம் எப்படித்துணிந்தது! புகழ்ச்சியும் மகிழ்ச்சியும் இம்மாதிரி அதர்ம வழியில் அலைந்தால் வந்துவிடுமா! மழை

தானாகப் பெய்தால் ஏரிகள் நிறையுமேயன்றி தேக்கித்தேக்கி வைத்தால் நிறையுமா, நிற்குமா!

தேவ:—சரி! சரி! உன்னுடைய பிரசங்கம் வேண்டியதில்லை. குட்டு வெளியாகிவிட்டதே என்ற வயிற்றெரிச்சலால் வியாக்யானங்கள் செய்கிறாய். ஒரே வார்த்தை. உன்னுடைய அட்டகாஸங்கள் இனிமேல் என்னிடம் பலிக்காது. உன் தொழிலையே விட்டுவிட்டாலும் பரமசந்தோஷம் அல்லது ஏதோ உன்னைத் தேடிக்கொண்டுவரும் நோயாளிகளை வீட்டில் பார்ப்பதோடு நிறுத்திக்கொள்ள வேண்டும். உன்னுடைய வெளிப் பிரவர்த்தகங்களை மூட்டைக்கட்டிச் சமுத்திரத்தில் போட்டுவிடவேண்டும்...

இந்த வார்த்தைகளைக் கேட்கக் கேட்க ரமாவின் இதயம் உடைந்தது. தேகமே தீப்பிடித்து எரிவதுபோன்ற வேதனை உண்டாகியது, உடனே சற்றும் தயங்காமல் படபடத்துப் பேசத்தொடங்கி, "டாக்டர்! உண்மையில் உங்கள் வாயிலிருந்தா இந்த சொற்கள் வருகின்றன? மனப்பூர்வமாய் நீங்கள் விரும்பும் விருப்பம் இதுவா? உண்மையா? உண்மையாகவா? சொல்லுங்கள்" என்று தனது நிலைமைக்குமீறிய சோகத்துடன் கேட்டாள். தேகம் கிடுகிடென்று ஆடியது.

சற்றும் இரக்கமோ மனமாறுதலோ இல்லாது தேவராஜன், "ஆம்! என்னுடைய மனப்பூர்வமான விருப்பம் இதுதான். ஆண்களைவிடப் பெண்கள் தாழ்மையாகவும், ஆடவர்களுக்கு அடிமைபோலுந்தான் இருக்கவேண்டும். அப்போதுதான் பெண்களுக்குக் கொழுப்பு ஏறாது. கணவனிடம் பயபக்தி, மரியாதை, விச்வாசம் எல்லாம் இருக்கும்...

ரமா:—ஆனால்... இப்போது அவைகள் ஒன்றுமில்லாத கர்மி நான் என்பது உங்கள் அபிப்ராயமா!...டாக்டர்! டாக்டர்! என்னைக் கத்தியால் கண்டதுண்டமாக வெட்டினாலும், என்னை இன்னும் சித்திரவதை செய்தாலும் எனக்குப் பரமசந்தோஷமாகவிருக்கும். அதை ஆனந்தத்துடன் என்னிதயம் வரவேற்கும்; ஆனால்...என்னைப்பற்றித் தாங்கள் நினைத்திருப்பதும், கூறுவதும் என்னால் சகிக்கமுடியவில்லை. என் இதயம் வெடித்துவிடும்போல் இருக்கிறது. வெடித்துப்போய் என் அன்னையிடம் போய்ச் சேர்ந்துவிட்டால் என் மனம் குளிர்ந்துவிடும். இனிமேல் என்னை இம்மாதிரி சோதனைக்கு ஆளாக்கவேண்டாம். இதோ இந்த நிமிஷமே உங்கள் பாதத்தின் ஆணையாக நான் இப்பொழும் தொழிலை விட்டுவிட்டேன். அந்த சம்பந்தமானக் கருவியைக்கூட நான் இனி என் ஃகையால் தொடுவதில்லை......

என்று கூறும்போது துக்கம் தாங்கமாட்டாது பொங்கி வந்துவிட்டது. தொண்டையை அடைக்கும் துக்கத்துடன் அந்த இடத்திலேயே நிற்காது ஒரே பாய்ச்சலாய்ப் போய்விட்டாள், அவளுடைய இதயத்துடிப்பின் வேகத்தை யாரால் அறியக்கூடும்? ஆதியில் அவளுடைய தாயார் விரும்பி இந்தத் தொழிலில் சேர்த்த ஆர்வமென்ன! இன்று நிகழ்ந்த நிகழ்ச்சியின் விபரீதமென்ன! என்று நினைக்கும்போது அவளால் சகிக்கமுடியாத அபாரமான துக்கம் பொங்கியது. பழங்கதைகள் ஒன்றன்பின் ஒன்றாக மனத்திரையில் சுழன்றன.

14

ஹரிதாஸரின் ஆழ்ந்த கருத்து—வீராங்கனையின் வீரகர்ஜனை

முறிந்த பால் எப்படி நல்ல பாலாகமாட்டாதோ அப்படியே முறிந்த மனமும் திரும்பக் கூடுவது அரிதிலும் அரிதல்லவா! தன்னுடைய ஒரே மகளின் சந்தோஷத்திற்காக சீதாபதி செய்துள்ள தியாகமும், தேவ ராஜனுக்காகப் பட்டுள்ள பாடும் ஒரு நொடியில் மறந்துபோய் அத்தனை ஏழைகளையும் உதாசீனம் செய்ததுடன் தன்னுயிரினும் அருமையாக மதித்துள்ள ரமாவைக் கேவலப்படுத்தித் தன்னையும் அத்தனைபேர்கள் மத்தியில் பிடித்துத்தள்ளி இழிவுபடுத்தியதால் அவரது மனம் முறிந்தது.

'நெடுநாட்களாகத் தன் மனத்தில் போராடிக்கொண்டிருந்த சந்தேகம் நிவர்த்தியாகி அக்ஷணமே காஷாய கமண்டலதாரியாகிய ஆச்சரியத்தை அந்த ஊரே கொண்டாடியது. தேவராஜனின் செய்கைக்கு அவனைக் கண்டிக்காத ஜனங்களில்லை.

ஏதோ நற்காலத்திற்குத்தான், வருவதையறியும் சக்திபோல் ரமா முன்கூட்டியே தன் சொத்துக்களை ஒரு நல்ல ஸ்தாபனமாக்கித் தன்னையும் முக்தி மார்க்கத்திலிறங்கச் செய்தாள் என்று சீதாபதி வெகுவாய் தனக்குள் புகழ்ந்து கொண்டார். ரமாவின் க்ஷேமத்தைக் கோரி இதய பூர்வமாய் ஆசீர்வதித்தார்.

தன் அருமை மகளையும் குழந்தைகளையும் ஒரு நிமிடம் பார்க்காதிருந்தாலும் உயிர் போய்விடும்போல் துடிக்கும் பற்றுடைய இதயம் இன்று அந்தப் பாசத்தை முறியடிப்பதற்குப் பிரம்மப் பிரயத்தனம் செய்து மனத்தை அடக்கியும், அவ்வளவு சீக்கிரம் முறிந்துவிட முடிகிறதா? தேவ ராஜனுக்கு நல்ல புத்தியைக் கொடுத்து ரக்ஷிக்கவேண்டியே பகவானைப் பிரார்த்தனை செய்தார்.

திடீரென்று இத்தகைய மாறுதலை அடைந்த சீதாபதி தன் பெயரையும் இனி வேறாக மாற்றிக்கொள்ளத் தீர்மானித்து 'ஹரிதாஸன்' என்று சுருக்கிக்கொண்டார். தான் சன்யாசம் வாங்கிய பிறகு, பெண்ணின் விஷயத்தைப்பற்றி விசாரிப்பதும் தவறு. சன்யாச ஆச்ரமத்தின் விதிக்கு இது விரோதமானது என்பதை அறிவாராதலால் அவர் அதைப்பற்றி விசாரிப்பதையும் நிறுத்திவிட்டார்.

ரமாவிடம் கம்பவுண்டராயிருந்த வேங்கடேசன் நம்பிக்கைக்குப் பாத்ரமானவனும் பரம யோக்கியனுமாகையால் அவனைத் தனது பிரத்யேக காரியஸ்தனாக வைத்துக்கொண்டார். ஹரிஜனங்களுக்கான சகல வேலைகளையும் செய்வதற்கும், ஓடியாடிப் பாடுபடுவதற்கும் அவனை நியமித்தார்.

"ஹரிஜன் மந்திரம்" என்கிற புதிய பெயருடைய பலகை சீதாபதியின் பங்களா வாசலில் மாட்டப்பட்டிருந்ததைக் கண்டு எல்லோரும் வியந்தார்கள். ஆத்மநாதன் ஏற்கெனவே ஏழைக்குழைப்பதில் பரம பிரீதியுடையவனாகையால் அன்றைய சம்பவத்திற்குப் பிறகு ஆத்மநாதனே இந்த நோயாளிகளைக் கவனித்துவர ஏற்பாடு செய்துவிட்டார்; ஆதலால், வைத்திய முறையில்கூட ஹரிதாஸர் ரமாவை எதிர்பார்க்கவில்லை.

என்னே உலக விசித்திரம்! மனத்தில் பாசத்தை மலைபோல் எழச் செய்து அதிலேயே ஊடாட வைப்பதும், உடனே அதைப் பிரிப்பதும், முறிப்பதும், வைராக்கியத்தை உண்டாக்குவதும் எல்லாம் அந்த மாயா விலாஸனின் லீலைகள் அல்லவா! எந்த நிமிடம் எந்த உணர்ச்சியைக் கொடுப்பான் என்று யாராலாவது நினைக்கமுடியுமா! அங்ஙனம் இருக் கும்போதே மனிதப் பிறவியில் சகஜமாக உதிக்கக்கூடிய கர்வம், மமதை, நாம் என்னும் அகங்காரம், அலக்ஷிய புத்தி, அல்ப எண்ணம், தலைகால் தெரியாத வெறி, 'கண்டதே காக்ஷி; கொண்டதே கோலம்' என்கிற போக்கு...பெரியாரைத் திருணமாக மதித்துத் தனக்கே சகலமும் தெரிந்த பாவனையாய் துள்ளிக் குதிப்பது ஆக எத்தனையோ அட்டகாஸங்களில் உலகம் சுழலுகிறது. ஆனால், அந்த மாயாவியின் சட்ட திட்டத்திற்குமுன் எது நிற்கமுடியும்?

ரமாவின் மனத்துடிப்பின் வேகத்தில் அவள் தன்னுயிர் உடனே போய்விடக்கூடாதா! என்று கடவுளைப் பிரார்த்தனை செய்யவாரம்பித் தாள். ஆதியில் ஒரு காலத்தில் தேவராஜன் கூறிய வார்த்தைகள் முற் றும் அவள் செவியில் ஒலிப்பதுபோல் தோன்றியது. "ரமா! உன்னை இழந்திடுவேனோ? என்று என்னுள்ளம் துடிக்கின்றது. திகில் வாட்டு கிறது!" என்று கூறிய அதே தேவராஜன் இன்றுள்ள நிலைமையை எங்ஙனந்தான் அவளால் சகிக்கமுடியும்?

குழந்தைகள் மீண்டும் ஓட்டமாக ஓடிவந்து தாயாரைக் கட்டிக் கொண்டு அழுதன...ரமாவின் வயிறும் இதயமும் பத்தி எரிந்தன. நல்ல தங்காள் வயிற்றுக்கில்லாத கொடுமையினால் கிணற்றில் குழந்தைகளைத் தள்ளிவிட்டுத் தானும் விழுந்தாள். எனக்கு வயிற்றுக்கு ஏராளமாய் இருந் தும் என் குழந்தைகளும் நானும் படும் சிறுமையும் சங்கடமும் பொறுக்க முடியவில்லையே! செல்வமும், வித்தையும், தொழிலும் இல்லாதவர்களின் புலம்பலையும், சகலமும் இருந்தும் புலம்புபவர்களின் விதியையும் என் னென்று சொல்வது?

நல்லதங்காளைப்போல் நாமும் செய்துவிட்டால்தான் என்ன! என்று கூட அவள் இதயம் ஒரு விநாடி துணிந்தும், மறு விநாடியே குழந்தை களின் சந்திரபிம்பம் போன்ற முகத்தைப் பார்த்ததும் அவளால் பொறுக்க முடியாத வேதனையுண்டாகி அனலிடை மெழுகெனத் துடித்தாள். குழந் தைகளைச் சேர்த்து அணைத்துக்கொண்டு வெகு நேரம் படுத்துப் புலம்பி னாள். எத்தனை விதத்தில் மனத்திற்குச் சமாதானத்தை உண்டாக்கிக் கொண்டாலும் அவளால் நிலைநிறுத்த முடியாது துடித்தாள்.

இந்நிலைமையில் தனக்கெங்கு பயித்தியம் பிடித்துவிடுமோ என்றும் ஒரு திகில் உண்டாகியது. இத்தகைய தத்தளிப்பான நிலைமையில் குழந் தைகள் பசி பொறுக்காது அழவாரம்பித்தன. என்ன செய்வாள் பாவம்! மணி இரவு 9-மணியாகிவிட்டதை அறிந்த பிறகுதான் அவள் இதயம் பின்னும் துடித்தது.

தன் துக்கத்தை யொருவாறு அடக்கிக்கொண்டு எழுந்து உள்ளே போய் பார்த்தாள். "அடுப்பா! துடுப்பா! சாமான்களா! உப்பு புளி மிளகாயா! ஒன்றுமில்லை. சத்திரம்போல் இடம் மட்டுமிருந்தது. ஒரு

பக்கத்தில் டிப்பன் செட்டில் சாப்பாடு, செத்தவன் காலைப்போல் சில்லிட்டுப் போனதுடன் எறும்புகள் பாத்திரங்களைச் சுற்றிக்கொண்டிருந்தன. சாதாரணமாக உள்ள மனிதர்களே இம்மாதிரியான ஆகாரத்தைப் பார்த்தால் உபயோகப்படுத்தப் பிடிக்காது. அதிலும் ஒரு பிரபல டாக்டரின் மனத்திற்கு இது எப்படித்தான் பிடிக்கும்? சற்று நேரம் மனக் கசப்புடன் நின்றாள்; குழந்தைகளின் களைப்பும், இராக்காலத்தின் பயங்கரமும் தன் விதியின் கொடுமையும் ஒன்று சேர்ந்த பரிபவத்தில் மனம் முறிந்தது.

அந்த டிப்பன் செட்டைத் திறந்து பார்த்தாள். சமையலில் பிரதானமாக மிளகாய் நெடி முக்யத்வம் தாங்கி மூக்கைத் துளைத்தது. சாதத்தைப் பார்த்தால் விரை விரையாயிருந்தது. "உம். தலைவிதி! தலைவிதியே! நீ ஆட்டும் ஆட்டமிதுதானா! இன்னுமிருக்கிறதா!" என்று கூறிக்கொண்டே சாதத்தைமட்டும் எடுத்து மோரைவிட்டுக் கலந்து குழந்தைகளுக்கு ஊட்டினாள்.

ஊட்டிக்கொண்டிருக்கும்போது ஏதோ சந்தேகம் உதிக்கப்பட்டவளாய் மோர் வைத்திருக்கும் பாத்திரத்தை உற்றுக்கவனித்து மோரை இன்னொரு பாத்திரத்தில் ஊற்றிவிட்டுப் பார்த்தாள். பாதிக்குமேல் ஈயம் பூசியது கலைந்துபோயிருந்ததைக் கண்டு திடுக்கிட்டு அப்படியே ஊட்டுவதை நிறுத்திவிட்டாள்.

'இதுவரையில் சாப்பிட்டதில் களும்பு வயிற்றில்போய் என்ன செய்யுமோ!' என்ற பயம் உண்டாகிவிட்டது. அதற்கு உடனே மாற்று மருந்து கொடுக்க வழி இருந்தும் அவள் மனமும் கையும் பின்னடைந்தன. 'குழந்தைகளுக்கு ஆயுசு இருந்தால் பிழைக்கிறது; இல்லையேல் அதன் விதியைப் போலாகிறது' என்ற ஒரு வைராக்யமான வெறுப்புண்டாயிற்று.

பெற்ற வயிறுயிற்றே! அப்படித் துணிந்திருக்கமுடியுமா! மனந்தான் கேட்குமா? ஆனால், சற்றுமுன் தான் செய்த சபதத்தை மீறவும் மனந் துணியவில்லை. முரட்டுத்தனமாகக் குழந்தைகளுக்கு வாயில் விரலைவிட்டு வாந்தி எடுக்கச் செய்து குளிர்ந்த ஜலத்தைப் பருகச்செய்து பின் தூங்க வைத்தாள்..

வெளியில் சென்ற தேவராஜன் வரவில்லை. மணி ஏறிக்கொண்டே இருக்கிறது. ரமாவின் துக்கத்தில் தூக்கமேது? நிம்மதிதான் ஏது? தான் இதுவரையில் பார்த்துவரும் நோயாளிகளை திடீரென்று பார்க்காது நிறுத்திவிட்டால் அவர்கள் என்ன செய்வார்கள்? "எதற்காக இம்மாதிரி தொழிலை நிறுத்தினாய்?" என்றால் என்ன சொல்வது? ஐயோ! ஆதியிலே என்னை உலகத்திலுள்ள மற்ற பெண்களைப்போல் அடுப்பங்கரையில் போட்டிருந்தால் எனக்கு இத்தகைய அவமானம் ஒன்றும் நேர்ந்திருக்காதல்லவா! ஈசா! இதென்ன சோதனையப்பா! என்னால் சகிக்கமுடியவில்லையே!" என்று உருகித் துடித்தவாறு படுத்திருந்தாள்.

இரவு ஒரு மணி சுமாருக்கு தேவராஜன் வாயில் சிகரெட்டுடன், நாகராஜனுடன்கூட வந்து, மாடியிலுள்ள தனி யறைக்குப்போய் இருவரும் படுத்துவிட்டார்கள். குழந்தைகளைப்பற்றியோ, ரமாவைப்பற்றியோ ஒன்றுமே விசாரிக்கவோ வந்து பார்க்கவோ இல்லை. இச்செய்கை ரமாவுக்குப் பின்னும் வியப்பாயும் அடக்கமுடியாத துக்கமாயுமிருந்தது.

"இரவுதான் குழந்தைகள் தன் கண் முன்பாகவே பட்டபட்டினியாய் இருந்தாயிற்று. விடியற்காலையில் என்ன செய்வது? எப்படி குழந்தைகளுக்கு காலை ஆகாரங்கள் கொடுப்பது?" என்கிற யோசனையுண்டாகிறது, தூக்கம் பிடிக்காது புரளுகிறாள். புதிய இடமாகையால் பயம் ஒருபுறம் நடுக்குகிறது. பேச்சுத் துணைக்குக்கூட பழகிய ஆள் யாருமில்லை. ஒரு காலத்தில் பெரிய சிற்றரசிபோல் வாழ்ந்த தான் இன்று ஒரு கைதியிலும் கைதியாய் அடிமைபோல் அடைபட்டிருப்பதென்றால் அவள் மனம் எப்படித்தான் துடிக்காது?

அவள் மனது இருக்கை கொள்ளாது, எழுந்து மாடிக்குச் சென்று கணவன் படுத்திருக்கும் அறைப்பக்கம் போய் அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்று அறியவேண்டிக் கதவினருகில் நின்று உள்பக்கம் எட்டிப் பார்த்தாள். நாகராஜன் ஒரு கிளாஸ் டம்ப்ளரில் குடி வகையை ஊற்றி அதை தேவராஜனுக்கு முன்பு நீட்டி, "தேவலையப்பா! சாப்பிடு. இதைக் குடித்த பிறகு உண்டாகும் சுகத்தையும் சந்தோஷத்தையும் அனுபவித்தாலன்றோ தெரியும். உன் மனத்திலுள்ள விசனத்தைப் போக்க இதுதான் பரம அவுடதம் தெரியுமா! ராஜாதி ராஜாக்கள் விரும்பிக் குடிக்கும் உயர்ந்த பானத்தை நீ ஏன் வெறுக்கிறாய்? முதலில் அப்படித்தானிருக்கும் இந்தா!" என்று பலவந்தம் செய்தான்.

தேவ:—வேண்டாண்டா நாகராஜ்! இதைக் குடித்தால் பழக்கமாகப் பிடித்துக்கொள்ளும்...

நாக:—போடா பைத்தியக்காரா! பிடித்துக்கொண்டால் என்ன! இதற்குக்கூட காசு சம்பாதிக்காமலா போய்விடுவாய்? சாப்பிடடா!—என்று பலவந்தமாக அவன் வாயில் தானே வார்க்கப்போனான்.

ரமாவுக்கு மனது பொறுக்கவில்லை. நூறு மைல் வேகத்தில் ஓடும் மோட்டாரைப்போல் அவளுடைய இதயம் துடித்தது. அன்னியன் ஒருவன் கூட இருப்பதையும் மறந்து வெகு ஆவேசத்துடன் உள்ளே சென்று, "இச்சீ! துராத்மாவே! நிறுத்து......டாக்டர்! ஏற்கெனவே மதிமயங்கிக் கிடப்பது போதும். மதுவைக் குடித்துப் பின்னும் மதிமயங்கவேண்டாம்" என்று கூறியபடி அந்த பாட்டிலை அப்படியே பிடுங்கிச் சுக்கல் பதினாயிரமாகும்படி வீசி எறிந்து மேஜைமீதிருந்த பாட்டிலையும் அப்படியே உடைத்தாள்.

நிசப்தமான நடுநிசியில் ராக்ஷஸிபோல் ரமா வந்து இம்மாதிரி செய்வாள் என்று அந்த மதுவெறியனாவது, சுயபுத்தியற்ற தேவராஜனாவது சற்றும் நினைக்கவேயில்லையாதலால் அவர்களே திடுக்கிட்டு, க்ஷணநேரம் பிரமித்துப்போய் கல்லாய்ச் சமைந்துவிட்டார்கள்.

ரமா ரணபத்ர சண்டியைப்போல் கண்களில் நெருப்புப் பொறி பறக்க நாகராஜனை நோக்கி, "அடே பேமானீ! நீ படித்த படிப்பும் எடுத்த தொழிலும் உனக்குக் கொடுத்த புத்தி இதுதானா! என் குடியைக்கெடுத்து தம்பதிகளைப் பிரித்து கலகத் தீயை மூட்டி என் குடும்பத்தை எரிப்பதனால் நீ அடையும் லாபமென்னடா!...

இதற்குள் நாகராஜனுக்குக் கோபம் பிறிக்கொண்டு வந்துவிட்டது. "டேய் தேவா!...நான் இனி மரியாதை பார்க்கமாட்டேன். அவளைக்

கழுத்தைப்பிடித்துத் தள்ளிவிடுவேன்... அடா புடா!'' என்று அளக்கும் சிங்கார வார்த்தைகளைக் கேட்டுப் பல்லிளிக்கும் மடையன் நானல்ல''...... என்று கர்ஜித்தான்.

திருடனுக்குத் தேள் கொட்டியதுபோல் தேவராஜனின் கதி ஆகிவிட்டதால் பித்தன்போல் விழித்தான். அடுத்த விநாடியே நாகராஜனின் வார்த்தைகளைக் கேட்டு ரமாவின்மீது கோபத்துடன், ''ரமா! மரியாதை கெட்டத்தனமாய் நடக்காதே! போ வெளியே! உன்னை யார் இங்கு பிசாசு போல் வரச்சொல்லியது?'' என்று முடிக்குமுன் ரமா ஆத்திரமும் ஆவேசமும் கலந்த தொனியில் பேசத் தொடங்கி, ''யார் வரச்சொல்லியதா!... அதுகூட மறந்துவிட்டதா! உங்களுடைய தர்மபத்தினி என்கிற பட்டம் என்னை வரச்சொல்லியது. டாக்டர்! இது வெறும் விளையாட்டில்லை. வீண் வினையை விலைகொடுத்து வாங்காதீர்கள். உங்களுடைய சுக துக்கத்திற்கும், நன்மைதீமைகளுக்கும் உங்கள் நிழல்போன்றுள்ள நான் பாத்தியப்பட்டவளேயன்றி, உங்கள் மூளையைக் குழம்பச் செய்து குடியைக் கெடுக்கும் இந்த பாதகனுக்கு எவ்விதமான பாத்தியமும் கிடையாது.

சிவந்து, பார்ப்பதற்கு அழகாகவிருக்கும் மிளகாய்ப் பழத்தை நிரபராதியான ஒரு பேதைக் குழந்தைக்குக் காட்டி ''இது ஒரு ருசி நிறைந்த இனிய கனி'' என்று கூறிக் கொடுத்துவிட்டால் அதைத் தின்று அவஸ்தைப்படும் குழந்தையின் தவிப்பு கொடுத்த போக்கிரிக்குத் தெரியுமா! அப்படித்தான் தற்சமயம் உங்கள் கதியிருக்கிறது. டாக்டர்! முதலில் அவனை வெளியே துரத்துகிறீர்களா அன்றி இப்போ அவனை மரியாதைக் குறைவாய், வேலைக்காரனை அழைத்துத் துரத்தச் சொல்லட்டுமா!'' என்று ரமா முடிப்பதற்குள் தேவராஜன் சிம்மம்போல் தாவிக்குதித்து, ''ரமா! ஏதேது! நீ பெரிய அதிகப்பிரஸங்கியாய்ப் போய்விட்டாய். போ கிழே! உம்... போ! போ!'' என்று பல்லைக் கடித்தவாறு அவள் கழுத்தில் கையைப் போட்டுத் தள்ளினன்.

ரமாவுக்குக் கோபம் அதிகரித்தது. ''என்ன! நான் போகவேண்டுமா! முடியாது. இந்த அயோக்கியனால் நீங்கள் கெட்டுப்போகும்படி நான் பார்த்துக்கொண்டிருக்க முடியாது. டாக்டர்! உங்கள் காலில் முள் தைத்தால் அது என் கண்ணில் தைத்ததுபோல் அக்கரையும் மனத் துடிப்பும் உண்டாகுமேயன்றி உங்களைப் பாழாக்கவரும் தடியர்களுக்குத் தோன்றாது. 'தெருச்சண்டை கண்ணுக்குக் குளிர்ச்சி' என்பதுபோல் வேடிக்கை பார்க்கத்தான் அவர்களுடைய வம்பு நிறைந்த உள்ளம் விரும்பும். முதலில் அவனைத் துரத்துங்கள். இல்லையேல்...

தேவ:—சீச்சி! இல்லையேல். என்ன செய்துவிடுவாய்? சபித்து விடுவாயோ! பிடிசாம்பலாக்கிவிடுவாயோ! உத்தமியின் சாபம் உடனே பலித்துவிடுமல்லவா! வெட்கங் கெட்டவளே! போ உள்ளே! உம்... போ! போ!—என்று கூறியபடிச் சற்றும் ஈவிரக்கமற்று மெத்தைப் படியில் பிடித்துத் தள்ளினன்.

பதங்கெட்டபிறகு இனி என்ன செய்து என்ன பயன்! உடைந்த மனத்துடன் "டாக்டர்! இந்த செய்கையும் தங்களுடைய விபரீதபுத்தியும் என்றும் ஞாபகமிருக்கட்டும். இன்று கடின சித்தமுடைய இதே இதயம் ஒரு காலத்தில் இளகி உருகும். கண்ணீர் வடியும்; நெஞ்சம் பதறும். நினைவிருக்கட்டும்" என்று கூறிக்கொண்டே போய்விட்டாள். 'புசல் காற்றில் அகப்பட்ட துரும்பு' போல் ரமாவின் இதயம் தத்தளித்தது.

15

முறிந்த மனமும் திரிந்த பாலும்

சன்யாசியாய் காஷாயந்தரித்திருப்பினும் உலக விஷயமறியும் பொருட்டு ஹரிதாஸர் பத்திரிகைகளைப் படிக்காதிருப்பதில்லை. ரமா, தன் பிதாவைப் பார்க்கவேண்டுமென்று பலமுறை பிரயத்தனம் செய்தும் ஹரிதாஸர் ஒரே பிடிவாதமாக பார்க்க வரவேண்டாமென்று சொல்லியனுப்பி விட்டதால் அதுவும் ரமாவுக்குப் பின்னும் விசனத்தைக் கொடுத்தது.

ஹரிதாஸர் ஒரு தினம் பத்திரிகை படிக்கையில் அதில் பின்வரும் விஷயம் வெளியாகியிருந்தது.

"எனது அன்பர்களுக்கு பிரத்யேக வேண்டுகோள்.

எனது தேக நிலைமை மிகவும் கேவலமாயிருப்பதால் நான் என் தொழிலை நடத்த முடியாத நிலைமையிலிருக்கிறேன். எனது நோயாளிகளெல்லோரும் இனி என் தலைவி ஸ்ரீமதி வஸந்தராதேவியிடமே பார்த்துக்கொள்ளும்படி வேண்டுகிறேன். அவர்களும் நல்லவர்கள். தயாளகுணமும், கைராசியும், புன்சிரிப்பும் நிறைந்தவர்கள். ஏழைகளுக்கு மனமிரங்கி உள்ளன்புடன் வைத்தியம் செய்யும் மதுரமான குணமுண்டயவர்கள்; ஆதலால் அவர்களிடம் போங்கள். தயவு செய்து என்னிடம் வரவேண்டாமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இங்ஙனம்,
டாக்டர். ரமாதேவி."

இதைப் படித்தவுடனே ஹரிதாஸரின் வயிற்றில் திக்கென்று கலக்கியது. "ரமா தொழிலை விட்டுவிடும்படி என்ன உடம்பு வந்துவிட்டது? ஐயோ! எல்லாவற்றையும் வெறுக்கத்துணிந்தாலும் இந்த பாசத்தை விலக்கமுடியவில்லையே! ஏன் அவள் தொழிலை நிறுத்தவேண்டும்?"...... என்று கூறத்திறமற்ற சங்கடமும் எண்ணங்களும் உண்டாயின. தான் சன்யாசம் வாங்கிக்கொண்ட விருதத்தைக் கூட மறந்து ரமாவைப் போய் பார்க்கலாமா என்றும் நினைத்தார்.

அடுத்தக்ஷணமே, "சீ! பாசத்திற்கு இடங்கொடுப்பது பாம்புக்குச் சலுகை காட்டுவதுபோலல்லவா ஆகும்? நான் யாரு அவள் யாரு? நான் வந்த வழிக்கு என் கர்மாவை முடிக்கிறேன், அவள் வந்த வழிக்கு அவள் கர்மாவைத் துலைக்கட்டும். பற்றுவது; பாசமாவது? யாருக்கு யார் சம்பந்தம்? யாருக்கு யார் அந்திமகாலத்தில் துணைவரப் போகிறார்கள்.? அவர

வர்கள் செய்த பாபமும் புண்ணியமுந்தான் கூட வருமேயன்றி மற்ற எதுவும் வரா.

நெஞ்சே! கலங்காதே; உனக்கு நித்திய பதவியைக் கொடுத்து பாதகத்தைத் தகித்து உன்னைக் காக்கும் கடவுளின் திருவடியில் இந்த பாசத்தைச் செலுத்து. வெறும் மனிதர்களிடம் வைக்கும் அன்பை அந்த பரந்தாமனிடம் செலுத்தி உன் பிறவிப்பிணியைத் துலைத்துக்கொள். இன்னும் சேற்றில் அழுந்த விரும்பாதே,

உண்மையான கயிற்றைப் பிடித்துக்கொண்டால் அக்கரைக்குச் செல்லலாமேயன்றி கயிற்றைப்போல் மயக்கும் பாம்பைப் பிடித்துக் கொண்டால் அது உன்னை ஒழித்து விடும், பதருதே! அக்ஞானக் குப்பையில் விழ ஆசை வைக்காதே!'' என்று தனக்குள் தான் வெகு வைராக்யத்துடன் கூறி மனத்தை திடப்படுத்திக்கொண்டார்.

அதே பத்திரிகையை தேவராஜனின் அண்ணன் முதலியவர்கள் படித்ததும் தம்முடைய உபதேசமும் முயற்சியும் பலித்துவிட்டதை யறிந்து பரம சந்தோஷமும் பேராச்சர்யமும் அடைந்து, உடனே பாராட்டுக் கடிதங்கள் தேவராஜனுக்கு எழுதினார்கள்.

அதே பத்திரிகையை தேவராஜன் தற்செயலாய்ப் பிரித்துப் பார்க்கும் போது அவனுக்கு உண்டாகிய ஆச்சரியத்திற்கு எல்லையே இல்லை. இம் மாதிரி ஒரு விளம்பரம் பத்திரிகைக்குத் தானே எழுதி அனுப்ப எண்ணியிருக்கையில் அதுவே வந்துவிட்டதென்ருல் ஒன்றுமே தோன்ருது சில விநாடிகள் பிரமித்தான். 'ரமாவின் மனம் எவ்வளவு வைராக்கியமுற்றிருந்தால் அவளே இத்தகைய விளம்பரத்தைப் போட்டிருப்பாள்?' என்ற உணர்ச்சி அவன் மனத்தில் உதிக்காமல், தான் சரியானபடி அதிகாரம் செய்ததில் தனக்குப் பயந்து அடங்கி ஒடுங்கி உலகத்துப்பெண்களைப் போலானுளென்ற எண்ணமே உண்டாகி தனக்குள் ஒரு வீராப்புச் சிரிப்பு சிரித்த சமயம் நாகராஜன் பத்திரிகையும் கையுமாக வந்து, "தேவா! விஷயத்தைப் பார்த்தாயா! ஏது! இத்தனை புத்தி திருந்திவிட்டது?'' என்ருன். தேவராஜனும் இறுமாப்புடன் பார்த்தபடியே, "உம்... இரும்பானாலும் ஒலகடத்தில்தானே அடிபட்டு வளையவேண்டும்? அதேபோல் என் திட்டத்தில் ஏன் படியாது போகும்!'' என்று பெருமை வேறு கூறிக்கொண்டான்.

ரமாவே பத்திரிகையில் வந்துள்ள விஷயத்தைப்படிக்கும்போது வயிறெரிந்தது. உயிர் துடித்தது. விக்கி விக்கிச் சிறிய குழந்தைபோல் அழுதாள், ஒரே பத்திரிகையின் விஷயம் யார் யாருக்கு எப்படி இருந்தது, எத்தகைய உணர்ச்சிகளைக் கொடுத்தது பாருங்கள். இதுதான் உலக விசித்திரம்,

பத்திரிகையில் இச் செய்தி வருவதற்கு முன்பே ரமாதேவியைத் தேடிக்கொண்டுவரும் ஜனங்கள் கணக்கு வழக்கில்லை. 'ஒருவரையும் பார்க்க முடியாது' என்று தேவராஜனே ஒரு ஆளை வைத்துச் சொல்லிவந்தான். பத்திரிகையில் இச் செய்தி வந்தபிறகு ரமாவைப் பார்க்கவரும் ஜனங்கள் கணக்கு வழக்கிடமுடியாது. அவர்களை உள்ளே விடமுடி

யாது என்று சொல்வதற்கு தேவராஜனுக்கே தாக்ஷிண்யமாயிருந்ததென்ருல் பிறகு என்ன செய்வது !

ஜெமீந்தாரிணிகளும், செல்வச்சீமாட்டிகளும், கோஷா ஸ்திரீகளும் உண்மையில் ரமாவுக்கு ஏதோ உடம்புக்கு வந்துவிட்டதாகவே எண்ணி அனுதாபத்துடன், கண்ணீர்வழியப் பார்க்கவந்தவர்களை விரட்டினுல் தன் பெயர் கெட்டுவிடுமே என்றும், பெரிய மனிதர்களுக்கு மனத்தில் வித்தியாசம் உண்டானல் அதனல் வீண் வார்த்தைகள் பிறக்குமே யென்றும் ஒரு சிறிது தோன்றியதால் பேசாமல் அவர்களை உள்ளே அனுமதித்தான்.

அதற்குத் தகுந்தாற்போல் ரமாவைப் படுத்திருக்கும்படிச் சொல்வதற்காக உள்ளே வந்தான். ரமாவே சமையல் செய்துகொண்டிருப்பதைப் பார்த்து மிகவும் வியப்பாகிவிட்டது. ரமாவின் கண்கள் கோவைப்பழம் போல் சிவந்து ஜலம் பெருகிக்கொண்டேயிருந்தன.

அன்று நாகராஜனுக்குமுன்பு ரமாவை அவமதித்துப் பேசிக் கழுத்தைப்பிடித்துத் தள்ளிய பிறகு இதுவரையில் ரமாவிடம் அவன் பேசவேயில்லை. நாகராஜனுடன் அலைவதும், ஜோஸியனிடம் ஓயாது ஜோஸியம் கேட்பதும், ஓட்டலில் தின்பதும் அர்த்தராத்திரியில் வீட்டிற்கு வருவதுமாக விருப்பதால் நேரில் பார்த்துப் பேசவேயில்லை.

அன்றுமுதல் ரமாவே சமையல் செய்வது, துணி துவைப்பது, குழந்தைகளுக்கான சகல காரியங்களையும் தானே செய்வது, கணவன் சாப்பாட்டுக்கு வருவானே என்று காத்திருந்து ஏமாறுவது, தான் முக்கால்வாசி நேரம் பட்டினியே கிடந்து உருகுவது, எஞ்சிய நேரத்தில் பகவத்கீதையையும் திருக்குறளையும் தவருது படிப்பது. அம்மாதிரி தன் பொழுதிற்கு ஒரு திட்டத்தைத் தானே வகுத்துக் கொண்டாள்.

எனினும் மனது துடிக்கும் துடிப்பை அவளால் அடக்கவே முடியவில்லை. எந்நேரமும் பெருமூச்சும், கண்ணீர் வழிவதும், ஆயாஸமும் குடிகொண்டன. அத்தகைய நிலைமையில் கண்ணீர்வழிய உரலில் மிளகாய்த்தூள் இடித்துக்கொண்டிருக்கையில் தேவராஜன் அங்குவந்து தயங்கி நின்ருன். பிறகு தொண்டையைக் கனைத்தான். அதைக்கேட்ட ரமா உலக்கையை வைத்துவிட்டு எழுந்து நின்ருள்; ஆனல் வாய் பேச முடியாது அடைத்துக்கொண்டது. தலை குனிந்து நின்ருள்.

தேவ:—உன் பேட்டிக்காக யார் யாரோ வந்திருக்கிருர்கள். உன்னறையில்போய் படுத்துக்கொள். கணவன் வார்த்தையைத் தட்டாதிருக்கும் விரதமனுஷ்டிப்பவளாயின் அதற்குத் தக்கபடி நடந்துகொள்—என்று கூறிப்போய்விட்டான்.

ரமாவுக்கோ, போவதற்குப் பிடிக்கவில்லை. 'வந்திருப்பவர்கள் யாரோ என்னமோ !' என்கிற எண்ணமும் கூடவே உண்டாகியது. கையை யலம்பிக்கொண்டு தன்னறைக்குப்போனுள். இவளை முன் பார்த்தவர்கள் இப்போது பார்த்தால் கட்டாயம் ஏதோ பலமான நோய்வாய்ப்பட்டிருப்பதாக நினைக்கத் தயங்கவே மாட்டார்கள்.

ரமா உள்ளே வந்ததும் ஏதோ முடுக்கிவிட்ட மெஷின்போல் ஈஸிசேரில் சாய்ந்தாள். அடுத்த நிமிடமே பெரிய மனிதர்களின் வீட்டுச் சீமாட்டிகளெல்லாம் ஒருவர்பின் ஒருவராக வந்து, ரமாவின் நிலைமையைக்

கண்டு உண்மையில் மனமுருகிப்போய், "டாக்டர்! என்ன உடம்பு? இப்படி அடையாளமே தெரியாமல் உருமாறிப் போய்விட்டீர்களே! பார்க்கவே முடியவில்லையே! கண் ஏன் இவ்வளவு சிவந்திருக்கிறது! யார் வைத்தியம்? இனி எத்தனைபேர்தான் வைத்தியம் செய்தாலும் உங்களைப்போல் கலியுக தன்வந்திரியாய் எங்களுக்கு யாரும் அமையமாட்டார்கள்" என்று தங்கள் மனத்திலிருப்பவைகளைக் கூறினார்கள்.

ரமாவுக்கு துக்கம் பொங்கிப் பொங்கி வருகிறது. 'இவர்கள் என்ன பேசிவிடுவார்களோ!" என்கிற சந்தேகத்தினால் தேவராஜன் வெகு சகஜ பாவத்துடனிருப்பவன்போல் நடித்து சட்டைப்பையில் கையை வைத்துக் கொண்டு அவ்வறையின் வெளியே நின்றிருந்தான்.

வந்தவர்கள் ஆரஞ்சு, சாத்துக்குடி, ஆபில், காபூல், மாதுளை, பம்பாய் திராக்ஷை முதலிய பழவகைகள் கூடை கூடையாயும் தட்டுதட்டாயும் நிரப்பிவிட்டார்கள். ரமாவுக்கு பேசக்கூடத் தொண்டை எழாததால் சற்று மௌனமாகவிருந்துப் பின் பேசத்தொடங்கி, "உங்களுடைய அன்பிற்கு மிகவும் வந்தனம் செலுத்துகிறேன். என்னால் பேசவேமுடியவில்லை. கண்களில் ஏதோ கெடுதல் இருக்கிறது. அதனால் சிவந்து கண்ணீர் வழிகிறது. சதா மார்வலி எழுந்திருக்கக்கூடவில்லை. நீங்கள் அதைர்யப்படாதீர்கள். பகவான் எல்லோரையும் காப்பாற்றக் காத்திருக்கிறான். நீங்கள் பயப்படவேண்டாம். சந்தோஷமாக விருங்கள். எனக்கு என் கணவரே வைத்தியம் செய்கிறார்; அதுவே போதும். என்னால் அதிகம் பேசமுடியவில்லை. மாரை வலிக்கிறது நான் படுத்துக் கொள்ளப்போகிறேன்" என்று தளுக்காகக்கூறிப் படுத்துக்கொண்டாள்,

அவளோ பெரிய டாக்டர். அதிகம் பேசக்கூடிய நிலைமையில் இல்லாததால் எல்லோரும், "உடம்பை ஜாக்ரதையாகப் பார்த்துக்கொள்ளுங்கள்" என்று கூறிவிட்டுச் சென்றார்கள்.

ரமா பேசியதும் நடந்துகொண்டமாதிரியும் தேவராஜன் இதயத்தில் ஒரு க்ஷணநேரம் பிரமிப்பையும் திகைப்பையுங் கொடுத்தன. "என்ன தந்திரமாய்ப் பேசியிருக்கிறாள்?" என்று நினைக்கும்போது வியப்பு தாங்க முடியவில்லை. 'ரமா!' என்று வாய்விட்டுக் கூறியவாறு உள்ளே போக முயன்ற சமயம் நாகராஜன், "என்னடா விசேஷம்! கூட்டம் ஏராளமாய் இறங்கிப் போகிறார்களே! ஏதாவது கல்யாணமா என்ன?" என்று கேட்டபடியே அங்கு வைத்துள்ள பழங்களைப் பார்த்து அந்தப்பக்கம் திரும்பினான். வயிறுகொண்டமட்டும் தள்ளினான். ஜேபி கொண்டமட்டும் நிரப்பினான். "தேவா! சாமியாருக்குக் கொண்டு கொடுக்கலாம் வாடா!" என்று கூடையில் எல்லாவற்றையும் வைத்துத் தூக்கிக்கொண்டு தேவராஜனையும் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு போனான். பெருமாள் மாடுபோல் தலையை ஆட்டும் சுபாவமுடைய தேவராஜன் அவன் பின்னாலேயே சென்றானேயன்றித் தன் குழந்தைகளுக்கு ஒரு பழமாவது மிச்சம் வைத்துக்கொள்ள அவன் கடின இதயத்தில் தோன்றவில்லை.

ரமாவே ஆச்சரியப்படும்படி வஸுந்தராதேவி அங்கு வந்தாள். அவளைப் பார்த்ததும் ரமா, பாத்திரம் துலக்குவதை விட்டுவிட்டு வந்து

தன்னால் அடக்கமுடியாது கோவெனக் கதறிவிட்டாள். வஸுந்தராவுக்கும் துக்கம் பீறிக்கொண்டு வந்தது.

பிறகு சற்று சமாளித்துக்கொண்டு, "ரமா! இதென்ன பரிபவம்? அன்று நீ வந்தபிறகு உன்னை வந்து பார்க்க என் மனம் துடித்தது. ஆனால் உன் கணவன் இருக்கும்போது வருவதற்கு எனக்குப் பிடிக்க வில்லை. பத்திரிகையில் விஷயத்தைப் பார்த்த உடனே என் மனது பொறுக்கவேயில்லை. இன்று உன் புருஷர் சினிமா கொட்டகைக்குள் சென்றதைப் பார்த்தேன். அதனால் நேரே இங்குவந்தேன். இதென்ன கோலம்! உன் உடம்பு எப்படித்தான் இளைத்துப்போயிருக்கிறது. கண்ருவியைச் சகிக்கமுடியவில்லையே! ரமா! ஏன் இந்த மனமாற்றம்? உன் படிப்பென்ன! உன் தொழிலின் மேன்மை என்ன! அதில் நீ அடைந்துள்ள புகழென்ன! எல்லாவற்றையும் இப்படியா துறந்துவிடுவது?......

ரமாவினால் துக்கம் சகிக்கமுடியாது போயிற்று. அழுது அழுது சற்று தெளிவு பெற்றவளாய், "டாக்டர்! உங்களுக்கு நான் சொல்ல வேண்டியது ஒன்றுமில்லை. எல்லாம் தெரிந்திருக்கிறது. என் கதி இவ்வளவுதான்! நான் பண்ணிய புண்ணியம் இவ்வளவுதான்... ஏன்! அவர் சொன்னால் சொல்லிவிட்டுப் போகட்டுமே! நீ இதற்காக இத்தகைய மேன்மையான தொழிலை விட்டுவிடலாமா?" என்று கேட்பீர்கள். டாக்டர்! நான் உங்களைவிட அறிவிலும் வயதிலும் எத்தனையோ சிறியவள்; அனுபவமே இல்லாதவள். உலகத்திலுள்ள எந்த தொழிலுக்கும் மனத்தில் கவலையோ பயமோ இருக்குமாயின் அத்தொழிலில் அபஜெயம் ஏற்படுவது நிச்சயம். உலகத்தில் வெகு சாமானியமானதும் சகலராலும் கையாளக் கூடியதுமான சமையல் வேலையில்கூட மனது சரியாயில்லாவிட்டால் 'உப்பு போட்டோமோ? புளி போட்டோமோ! காரம் போட்டோமோ!' என்பது மறந்து ஒன்றுக்கொன்று முரணாகி அதிகமாயும், குறைவாயும், பதம் தவறிவிழுவதை உலகானுபவமாய்க் காண்கிறோம்.

மேற்சொல்லிய வேலையில் அத்தகைய கோளாறுகள் உண்டானால் சாப்பிடுகிறவர்களுக்கு சற்று கஷ்டமும் சாமான்களின் நஷ்டமும் தவிர வேறு ஒன்றுமில்லை. டாக்டர்! நம் தொழிலில் அம்மாதிரி உண்டா! ஒன்றுக்கொன்று ஏதேனும் மாறுதல் உண்டாகிவிட்டால் உயிருக்கல்லவா ஆபத்தாக முடியும்? இதுகாறும் எடுத்த நற்பெயருக்கு நானாக ஏன் இழிவு தேடிக்கொள்ளவேண்டும்? நீங்களே சொல்லுங்கள்.

தொழில் முறையிலும் கெட்டபெயர்; கணவனுக்கும் விரோதம். அவருடைய பகையினால் ஊரெல்லாம் வீண் வம்புக்கும் பழிக்கும் ஆளாகி சகலவிதத்திலும் நாசமாவதில் என்ன உபயோகம்? ஆதியில் அவர் இருந்த இருப்பென்ன! என்னுடைய தொழிலில் அவர் காட்டிய ஆர்வமும் அன்பும் பெருமையுமென்ன! இப்பொழுது எல்லாம் தலைகீழ்ப் பாடமாகக் கவிழ்ந்து விட்ட விபரீதமென்ன?...

டாக்டர்! ஆதிகாலத்து நிகழ்ச்சிகளையும், தற்காலத்து என் கதியையும் நினைத்தால் நான் இனி தொழிலில் இறங்கி வெற்றி பெறமுடியுமா என்பதை நீங்களே யோசனை செய்யுங்கள். அம்மாதிரி அபஜெயங்களும், கெட்ட பெயர்களும் வாங்கிப் பிழைப்பதைவிட இதுவே மேலென்று என்

மனச்சாட்சி கூறியது. அதன்படியே நடக்கச் சபதமும் செய்துகொண்டேன்...

வஸு:—ரமா! கேட்கக் கேட்க என் மனது கலங்குகிறது. கவர்ன்மெண்டு ஜாபிதாவில் உன் பெயர் வந்திருக்கும் விஷயத்தை, ரகஸியமாகத் தெரிந்திருக்கும்போதே நாங்கள் அடைந்த ஆனந்தத்திற்கு எல்லை இல்லை. பகிரங்கமாக வருவதற்குள் நீ பத்திரிகையில் இத்தகைய நோட்டீஸைப் போட்டுவிட்டாயே என்றுதான் எங்களுக்குக் கவலையாயிருக்கிறது. நீ எல்லாந்தெரிந்து சட்டதிட்டமாகப் பேசும்போது நான் என்னதான் பதில் சொல்வேன்?

ரமா:—டாக்டர்! என்னை மன்னிக்கவேண்டும்! எனக்கு இனி எந்தப் பிரயாணமும் பட்டமும் வேண்டாம். நான் எங்குபோகவும் விரும்பவில்லை. என் தாயார் விரும்பியதும் அவர்கள் மனத்தில் கோட்டைகட்டி எதிர்பார்த்ததுமான ஆசையையே நான் நிறைவேற்றாத பாவியாகிவிட்டேன். என்னுடைய போதாக்காலத்தின் பலன்தான் என் நிலைமை இத்தகைய மாறுதலுடன் அமைந்தது. இம்மட்டுடன் கடவுள் என் காலத்தைக் குறுக்கி தன்னடி சேர்த்துக்கொண்டால் போதும். டாக்டர்! என்னுடைய கஷ்டத்தைக்கூடச் சகித்துக்கொள்ளலாம்போலிருக்கிறது. என் கணவருடைய துர்ச்சகவாஸத்தின் விபரீதங்களை என்னால் பொறுக்கவே முடியவில்லை. ஸிகரெட் பிடிப்பதும் குடிப்பதும் பழகிவிட்டார். இவ்விரண்டுக்கு அனுகூலமான மற்றைய துர்க்ருத்யங்களும் கூடவே உதயமாகிவிட்டன போலத்தான் தோன்றுகின்றது. என்ன செய்வேன்!...

வஸு:—ரமா! கோபிக்காதே! அந்த துஷ்டன் நாகராஜனுடன் சேர்ந்த யாரும் உருப்படவேயில்லை. அவன் வீட்டில் அவனுடைய விதவைத் தங்கை சிறியவளாக ஒருத்தி இருக்கிறாள். அவளும் உன் கணவனும் ஒன்றாகக் காரில் போகும்போது நானே கண்ணாரக் கண்டேன். ஆத்மநாதனும் பார்த்தாராம்... இத்தகைய கொடிய ஆபத்திலிருந்து எப்படி தப்புவிப்பது என்று நாங்களும் யோசித்துக்கொண்டுதான் வருகிறோம்.

ரமா:—(கண்ணீர் பெருக) டாக்டர்! நான் இதே விஷயத்தை சென்ற சில தினங்களாக சந்தேகித்து வருகிறேன். இரவு ஒரு மணி, இரண்டு மணி இப்படி வந்து படுக்கிறார். சில தினங்கள் காலையில்தான் வருகிறார். நான் ஒரு பூச்சிக்குச் சமானமாயிருக்கையில் எப்படிக் கேட்பது?...என் தலைவிதியை எண்ணிப் பேசாதிருக்கிறேன், இந்த இரண்டு குழந்தைகள் இல்லாதிருந்தால் கட்டாயம் நான் தற்கொலையே செய்துகொண்டிருப்பேன் அவைகளின் பரிதாபம் என்னை இப்படிக் குழப்புகிறது. பெத்த தாய் என்றோ மறைந்தாள் எனினும் எனது பிதாவின் முகத்தைக் காணும்போது தாயிக்குத் தாயாகக் காட்சி கொடுப்பதுபோன்ற ஆறுதலை அடைந்தேன். என் துர்ப்பாக்கியம் அதுவும் போயிற்று.

வஸு:—நீ ஏன் போய் பார்க்கக்கூடாது?

ரமா:—வீண் ஆசை எதற்கு? இப்பொழும் மாயா உலக பந்தத்தை வெறுத்து அவர் உத்தமமான சன்யாசம் பெற்ற பிறகு இனி நான் யாரு, அவர் யாரு?...அந்த சன்யாசி ஆச்ரமத்தின் தர்மத்திற்கு விரோதமாய் நான் போய் பார்ப்பதால் என்ன லாபம்? வைராக்யபடியில் காலைவைத்

துள்ள அவர் மனத்தை மீண்டும் சறுக்கச் செய்வதுதான் மிச்சமாகும். அவரவர் வரையில் அவரவர் தம்தம் கர்மாவை ஒழித்து நற்காரியங்களைச் செய்து லோக ரக்ஷகனின் பாதபத்மங்களில் சேரவேண்டியதுதான் சரியான மார்க்கம். என்னைப் பார்த்தால் அவருடைய உறுதி குறைவதோடு வீண் சங்கடந்தான் ஏற்படும், அதற்காகவே அவர் வரவேண்டாமென்று சொல்லி அனுப்பிவிட்டார். அவர் மனத்திற்கு விரோதமாய் போக நானும் விரும்பவில்லை.

வஸு:—அடடா! மணி 7 அடிக்கப்போகிறது. 7 மணிக்கு ஒரு நோயாளியைப் பார்க்கவேண்டும். நான் வரட்டுமா! இப்படியே அடைப்பட்டுக் கிடந்தால் மூளைதான் கலங்கிவிடும், எங்காவது வெளியில் போக ஏற்பாடு செய்.

ரமா:—டாக்டர்! நான் எனது மனப்பூர்வமாகச் சொல்லுகிறேன் மூளை கலங்கிவிட்டாலும் இந்த கவலைகள் தெரியாது ஒரே நிம்மதியாயிருக்கலாம். அதுவுமின்றி இதுவுமின்றி இரண்டாங்கெட்டான் வாழ்க்கை எனது நரக வேதனையாயிருக்கிறது. தினம் என்னைக் காண வரும் கூட்டமோ எண்ண முடியாது. நான் வெளியில் உலாவப் போனால் என்னை அறிந்தவர்கள் என்னை விடுவார்களா! அதோடு எனக்குத்தான் மனது சந்துஷ்டியாகவிருக்கிறதா! வெட்கமாகக் கூடவிருக்கிறது. நான் ஏதோ அண்டறியாத பாதகத்தைச் செய்திருப்பேன். அதனால்தான் பகவான் எனக்கு இந்த தண்டனையைக் கொடுத்திருக்கிறார். இருக்கட்டும். உயிர் உள்ளவரையில்தானே இந்த கஷ்டங்கள், உணர்ச்சிகள்? அவற்றை அனுபவிக்கமுடியாது என்றால் விடுமா! உங்களுக்கு நேரமாகிறது. நீங்கள் போய் நோயாளிகளைப் பாருங்கள்—என்றாள்.

அதற்குமேல் நேரமில்லாததால் கண்ணீர் பெருக எழுந்து சென்றாள். ரமா குழந்தைகளுக்குச் சாப்பாடு போட்டுத் தூங்க வைத்துப் பின் பேசாமல் படுத்துக்கிடந்தாள். மணி ஜன்னி ஏறுவதுபோல் ஏறுகிறது. கடியாரத்தைப் பார்க்கும்போது ரமாவின் மனம் சோர்ந்தது. "மனிதனின் புத்தித்திறத்தால் மனிதனாலேயே செய்யப்பட்ட யந்திரமாகவிருப்பினும் நீ சளைக்காது. உன் கடமைகளைச் செய்து உனக்கிட்டிருக்கும் கட்டளையின்படி மணியைக் காட்டிக்கொண்டே செல்கிறாய்; நான் ஆறறிவு படைத்த மானிட ஜென்மத்தை எடுத்தும் கூண்டிலடைபட்டக் கிள்ளைபோல் பறக்கவும் மாட்டாது, மனச்சாந்தியுமற்று உட்கார்ந்திருக்கிறேன். நீ என்னைவிட மேலல்லவா?" என்று பயித்தியம்போல் கடியாரத்தை நோக்கிக் கூறினாள். பின்னும் சற்று நேரத்திற்கெல்லாம் டாங் டாங் என்று இரண்டடித்த ஓசையைக் கேட்டு ரமாவின் மனம் துணுக்குற்றது. திகில் ஒரு புறம் வாட்டியது. அத்தனை பெரிய பாழும்வீடு போன்ற பங்களாவில் இவளும் இரண்டு குழந்தைகளும் தனியாய் படுத்திருப்பதென்றால் எப்படித்தானிருக்கும்? வேலைக்காரன் எங்கேயோ கேட்டருகில் இருந்தது அவளுக்குத் தைரியமாகவே தோன்றவில்லை. மனது திக்குதிக்கென்று நடுங்கியது.

16

ப்ரதிக்ஞை முக்கியமா! பரோபகாரம் முக்கியமா!

"அம்மா! அம்மா! இதோ இக் கடிதத்தை யாரோ ஒரு சேவகன் கொண்டுவந்திருக்கிறான். உன் கையெழுத்து வேணுமாம். வாம்மா" என்று குழந்தை ப்ரேமா, ரமாவின் கையைப்பிடித்து இழுத்தாள். ரமா கவரைப் பார்த்தவுடனே அது கவர்மெண்டு கவர் என்று தெரிந்ததும் திடுக்கிட்டாள். தான் அன்று சபதம் செய்ததற்குப் பிறகு இதுவரையில் கையெழுத்துக்கூடப் போடவில்லையாதலால் அவள் மனம் தத்தளித்தது. "எனக்கு கவர்மெண்டிலிருந்து என்ன வந்திருக்கும்? இதைப் பிரித்துப் பார்த்தால்கூட அவர் சந்தேகப்படுவார். வீண் தொல்லை எதற்கு?... ப்ரேமா! இதை அப்பாவிடமே கொடுத்து அவரையே கையெழுத்து போடச் சொல்லு" என்று கூறி அனுப்பினாள். ஒரு காலத்தில் சந்தோஷப் பதுமை போன்றும் ஆனந்ததேவதையைப் போன்றுமிருந்த அதே ரமா இன்று சோகப்பதுமை போலும், விரக்திபிம்பம்போலும் காணப்படுவதை சிறு குழந்தை எப்படி அறியும்?

கடிதத்துடன் தகப்பனாரிடம் ஓடி, "அப்பா! இதை யாரோ சேவகன் கொண்டுவந்திருக்கிறான். கையெழுத்துப்போடவேணுமாம்" என்று கூறி கடிதத்தைக் கொடுத்தாள்.

தேவராஜன் ஆச்சரியத்துடன் கவரைப் பார்த்தான். "டாக்டர் ஸ்ரீமதி ரமாதேவிக்கு" என்ற விலாசமிட்டு கவர்மெண்டிலிருந்து வந்திருப்பதைப் பார்த்ததும் ஒரு பக்கம் வியப்பும் ஒரு பக்கம் வயிற்றெரிச்சலும் பொங்கி எழுந்தன. "ரமாதேவி!....அடேயப்பா! என்னடா தேவிக்கு வந்திருக்கிறது?" என்று நாகராஜன் கேட்டபடியே கடிதத்தை அவனிடமிருந்து பிடுங்கிப் பார்த்தான்.

"ஸ்ரீமதி ரமாதேவிக்கு!

உங்களுடைய வைத்தியத் திறமையை நாங்கள் தக்க பெரிய மனிதர்களின்மூலம் ஆதாரத்துடன் கேள்விப்பட்டுப் பரம சந்தோஷமடைந்தோம். நாங்கள் கவர்ன்மெண்டின் செலவில் வெளிநாட்டிற்கு அனுப்பி ப்ரத்யேக முறையில் தயார் செய்வதற்குத்தகுந்த நிபுணர்களைப் பொறுக்குவதில் உங்களையும் தேர்ந்தெடுத்திருக்கிறோம். நீங்கள் ஸ்திரீகளுக்குச் சம்பந்தப்பட்ட வியாதிகளைப்பற்றி ப்ரத்யேகமாகப் படித்து ஆராய்ச்சி செய்து மருந்துகளைக் கண்டுபிடிக்கவேண்டும். இதற்கு நீங்கள் ஒப்புக்கொண்டு உங்கள் சம்மதத்தைத் தெரிவிக்கவேண்டுகிறோம்."

என்று எழுதியிருந்ததைப் படித்ததும் மிளகாயை அறைத்துப் பூசியதுபோல் நாகராஜன் உடம்பே எரிந்தது. முகத்தில் க்ரூரமும் கொள்ளித்தனமும் கூத்தாடின. கடிதத்தை தேவராஜனிடமே வீசி யெறிந்தான்.

தேவராஜன் இதற்குள் கையெழுத்துப் போட்டுவிட்டு வந்து, "என்ன ராஜயோகம்! அவளுக்கு கவர்ன்மெண்டே தானாக முன்வந்து சகல சவுகரி

யங்களும் கொடுத்து மேல் படிப்புக்கு அனுப்புவதாமே! இதற்கு அவள் என்ன பதில் சொல்கிருளோ பார்க்கலாம்.'' என்று எண்ணும்போது சாமியார் வந்துசேர்ந்தார்.

'நான் வெகு கவனத்துடன் கணக்குபோட்டு ஊன்றிக் கவனித்துப் பார்த்தேன். உங்களுக்குக் கட்டாயம் புகழும் நல்ல சம்பாதனையும் உண்டாகப்போகிறது என்பதற்குச் சந்தேகமே இல்லை. ஆனால் ஒரு சின்ன விஷயம். அதை சின்னதென்று விட்டுவிட்டால் சிறிய நெருப்பே பெரிய தீயாவதுபோல் ஆகிவிடும். அந்த விஷயத்தில் இன்னும் ஆராய்ச்சி செய்து கொண்டிருக்கிறேன். நாளையதினம் தீர்மானமாய்க் கூறுகிறேன். அவசர ஜோலியாய் ஒரு கல்யாணத்திற்குப் போகவேண்டும். ஏதாவது கொஞ்சம்... என்று இழுப்பதற்குள்ளே தேவராஜன் மணிபர்ஸிலிருந்து நாகராஜன் ஒரு பத்து ரூபாய் நோட்டைத் தானே எடுத்துக் கொடுத்தான்.

ஸ்வாமிகளும் அதை வாங்கிக்கொண்டு ''சரி! நான் வருகிறேன். நீ இக்கடித விஷயத்தில் ஜாக்ரதையாய் நடந்துகொள்ளு'' என்று உபதேசம் செய்துவிட்டுச் சென்ருர். தேவராஜன் கடிதத்துடன் கீழே இறங்கி ரமா இருக்குமிடத்திற்கு வந்தான்.

ரமா குழந்தைகளின் துணிகளையும் கணவன் துணிகளையும் மடித்து இஸ்திரி செய்துகொண்டிருந்தாள். தேவராஜன் குத்தலாக நகைத்துக் கொண்டே, ''ஓகோ! க்ருகதர்ம கைங்கர்யங்கள் தடபுடலாக நடக்கிருப் போலிருக்கு! சரி! இதோ நம்முடைய காருண்ய கவர்ன்மெண்டு ஸ்ரீமதி ரமாதேவிக்குக் கடிதமெழுதியிருக்கிருர்கள். இதற்குப் பதில் வெகு அவசரமாகத் தேவையாம். இதைப் படித்துப் பார்த்து உடனே எழுதி அனுப்பு'' என்று கூறி கடிதத்தை ரமாவின் முன்பு வீசி எறிந்தான்.

ரமாவுக்குக் கடிதத்தைப் பார்க்கவோ, பேசவோ ஒன்றுமே பிடிக்கவில்லை. அனேகமாக இது வஸுந்தராதேவி சொல்லிய விஷயமாகத் தானிருக்கும் என்று அவளுக்குத் தோன்றியது. ஆதலால் கடிதத்தைத் தொட்டுக்கூட பார்க்காமல் தலை குனிந்தபடியே, ''நான் பார்க்கவேண்டிய அவசியமே இல்லை. இதற்குத் தாங்களே பதில் எழுதிவிடலாம்'' என்று தாழ்ந்த குரலில் கூறினள்.

தேவ:—அடேயப்பா! உங்க அப்பாவின் காஷாய வைராக்யத்திற்கு மேல் வைராக்யமாயிருக்கிருப்போலிருக்கிறதே! உன் ஆக்ஞைப்படி எழுத நான் தயாராயில்லை. நீயே படித்து என் அபிப்ராயத்தை உன் கையாலேயே எழுதித்தரவேண்டும். உம் ஆகட்டும்— என்று அதட்டினன்.

தானும் மறுத்தால் வீண் ரஸாபாசமும், மனஸ்தாபமும், புதிய சண்டையும் உண்டாகுமென்று அவளுக்குத் தெரியுமாதலால் மறுப்பேச்சின்றி கடிதத்தை ஒரு முறை படித்தாள். ஒரு காகிதத்தில்,

''தங்களுடைய கடிதத்திற்கு அநேக வந்தனம். தயவுசெய்து மன்னிக்கவேண்டும். தற்போது நான் தங்கள் விருப்பப்படி ஒப்புக்கொள்ள முடியாமைக்கு வருந்துகிறேன். என் தேகசுகம் சரியாயில்லை என்பதைத் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.''

இங்ஙனம்
ரமா''

என்று எழுதி அவன் கையில் கொடுத்துவிட்டு உள்ளே போய்விட்டாள். கடிதத்தைப்பார்த்தவுடனே தேவராஜனுக்கு ஆச்சரியம் தாங்கமுடியவில்லை. அதைப்படித்துவிட்டு நிமிர்ந்தான். ரமாவைக் காணவில்லை. அவனையு மறியாது அவன் மனது திக்கென்று அலறியது. இம்மாதிரி ரமா எழுதிக்கொடுப்பாள் என்று அவன் நினைக்கவில்லை. இதற்காகக் குட்டிச் சண்டைகள், தகராறுகள் நடக்கும் என்று எதிர்பார்த்ததற்கு இம்மாதிரி நிகழ்ந்ததைக் கண்டு சில விநாடிகள் ஒன்றுமே தோன்றாது நின்றான்.

பிறகு உள்ளே எட்டிப்பார்த்தான். கண்ணீர் பெருகியவாறு ரமா முன்போலவே இஸ்திரி போட்டுக்கொண்டிருந்தாள். தேவராஜனுக்கு சடக்கென்று வாயெழவில்லை. ஒருநாடி ஊமைபோல் நின்றான். "இதை அனுப்பிவிடட்டுமா?" என்று கேட்டான். ரமா, தலையை அசைத்து, அனுப்பிவிடலாமென்று சமிக்ஞை செய்தாள்.

ஒரு சித்திரக்காரன் ரமாவை நோக்குவானேல் அவள் முகத்திலும் கண்களிலும் தேங்கிக் கிடக்கும் சோகத்தின் வேகத்தையும் சாந்தத்தின் ஆழத்தையும் உடனே தன் கைத்திறத்தினால் அழகுசொட்ட எழுதிவிடுவான். ஸ்திரபுத்தியற்று மூர்க்ககுணம் தலைசிறந்து விளங்கும் இந்த கர்விக்கு அவளுடைய உணர்ச்சிகள் என்ன தெரியும்?

கடிதத்துடன் மாடிக்கு ஓடினான். அதை அப்பொழுதே அனுப்பிவிட நினைத்துக் கவரும் எழுதிவைத்தான். ஆனால் தன் ஆப்த சிநேகிதன் நாகராஜனுக்குக் காட்டாமலா போஸ்டு செய்வது? அவன் வரட்டும் என்று அப்படியே வைத்தான்.

அன்று நாகராஜன் இவனைச் சாப்பாட்டிற்கு வழக்கம்போல் அழைத்துச் செல்ல வராததால் பசி அதிகமாய் எடுத்தது. தானாகவே உள்ளே சென்று இலையில் உட்கார்ந்தான், தினம் ரமா இலைபோட்டு வைத்துத் தயாராகக் காத்திருந்தும் உள்பக்கமே எட்டிப்பாராத மனிதன் அன்று வந்து உட்கார்ந்ததும் ரமாவுக்கு ஆச்சரியம் பொங்கியது. பேசாமடந்தையைப்போல் பரிமாறினாள்.

அன்று கத்தரிக்காய்கரி, டொமேட்டோ ரஸம், வெண்டக்காய் சாம்பார், கொத்தமல்லிக்கீரை துவையல் இவைதான் ரமா செய்திருந்தாள். தேவராஜன் தன்னையும் மறந்து சமையல் உள்ள அபாரமான ருசியில் உள்ளே தள்ளுவது தெரியாது கவளம் கவளமாக கொட்டைவிட்டும், சுப் புச் சுப் என்று ருசி பார்த்தும் தள்ளினான். மாடு தொட்டியில் உறிஞ்சுவதுபோல் ரஸத்தை வெகு ஸ்வாரஸ்யமாய் உரிஞ்சி உரிஞ்சி சாப்பிடுகையில் ரமாவுக்கு ஒருபுறம் பரிதாபமாயும், ஒருபுறம் துக்கமாயும் இருந்தது.

சாப்பிட்டதும் தெரியாது சாப்பிட்டு எழுந்தான். இருவரும் வாய்திறக்கவே இல்லை. தாம்பூலத்தட்டைத் தயாராக மேஜைமீது வைத்திருந்தாள். அதில் அழகாகக் கிழித்து மடித்து வைத்திருந்த வெத்திலையைப்போட்டு மென்றுகொண்டே போய்விட்டான். அவனுடைய வாய் மவுனவிருதத்தை அனுஷ்டித்ததேயன்றி இதயமும் நாக்கும் ரமாவின் சமயலைக்கொண்டாடி வியப்புற்று மகிழ்ந்தன.

தன் கணவன் இத்தனை ருசியுடன் சாப்பிட்ட ஆனந்தத்தில் ரமாவின் இதயம் சற்று இளைந்தது. தான் இப்படியே ஒரு குடும்ப நிர்வாகியாகவே

இருந்திருந்தால் ஆதிமுதல் தன் கணவனுக்கு இன்னமுதுசெய்து படைத்து இன்புறும் ஒரே தொழிலில் இருக்கலாமே!'' என்று நினைத்தாள். இதற்குள் குழந்தைகள் பள்ளிக்கூடத்திலிருந்து குதூகல கும்மாளத்துடன் வந்தார்கள். ராஜவடிவுடைய குழந்தைகளைப் பார்த்ததும் ரமாவின் கண்களில் ஆனந்தபாஷ்பம் ஊற்றெடுத்தது. என்றுமில்லாத ஒரு யோசனையும், எண்ணமும் தோன்றின. தன்னைத் தன் தாயார் எத்தனையோ உயர்வாக வளர்த்த முறையும், தற்போதுதான் இருக்கும் முறையும் சித்திரப் படம் போல் கண் முன்பு சுழன்றன.

''பெரியார்கள் அதிபால்யத்தில் விவாகத்தைச் செய்து விட்டால் தம் பதிகளிடம் ஒற்றுமையோ, அன்போ, இன்ப வாழ்க்கையோ உண்டாவதில்லை. காதல் மணம்தான் எல்லாவற்றையும்விடச் சிறந்தது'' என்று ஒரு சாரார் கூறுவதைமிகவும் உன்னதமானதென்றும் அதுதான் உண்மையான இன்ப வாழ்க்கையின் அஸ்திவாரமென்றும் நினைத்து ஒரு காலத்தில் பூரித்த என்னுள்ளம் இன்று எப்படி இருக்கிறது?என்னிதயத்தைத் திறந்து காட்டி என் பரிசுத்த அன்பு மலரால் அவரை அர்ச்சித்துப் பரிபூர்ண ப்ரேமையுடன்தானே இருவரும் மணந்தோம். அன்று இருந்த உத்ஸாகமென்ன! புதிய ஸ்வர்க்கத்தைக் கண்டதுபோன்ற பேரானந்தமடைந்ததென்ன! இன்று ஸ்வர்க்கம் வெறும் நரகம் போன்று இருண்டு பாழடைந்து தோன்றும் தோற்றமென்ன!...

காதலாவது, கத்திரிக்காயாவது? அவரவர் செய்த புண்ணிய பாவத்தீர்த்து ஏற்ற பலன்தான் நிர்தாமான இன்பமோ துன்பமோ கொடுத்து வாழ்க்கைக் கயிற்றைப் பிடித்து இழுத்துச் செல்லுகிறது. இதுதான் உண்மை. ஆண்டவன் சரியான விதியைப் போட்டிருந்தால் ஆயுள் முழுதும் இன்பமயமாகவேயிருக்கும். கோண எழுத்தைக் குறுக்கே எழுதியிருந்தால் இப்படித்தான் அனுபவிக்க நேரும். சிறிய பிராயத்து விவாகமானாலென்ன! பெரிய பிராயமானாலென்ன? விதி... விதி... தாம்தாம் செய்த விதி... என் கதி இருக்கட்டும். இந்தக் குழந்தையின் தலையெழுத்து எப்படியோ, இதற்கு எத்தகைய கணவன் வாய்ப்பானோ!

பத்தரைமாற்றுத் தங்கமென்று நினைத்திருந்த என் கணவரே இரும்பாக மாறியபோது இனி உலகத்தில் எதைத்தான் நம்பமுடியும்?...உம்... அதன் தலையில் என்ன எழுதியிருக்கிறானோ! யார் கண்டது?...என் தாயார் என்னிடம் எதிர்பார்த்து வாரிக்கொண்ட லாபம் போதும்... இனி இப்போது முதல் இந்த வீண் கவலை எதற்கு? விதியின் வலிமைக்குமுன் எதுதான் என்ன செய்யும்?'' என்ற வேதாந்தம் தோன்றியபோதிலும், ஸ்திரபுத்தியுடைய கணவன் என் ப்ரேமாவுக்குக் கிடைத்தால் போதும்'' என்று தனக்குள் எண்ணி நெடுமூச்செறிந்தாள்.

விளையாடிக்கொண்டு வந்த குழந்தை புத்தகம், பலகை முதலியவற்றை வைத்துவிட்டு தாயாரிடம் ஓடிவந்து ''அம்மாம்மா! இதோ! என் மார்க்கு பாரு. 50 க்கு 40 வாங்கிட்டேம்மா! அம்பிக்கு 20 தான் வந்தது'' என்று தன் சந்தோஷத்தைத் தெரிவித்துக் குதித்தாள். தன்னைக் குறைவாகச் சொல்லியதால் தம்பியின் முகம் கருத்ததுகண்ட ரமா, வெகு புத்திசாலியானதால் ''தம்பி! அடுத்ததரம் நீ அக்காவுக்குமேல் 50 க்கு 50 வாங்கி

விடுவாய் பாரு......இன்னிக்கு பாட்டுச் சொல்லிக்கொடுத்தார்களா!'' என்று சடக்கென்று வார்த்தையை மாற்றி அவர்களின் கவனத்தைத் திருப்பினள்.

தம்பி:—அம்மா! இன்னிக்கி "ஓடி விளையாடு பாப்பா'' பாட்டு சொல்லித்தந்தா!

ப்ரே:—அம்மா! எனக்கு இவனைவிட பெரிய க்ளாஸோன்னோ! பெரிய பாட்டு சொல்லித்தந்தாம்மா! பாடிக் காட்றேன் கேளேன்—என்று குழந்தைகளின் சுபாவப்படியே பாடவாரம்பித்துவிட்டாள்.

லக்ஷ்மி பிரார்த்தனை

ராகம்—நாட்டை தாளம்—சதுஸ் ரஏகம்

மலரின் மேவு திருவே!-உன்மேல் மையல் பொங்கி நின்றேன்;
நிலவு செய்யு முகமும் காண்பார் நினை வழிக்கும் விழியும்
கலகலென்ற மொழியும்-தெய்வக் களி துலங்கு நகையும்
இலகு செல்வ வடிவும் கண்டுன் இன்பம் வேண்டுகின்றேன்,

—பாரதியார்.

ரமா குழந்தைகளுக்கு இரண்டாம் வேளைக்கு ஆகாரத்தைப் போட்டு விட்டுப் பாத்திரங்களைத் தேய்க்கச் சென்றாள். அச்சமயம் நாலைந்து ஏழை ஜனங்கள் 5 வயது ஆண் குழந்தையைத் தூக்கிக்கொண்டு கோவெனக் கதறியவாறு வந்து "யம்மா! டாக்டரம்மா! தர்மலக்ஷ்மி! கொயந்தெக்கி பேராபித்து வந்திடுச்சிங்களே; கொஞ்சம் வாங்களேன்'' என்று அழுது கொண்டே கத்துகிறார்கள்.

அந்த குழந்தையின் தாயார் தாங்கமாட்டாத துக்கத்துடன் நோயாளிக் குழந்தையைத் தூக்கி ரமாவின் காலடியில் விட்டுவிட்டு "யம்மா! தாயே! டாக்டரம்மா! எங்கம்மாளுக்கு கால்லெ சரங்கு பொங்கி கெடக்குதுங்க; அதுக்காவ ஒரு மருந்து சேஞ்சு அதை ஒரு கிண்ணத்துலெ வெச்சியிருந்தேனுங்க. நான் கொயாவண்டெ தண்ணிக்குப் போய் வரத்துக் குள்ளாற கொயந்தெ அந்த மருந்தை எப்படியோ மாடத்துலேந்து எடுத்து துண்ணுகிட்டிருந்துதுங்க. ஐயையோ! பாவி நான் பாத்துகிட்டெ வந்து புடுங்கி வெச்சேன். வாயெயெல்லாம் அலம்பினேன். இது வெசங்கலந்த மருந்துங்க. ரவெ நேரத்துக்குள்ளாற இப்பிடி மழக்கம் போட்டு உயிர் திடுச்சிங்க! எங்களுக்கு திக்கு மூக்காடலீங்க. கொயந்தெக்கு உயிர்பிச்சை தரணுங்க. ஆச்சிபத்திரிக்கு தூக்கிக்கிட்டு போரத்துக்குள்ளற செத்துடு மோன்னு இங்கெ வந்தேனுங்க யம்மா! எங்க வவுத்துலெ பாலெ கறக்கணும்'' என்று கதறினள்.

அந்தோ பரிதாபம்! ரமா என்ன செய்வாள்? தன் ப்ரதிக்ஞையை மீறிக் குழந்தைக்கு வைத்தியம் செய்து ஒரு ஆசை பார்க்கலாம் என்று செய்வதா? அன்றி நிராதரவாய் அவர்களை விரட்டுவதா? குழந்தையைப் பார்த்தால் கண்ராவியாயிருக்கிறது. அதிலும் கண்ராவியாயிருக்கிறது அதன் தாயாரைப் பார்த்தால். என்ன செய்வாள் பாவம்! இதயம் துடிக்கிறது. ஒரு தாயாரின் வயிற்றுச்சங்கடமும் இதயத் துடிப்பும் எப்படியிருக்குமென்பது அவளுக்கே தெரியுமாதலால் இந்நிலைமையில் அவளுக்கு என்னவிதமான ஆறுதலைச் சொல்லமுடியும்? நிமிடம் ஏறஏற குழந்தைக்


M. SAMUEL

குப் பேராபத்தாக முடியும் என்பதும் தெரியும். இந்த தர்மசங்கடமான நிலைமையில் என்ன செய்வதென்று தெரியாது துடிதுடித்தாள். அவர்களோ பரம ஏழைகள். வஸுந்தரா தேவியிடம் அனுப்பலாமென்றால் இங்கிருந்து 5 மைலுக்கப்பாலுள்ள இடத்திற்குப் போய்ச் சேருவதற்குள் குழந்தையின் உயிர் போய்விடும். தனக்காவது கார் இருக்கிறதா அல்லது சுதந்தரமாவது இருக்கிறதா? ஒன்றுமில்லை. குழந்தையின் தாயாரின் தவிப்பைவிட, ரமாவின் தவிப்பு ஆயிரம் மடங்கு அதிகமாகவிருந்தது. நிலைகொள்ளாது துடித்தாள்.

17

கடமையைச் செய்த காரிகை

உண்மையில் ஆனந்தமான போஜனத்தை உண்டு அந்தராத்மா த்ருப்தி யடைந்த இன்பத்துடன் தேவராஜன் படுத்திருந்தான். "ரமாவுக்கு இத்தனை அருமையான சமையல்கூட செய்யத்தெரியுமா! என்ன ஆச்சரியம்! ஒவ்வொரு விஷயத்திலும் இத்தனை தேர்ச்சி பெற்றிருப்பதனால்தான் அவள் எந்த வகையில் சென்றாலும் உயர்வடைந்து கொண்டே வருகிறாள். இதுகாறும் அவளுடன்கூடவிருந்தும், அவள் சமையலைச் சாப்பிடாமலும் அதன் ருசியின் அருமையை அறியாமலும் போய்விட்டோமே"...என்று கூட அவன் மனது நினைத்தது.

அச்சமயம், அவன் தகப்பனாரின் ஆதி வார்த்தைகளும் நினைவிற்கு வந்தன. "தேவாமிருதம் என்றும், திகட்டாக்கனி என்றும் கூறி ஆளை மயக்கிக் கொடுக்கும் ஓட்டல் பக்ஷணங்களில் முக்கால்வாசியும் விஷத்திற்கு ஒப்பானவையடா! வீட்டில் அன்புமயமான இதயத்துடன் உன் தாயார் செய்து கொடுக்கும் உப்புச் சீடையிலும் அரிசி உப்புமாவிலும் அததன் சுவை பாதி, உன் தாயின் பரிசுத்தமான இதயத்தின் ஆசியும் அன்பும் கலந்த ருசி பாதியாக இனிக்கும். இதை வெறுக்காதே. கடையில் காசுக்கு விற்கும் அந்த பண்டத்தில் நீ ஏதோ ஒரு சிறிது ருசியைக் காணலாம், உன் தாயின் ஆசியும் அன்பும் அதில் காணமுடியாது. தெரியுமா! தன் உதிரத்தைப் பாலாக ஊட்டி வளர்த்தவள் கையால் பழைய சாதத்தைப் போட்டாலும் அதுவே அமுதம். அதுவே ஆனந்தம். தேவா! என் தாயார் இருந்த வரையில் அந்த அமிருதம் என்னைப் பேரானந்தத்தில் ஆழ்த்தி வளர்த்தது. 'தாய்க்குப் பிறகு தாரம்' என்கிற பழமொழிப்படிக்கு இன்று உன் தாய் எவ்வளவு அருமை தெரிந்து உன்னை ஊட்டி வளர்க்கிறாள்! இந்த மகிமையை உனக்கு விவாகமான பின்பு அறிவாய். அந்த தாய்க்கும், தாரத்திற்குந்தான் நம்முடைய அருமை தெரியும்; மற்றையோருக்குத் தெரியாது, வீணே ஓட்டலுக்குப் போகாதே"...என்று கூறிய வார்த்தைகள் காதில் ஒலித்தன.

"உம்...இவையெல்லாம் பழங் கதைகள். கடந்துபோன நாட்களின் நினைவுகள். அக்கால மெங்கே இக்கால மெங்கே? மலைக்கும் மடுவுக்குமாக

ஆய்விட்டதே!'' என்று எண்ணியபடியே ஸிகரெட்டைப் பற்றவைத்தான் அக் குழந்தையின் தாயார் தர்மசங்கடமான நிலைமையில் தத்தளிக்கும் ரமாவின் காலைக் கெட்டியாய்ப் பிடித்துக் கொண்டு, ''யம்மா! கொயந்தையே பாக்கமாட்டீங்களா! என் வவுத்திலே பாலே வாக்கமாட்டீங்களா! நீங்களும் புள்ளெ குட்டிங்களெபெத்த தர்மலச்சிமிபாச்சே! சொம்மா நிக்கிறீங்களே! யம்மா! யம்மா! ஒங்களுக்கு கோடி புண்ணியமுண்டு யம்மா! எங்களுக்கு அஞ்சு குடிக்கி ஒரு சந்ததி இந்த ஒரே கொயந்தெம்மா! உசிரு பிச்சைக் குடுங்கம்மா! என் ஆத்தும்மா துடிக்குதம்மா, இந்த கொயந்தெ செத்துடுத்துன்ன இதோடு நானும் செத்துடுவேம்மா!'' என்று கதறுவதைப் பார்த்த ரமாவின் மனம் பாகாயுருகியது,

'சீச்சீ! உயிர்போகிற ஆபத்துக்கு உதவாது கைவிடுவதா தர்மம்? நம்மாலான வரையில் கடைசிமட்டும் பார்த்தும் கைதவறுமாயின் அது தெய்வ சங்கல்பமாகும். இத்தகைய சமயத்திலா சபதத்தை நினைத்துப் பேசாதிருப்பது?' என்று ஒரு விநாடி துடித்தாள். மீண்டும் மனங் குழம்பியது. தன் கணவன் பாதத்தின் ஆணையாகச் செய்த சபதத்தை மீறினல் அது எத்தகைய கொடும் பாவம்'' என்று நினைக்க உடல் நடுங்கியது...

சில விநாடிகள் யோசனை செய்தாள். கூட வந்தவர்களின் தவிப்பு கூற முடியாது. கல்லும் கரையும்படி அவர்களும் ரமாவை வேண்டிக் கண்ணீர்விட்டுக் கதறினர்கள். அந்தோ! என்ன பரிதாபம்! என்ன சங்கடம்! குழந்தைக்கு பேச்சு மூச்சில்லை. அப்படியே சவம்போலக் கிடக்கிறது. ரமாவை அவர்கள் சாதாரண டாக்டராக எண்ணவேஇல்லை. உண்மையில் கடவுளென்றே அவர்களின் இதயத்தில் பரிபூர்ணமான நம்பிக்கை உண்டாகியது.

ரமாவின் அந்தரங்க விஷயங்களும் சபதத்தின் விபரீதமும் அவர்களுக் கென்ன தெரியும்? அவள் பேசாது நிற்பதால் பின்னும் பயமும் திகிலும் அவர்களைக் கப்பிக் கொண்டு, இதயத்தைத் துடிக்கச் செய்தன.

உடனே ரமா மாடிக்கு ஓடினள். அப்போதுதான் முன்சொல்லியது போல் தேவராஜன் ஸிகரெட்டைப் பற்ற வைத்துக்கொண்டிருந்தான். ரமா மிகவும் தைரியமாக அவன் கையிலிருந்தஸிகரெட்டை வெடுக்கென்று பிடுங்கி எறிந்தபடியே அவன் காலைப் பிடித்துக்கொண்டு, 'டாக்டர்! ஆபத்தான நிலையிலுள்ள ஒரு குழந்தையைத் தூக்கிக்கொண்டு வந்திருக்கிருர்கள். தயவு செய்து வந்து, அதற்கு வைத்தியம் செய்யவேண்டும். அதன் உயிர் மீண்டும் வருமாயின் புனர் ஜென்மத்தை நீங்களே உண்டாக்கியது போலான புண்ணியமுண்டாகும். தயவுசெய்து வாருங்கள் வாருங்கள்... யோசனைவேண்டாம், தாமதம் செய்யாதீர்கள்'' என்று கண்ணில் ஜலம் சொட்டியவாறு தேவனின் கையைப் பிடித்து இழுத்தாள்.

தேவனுக்கு இது ஆச்சரியத்திலும் ஆச்சரியமாயிருந்தது. ''ஏன் என்னைக் கூப்பிடுகிருய்! நீயே பார்ப்பதற் கென்ன?'' என்ருன்.

ரமா:—ஐயோ! இச்சமயம் இந்த வீண் தர்க்கம் வேண்டாம். செய்துள்ள சபதத்தை மீறும் அல்பபுத்தி யுடையவளென்று என்னை நினைக்க

வேண்டாம். வாருங்கள்; வாருங்கள்—என்று தடதடவென்று அவனை இழுத்துக் கொண்டு கீழேவந்து பரிதாபகரமான காட்சியைக் காட்டி, விஷ மருந்தைத் தின்றுவிட்ட விவரத்தைக் கூறி அதற்கு உடனே மாற்று கொடுக்கவும், ஊசி குத்தவும், வாந்தியும் பேதியுமாகி வயிற்றிலுள்ள விஷம் ரத்தத்தில் கலக்காது வெளிப்படவுமான முறைகளைத் தானே அவனுக்குக் கூறி எல்லாவற்றையும் அவன் கையினாலேயே செய்வித்தாள்.

மூர்க்ககுணமுடைய தேவராஜனும் பொறுமையாய் சகலமும் செய்து வெகு அக்கரையாகக் குழந்தையின் பக்கத்திலேயே இருந்தான், ரமாவும் குழந்தையின் தாயாருக்குத் தேறுதல்கள் கூறுவதும் குழந்தையிடம் வந்து பார்ப்பதுமாகவிருந்தாள். இந்த தடபுடலில் ரமாதன் சாப்பாட்டை அடியோடு மறந்தாள். எப்படியாவது இந்த குழந்தைபிழைத்தால் போதுமென்று கடவுளை ப்ரார்த்தனை செய்தாள். குழந்தையுடன் வந்த ஜனங்களில் ஒருவர்கூட தண்ணீரும் குடிக்கவில்லை. அழுதகண்ணும் தொழுத கையுமாயிருந்தார்கள்.

“பூஜை வேளையில் காடி புகுந்ததுபோல சண்டாள நாகராஜன் வராதிருக்கவேண்டுமே!” என்று ரமா பிரார்த்தித்துக்கொண்டே இருந்தாள். மாலை 4 மணி அடித்துவிட்டது. குழந்தைக்குத் தெளிவு உண்டாகவில்லை. ஆனால் நாடிமட்டும் சற்று நன்றாக வேலை செய்யவாரம்பித்தது. அதுகண்டு தேவராஜனே வியப்புற்றான். பொழுது ஏற ஏற நல்ல குறிகள் காணப்பட்டதோடு இனி குழந்தை பிழைத்துக்கொள்ளலாம் என்கிற தைரியத்தை உண்டாக்கியது.

இரவு முற்றும் ஓயாது கண் விழித்தபடியே தேவராஜன் கவனித்துச் செய்தது அவன் ஜென்மத்தில் இதுதான் முதல் தடவை. அவனையுமறியாத உத்ஸாகத்துடன் வேலை செய்தான். யாருடைய நற்காலத்திற்கோ நாகராஜன் ஒரு அவசர வேலை நிமித்தமாய் ஊருக்குப்போய்விட்டதனால் இங்கு தடங்கலின்றிக் கவனிக்கமுடிந்தது.

மறுதினம் காலையில் குழந்தைக்கு இனி பயமே இல்லை என்ற தைரியமும் நம்பிக்கையும் உண்டாகியதுகண்ட ரமாவின் உள்ளம் ஆனந்தமயமாய் நிரம்பியது. அவள் முகத்தில் இத்தனை நாட்களாய் மறைந்துகிடந்த ஒரு சோபை வெற்றியின் ஜோதி தாண்டவமாடியது. தேவராஜனின் மனத்திலும் இப்படியே ஒரு இன்ப எழுச்சி உண்டாகியது. “அம்மா! அம்மா! தண்ணீ ஓணும்” என்று அந்தக்குழந்தை வாய்விட்டுச் சொல்லும் போது அதனுடைய தாயாரின் இன்பத்தை என்னென்று சொல்வது? வயிற்றில் அமிருதம் பொங்கியதுபோன்ற ஆனந்தமுண்டாகியது. “என் ராசா! என் மவனே! கண்ணுதொறந்து பாருடா என் செல்வமே!” என்று அன்னையின் அன்பு ஜ்வலிக்கக் கூறினாள். ரமா ஐஸ் கலந்த குளிர்ந்த ஜலத்தை அதன் தாயாரிடமே கொடுத்து அவள் கையாலேயே குடிப்பிக்கச் செய்தாள்.

குழந்தை தண்ணீரைக் குடித்துவிட்டுத் தாயின் கழுத்தைத் தன்னிரு கைகளாலும் கட்டிக்கொண்ட காட்சியைக் கண்ட ரமாவின் கண்களில் ஆனந்தக் கண்ணீர் ஊற்றெடுத்தது. தேவராஜனின் கண்களும் குளம்

போலாகியதென்றால் வேறு கூறவேண்டுமா! கைக் குட்டையால் முகத்தை துடைத்துக்கொண்டான்.

பின்னும் ஒரு நாள் பூராவும் குழந்தையை வீட்டிலேயே வைத்துக் கவனித்து நன்றாக குணமாகியதும் வீட்டிற்கு அனுப்பினான். ரமாவின் சந்தோஷம் கூறவே திறமில்லையெனினும் தேவராஜனுக்கும் தனக்கும் உண்டாகிய ஒரு மனக்கோளாறுமட்டும் மாறவே இல்லை.

'ருசிகண்ட பூனை உறியைத் தாவியதாம்' என்பதுபோல் அன்று ரமாவின் சமையலின் இனிப்பை அறிந்த பிறகு ஓட்டலுக்குப் போவதை அறவே விட்டான். அவன் நற்காலத்தின் பலன் நாகராஜன் ஊரிலிருந்து வரவில்லை.

குழந்தை புனர் ஜென்மம் எடுத்த பெருமையும் ஆனந்தமும் அதன் பெற்றோர்களை இன்ப சாகரத்தில் மூழ்கச் செய்தது. பரம ஏழைகளான அவர்களிடம் பணமேது? ஒரு சிறிய தோட்டமுண்டு. அதில் காய்த்த புடலை, அவரை, பூசினிக்காய் முதலியவற்றுடன் கஷ்டத்தின் கொடுமையில் காதிலிருந்த ஓலையை அடகுவைத்து வாங்கிய 5 ரூபாய் ரொக்கமும் வைத்து தம்பதிகளின் குழந்தையுடன் மறுநாள் வந்து ரமாவை வணங்கினார்கள்.

ரமா தான் தப்பித்துக்கொண்டு தேவராஜனிடம் அனுப்பிவிட்டாள். அவர்கள் தேவராஜன் இருக்குமிடம் சென்று அவைகளை அவன் முன்பு வைத்து "சாமி! எஜமானே! நாங்க ஏயெங்க! நீங்க சேஞ்சிருக்கற ஒபகாரத்துக்கு நாங்க ஒங்கிளுக்கி அடிமையாயிருந்து ஒயச்சாகூட அதுக்கு ஈடாகாதுங்க. என்னமோ, ஏயேமேலே தயெவெச்சு இத்தெ வாங்கிக் கணம். இந்த காய்கரிங்க எங்க சொந்த தோட்டத்துலே போட்டதுங்க. எஜமான் திருத்தியா சாப்படணுங்க. இந்த கொயந்தெக்கி உசிர் குடுத்த நீங்களும் அந்தம்மாளும் தாராவிசு போட்டிகிணு இருக்கணும் இந்த புண்ணியம் ஒங்களே தலே காக்கும்" என்று புகழ்ந்தார்கள்.

இதுவரையில் இம்மாதிரி ஏழைகளுக்கு வைத்தியமும் செய்ததில்லை; இத்தகைய எழ்மைப் பரிசும் பெற்றதில்லை; புகழ்வார்த்தைகளும் கேட்டதில்லை. அவனுக்கு மிகவும் ப்ரமிப்பாயிருந்தது. அந்த ஏழைகள் ஒரு ரோஜா மாலை கொண்டு வந்திருந்ததை தேவராஜனுக்குப் போட்டார்கள்

இந்தக் காட்சியை தூரவிருந்து ஜன்னல் இடுக்கால் பார்த்த ரமாவின் உள்ளம் பூரித்தது. இன்ப உணர்ச்சியின் ஜோதி கண்களில் ஜ்வலித்தது. "அஸ்து தேவதைகள் ததாஸ்து என்று ஆசீர்வதிக்க வேண்டும். இப்படியே புகழ் ஓங்கும்படிப் பகவான் கிருபைசெய்யவேண்டும்" என்று அவளது பரிசுத்த இதயம் நினைத்து, கடவுளை வணங்கியது.

தேவராஜனுக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. ஒருமாதிரியாய் நெஞ்சையடைக்கும் துக்கத்தில் திளைந்தான். சற்று சமாளித்துக்கொண்டு..."உங்களுடைய வயிற்றில் கடவுள் பாலை வார்த்தது எனக்குப் பரம சந்தோஷமாயிற்று. குழந்தை பிழைக்குமென்றே நான் நினைக்கவில்லை;' என்றான்.

இதற்குள் குழந்தையின் தாயார் பேசத்தொடங்கி "சாமீ! கலியுகத்து தன்வந்தரீண்ணுதான் நம்ப அம்மாளே ஒலகமே சொல்றதுங்க. அந்தம்

மாத்தான் உயிரு பிச்சை குடுத்தாங்க. மவராசி! தர்மலச்சிமி! அந்தம்மாளாலேதான் நாங்க கொயந்தெயெ உசிரோடே கண்டோம். அந்தம்மா நல்லாயிருக்கணும். நீங்க ஆயுசோடே இருக்கணும்'' என்று ரமாவைப் பற்றிச் சொல்லும்போது பழைய பொறுமையும், கண்களில் அசட்டுப் பார்வையும் முகத்தில் விகாரக் களையும் தோன்றின.

ஏழைகள் அவர்களிடம் விடைபெற்றுக்கொண்டு போகும்போது சகுனியைப்போன்ற நாகராஜன் அவர்களைப் பார்த்துக்கொண்டே வந்து கடகடவென்று உதட்டைப் புதுக்கி "பேஷ்! தேவா! மீண்டும் இதென்ன பிச்சைக்காரக் கூட்டம் வந்துவிட்டதா என்ன! யாரடா இத்தனை அவதாரங்கள்?''

என்று ஏளனமாகக் கூறுவதைக் கேட்டு மனம் நொந்த ஏழைகள் "ஆண்டவன் உண்டாக்கிய அவதாரங்கதானுங்க. ஏழைங்கன்னு இத்தனெ கசப்பாக் கிதோ! நீ மாத்திரம் மவராசனு இப்படியே பறந்தாயா! இப்படியே இருக்கப் போறயா! போய்யா! போ!'' என்று அலட்சியமாகச் சொல்லிக்கொண்டே போய்விட்டார்கள். எரியும் அடுப்பில் எண்ணெயை வார்த்ததுபோல் நாகராஜனுக்குக் கோபம் பிரமாதமாய் வந்தது. அந்த ஏழைகள் போனபிறகு கற்றென்று காறித்துப்பினன்.

கண்கள் சிவக்கத் திரும்பியபோது அந்த ஏழைகள் கொண்டுவைத்த காய்கரிகளைப் பார்த்துப் பரம அலக்ஷியத்துடன் "ஏண்டா விதியத்தவண்ணாரப்பானே! இந்த தரித்திரங்களிடம் காயும் கரியும் பிச்சைவாங்க ஆரம்பித்துவிட்டாயோ!'' என்று கூறியபடியே காலால் உதைத்துத் தள்ளினன். இதைப் பார்த்துக்கொண்டிருந்த ரமாவின் மனம் பதறியது. கரிகாய்களை அலக்ஷியமாய்த் தள்ளினனேயன்றி தட்டிலிருந்த நோட்டின்மீது பார்வை விழுந்ததும் அதைத் தூக்கி தன் ஜோபியில் போட்டுக்கொண்டவாறு "வாடா! உம்... எழுந்திரு. சாமியார் உன்னை அவசரமாகப் பார்க்க வேண்டுமென்கிறார்'' என்று தேவராஜன் கையைப் பிடித்து இழுத்தான்.

ஏற்கெனவே ரமாவின்மீது தீ மனத்தில் புகைந்துகொண்டிருக்கையில் நாகராஜனின் வார்த்தைகள் அனுகூலமாகவே தோன்றியதால் பதில் பேசாது மக்குபோலிருந்தான். பணத்தை எடுத்து வைத்துக்கொண்டதையும் பொருட்படுத்தாது அவன் இழுந்த இழுப்புக்கு இணங்கி ஓடினன்.

"அடே பாவி சகுனியே! மீண்டும் வந்துவிட்டாயா?'' என்று ரமா நினைக்கும்போது நெஞ்சம் குமுறியது. அந்தப் பாவி ஒழிந்த பிறது காய்கறிகளைப் பொறுக்கிக்கொண்டு உள்ளே சென்றாள். 'ஏழைகளின் அன்பும் ஆசியும் அறியும் சக்தியற்றப் பாவியின் போதனை உள்ளவரையில் என் கணவர் உருப்படுவதேது? ஈசா! அவன் நேசத்தை ஒழிக்கமாட்டாயா! அந்தப்பாதகனைப்பிரிக்க உனக்கு மார்க்கம் கிடைக்காதா!'' என்று பகவானை வேண்டினாள். அவள் விதியை எண்ணி உழைக்கச் சென்றாளேயன்றி மனது படும் பாட்டை யாராலறியக்கூடும்? தவியாய்த் தவித்தது.

18

சிகண்டியிடம் சிக்கிய பேதை

இருவரும் காரில் போகும்போது தேவராஜன், ரமா கொடுத்த கடிதத்தை நாகராஜனிடம் கொடுத்து "உன் பேட்டிக்காகத்தான் இது காத்துக்கொண்டிருக்கிறது" என்றான்.

நாகராஜன் கடிதத்தைப் பார்த்தவுடன் பிரமித்துப் போனான். "ஏண்டா! மாடு தானாகப்படிந்ததா! மூக்கணாங் கயிறு போட்டு இழுத்தாயா?" என்று ஆச்சரியமாய்க் கேட்டான்.

தேவ:—உம்...ஒருவிதமான வார்த்தையுமே நடக்கவில்லை. அந்த கடிதத்தைக் கொடுத்துப் பதில் கேட்டேன். அடுத்த வினாடியே இது கிடைத்தது. எனக்கும் ஆச்சரியம் சொல்லமுடியாதுதான் போங்கிற்று. எத்தனை உயர்ந்த மாறுதல்கள் பார்த்தாயா?

இதற்குள் சாமியாரின் வீடு வந்துவிட்டதால் கடிதத்தைத் தன் ஜோபியில் வைத்துக்கொண்டு உள்ளே சென்றார்கள். ஸ்வாமியார் வெகு குசாலாக உட்காரச் செய்து ஜாதகத்தைக் கையிலெடுத்துக்கொண்டார்.

ஸ்வா:—ஒரு முக்யமான விஷயம். தங்கள் ரீதியாயும் தங்கள் மனைவியின் ஜாதகரீதியாயும், சில க்ரகங்கள் விரோதமாயிருக்கிறன. இதனால்தான் வீட்டில் இத்தகைய மாறுதல்கள், ஒற்றுமையின்மை, சிறிது மனஸ்தாபம் முதலியன உண்டாகி இருக்கின்றன. இந்த க்ரகக் கோளாறுகள் இன்னும் சில வருடங்கள்வரை நீடித்திருக்கும்; அதுவரையில் மிகவும் ச்ரமங்கள் உண்டாகலாம். வியாதிகள் வரலாம்......

தேவ:—(அவசரமாக) அதற்குப் பரிகாரங்கள் ஒன்றுமில்லையா!

ஸ்வா:—இருக்கிறது. ஒரே ஒரு பரிகாரந்தான் கூறியிருக்கிறார்கள். அதாவது,— சில மாதங்களுக்கு நீங்கள் இருவரும் பிரிந்திருந்தால் வெகு உத்தமம். மேற்குறித்த விபத்துகளைத் தடுக்கலாம். இதைத்தவிர வேறு ஒன்றுமே இல்லை...

இதைக்கேட்டதும் தேவராஜனுக்கு மனது குழம்பியது. "பிரிந்திருப்பதென்றால் அவளை எங்கே துரத்துவது? நானெங்கே போவது? இதென்ன தர்மசங்கடமாகிவிட்டது? அவளுக்கு வேறு மக்கள் மனிதர்களும் இல்லையே! அப்பனும் ஆண்டியாகிவிட்டான்"...என்ற கலவரங்கள் வந்ததால் சற்றுநேரம் திகைத்திருந்தான். இச்சமயம் யாரோ அவசரமாக வந்து நாகராஜனை அழைத்துச் சென்றதால் அவன் போனான் பிறகு பேசத்தொடங்கி "ஸ்வாமிகளே! இப்படியே இருந்தால் என்னவாகும்?" என்று கேட்டான்.

ஸ்வா:—நான் என்ன சொல்வது? கெடுதல்தான் சம்பவிக்கும் என்பதுவரையில்தான் சொல்லமுடியும். அதுகூட ஜோஸியம் சொல்கிறவர்கள் சொல்லவேகூடாதி என்று சாஸ்திரம்...நான் தங்களிடம் உண்மையைக் கூறவேண்டுமென்பதற்காக இம்மாதிரி கூறினேன்....தங்கள் மனைவியின் ஜாதகப்படிக்கு சமீபத்தில் வலுவிலேயே துரைத்தனத்தார் மூலமாக கடல்

கடந்து செல்லக்கூடிய பிரயாணம் ஒன்று இருக்கிறது. அம்மாதிரி ஏதாவது வதந்தி உண்டா!

அம்மாதிரி அவர் கேட்ட உடனே தேவராஜனுக்கு ஆச்சரியம் அதிகமாகிவிட்டது. "என்ன பதில் சொல்வது? உண்மையைச் சொல்வதா, வேண்டாமா?" என்று ஒரு விநாடி தயங்கினான். உடனே அவனுக்கு புத்தி மாறியது. "வைத்தியனிடமும் ஜோஸியனிடமும் வக்கீலிடமும் உண்மையைச் சொல்லாவிட்டால் காரியம் பலிக்காது" என்று தோன்றியதால் "ஸ்வாமிகளே! இதோ பாருங்கள்" என்று கூறியபடியே கவர்ன்மென்டிலிருந்து வந்த கவரையும், அதற்குப்பதில் எழுதியிருப்பதையும் ஜோடியாக சாமியார் முன்பு வைத்தான்.

தற்காலத்திலுள்ள சில ஜோசியர்களைப்போல் அந்த சாமியார் நன்ருக ஆங்கிலம் கற்றவராதலால் கடிதங்களைப் படித்து ஆச்சரியமும் ரமாவின் த்யாகபுத்திக்குச் சந்தோஷமுங்கொண்டு தேவராஜனை உற்றுக் கவனித்தார்.

தேவ:—என்ன பார்க்கிறீர்கள்? ஏன் இதை முன்பே சொல்லவில்லை என்று கேட்கிறீர்களா!...

சாமி:—அதொன்றுமில்லை. இம்மாதிரி சந்தர்ப்பங்கள் கிடைக்க வேண்டுமென்று உலகத்தில் ஒவ்வொருவரும் எத்தனை போட்டியிடுகிறார்கள். எத்தனை பெயர்களைக் கால் கை பிடித்து லஞ்சங்கள் கொடுத்தும் இன்னும் சிலர் அக்ரம வழியில் உறவாடி சிநேகத்தைப்பெற்றும் எப்படி எப்படியோ ஜகஜ்ஜாலம் போடுகிறார்கள். இந்த ஜாதகத்தின் ராசி இம்மாதிரி ஒரு உயர்ந்த சந்தர்ப்பம் தானாகக் கிடைத்திருப்பதை ஒரு த்ருணமாக மதித்து எழுதியிருக்கும் பதிலைப் பார்க்க எனக்கே வியப்பாகவிருக்கிறது. வெகு அழுத்தமான இதயத்தின் உறுதியை இதொன்றே எடுத்துக்காட்டுகிறது.

தேவ:—இவ்விஷயத்தில் நானே ஆச்சரியமடைந்தேன். இக்கடிதத்தைத் தபாலில் போடுவதற்குத்தான் கிளம்பினேன். நீங்கள் கூப்பிடுவதாகச் சொல்லியதால் வந்தேன். தாங்கள் என்ன கூறுகிறீர்கள்?

ஸ்வா:—இந்த சமயம் உங்கள் ஜாதகம் இருக்கும் கோளாறில் கட்டாயம் இருவரும் பிரிந்தே சில காலம் இருந்தாக வேண்டும். உள்ளூருக்குள்ளேயே பிரித்து வைத்தால் ஊர் ஜனங்கள் வெறுமனே இருக்கமாட்டார்கள். பல சந்தேகங்கள் பிறக்கும். வீண் அபவாதத்திற்கும் மனஸ்தாபத்திற்கும் இடம் உண்டாகும். இதே வேதனையில் அவளுக்கு பயித்தியமாவது பிடித்துவிடும் அல்லது உன்னை விட்டு நிரந்தரமாகவே சென்றுவிடுவாள். தாயைப் பிரிந்த ஏக்கத்தில் குழந்தைகளும் போய்விடும். கடைசியில் உனக்கும் கட்டாயம் பயித்தியம் பிடித்துவிடும். குடும்பமே சின்னபின்னமாகச் சிதறிவிடும்.

தேவ:—ஐயையோ! கேட்கும்போதே பயமாகவிருக்கிறதே! இதற்கு என்ன செய்வது?

சாமி:—பொறு; பொறு...பயப்படாதே! உனக்கு உயிருக்கு ஹானியில்லாதிருக்கவேண்டுமானால்...மற்றபடி எல்லோரும் நன்ருக இருக்க வேண்டுமானால்...இந்த கடிதத்தைக்கிழித்து எறி...இந்த அழைப்பிற்கு

இணங்கி, வருவதாக அந்தம்மாள் கையாலேயே எழுதியனுப்பிவிடு. அப்போதுதான் வீண் வார்த்தைக்கும் இடமில்லை, மிஞ்சியிருக்கும் காலத்தையும் கவுரவமாயும் பலனுடனும் கழித்து விடலாம். அந்தம்மாளால் ஏராளமான பணமும் புகழும் உனக்கு வரும், இதுதான் முடிவு...யோசனையே வேண்டாம்...உயர் படிப்பிற்கு அனுப்பிய பெருமை உன்னைச்சாரும். என்ன சொல்கிறாய்?...

தேவராஜனின் மூளை சிறிதுநேரம் குழம்பியது. "வேறு ஏதாவது விஷயமுண்டானால் சொல்லுங்கள்......நான் யோசனை பண்ணிப் பதில் கூறுகிறேன்" என்றான்.

சாமி:—ஒன்றுமே இல்லை....இதுதான் விஷயம்...உன் மனப்படி செய்து பலாபலனை அனுபவிக்கவேண்டியதுதான் சரி. இப்போது நான் ஒரு ஜமீந்தார் வீட்டிற்குப்போகவேண்டும். நான் போகிறேன்—என்று கூறி எழுந்தார். தேவராஜனும் விடைபெற்றுச் சென்றான்.

மனங் குழம்பிய நிலைமையில் நேரே வீட்டிற்கு வந்தான். மணி பகல் 12 அடித்துவிட்டது. சற்றுநேரம் படுத்துப் புரண்டு யோசனை செய்தான். நாகராஜனுடன் யோசனை செய்வதற்காக அவன் வரவை எதிர்பார்த்தான். மணியாகிவிட்டதால் "இலை போட்டிருக்கிறது" என்று ரமா உள்வாசற்படியருகிலேயே நின்று கூறினாள். என்ன அதிசயமோ, பதிலே பேசாமல் எழுந்து வந்து இலையில் உட்கார்ந்தான். வாயைத் திறக்கவில்லை,

ரமா அவனுடைய மனோவேதனையை அறியமாட்டாளென்றாலும் அவன் சாப்பாட்டின் அளவை அறிந்தவளாதலால் அன்று அந்த ஏழைகள் கொடுத்த காய்கறிகளையே வெகு ருசியாகச் சமைத்திருந்ததை நன்றாகப் பரிமாறினாள். மனக்கவலையிலும் மிகவும் ருசியாயிருந்த சமையலை ஆனந்தமாகப் புசித்தான். வெத்திலை பாக்கு சகிதம் மீண்டும் ஈஸிச் சேரில் சாய்ந்தான், சமையலின் ருசியில் ஈடுபட்டு வியப்புடன் ஏதேதோ எண்ணமிட்டிருக்கும் சமயம் அன்றைய காலைப் பத்திரிகை கண்ணில் பட்டதும் அதை எடுத்துப் படிக்க வாரம்பித்தான்.

அதில் ஒரு பக்கத்தில், கவர்ன்மெண்டாரே ரமாவையும் மற்றவர்களையும் தேர்ந்தெடுத்துள்ள விஷயத்தைப் பிரசுரித்திருந்ததோடு அதைப் பாராட்டிப் பத்திரிகையில் தலையங்கமும் எழுதியிருந்தது. ரமா இதற்கு மிகவும் தகுதியானவள் என்று அவளுடைய குணத்தின் மேன்மையும், கைராசியின் பெருமையும், உலகத்தில் அவளுக்குக் கிடைத்துள்ள புகழின் மதிப்பும்பற்றி விஸ்தாரமாக எழுதி பொருத்தமான மனுஷியைப் பொறுக்கியிருக்கும் கவர்ன்மெண்டுக்குப் பாராட்டும் எழுதியிருந்ததுகண்டு வியப்புற்றான். ஒரு புறம் அசட்டுத்தனம் கூத்தாடுகிறது...

அதே பக்கத்தில் இன்னொரு பத்தியில் கொட்டை எழுத்தில்

ஸ்ரீமான். தேவராஜனின் திறமை.

கைவிட்டுவிட்ட ஏழைக் குழந்தை அவருடைய அபாரமான ஸிகிச்சையினால் உயிர்பெற்றுப் பெற்றோரின் வயிற்றில் பாலை வார்த்தது. அவருடைய தர்மபத்தினியாகிய ஸ்ரீமதி ரமாதேவியின்

உயர்ந்த குணத்தைப்போலவே அவரும் தயாளத்துடன் ஏழைகளுக்கு வெகு பிரியமாயும், அக்கரையாயும், இரவு பகல் அருகிலேயே இருந்து வைத்தியம் செய்ததில் குழந்தை பிழைத்தது. கடுமையான விஷத்தைத் தின்றும் உயிர் பெற்ற மகிமையைக்காண ஸ்ரீமான் தேவ ராஜனின் வைத்தியத்திறமை நன்கு பரிமளிக்கின்றது. அவருடைய சகதர்மிணிக்கு தினே தினே புகழ்மாலை விருத்தியாவதேபோல் இவருக்கும் ஒக்குமெனத் தோன்றுகிறது. குழந்தையின் பெற்றோருடைய ஆனந்தத்தை நேரில் கண்ட என்னுடைய ஆச்சரியமும், சந்தோஷமும் கரை புரண்டது....

என்று எழுதியிருந்ததைக் கண்டதும் தேவராஜனின் கண்களை அவனாலேயே நம்ப முடியவில்லை. "அதிலுள்ள விஷயம் உண்மையானதா!" என்று திரும்பத் திரும்பப் படித்தான். அவனையறியாத குதூகலமும் ஒரு புதிய தெம்பும் உண்டாகி, உடல் பூராவும் மின்ஸாரம்போல் பரவியது. அவனுடைய ஜென்மத்தில் அவனைப்பற்றி எழுதியிருந்த புகழுரை முதன் முதல் இதுதானுகையால் அவனால் அந்த சந்தோஷத்தை ஜெயிக்கவே முடியவில்லை. முதல் நாள் வந்த இன்னும் இரண்டு பத்திரிகைகளிலும் இதேபோல் புகழுரைகள் வந்திருப்பதைக் கண்டு பூரித்தான்.

தன்னையறியாத பூரிப்புடன் "ரமா! ரமா!" என்று கூப்பிட்டான். அம்மாதிரியான த்வனியில் தன்னையழைத்ததைக்கேட்டு வெகு நாட்களாகி விட்டனவாதலால் ரமாவுக்குத் தன் காதுகளையே தன்னால் நம்பமுடியவில்லை..."எதற்காகக் கூப்பிடுகிறீர்?" என்ற யோசனையுடன் சாதாரண ஒரு மனைவி, அதிலும் பட்டிக்காட்டுப் பெண்போல் தலை குனிந்தவாறு எதிரில் வந்து நின்று "ஏன்?" என்று தன்னுடைய யாழ்போன்ற குரலால் கேட்டாள்.

தேவ:—ரமா! ரமா! இதோ பாரு. இந்தப் பத்திரிகைகளைப் படித்துப் பாரேன். புகழ்மாலை! புகழ்மாலை!! இதை யார் எழுதியிருக்கிறார்களோ தெரியவில்லை—என்று கூறியபடியே இங்குமங்கும் குதித்து உலாவுகிறான்; முதுகில் தட்டிக்கொடுக்கிறான். ஒரு காலத்தில் காலால் உதைத்துத் தள்ளிய அதே குழந்தையைத் தூக்கிக்கொண்டு குதித்தான்.

இவைகளைப் பார்த்த ரமாவுக்கு நகைப்பு ஒரு சிறிதும் வரவில்லை. அவள் கண்களில் ஆனந்தபாஷ்பமே பெருகியது. பத்திரிகைகளைப் பார்த்துவிட்டு மறுபேச்சின்றி கீழே போய்விட்டாள். "ரமா! ரமா! எங்கே போகிறாய்?... இங்கு வாயேன்!" என்று அவள் கையைப் பிடித்து இழுத்தான்.

மீண்டும் வந்து பொம்மைபோல் நின்றாள். தன் சட்டைப்பையிலிருந்த கடிதத்தை எடுத்து ரமாவிடமே கொடுத்து "ரமா! இதைக் கிழித்துப்போடு"...என்றான். இதுகேட்ட ரமாவுக்குத் தூக்கி வாரிப்போட்டது. ..."ஏன்?......எதற்குக் கிழிக்கவேண்டும்?" என்று மெல்லிய குரலில் கேட்டாள்.

தேவ:—ரமா! நான் சொல்வதை முதலில் நீ கேட்கவேண்டும்...... கிழித்துவிடு...உம்...கிழி...கிழி...சுக்கல் சுக்கலாகக் கிழி...

ரமா:—(ஒன்றுமே தோன்ருது விழித்துப் பிறகு சற்று சமாளித்துக் கொண்டு)......தயவு செய்து காரணத்தைச் சொல்லவேண்டுகிறேன். எனக்கு ஒன்றுமே புரியவில்லே.

தேவ:—பயப்படாதே ரமா!...உன்னேச் சீமைக்கு அனுப்பப்போகி றேன். நீ கொடுத்துவைத்த பாக்யசாலி, எக்ஸ்பர்ட்டு டாக்டராக உன் னேச் செய்யப்போகிறேன்.

இந்த வார்த்தையைக் கேட்டதும் ரமாவின் சரீரமே நடுக்கத்தால் ஆடியதை தேவன் கவனித்தான். ஏற்கெனவே நீர் முட்டிக்கொண்டிருந்த கண்கள் நீரை பலபலவென்று உதிர்த்தன. தொண்டையை அடைக்க, நாத்தடுமாற மார்பு படபடக்க "வேண்டாம். வேண்டாம். என்னே சீமைக்கு அனுப்பவேண்டாம். என்னே சோதனேயும் செய்யவேண்டாம். நான் இப்படியே என் காலத்தை முடித்தால் போதும்" என்று கூறும்போது அவளால் தாங்கமுடியாது துக்கம் இதயத்தைப் பிறிக்கொண்டு வந்தது. இரு கைகளாலும் முகத்தைப்பொத்திக்கொண்டு தேகங்குலுங்க அழுதாள்.

ரமாவைத் தொட்டும், அணேத்தும், எத்தனேயோ நாட்களாயின. தேவராஜன் தன்னேயறியாமலேயே ரமாவைத் தழுவியவாறு அவள் கண் களேத் துடைத்து "ரமா! ஏன் இப்படி அழுகிருய்? உனக்கு நானும் என் வார்த்தையும் முக்கியமில்லேயா! அவைகள் முக்யமில்லேயென்ருல் உன் னிஷ்டப்படியே செய். உனக்கு நான் க்ஷேமமா யிருக்கவேண்டுமாயின் இப்போது உடனே நீ ஒப்புக்கொண்டதாக ஒரு கடிதம் எழுதிக்கொடு. இக்கடிதத்தை இதோ நானே கிழித்துவிடுகிறேன்" என்று கூறிச் சுக்க லாகக் கிழித்தான்.

ரமாவுக்குத் திடுக்கிட்டது. "பச்சோந்திபோல் நிமிடத்திற்கு நிமிடம் மாறும் இந்த மாறுதல் எதற்காக உண்டாயிற்ரே தெரியவில்லேயே! நானு வது சீமைக்குப் போவதாவது?" என்று நினேக்கும்போது அவளேச் சித்திர வதை செய்தது. "என்னே மன்னிக்கவேண்டும். எனக்கு உடல் நலம் சரியாயில்லே. நான் எங்கும் போக முடியாது"...என்று திணறியவாறு கூறினுள்.

மூர்க்கதுணமுடையவனுக்குச் சாந்தம் நிலேத்திருப்பது குதிரைக் கொம் பல்லவா! இத்தனே நேரம் இருப்பதே ஏதோ அதிசயத்திலும் அதிசயமா யிருக்கிறது...'ரமா!...எனக்குக் கோபம் வரும்படியாகச் செய்யாதே. நான் பொறுமையுடன் மறுபடியும் சொல்கிறேன். நீ கட்டாயம் சீமைக் குப் போய்தாநுகவேண்டும். நீ போகாவிட்டால் நீ நிச்சயமாய் என்னே யும், குழந்தைகளேயும் இழந்துவிடுவாய்.

ரமா:—ஹா!...என்ன!...இதென்ன விபரீத வார்த்தை! என்னுடைய சபதம்?...

தேவ:—சபதமா! நான் சபதத்தை முறிக்கச் சொல்லும்போது முறித்தே தீரவேண்டும். நீ போகாவிட்டால் கட்டாயம் விபரீதமே நடந்து விடும். என்னுடைய க்ருகநிலே அப்படி யிருக்கிறது. நீ உண்மையில் என்னுடைய க்ஷேமத்தையும், குழந்தைகளின் க்ஷேமத்தையும் கோருவது

நிஜமாயிருந்தால் உடனே எழுது... இல்லையேல் வருவதை அனுபவித்துக் கொள்ளு. உம்... எழுது... எனக்குக் கோபத்தை உண்டாக்காதே...

என்ன செய்வாள் பாவம்! சிகண்டியின் கதையைப் போலல்லவா அவன் புத்தியிருக்கிறது. வேண்டாமென்பதை அவச்யம் செய்யவேண்டும். வேண்டுமென்பதைக் கட்டாயம் செய்யக்கூடாது. இம்மாதிரி புத்தியுடையவர்களை என்னவென்று சொல்வது? நம் கண் முன்பாகவே எத்தனை பெயர்களை இம்மாதிரி குணத்துடன் காண்கிறோம்.

மகா யூகசாலியாகிய ரமாவுக்கு இந்த தடுமாற்றத்திற்குக் காரணம் ஜோஸியம் என்று நன்றாகப் புரிந்துவிட்டது. "டாக்டர்! நான் இம்மாதிரி அழைக்கும் பாக்யமற்று எத்தனையோ யுகங்களாகிவிட்டன. என்னை மன்னித்தே தீரவேண்டும்... பகவானின் கட்டளைக்கு மீறி எந்த க்ரகமும் எதுவும் செய்துவிடமுடியாது. டாக்டர்! ஒரு காலத்தில் இதே ரமா உங்களுடைய ப்ரேமை நிலயமாக விருந்தபோது அடிக்கடி க்ரகபலமேமி ஸ்ரீராமா! நீ அநுக்ரக பலமே பலமு" என்ற த்யாகய்யரவாள் கீர்த்தனையைப் பாடச் சொல்லிக் கேட்பீர்களே! அதைக்கூட இப்போது மறந்தீர்களா! அந்த பரந்தாமனின் அனுக்ரகபலத்திற்கு முன்பு எந்த க்ரகபலந்தான் நம்மை என்ன செய்துவிடும்? செய்ய முடியும்? அவனை நம்பியிருக்கும் வரையில் குறைவே இல்லை. நான் போகவில்லை... என்னை...

என்பதற்குள் வந்துவிட்டது கோபம். "என்ன! போகமுடியாதா! என்னைக் கொலைசெய்து பார்க்கவேண்டுமென்று ஆசைப்படுகிற எண்ணத்தை நன்றாகத் தெரிந்துகொண்டேன்... ரமா!... என் உத்திரவு. என் சட்டம்... நீ போய்தான் ஆகவேண்டும். உம். எழுது... நீ என் கைக்குள் அடங்கிய சரக்கு என்பது ஞாபகமிருக்கட்டும்... நீ மறுத்தால் நான் உன் கண்ணில்படாது ஓடிவிடுவேன்...... தற்கொலை செய்துகொள்வேன்...... தெரியுமா!

ஐயோ பாவம்! தர்மசங்கடத்தில் மாட்டிக்கொண்ட பேதைக்கு என்ன பதில் சொல்வதென்பதே தெரியவில்லை. பைத்தியக்காரன் உளறுவது போல் உளறுகிறான் என்றும் நினைப்பதற்கிடமில்லை. மூர்க்கன் எதை வேண்டுமாயினும் செய்தே தீருவான்... 'ஓரே நிலையான புத்தியுடையவர்களாயின் பிறர் கூறுவது காதில் விழும். இவருடன் என்ன வாதாடிதான் என்ன பிரயோஜனம்? ஏதாவதொரு ஏடாகூடம் நடந்துவிடுமாயின் உள்ளுக்குள்ளிருக்கும் விஷயம் யாருக்குத் தெரியும்? 'கணவனுக்குக் கோபத்தை உண்டாக்கி விபத்தை விளைவித்தாள் மகா ராக்ஷஸி. ஏற்கெனவே ஏதோ மனஸ்தாபம் இருந்தது. இப்போது அதன் பலன்தான் இது. பாவி. த்ரோகி' என்று உலகம் நிந்தித்து, காலம் மறைந்தாலும் வார்த்தை மறையாது கூறுமே! என் விதி இப்படியெல்லாமா ஆட்ட வேண்டும்!" என்று ஆறாத துக்கத்துடன் புலம்பித் தவித்தாள். எத்தனையோ விதமாகச் சொல்லியும் கேட்கவில்லை... 'எழுதிக் கொடுத்தால் கையொப்பமிடுகிறேன்' என்றாள்.

தேவராஜன் "பேஷ்... சபாஷ்"...... என்று குடியன்போல் கூறிக்கொண்டே எழுதிக்கொடுத்தான். ரமா கண்ணீர் பெருக, "தாயே! நீ செத்து எங்கேயோ தெய்வமாயிருக்கிறாய். என்னையொருவிதமான அப

வாதமும் சூழாது காப்பாற்று...என் கணவருக்கும் குழந்தைகளுக்கும் ஒரு ஆபத்தும் நேராது ஆசிர்வதித்துக் காப்பாற்று...என்னை சிக்கிரம் உன்னிடம் சேர்த்துக்கொள்'' என்று மனத்திற்குள் வேண்டியபடியே கையொப்பமிட்டாள். கை நடுங்கியதையும் கண்ணீர் சொட்டுக்கள் காகிதத்தில் விழுந்ததையும் தேவன் பார்த்து ஒரு பெருமூச்சு விட்டான்.

''நான் போகலாமா?'' என்ற வார்த்தைகள் ரமாவின் வாயிலிருந்து மெல்ல உதிர்ந்தன...தேவராஜன் மீண்டும் குஷியுடன் பேசத்தொடங்கி ''ரமா! மெனி மெனி தாங்க்ஸ்...இன்றே பிரயாணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்துவிடு...குளிர் தேசமாதலால் கம்பிளி உடைகள், படுக்கைகள் முதலியன வாங்க ஷாப்புக்குப்போகலாம் புறப்படு''...என்றான்.

ரமா பதிலே சொல்லாது தலை குனிந்து நின்றாள். ஆனால் கண்ணீரை மட்டும் அவளால் தடைகட்டவே முடியவில்லை. ''ஒரே நிலைமையில் இருந்திருந்தால் இதே சீமை பிரயாணம் எத்தனை சந்தோஷமாக நடக்கும்? மத்தியில் பூகம்பம்! பிறகு அமைதி! மீண்டும் புசல் காற்று... இதற்கு அடுத்தது எதுவோ! யார் கண்டது?'' என்று ரமா தனக்குள் எண்ணியவாறு அவ்விடத்தை விட்டகன்றாள். அவளுடைய இதயத்துடிப்பின் வேகத்தை யாராலறியக்கூடும்! துக்கம் பொங்கிப் பொங்கி வருவதைத் தடுக்கமுடியாது தத்தளித்தாள். உயிர் ஊசலாடியதென்றால் மிகையாகாது.

19

காலச் சக்கரத்தின் கடும் வேகம்

ஹரிஜன சேவையில் ஈடுபட்ட ஹரிதாஸர் தாம் எடுத்துக்கொண்ட வேலையை வெகு உத்ஸாகத்துடனும், ஆழ்ந்த கருத்துடனும் எந்த காலத்திலும் யாராலும் அசைக்கமுடியாத ஸ்தாபனத்துடன் செய்து வருகிறார். முதலில் ஹரிஜனங்களுக்காக எத்தனையோ பாடுபட்டு பொதுப் பள்ளிக்கூடங்களில் அவர்களும் வந்து படிப்பதற்கு சட்ட சபைகளில் தக்க ஆட்களைப் பிடித்து சட்டம் செய்வித்து மேலதிகாரிகளிடம் சிபார்சுகள் பலமாகச்செய்து வெகு விரைவிலேயே இந்த சட்டத்தை சாதித்துவிட்ட பெருமையும் புகழும் அவருக்கு மலைபோல் வளர்ந்தன.

என்று ஆச்ரமத்தில் வந்து காஷாயம் பெற்றாரோ அன்று கடைசியாக ரமாவைப் பார்த்த பிறகு இதுவரையில் பார்க்கவே இல்லை. பாசத்தைக் கொஞ்சங்கொஞ்சமாக அறுத்து இதயத்தை அப்பழுக்கற்ற பரிசுத்த ஆலயமாகச் செய்து வருகிறார். கைத்தொழில்கள் அபிவிருத்தியில் ஒரு புதிய ச்ருஷ்டியை உண்டாக்கினார். இதனால் ஏழை ஹரிஜனங்கள் பிழைக்க மார்க்கம் உண்டாகியது.

ஹரிதாஸர் தினம் இரவு ஒருமணி காலம் பகவத்கீதை உபன்யாஸம் செய்வதை வழக்கமாக மேற்கொண்டார். அதற்கு ஏராளமான ஜாதி இந்துக்களும் ஹரிஜனங்களும் வந்து கேட்டு ஆனந்திப்பார்கள்.

ஹரிதாஸர் வழக்கப்படி பத்திரிகை படிக்கும்போது அதில் தன் னருமை ரமாவின் படத்தைப் பார்த்ததும் பாசம் என்கிற பாசியில் கால் அவரையறியாது சறுக்கியது. "ரமாவா!... தீர்க்கசுமங்கலிபவ... சர்வமங் களானிபவந்து" என்று படத்தையே அந்த ஆனந்த இதயம் ஆசீர்வதித் தது. சற்று நேரம் படத்தைப் பார்த்துப் பின் விஷயத்தைப் படிக்கத் தொடங்கினர்.

டாக்டர் ஸ்ரீமதி ரமாதேவியின் இங்கிலாந்துப் பிரயாணம்

"உயர்தரப்படிப்புக்காக கவர்மெண்டாரே தம் சொந்த செல வில் அவர்களையனுப்புகிறார்கள். கவர்மெண்டார் தகுதியான ஆளைப் பொறுக்கியிருப்பதுபற்றி மிக்க சந்தோஷம். ஸ்ரீமதி ரமாதேவி நம் தாய் நாட்டின் பெருமைக்குச் சிகரமாகச் சென்று வெற்றியுடன் திரும்பிவர பகவான் கிருபை புரிவாராக."

என்று எழுதியிருந்ததைப் பார்த்ததும் ஒரு புறம் இன்பமும் ஒரு புறம் துன்பமும் உண்டாயின. "தற்போது அவள் உள்ள நிலைமையில் அத்தனை தூரதேசம் சென்று திரும்புவதற்குச் சக்தியும் மனவலிமையும் இருக்குமா!" என்று ஏங்கினர். "உம்... அவளைப்பற்றிக் கவலைப்பட நான் யார்?... ஈச்வரோ ரக்ஷத்" என்று மனத்தை முறித்துக்கொண்டு உட்கார்ந்திருந்தார்.

அச்சமயம் வாடி வதங்கிச் சருகுபோல் உலர்ந்து கண்கள் ஒட்டியும் முகத்தில் துக்கமே நிறைந்தும் பார்ப்பதற்குப் பரிதாபம் சொட்டும் பிம் பமாய் ரமாதேவி தன் தகப்பனர்முன் வந்து சம்பிரதாயப்படி, "யோகீச் வரரே! நமஸ்காரம்"... என்று கூறி வணங்கினாள். தகப்பனாரைப் பார்த் ததும் பின்னும் துக்கம் துரத்திக்கொண்டு வந்தது. தேகங்குலுங்க அழுது கொண்டே நின்றாள். பேச முடியாது தொண்டை அடைத்தது.

ஹரிதாஸர் "தீர்க்க சுமங்கலிபவ...சர்வ மங்களானிபவந்து" என்று ஆசீர்வதித்துப் பேசாது துக்கத்துடன் மவுனமானார். பின்னர் "அம்மணீ! உன் கணவனின் சம்மதம் பெற்று வந்தாயா?" என்றார்.

ரமா:—அவரே அழைத்துவந்தார். காரிலேயே அவர் இருக்கிறார். எனக்குப் பேசவும் தெரியவில்லை. நாத்தடுமாறுகிறது. உங்கள் அனுக்ர கம் என் கணவருக்கும் குழந்தைகளுக்கும் பரிபூர்ணமாயிருக்கவேண்டும். நான் சென்றுவருகிறேன். தங்களைத் தரிசித்து ஆசிபெறவேண்டுமென்று மனம் கட்டுமீறித் தவித்ததால் வந்தேன். மன்னிக்கவேண்டும்.

ஹரி:—பகவான் எல்லோரையும் ரக்ஷிப்பானாக. "கணவன் சொல் கடவாதுறை கோள்கையே" என்ற வேதவாக்கைப் பரிபாலனஞ் செய். அன்னியநாட்டிற்குச் செல்வது வெறும் படிப்புக்காகமட்டுந்தான் என்று கொள்ளாது, நம் தாய்நாட்டின் பெருமையை, கற்பரசிகளின் அருமையை, சத்தியத்தின் திறமையை அவர்கள் அறியச்செய்யவேண்டும். அம்மா! நீ மகாத்மாவின் "சத்தியசோதனை"யைப் படித்திருக்கிறாயல்லவா? அவரு டைய தாயார் கூறிய வாக்கை மறக்காதே. எக் காரணம் பற்றியும் நம் முடைய பழக்க வழக்கங்களிலிருந்து மாறாது உறுதியுடனிருந்து உன்

படிப்பை முடித்துக்கொண்டு நற்பெயரும் கீர்த்தியும் சூழ ஜயத்துடன் திரும்பி வா.

மேல்நாடு செல்லும் ஆண்பிள்ளைகளில் அனேகர் தம்முடைய நெறி தவறிக் கெட்டுவிடுகிறார்கள். சிலர் அவ்விடமே அடிமைபோலவும் ஆய் விடுகிறார்கள். பெண்களில் அம்மாதிரி கெட்டுப்போவது அதிகமில்லை யெனினும் மனோபாவம், பழக்க வழக்கங்கள் முதலியன மாறிப்போவதை நாம் பார்க்கிறோம். அம்மாதிரியான குணங்களுக்கோ, சபலத்திற்கோ நீ உன் மனத்தில் லவலேசமும் இடங் கொடுக்காது உன் கருமத்தில் கண்ணா யிருந்து வா: பகவான் உன்னை ரக்ஷிப்பார். தகுந்த துணையுடன் சென்று வா.''

என்று உபதேசம் செய்ததைக்கேட்டு ரமாவின் மனம் உருகியது. பதில்பேச அப்போதும் வாயெழவில்லை. ''நான் வருகிறேன்; என் தாய் எனக்குத் துணைபுரிவாள்...சீமைக்குப்போக நான் கடுகளவும் ப்ரியப்பட வில்லை...ஆனால் என் கணவரின் ஆக்கினை...வருகிறேன்'' என்று நமஸ் காரம் செய்துவிட்டுக் கிளம்பி வந்தாள்.

வீதியில் காரிலேயே உட்கார்ந்திருந்த தேவராஜன்...''என்ன! யோகீச்வரரைத் தரிசித்து உபதேசம் பெற்றாயா?''...என்று ஏளனமாகக் கேட்டான். ரமா பதிலே சொல்லாது தலைகுனிந்து உட்கார்ந்தாள். காரும் பறந்து வீட்டிற்கு வந்தது...அன்று ரமாவின் சமயலையே ஆனந்தமாகப் புசித்தான்.

ரமா:—ஒரே ஒரு விண்ணப்பம்...தாங்களும் குழந்தைகளுடன் கூட வந்தால் ஊர் பார்த்ததுபோலவுமிருக்கும்...

என்று முடிப்பதற்குள் ''சரி சரி! இது வேறு பல்லவியா! நாம் பிரிந் திருந்தால்தான் ஆபத்தை ஜெயிக்கலாம் என்றால் கூட வருவதா? முடி யாது. குழந்தைகளை எந்த காக்காயும் தூக்கிக்கொண்டு போகாதபடி நான் பார்த்துக் கொள்கிறேன். உனக்குத்தான் கூட இன்னும் மூன்று லேடி டாக்டர்கள் வருகிறார்களே! சேர்ந்துபோய் சேர்ந்து இருங்கள். பய மென்ன?'' என்று சடக்கென்று அடக்கிவிட்டான். அதற்குமேல் என்ன சொல்வது?

பத்திரிகையில் விஷயமும் படமும் வந்தவுடனே ரமாவின் ப்ரியர்க ளுக்கெல்லாம் சந்தோஷம் பொங்கியது. தினம் அவளைப் பார்க்கக் கணக்கற்றவர்கள் வரவாரம்பித்தார்கள். செல்வச் சீமாட்டிகளும் ஜெமீந் தாரினிகளும் தினம் விருந்து வைக்கவும், வாழ்த்துக்கள் கூறுவதுமாகத் தொடங்கினார்கள்.

ரமாவின் வீட்டிற்குப் பலர் வந்து மாலைகள் சூட்டி, ''டாக்டர்! இதே புஷ்பமாலை தங்களுக்கு வாடாத, அழியாத புகழ்மாலையாக என்றென் றும் பிரகாசிக்கவேண்டும்'' என்று கூறிப் பன்னீர் தெளிப்பதும், குங்கும மிட்டு சந்தனம் பூசுவதுமாகத் தமது சந்தோஷத்தைத் தெரிவிக்கும்போது இதை தூரவிருந்து பார்க்கும் தேவராஜனுக்குப் பொறாமை ஜ்வாலை வீசு கிறது. முகத்தில் கொள்ளித்தனத்தின் வேகம் ஜ்வலிக்கின்றது. இருப்பி னும் காட்டிக் கொள்ளமுடியுமா!

அதேபோல் எவ்வளவு துக்கம் மனத்திற்குள் இருப்பினும் ரமா அவைகளை ஒரு சிறிதும் காட்டிக்கொள்ளாது நீறுபூத்த நெருப்புபோல் அடக்கிக்கொண்டு வருபவர்களிடம் வெகு சல்லாபமாய்ப் பேசி வழியனுப்பினாள். விருந்துகளும், உபசாரப் பத்திரங்களும் புகைப்படமெடுப்பதும், ப்ரசங்கம் செய்வதும், முதலியவைகளையெல்லாம் ஒரு எந்திர பொம்மை போல் நடத்திக்கொண்டாளேயன்றிப் பழைய தெம்பும், உத்ஸாகமும், ஆனந்தமும் ரமாவின் மனத்தில் மங்கியே போயின.

குறித்த தினத்தில் கப்பலேறவேண்டும். குழந்தைகளையும், கணவனையும் ரமா இதுகாறும் பிரிந்ததேயில்லையாதலால் அவள் மனது குழம்பியே கிடந்தது. சந்தோஷத்தை எட்டிப் பிடிக்கவும் கிட்டவில்லை. எல்லாம் விதி. விதி...என்று விதியின்மீது பாரத்தைப்போட்டு நடைபொம்மை போலிருந்தாள்.

"குழந்தைகளுக்கு இனி யார் அக்கரையாகச் செய்வார்கள்? கவனித்துக்கொள்ள கனிகரமுள்ளவர்கள் யார் இருக்கிறார்கள்?" என்று நினைக்கும்போது கணவன் வார்த்தைகளை மீறித் தான் போகாது நின்றுவிடலாமா என்றும் தோன்றியது. அடுத்தக்ஷணமே "உம்...தாய் செத்த குழந்தைகள் உலகில் வளரவில்லையா! அதுபோல் அதன் விதி யிருந்தது போலும்" என்று வைராக்யத்தில் திரும்பினாள்.

தகப்பனாரிடம் சமத்தாயிருக்கும்படியும், கடிதம் தவறாது எழுதும்படியும் குழந்தைகளுக்குக் கூறினாள். அதற்குமேல் அவைகளிடம் என்ன சொல்லமுடியும்? கணவனுக்காக கணவனிடமே தான் செய்த சபதத்தையும் அவனுக்காகவே அவன் க்ஷேமத்தைக் கோரி மாற்றும்படி இருந்தபோது மற்றைய விஷயத்திற்குத் தான் என்ன திட்டம் சொல்லமுடியும்? அவன் பாதமே கதி...என்று துணிந்தாள்.

மற்ற டாக்டர்களும் வெகு குஷியுடன் கிளம்பினார்கள். அன்று கப்பலில் புறப்படவேண்டும். ஏகப்பட்ட தடபுடல், உபசாரங்கள், மாலைகள், மரியாதைகள் சொல்லமுடியாது. தேவராஜனும், நாகராஜனும் சாமியார் உள்பட எல்லோரும் கலந்துகொண்டார்கள். ஹரிதாஸர்மட்டும் வரவில்லை. ரமா குழந்தைகளுக்குப் பல முத்தங்களிட்டு, கணவனை நமஸ்கரித்து, "தவறாமல் கடிதம் போடுங்கள். உங்கள் கடிதம்தான் எனது உயிர் நிலை. அதுதான் என்னைக் காப்பாற்றும். மறக்காதீர்கள்" என்றாள்.

வஸுந்தராதேவி, ஆத்மநாதன் முதலியவர்கள் வழியனுப்ப வந்தார்கள். வஸுந்தரா ரமாவுக்கு தைரிய வார்த்தைகள் சொல்லி தவறாது கடிதம் எழுதுவதாய் கூறினாள். குழந்தைகளின் கண்ணில் நீர் மளமளவென்று வந்து பெருகியது. ரமாவின் கண்ணிலும் நீர் அருவிபோல் ஓடியது. எல்லோரிடமும் விடைபெற்றுக்கொண்டு கப்பலேறினாள்.

இன்ன காரணமென்றே தெரியாமல்...தான் திரும்பிவராது அப்படியே போய்விடக்கூடாதா, என்கிற ஒரு தோற்றம் திடீரென்று ரமாவுக்கு உண்டாகியது. கப்பலின் வராண்டாவில் கைப்பிடியைப் பிடித்துக்கொண்டு நின்றாள். உலகம் அயோமயமாய் அவளுக்குத் தோன்றியதேயன்றி தான் ஏதோ உயர்ந்த படிப்புக்காக காணாத தேசத்தைக்கண்டு களிக்கப்போகிறோம் என்கிற சந்தோஷம் ஒரு கடுகளவும் தோன்றவில்லை...

அசையாப்பதுமைபோல் ரமா நின்ருலும் கப்பல் இடத்தைவிட்டு அசைந்து சென்றது. சிறிதுதூரம் சென்றதும் வந்த மனிதர்களும் இடத்தை விட்டு அசைந்து சென்ருர்கள், இதுகாறுமிருந்த ஆரவாரங்களும், கூச்சல்களும் அசைந்து சிறிது சிறிதாகக் குறைந்து மறைந்து சென்றன. ஆகாயத்தில் மேகங்களும் அசைந்து சென்றுகொண்டே இருக்கின்றன. ஆனல் ரமாவின் உள்ளத்தில் கொந்தளிக்கும் துயரப் புசல்காற்றின் வேகமும் ஓசையும் ஒன்றுகூடி கருங்கடலுடன் யுத்தம் செய்வதுபோல 'ஹா !' என்ற பெருஞ்சத்தத்தைக் கிளப்பி எழுப்பியது. ரமா நின்றவிடத்தை விட்டு அசையவே இல்லை. பைத்தியக்காரிபோல் அவள் நிற்பதைக் கண்டு குசமசவென்று பரிகாஸம்செய்து சிரிக்கும் குரல்கள் அவள் காதில் படவே இல்லை. குறும்பாகப் பார்க்கும் கண்களின் பார்வையும் அவள் கண்களில் படவே இல்லை.

தன் பிறவியில் இத்தகைய ஒரு காலமும் பிரிவும் இருந்ததை எண்ணி யெண்ணிக் கப்பலின் வேகத்துக்குச் சரியாய் பெருமூச்சு துரத்தியதேயன்றி வேறு உணர்ச்சிகளே தோன்றவில்லை. "நின்ற நிலையில் அப்படியே சமாதியாகிவிட்டாளே !' என்றும் சிலர் நினைத்தார்கள். இவ்வுலகத்தில் தான் இருப்பதாகவே அவளுக்குத் தோன்றவில்லை. ஒரே கலவரம்...ஏக்கம் முதலியவை அவள் இதயத்தைச் சூழ்ந்துகொண்டன. நீர்மேல் செல்லும் மரக்கலம்போல் அவளுடைய உயிரும் தத்தளித்தது.

20

குணவதியின் பெருமை—கொள்ளிப்பேய்களின் பொருமை

இதுகாறும் தாயை ஒருக்கணமும் பிரியாதிருந்த குழந்தைகளுக்கு துக்கம் தாங்காது வந்துவிட்டது. கப்பல் மறைய மறைய அழுகை வலுத்தது. 'அம்மா எப்போது வருவாள்?' என்று கேட்கத் துடங்கி விட்டன, 'நாளைக்கு வருவாள்; மறுநாள் வருவாள்' என்று சாக்கு சொல்லிச் சமாதானம் செய்தான். வீட்டோடு ஒரு வேலைக்காரியை வைத்து குழந்தைகளுக்கு வேண்டிய காரியங்களைச் செய்ய ஏற்பாடு செய்தான். கூலிக்கு மாரடிப்பவர்கள் எப்படி அருமையாய் பாதுகாக்க முடியும்?

இங்கு தாயை நினைத்துக் குழந்தைகள் கதறல், அங்கு கப்பலில் குழந்தைகளை எண்ணித் தாயின் தவிப்பு. என்னே புது நாகரிக மோகத்தின் விநோதம்! நாட்கள் ஓடிக்கொண்டே இருக்கின்றன. சில காலங் கழித்து தேவராஜனுக்கொரு கடிதம் வந்தது. அதில்

"டாக்டர்!

அன்று கப்பல் நகர்ந்த பிறகு நாங்களெல்லோரும் வெகு உத்ஸாகத்துடன் எங்கள் இடங்களுக்குச் சென்று ஆனந்தமாக இருந்தோம். ஆனல் ஸ்ரீமதி ரமாதேவி மட்டும் நீங்கள் பார்த்தபோது நின்ற இடத்தைவிட்டு அசையவே இல்லை. அவர்களும் தம் அறையில்

இருப்பார்களென்று போய் பார்த்ததில் அங்கு காணப்படாததால் வராண்டாவில் போய் பார்த்தோம். ஒரு நிலையில் புலம்பியபடியே தம்மை மறந்து நின்றிருந்தார்கள். நாங்கள் எத்தனைதரம் கூப்பிட்டும் தன்னைத் தொந்தரவு செய்யவேண்டாமென்று கூறிவிட்டார்கள்.

பிறகு நாங்கள் போய்விட்டோம். ஸீ ஸிக்னெஸ் என்னும் கப்பல் வியாதி அவரைப் பெரிதும் பாதித்து, ஓயாது மூன்று நாட்கள் வாந்தி எடுத்தார். அப்போதெல்லாம் நாங்களெல்லோரும் உதவி செய்தோம். கப்பல் பிரயாணத்தில் அவர் ஒருவரிடமும் கலக்கவே இல்லை. தன் அறையுண்டு தானுண்டு என்று இருந்தார். அவர்களை விளையாட்டில் புகுத்தவேண்டுமென்று நாங்கள் எத்தனை பிரயத்தனப் பட்டும் வீணாகியது. சந்தோஷமென்பதே இல்லாது பிரயாணத்தை முடித்து இங்குவந்து சேர்ந்தார்.

இப்போது எல்லோரும் ஒரு தனி விடுதியில்தான் இருக்கிறோம். இங்கும் அவருக்கு உத்ஸாகமோ, தெம்போ கடுகளவும் காணப்படவில்லை. முடுக்கிவிட்ட மெஷின்போல் இருக்கிறார். அன்னிய தேசத்திற்கு உயர்தர படிப்புக்காக அரசாங்கத்தாரால் அனுப்பப்பட்டிருப்பதால் எங்களைக் காணவரும் ஜனங்களின் எண்ணிக்கைக்கு அளவே இல்லை. தினம் தேனீர் விருந்துகளுக்கு அழைக்கிறார்கள். அதற்கு சிலவிடங்களுக்கு வருவதே இல்லை. உடம்பு சரியில்லை என்று சொல்கிறார்கள். சில இடங்களுக்குப்போய் ஒப்புக்கு உட்கார்ந்து வருகிறார்கள். கலகலப்பாக இருப்பதே இல்லை. என்ன காரணத்தினால் இப்படி இருக்கிறார்கள் என்று எங்களுக்குத் தெரியவில்லை. முகத்தில் உத்ஸாகமென்பதே காணவில்லை. ஊரைச் சுற்றிப் பார்ப்பதற்காகப் பலவந்தஞ்செய்தாலும் வருவதில்லை. அவர்களுக்குள்ள படிப்பும், தனிமை வாழ்க்கையுந்தான் அவர்கள் விரும்புவார்கள் போலும்.

இந்தியப் பெண்களே இப்படித்தான் உம்முணாமூஞ்சி என்றும், ஸோஷலாக மூவ்பண்ணத் தெரியாதவர்கள் என்றும் தனது சொந்த வாழ்க்கையிலேயே சுதந்தரமாய், ஆனந்தமாய் வாழச் சக்தியற்றவர்களென்றும், படித்துவிட்டால் மட்டும் ஆய்விட்டதா என்றும் எங்களிடம் சிலர் சொல்வதைக் கேட்கும்போது எங்களுக்கு மிகவும் வெட்கமாயும் ஆத்திரமாயுமிருக்கிறது. "ஏன்? நாங்களெல்லோரும் கலகலப்பாயில்லையா! அந்தம்மாளுக்கு உடம்பு" என்று கதைக்கட்டிப் பேசிவருகிறோம்.

எக்காரணம்பற்றி அவர்கள் அப்படியிருக்கிறார்களோ தெரியவில்லை. இவைகளைப்பற்றி அவர்கள் உங்களுக்குக் கடிதமெழுதியிருக்கிறார்களோ இல்லையோ தெரியாது. நீங்கள் தயவுசெய்து அவர்களுக்கு நன்றாக நடந்துகொள்ளும்படிக் கடிதம் எழுதுங்கள். அதற்காகவே நாங்கள் இதை எழுதுகிறோம். மற்றபடி பின்.

இங்ஙனம்
லேடி டாக்டர்களான
பவானி, வர்த்தனி, ஜோஸப்"

என்றிருந்ததைப்படித்ததும் தேவராஜனுக்குக் கோபமும் கலவரமும் உண்டாயின. அதே தபாலில் வந்துள்ள ஒரு பத்திரிகையைப் பிரித்தான். அதில் முதல் பக்கத்திலேயே ரமாவின் புகைப்படத்தைப் பெரிதாகப் போட்டிருந்ததோடு,

> "இந்தியாவிலிருந்து துரைத்தனத்தாரால் தேர்ந்தெடுக்கப்பட்டு இங்குவந்துள்ள லேடிடாக்டர். ஸ்ரீமதி ரமா தேவியை "ஸ்டார்" என்கிற பத்திரிகையின் ஆசிரியரான ஸ்ரீமதி ஜான்ஸன் அவர்கள், பேட்டி கண்ட விவரம் மூன்றுவது பக்கத்தில் காணவும்."

என்று வரைந்திருந்ததைப் பார்த்ததும் வெகு ஆவலுடன் அந்தப்பக்கத்தைத் திருப்பினுள்.

ஜான்ஸன்:—நமஸ்காரம், உங்களைப் பார்க்கவேண்டுமென்று வெகு ஆவலாக வந்திருக்கிறேன், பேசலாமோ! அவகாசம் உண்டா! நான் ஒரு பத்திரிகையின் ஆசிரியை, இம்மாதிரி முக்கியமான அறிவாளிகளை, அதிலும் பெண்களைப் பேட்டி காண்பதென்றுல் எங்கள் நிருபர்களை அனுப்புவதில்லை. நானே நேரில் வருவதுதான் வழக்கம். தங்களைப் பற்றி இந்தியாவில்வெளியாகும் பத்திரிகைகளில் படித்துப் பரம சந்தோஷமடைந்தேன். அதனுல் பார்க்க வந்தேன், இவ்வூர் உங்களுக்கு எப்படியிருக்கிறது? பிடிக்கிறதா!

ரமா:—வாருங்கள். உட்காருங்கள்; உங்கள் வருகைக்கு நான் மிக்க சந்தோஷமடைகிறேன். சிற்சில காரியங்களைத் தாமே நேரில் செய்வதைப்பற்றி நான் மிகவும் பாராட்டுகிறேன். என்னுடைய அனுபவத்தில் அதன் நன்மைகளைக் கண்டுமிருக்கிறேன். முக்யமான சில நோயாளிகளை நானே நேரில் சென்று பார்த்து சிகிச்சை செய்வதற்கும், என் கீழுள்ள டாக்டர் அல்லது நர்ஸ் முதலியவர்களை அனுப்பிப் பார்க்கச் செய்வதற்கும் வித்யாசமிருக்கிறது. சில விஷயங்கள் அவர்கள் கண்ணுக்குப் புலப்படாமலோ, அன்றி தெரியாமலோ இருக்கலாம். அந்த ஒரு அல்ப விஷயத்தினுலேயே வியாதியின் பலம் அதிகரிக்கலாம். அதைப் பார்த்து வேரறுத்துவிட்டால் வியாதி குணமாகிவிடும் பாருங்கள். இந்த ஊர் பிடிக்கிறதா என்று கேட்கிறீர்கள். நீங்கள் இந்தியாவுக்கு வந்திருக்கிறீர்களே! அது உங்கள் மனத்திற்கு எப்படி இருந்ததோ, அப்படித்தான் இருக்கும் எனக்கு. மனுேதர்மம், மன உணர்ச்சி இவைகள் அநேகமாக எல்லோருக்கும் ஒன்றுகவேதான் உதிக்கச் செய்வார் கடவுள். குழந்தைகளுக்குத் தன் தாயின் பாலைப்போல் மற்ற புட்டிப்பால் பிடிக்குமா! இனிக்குமா!

ஜான்:—பேஷ்! உங்களுடைய உதாரணத்தை நான் மெச்சுகிறேன். உண்மைக்கு என்றும் அதிக மதிப்பேயன்றி போலிக்கல்ல. இன்னும் சிலரை நான் பேட்டிகண்டு, இதே கேள்வியைக் கேட்டபோது "ஆகா! பேஷாய்ப் பிடித்திருக்கிறது. இங்கேயே இருந்துவிடலாமா என்று நினைக்கிறேன்" என்றெல்லாம் சொல்லியிருக்கிறுர்கள். ஆனுல் அது இதயத்திலிருந்து வரும் வார்த்தைகளல்ல என்பது என் மனத்திற்கு நன்றுகத்

தெரியும். தாய்ப் பாலில்லாத சமயம் போட்டுப்பாலே விட கதி இல்லை யென்று அவசியத்தால் குடிப்பதுபோல் காரணார்த்தம் ரஸிக்கவேண்டியது அவச்யந்தான். நான் இந்தியாவுக்கு வந்திருக்கிறேன். உங்கள் பதிலை நான் பெரு மகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன்...எங்கள் தேசத்து ஸ்திரீகளைப்போல் உங்கள் தேசத்துப் பெண்கள் சுதந்தரமான வாழ்க்கை நடத்துகிறார்களா! ஏன் அடிமைகள்போலிருக்கிறார்கள்?

ரமா:—கோபிக்கக்கூடாது. மன்னிக்கவேண்டும்...உங்கள் தேசத்து சுதந்தரம் எங்கள் தேசத்திற்கு விபரீதமானதாக முடியும். எங்கள் தேசத்துப்பெண்களுக்கு சுதந்தரம் இல்லை என்று தாங்கள் நினைப்பது தவறு. உங்கள் தேசப்பழக்கங்கள், சீதோஷ்ண நிலைமை, சட்டதிட்டம் முதலியன எல்லாம் வேறுபட்டவை. எங்கள் தேசத்துப்பெண்கள் ஒவ்வொருத்தியும் பரிபூரண சுதந்தரத்துடன் இருக்கிறாள் என்பதை நான் பெருமையுடன் கூறுவேன். "காணாமல் கலப் பால் சுரக்கும்" என்று ஒரு குட்டைப் பசுவைப் பார்த்து எங்கள் பாஷையில் ஒரு பழமொழி சொல்வதுண்டு. அதுபோல் வெளிப்பகட்டோ, டம்பமோ இல்லாது ஒவ்வொரு பெண்மணியும் தம்தம் குடும்பத்திற்குச் சர்வாதிகாரியாயிருக்கிறாள். விவாகரத்து என்கிற பிசாசு எங்கள் தேசத்துக் குடும்பங்களைப் பிடிக்காதிருப்பதால் புருஷனும் மனைவியும் தேனும் பாலும்போல் ஒற்றுமையாய், அரசனும் மந்திரியும்போல் குடும்பத்தை நடத்துகிறார்கள். குடும்பத்தில் அவளுடைய சட்டங்களுக்குமேல் சட்டம் ஏது? சுதந்தரத்துடன் சகலமும் செய்யும் பெருமை எங்கள் நாட்டில் அழியாச்சுடராயிற்றே! அவள் யோசனையைக்கேளாது அவளுடைய குடும்பத்தில் ஒன்றுமே நடக்காது. படித்து உத்தியோகங்கள் செய்பவர்களாயினுங்கூட கணவனுடன் ஒத்து எத்தனையோ ஆனந்தமாக வாழ்க்கை நடத்துகிறார்கள். சுதந்தரமில்லாது குடும்பத்திற்கு அதிகாரியாக முடியுமா?

ஜான்:—அப்படியானால் உங்கள் தேசத்துக்குடும்பங்களில் சண்டையே இல்லை என்று கூறுகிறீர்களா!

ரமா:—(நகைத்துக்கொண்டே) கரைகாண முடியாத கடலில் நல் முத்துகள், ரத்தினங்கள் எல்லாம் இருக்கின்றன. இதைத்தான் உபமானமாகக்கொள்ளவேண்டும். ஆகாயம் முழுதும் துலாம்பரமாய் இருக்க முடியுமா! சிற்சில இடங்களில் மேகம் சூழ்ந்துதானே இருக்கிறது. அதுபோல்தான் குடும்பங்களிலும் இருக்கும். நன்மைக்குத்தானே நன்மதிப்பு, அதைத்தானே கூறவேண்டும். எங்கள் தேசம் வேண்டுமானால் அடிமையேயன்றி எங்கள் மக்களின் இதயத்திலோ இல்வாழ்க்கையிலோ அடிமையில்லை. பரிபூர்ண சுதந்தரத்துடன்தான் வாழ்கிறார்கள். (என்றபோது ரமாவின் கண்களில் நீர் முட்டியதை நன்கு அறிந்தேன்.)

ஜான்:—பேஷ்...உங்கள் நாட்டு ஸ்திரீகளுக்கு எந்த விஷயத்தில் அதிக ச்ரத்தை?...உழைத்துப் பொருள்தேடுவதிலா? உட்கார்ந்து உண்பதிலா?

ரமா:—(பெரிதாக நகைத்து) இரண்டிலும் இல்லை. தங்கள் கற்பைக் காத்துக்கொள்வதிலும் தங்கள் கணவன், குழந்தைகள் முதலியவர்களின் க்ஷேமத்திற்காகப் பாடுபடுவதிலும், முக்திக்கு வேண்டிய நன்மார்க்கத்தில் ஒழுகுவதிலுந்தான் அதிக கவனத்தைச் செலுத்துவார்கள். இதற்கு அனு

குணமாக உழைக்க முடிந்தவர்கள் உழைப்பது, பொருள் சம்பாதிப்பது முதலியவைகளைக் கவனிப்பார்கள். தொழிலுக்காகவும் பொருள் சேர்ப்ப தற்காகவும் மற்ற தர்மங்களை விடவேமாட்டார்கள். சாப்பாட்டில் முக் கியமானது சாதம் எப்படியோ, அப்படி பெண்களுக்குத் தங்கள் ஒழுக்க மும் கற்புந்தான் முக்கியம். இதைத்தான் எங்கள் பெரியார்கள் பல நூல்களின் மூலமும் விளக்கிப் போதிப்பார்கள்.

ஜான்:—விவகாரத்து சட்டம் உங்கள் தேசத்துக்கு வந்தால் நீங்கள் வரவேற்பீர்களா?

ரமா:—இந்தக் கேள்வியை என்னிடம் கேட்பதே அனுவச்யமாகத் தோன்றுகிறது. எங்கள் நாட்டின் பெண்மணிகளுக்குக் கற்புதான் உயிர் நிலை. அதுதான் பூஷணம். அதுதான் ஜீவநாடி. அதைப்பற்றி நான் அழுத்தமாகச் சொல்லும்போது விவாகரத்து என்ற பேச்சு அவசியமே இல்லையே! துர்ப்பாக்கியம் நிறைந்த அச்சட்டம் வரவே வேண்டாமென்று தான் பகவானை ப்ரார்த்தனை செய்கிறேன். ஒரே கணவனுடன் இல் வாழ்க்கை நடத்திக் காலம் முடியும் இன்பம், பல கணவன்களிடம் மாறி மாறிச் செல்லும் பெண்கள் அடையமுடியுமா என்பதை உங்கள் தேசத்தி லேயே இரண்டுவிதமான அனுபவமும் உள்ள பெண்களைக் கேட்டால் தெரியுமே: ஒரு குழந்தைக்கு அதன் ஒரே தாயார் எப்படி முக்யமோ, அப்படித்தான் கணவனும். எந்த ஜாதியாயினும் எந்த மதமாயினும் கட வுள் ஒருவனே இருக்கிறுன் என்று நம்புகிறோம். எங்கள் நாட்டுப்பெண் களுக்குக் கணவன் ஒருவனே என்பதுதான் உறுதி...நெறிதவறி நடப்ப வர்கள் எந்த நாட்டிலும் இருக்கிறுர்கள். ஒருவண்டி நிறைய மாம்பழம் கொண்டுவந்தால் அதில் அழுகல், சொத்தல், புழுத்தல், வெம்பல், புளித்தல் முதலிய பல ரகங்கள் இருக்கும். நல்ல உயர்ந்த இனிப்புள்ள பழத்தைத் தானே மக்கள் விரும்புகிறுர்கள். அதுபோல் கெட்டுப்போன ஸ்திரீகளும் எத்தனையோபேர் இருக்கலாம். நான் இல்லை என்று சொல்லவரவில்லை. ஆனல் உயர்ந்ததைத்தானே ப்ரபலப்படுத்தவேண்டும். அதுதானே பயன் படுவது...?

ஜான்:—கல்யாணமில்லாமலேயே ஒரு பெண் எங்கள் நாட்டில் காலம் கடத்தமுடியும். உங்கள் தேசத்தில் அதைப்பற்றி என்ன சொல்கிறீர்கள்?

ரமா:—அந்த கோஷ்டியில் நான் சேர்ந்தவளல்ல என்பதை நீங்க ளறிந்திருக்கலாம். கல்யாணமில்லாது ஒரு பெண் வாழமுடியுமா! மனோ வலிமை உண்டா! ஆத்மசுத்தி உண்டா! என்பவைகள்வரையில் போகவே வேண்டாம். ஒரு பெண்ணானவள் ஒரு கொடிக்குச் சமானமானவள். அக்கொடி ஒரு மரத்தையோ, கழியையோ தழுவித்தான் ஏறவேண்டும். கல்யாணமில்லாத ஒண்டி வாழ்க்கை உப்பு சப்பற்ற பதார்த்தம் போன் றதுதான். அப்படி இருப்பவர்கள் நூற்றுக்கு 99 பேர்கள் திடமான இதயத்துடன் ஒழுக்கமாக நடப்பதே இல்லை. ஆயிரத்திற்கு ஒருவர் பரி சுத்தையாய் இருக்கலாம்; இல்லை என்று சொல்லமுடியாது. கல்யாண மாகியவர்களையே வம்பர் கூட்டத்தின் வாய்க்கு இரையாகும்படி அவ தூறுகள் வந்து சூழும்போது கல்யாணமாகாதவர்களைப்பற்றிக் கூறவேண் டாம். அபக்யாதி என்ற காற்று வீசிக்கொண்டேதானிருக்கும். கல்யா

ணமே வேண்டாமென்ற எத்தனையோ பெண்கள் கிழவியாகும் வயதில் கல்யாணம் செய்துகொண்டு கணவனின் துணைக்குப் பாத்திரமாகிறதை யும் நான் கண்டிக்கிறேன். ஸ்திரீகளின் மனம் வைராக்யத்தில் சிறந்தது என்பதை ஒப்புக்கொள்கிறேன். இருப்பினும் கபட உலகத்தில் தீயர் களின் ஜ்வாலை அந்த வைராக்கியத்திற்குப் பங்கத்தை விளைவித்துவிடும் என்பதே எனது துணிவு என்னிடம் வைத்தியத்திற்கு வரும் பெண்களில் கல்யாணமாகாத கர்ப்பவதியானதும், கணவனை இழந்து கர்ப்பவதி யானதுமான பெண்களை நான் நன்ருகத் திட்டி புத்திமதிகள் கூறியிருக் கிறேன். அதனால் எனக்கு இதுவிஷயத்தில் மற்றவர்களைவிட அதிக அனு பவம் உண்டு.

ஜான்:—இந்த விஷயத்தை நானும் ஒப்புக் கொள்கிறேன்...குழந் தையே வேண்டாமென்று சிலர் சொல்கிருர்களே, அதைப்பற்றி உங்கள் அபிப்பிராயமென்ன?

ரமா:—ஒரே வார்த்தையில் சொல்லிவிடலாமே: ஒரு மனிதன் தனக் குக்கண்களே வேண்டாமென்று சொன்னல் எப்படியிருக்குமோ அப் படித்தான் அந்த வார்த்தையும் இருக்கும். சக்திக்கு மீறிய அதிகமான குழந்தைகள் வேண்டாமென்று சிலர் கூறுவதை வேண்டுமானல் ஒரு சிறிது ஒப்புக்கொள்ளலாம். அதிலும் கடவுளின் செயல் ஒன்று இருக் கின்றதென்பதை நம்பும் என்போன்றவர்கள் அதைக்கூட சொல்லமுடி யாது. ஆண்டவன் அன்று விதித்த சட்டத்தை இன்று மனிதனல் மாற்றமுடியுமா? ஈச்வரனையும் ஜெயிக்கும் சக்தி மனிதனுக்கு வந்துவிட்ட தென்ருல் யுகம் முடிந்து விட்டதா! அந்த விஷயத்தில் மற்ற முறைகளை விட மகாத்மா காந்தி கூறும் பிரம்மச்சர்ய அநுஷ்டானமே மிகச் சிறந்த தும் வியாதிக்கு அதிக சலுகை காட்டாததுமாயிருக்குமென்று நானும் கூறுவேன்.

ஜான்:—உங்கள் நாட்டுப் பெண்களில் பெரும்பாலோர் மிகவும் பல வீனமாயும் வியாதியஸ்தர்களாயுமிருக்கிருர்களே, ஏன் திடமாக இல்லை? பால்ய விவாகத்தினல்தான் அப்படியிருக்கிருர்கள் என்று சிலர் சொல் வது உண்மையா!

ரமா:—இந்த கேள்விக்கு எந்த நாடும் இலக்கானதேயாகும். உங்கள் நாட்டில் பலவீனர்கள், வியாதியஸ்தர்கள் முதலியவர்கள் இல்லையா? எங்கள் தேசத்தின் சீதோஷ்ண நிலைமைக்குத் தக்கவாறு யாவும் அமை கின்றன. பால்ய விவாகத்தினல்தான் என்பதை நான் ஒப்புக்கொள்ளவே முடியாது. எங்கள் தேசத்தில் சாஸ்திரத்தில் பெண்களுக்கு 7 வயதில் கல்யாணம் செய்தால் அனேக புண்ணியம் உண்டு என்று இருக்கிறது. அந்த நம்பிக்கையின்மேலேயே அக்காலத்தவர்கள் நடந்துவந்தார்கள். அக்காலத்தில், செயற்கையால் உண்டாகி சுகம் கொடுப்பதுபோல் காட்டி அத்தனையும் கேட்டை விளைவிக்கும் நவநாகரிகங்கள் சற்றுமில்லை; இயற் கையின் இன்பங்களை தாராளமாக அனுபவித்து அதன் நற்பயனை அடைந்து வெகுதிடமாக வாழ்ந்துவந்தார்கள். ஆகாராதிகளில் சாஸ்திரம் ஆசாரம் இரண்டின் உதவியையும் கொண்டு ஒரு நிர்ணயத்துடன் இருந்த

தால் வியாதி என்கிற அரக்கன் கிட்ட அணுகமுடியாது ஓடினன். அதோடு நல்ல உழைப்பும், நல்ல ஜலத்தில் ஸ்நானமும், அவர்களுக்கு இன்னும் ஆரோக்யத்தையும் வலுவையும் கொடுத்துவந்தன. அவர்கள் நீடித்த சுகிகளாயும், ஆயுர் ஆரோக்யமாயும் இருந்தார்கள்.

இக்காலத்தில் அந்த அம்சங்களில் எது இருக்கிறது? சாஸ்திரங்களில் நம்பிக்கை இல்லை. ஆசாரத்தில் ச்ரத்தையில்லை. கண்டபடி தின்பது, கண்டபடி உலாவுவது, நல்ல நீரில் ஸ்நானம் செய்வதில்லை. ஆறுகள் ஏரிகள் குளங்கள் முதலியவைகளுக்குப் போவதென்றால் நாகரிகத்தின் விபரீதத்தில் அவமானம்...போவதில்லை. இரவில் சினிமாவும், ட்ராமாவும் பார்த்துக் கண்விழிப்பதும் காலை 8 மேணிவரையில் தூங்குவதும் வியாதியை வரவழைக்க முதல் தாம்பூலமாகிறது.

சூரியன் முதன்முதல் புறப்படும்போது கண் விழித்திருந்து சூரியனை நமஸ்கரித்தால் சூரியனைக்கண்ட தாமரைகள் மலர்ந்து ப்ரகாசிப்பதுபோல் மனிதர்களின் கண்களும் மலர்ந்து ப்ரகாசிப்பதோடு கண்களில் ஒரு சிறிய கல்மஷமும் சேரவிடாது சூரியக்கிரணம் இழுத்துக்கொண்டு நல்ல பார்வையைக் கொடுக்கும் என்பது பழய சாஸ்திரம். அதை அனுஷ்டித்ததினால்தான் பெரியவர்கள் நூறு வயதிருந்தாலும் கண்கள் மங்காது ஒளியுடன் வாழ்ந்தார்கள். இம்மாதிரி காரணங்கள் அனேகம் இருக்கின்றன. அக்கால நன்மைகள் மறைந்ததன் பலன் இக்காலத்தில் வ்யாதிகள் நிறைந்தன என்றுதான் நான் சொல்வேன். இக்காரணங்களால்தான் நீங்கள் கேட்டபடி பெண்களில் சிலருடைய நிலைமை அமைந்துள்ளது.

ஜான்:—பேஷ்... உங்களுடைய ஆழமான நம்பிக்கையையும் ஆராய்ச்சியையும் நான் மிகவும் பாராட்டுகிறேன்... கவர்மெண்டு உங்களைத் தேர்ந்தெடுத்தது மிகமிகப் பொருத்தமானதாகும் என்பதில் சந்தேகமே இல்லை. தங்களிடம் மருத்துவமுறைகளைப்பற்றித்தான் கேள்விகள் கேட்கவேண்டுமென்று சிலர் அபிப்ராயப்பட்டார்கள். மருத்துவத்தைப் பற்றிப் பலரைக் கேட்டாயிற்று. தங்களுடன் வந்துள்ளவர்களையும் அதைப்பற்றியே கேட்டதால் தங்களிடம் பொதுவிஷயமே எடுத்துக்கொண்டேன்.

ரமா:—அதுதான் எனக்கும் சந்தோஷம்...

ஜான்:—நாளைய் தினம் எங்கள் ஸ்திரீகள் சங்கத்தில் தங்களுக்கு தேனீர்விருந்து வைத்திருக்கிறோம்; கட்டாயம் தாங்கள் வந்து, உங்கள் தேசத்தின் சிறப்பைப்பற்றியும், உங்கள் தேசத்து பெண்களைப்பற்றியும் ஒரு உபன்யாசம் செய்யவேண்டும். நான் விடை பெற்றுக்கொள்கிறேன் மெத்த சந்தோஷம். வந்தனம்.

ரமா:—அவசியம் வருகிறேன். உங்களுடைய அன்பிற்கு அனேக வந்தனங்கள்.

என்றிருந்ததை தேவராஜன் தன்னையறியாத உணர்ச்சியுடன் படித்து முடித்தான். அவன் இதயத்தில் விவரிக்க முடியாத ஏதேதோ உணர்ச்சிகள் ஒன்றன்பின் ஒன்றாகச் சூழ்ந்துகொண்டன. அதே பக்கத்தில் மற்றொரு பத்தியில்,

டாக்டர் ஸ்ரீமதி ரமாதேவியின் அம்ருத குணம்.

"இந்தியாவிலிருந்து துரைத்தனத்தாரால் தேர்ந்தெடுக்கப்பட்டு இங்கு வந்திருக்கும் லேடி டாக்டர், டாக்டர் ஸ்ரீமதி ரமா தேவியைப் பற்றி இந்தியாவிலிருந்து வரும் பத்திரிகைகளில் படித்து மகிழ்ச்சியடைந்திருந்தேன்: அவர்களை நேரில் பேட்டிகாணச் சென்றிருந்தேன். அச்சமயம் அவர்கள் கடவுளின் படத்திற்கும் தன் கணவனின் படத்திற்கும் முன்பு ஒரு விளக்கேற்றி வைத்து அப்படங்களுக்கு ரோஜா மாலையைச் சூட்டி ப்ரார்த்தனை செய்துகொண்டிருந்தார்கள். அதைப்பார்த்த உடனே எனக்கு ஆச்சரியமும் ப்ரமிப்பும் அதிகரித்தன.

கடவுள் படத்திற்குச் சமமாக கணவனின் படமெதற்கு வைத்திருக்கிறார்கள் என்று வியப்புடன் நோக்கியவாறு, என் வரவைத் தெரிவித்தேன். அந்தம்மாளின் அன்பும், மரியாதையும் கூறத்திறமே இல்லை. என்னை உட்காரும்படிக் கூறி வந்தனமளித்தபின், தனது பூஜையை முடித்துக்கொண்டு அதற்கு நிவேத்தியம் செய்த பழங்களில் சிறிது எனக்கும் கொடுத்துத் தானும் சாப்பிட்டார்கள்.

தானே தன் கையால் ஸ்டவ்வில் காப்பி தயார்செய்து எனக்குங் கொடுத்துத் தானும் புசித்தார்கள். என்ன புன்சிரிப்பு! எவ்வளவு சாந்தம்! வாக்கில் என்ன இனிமை! முகத்தின் சோபையைத்தான் என்னென்பது? "கணவன் படம் எதற்குக் கூடயிருக்கிறது?' என்றேன்.

அதற்கவர்கள் சிரித்துக்கொண்டே, "எங்கள் ஹிந்து தர்மத்தின் உபதேசப்படிக்கு "பேசாத தெய்வம் கடவுள்; பேசும் தெய்வம் கணவன்" என்பதுதான் தத்வம். எங்கள் தேசத்தில் பெண்கள் முதன்முதல் காலையில் எழுந்த உடனே கணவனின் பாதத்தைத் தொட்டுக் கண்ணில் ஒற்றிக்கொண்டுதான் எழுந்துவருவார்கள். எனக்கு இப்போது அவர் அருகில்லாததால் இப்படமே அவராகத் திகழ்கின்றது" என்றார்.

எனக்கு ஆச்சரியம் சொல்ல முடியவில்லை. இத்தனை உயர்ந்த ஸ்திதியிலிருந்தும் கொஞ்சங்கூடக் கர்வமென்பதே இல்லை. வெகு எளிய வாழ்க்கை நடத்துகிறார்கள். டாடோபமோ, வீண் டம்பமோ அவரிடம் ஒரு திவலையும் காணப்படவில்லை. அவரை நான் பேட்டி கண்டு பேசிய விவரம் இதே பக்கத்தில் பார்க்கலாம். அவர்களுடைய குணமே அவர்களை புகழின் உச்சத்திற்குக் கொண்டு செல்கிறது என்பதில் ஐயமே இல்லை. ஸ்ரீமதி ரமாதேவியின் சங்கீதத்திறமையை எடுத்துக்காட்ட அவருடைய வீணை முதல்காட்சியளித்தது. இனிமையாகப் பாடி அவர்கள் தேசத்து சங்கீதக்கலையின் நுட்பங்களைச் சிறிது விளக்கினார்கள். இத்தகைய நாரீமணியை, சகல விஷயங்களிலும் மேன்மை வாய்ந்த சதிமணியை அடைந்துள்ள பெருமை அவரை மணந்துள்ள கணவரின் அதிருஷ்டமெனலாம். அவர் வந்துள்ள காரியத்தில் ஜயம் பெற்றுப் பின்னும் புகழ்மாலையுடன் தாய்நாடு செல்லவேண்டிய அருளைக் கடவுள் கொடுப்பாராக."

என்ற புகழுரைகளையும் படித்தான். அவனுக்கு ஒன்றுமே தோன்றாது தலை சுழன்றது. ரமாவின் புகழுக்கு மகிழவும் தெரியவில்லை.

அவள் தன்னைக் கடவுளாக எண்ணியிருப்பதற்கு வியக்கவும் தோன்ற வில்லை. மூளை குழம்பியவன்போலாகிவிட்டான். "ரமா!...ரமா!...ரமா தேவி...புகழ்மாலை...ரமாவுக்குப் புகழ்மாலை"...என்று பித்தன்போல் அவன் வாய் முணுமுணுத்தது.

21

குன்றளாவும் புகழ்—வானளாவும் துன்பம்

வெளிநாட்டில் பக்ஷியைப்போல் தனியாக விருக்கும் ரமாவுக்குத் தன் படிப்பு உண்டு, தான் உண்டு. அனாவச்யமான இடங் களுக்குப்போவதிலோ வீண் களியாட்டங்களில் பணத்தையும் பொழு தையும் செலவழிப்பதிலோ அவள் சற்றும் நாடவில்லை. நிம்மதியான தனி வாஸத்தில் அவள் மூழ்கினாள். குழந்தைகளையும், கணவனையும் பற்றி நினைக்கும்போதுமட்டும் மனது வெறிபிடித்தலையும். அன்பு வெறிக்கு யோசனைதான் தக்க மருந்து. பழங்கதைகளைப்பற்றி யோசனைசெய்து மனத்திற்குச் சாந்தியைத் தேடிக்கொள்வாள்.

இவளைப்பற்றி நன்றாக அறியாதவர்கள், இவள் வெறும் பட்டிக்காடு, உம்முணாமூஞ்சி என்று கேலியும் செய்வார்கள். ஆனால் ரமா அவைகளைக் காதில் போட்டுக் கொள்வதே இல்லை. ஸ்திரீகள் சம்மந்தப்பட்டக் கூட்டங் களின் அழைப்பிற்குத் தவறாது சென்று கும்மாளமடித்துவிட்டு வராமல் ஒவ்வொருகூட்டத்திலும் தன் தாய்நாட்டின் பெருமையைப் பற்றியும், தாய்நாட்டுப்பெண்களின் சிறப்பைப்பற்றியும் இந்து மதத்திலுள்ள அனேக குட்டிக் கதைகளின் மூலம் பல நீதிகளைக் கூறி, ப்ரஸங்கம் செய்து மக்களை மகிழ்விப்பாள். அதோடு, கலைத்தெய்வத்தின் பெருமை யைப் புகழ்ந்து கூறுவாள். வைத்திய முறையில் அனேக விஷயங்களை விளக்கிக் கூறிப் புதிய புதிய மருந்துகளையும் ஆராய்ச்சிகளையும் கண்டு பிடித்து, மட்டற்ற உத்ஸாகத்துடன் சலிக்காது உழைக்கும் திறமை பெற வேண்டிய மார்க்கங்களையும் கூறுவாள். 'அதோடு அதிக செலவில்லாது எளிய முறையிலாகக்கூடிய மருந்துகளைக் கண்டுபிடித்து ஏழைகளுக்கு உதவவேண்டும்' என்றெல்லாம் கூறுவதைக்கேட்டு மற்றவர்கள் அவளி டம் வலுவில் அன்புகொண்டு பேச வரத் தொடங்கினார்கள்.

எந்த யுகத்திலும், எந்த காலத்திலும், எந்த புராணக் கதைகளிலும் ஒரு எதிரி இல்லாது இயற்கை நகர முடியாதல்லவா! ஆரம்பத்தில் கூனி யும், கைகேசியும் பிறகு சூர்ப்பனகை, ராவணன் முதலிய எதிரிகளும் தோன்றவில்லையென்றால் ராமாயணம் பெருகுவதேது? அதேபோல் கம் ஸன், பூதகி, சிசுபாலன் சகுனி, துர்யோதனன், முதலிய சத்ருக்கள் இல்லையென்றால் பாகவதம், பாரதம் முதலிய கதைகள் நம் முன் எப்படி காக்ஷிகொடுக்கும்? ஹிரண்யன் உதிக்காதிருந்தால் ப்ரகலாதனின் பெருமை எப்படி ப்ரகாசிக்கும்? மாற்றாந்தாயான சுருசி உதயமாகவில்லை யென்றால் த்ருவனின் தனியுலகத்துச் சிறப்பு எப்படி ஜ்வலிக்க முடியும்?

ஒரு குட்டிக் கலக நாரதர் இல்லாதிருந்தால் பல்லாயிரக்கணக்கான புராணக் கதைகள் புதையல்போல் நமக்கெப்படிக் கிடைக்கமுடியும்? சர்க்கரைக்கு எதிர் எட்டிக்காய் இருந்தால்தான் சர்க்கரையின் இனிப்பு நன்கு புலப்படும்.

அதேபோல் ரமா கலிகாலத்தில் தோன்றிய கற்பனை மங்கையாயிற்றே! அவளுக்குமட்டும் எதிரிகள் தோன்ருதிருக்கமுடியுமா! கூடவந்த லேடி டாக்டர்களுக்கு ரமாவைப்பற்றி லண்டன் பத்திரிகைகளில் தினம் வருவதைப் பார்க்கப் பார்க்க பொருமை ஜ்வாலை வீசியது. இவர்களையும் துரைத்தனத்தார்தான் அழைத்திருக்கிருர்கள்; இவர்களுந்தான் சகலமான விருந்துகளுக்கும் போகிருர்கள்; இவர்களுந்தான் பேசுகிருர்கள். ஆனல் அவைகள் சாதாரண சமாச்சாரப்பத்திரிகையில் வருவானேன், இவள் விஷயம் புகைப்படங்களுடன் ப்ரமாதமாக வருவானேன்? என்கிற எரிச்சலால் ரமாவை விரோதியைப்போல் பாவிக்கவும் துணிந்தார்கள்.

அந்த ஆத்திரதில்தான் முதல் பாணம் அதிக ஜ்வாலையில்லாது ஒரு மாதிரியாக தேவராஜனுக்கு விடுத்தார்கள். அதற்கு தேவராஜன், கடிதத்திற்காக வந்தனமென்றும் தான் ரமாவுக்குத் தாராளமாய்ப் பழகும்படி எழுதுவதாயும் எழுதியிருந்தான். அதுவே அவர்களுக்குப் பரமசந்தோஷமாகிவிட்டது. அவர்களால் ஆனமட்டும் ரமாவைத் தம்முடன் அலைவதற்கு அழைத்தும் வராதது கோபமுண்டாக்கியது. அதோடு ரமாவை பேட்டிகண்ட விவரங்களை ப்ரமாதமாக ப்ரசுரித்ததோடு அவளைப்பற்றித் தனியாயும் புகழுரை எழுதியிருந்ததுகண்டு பின்னும் ஆத்திரம் உண்டாகியது. இவைகளெல்லாம் ஒன்றுகூடி பின்னும் ஒரு கடிதத்தை எழுதத் தூண்டியது.

ஸ்திர புத்தியற்ற தேவராஜனுக்கு முன்போலில்லாது சிறிது வருமானம் வரத்தொடங்கியது. நாகராஜனின் நேசத்தில் அவனுக்கு உண்டாகிய குடிப்பழக்கத்திற்குக் கேட்பாரற்றுவிட்டதால் வருமானத்திற்குமேல் கடன் வாங்கியும் குடிக்கவாரம்பித்தான். நாகராஜனின் விதவைச் சகோதரியான அகிலாண்டத்தின் நட்பும் நேசமும் நாளுக்குநாள் குடியின் மூலமே வளர்ந்தது. இத்தனை ஒற்றுமைக்குக் காரணம் அந்த மகா உத்தமியும் குடிப்பதில் கைதேர்ந்திருப்பதேயாகும். ரமா ஊரைவிட்டுச் சென்ற இரண்டு மாதங்கள் வரையில் தேவராஜன் ஒவ்வொரு கப்பலுக்கும் கடிதம் எழுதுவதோடு குழந்தைகளையும் எழுதச்செய்து வந்தான். இதற்குள் இந்த புண்ணியவதியின் சினேகம் விபரீதப் போக்கில் உண்டாகியதால் அவன் மதியே மயங்கியது.

குழந்தைகளைக்கூடச்சரியாய்க் கவனிக்காமலும் வீட்டில் தங்காமலும் ரமாவுக்குக் கடிதம் எழுதாமலும் ஊர் சுற்றவாரம்பித்தான். குடித்துவிட்டு வெறிபிடித்திருக்கும் இவனிடம் நோயாளிகள் வருவதற்கும் பயந்தார்கள். இவனுடைய மூளையைச் சிதறவடிக்கும் சகுனிபோன்ற நாகராஜன் குழந்தைகளுக்காகப் பரிந்து பேசுபவன்போல் ஒரு தினம் ஆரம்பித்து "தேவா! குழந்தைகளின் கண்ராவி சகிக்கமுடியவில்லை. உன் சகோதரி விசாலமும் வயிற்றுக்கில்லாது கஷ்டப்படுகிருள். உன் குழந்தைகளை அவளிடம் அனுப்பி வளர்க்கச் செய்தால் உனக்கும் கவலையற்று இருக்கும். அவளும்

ஆசையுடன் வளர்ப்பாள்; ஆதரவும் உண்டாகும். மாதம் இரண்டு குழந்தைகளுக்கும் சேர்த்து 50 ரூபாய் அனுப்பிவிட்டால் போதும். ஒரு கடிதம் எழுதிப் பாரு'' என்று உபதேசம் செய்தான்.

தன்னைவிட்டுப் பொறுப்பு நீங்கினால்போதும் என்று எதிர்பார்த்திருந்த தேவராஜன் ஒரு நாளுமில்லாத திருநாளைப்போல் குழந்தைகளுடன் நேரே விசாலத்தின் வீட்டிற்குப்போய் அவர்களை விட்டுவிட்டு, 50 ரூபாய் பணத்தையும் கொடுத்து, குழந்தைகளைச் சமாதானப்படுத்தி வந்தான்.

குழந்தைகள் அழுது அழுது தவித்தார்கள். தகப்பனாரைப்பிரிய மனமற்றுக் கதறியும் கேட்கவில்லை. அத்தையின் முகத்தைக் கூடப் பாராதிருந்த குழந்தைகள் திடீரென்று அவளிடம் இருக்கவேண்டுமென்றால் குழந்தைகள் சமாதானமாகுமா? அவைகள் துடித்தன. ஆனால் விசாலம் திடீரென்று அதிர்ஷ்ட சூரியன் உதயமாகியதைக் கண்டு உள்ளம் பூரித்தாள். நிலையில் பிடிகொள்ளாது துடித்தாள். சந்தோஷத்தின் தெம்பால் உடல் இரட்டிப்பாய்ப் பருத்தது.

எத்தனையோ ஆயிரம் மைலுக்கு அப்பாலிருக்கும் ரமாவுக்கு இந்த விபரீதங்கள் ஒன்றுமே தெரியாது. தன் கணவனிடமிருந்தும் குழந்தைகளிடமிருந்தும் கடிதமே வராததால் மனம் பதறினாள். அந்த துயரத்தை அவளால் சகிக்க முடியாது தன் தலைவிக்கு, விவரம் எழுதும்படிக் கடிதம் எழுதினாள்.

வஸுந்தரா மகா கெட்டிக்காரியும், யூகசாலியுமானதால் இங்குள்ள நிலைமைகள் சகலமும் தெரிந்திருந்தும் அதை ரமாவுக்கு எழுதவில்லை. ஏனெனில் அத்தனை ஆயிர மைலுக்கப்பால் முக்யமான படிப்புக்காகச் சென்றிருக்கும்போது இந்த விவரங்கள் தெரிந்தால் மிகவும் ஆபத்தாக முடியும்; படிப்பும் ஓடாது. இத்தனை உயர்ந்த பெயர் வாங்கிய புத்திசாலி பரீக்ஷையில் தோல்வியுற்றாள் என்றால் அது மிகவும் கேவலமானதாகும்; திரும்பிவரமுடியாது துடிப்பாள். உடல் நலம் குன்றும். ஆகையால் எல்லோரும் க்ஷேமம் என்றும் அவர்களைப்பற்றி தானே அடிக்கடி எழுதுவதாயும் கவலையின்றிப் படித்துவிட்டு வரும்படியும் எழுதிவிட்டாள்.

தொலைதூரத்திலுள்ள ரமாவுக்கு இக்கடிதம் முற்றிலும் ஆறுதலளிக்கவில்லை. பெற்ற மனம் பித்தல்லவா! அது கலங்கிக்கொண்டே இருந்தது. தான் ஊருக்குத் திரும்பிப்போகாது இவ்விடத்திலேயே இறந்துவிடக்கூடாதா என்கிற எண்ணந்தான் அவளையறியாது அடிக்கடி உண்டாகியது. அதற்குக் காரணம் அவளுக்கே தெரியவில்லை. சதா சங்கடம் செய்துகொண்டிருந்தது. இம்மாதிரி நிலைமையில் ரமா தத்தளித்துக்கொண்டிருக்கையில் தேவராஜனுக்கு இன்னொரு கடிதம் போய்ச்சேர்ந்தது

''டாக்டர்!

நாடுவிட்டு நாடு நாங்கள் வந்திருக்கும் இடத்தில் நம் நாட்டுப் பெருமையையும் ஸ்திரீகளின் கற்பின் வீரதீரத்தையும் பலருக்கும் ப்ரஸங்கத்தின் மூலம் பேசியவாறு அந்த மகாதேவி, கண்டபடி கெட்

டலேயும் விபரீதத்தைக் கூறத் திறமில்லே. படிப்பில் எப்படியாகுமோ தெரியாது. குடிப்பழக்கங்கூட ஒரு ஆங்கிலேய சீமானின் சினேகத் தினல் உண்டாகியிருப்பதையறிய எங்கள் மனம் பதைக்கிறது. "உங்கள் தேசத்துப் பெண்களே இப்படித்தானே! சொல்வதொன்று செய்வதொன்றுமாக விருக்கிருளே, இதுதான் பெருமையா!" என்று இந்நாட்டவர் கேட்கும்போது எங்கள் பிராணன் போவது போலிருக்கிறது. அங்கிருக்கையில் தனக்குப் புகழ் வரவேண்டு மென்றதற்காகப் பத்திரிகைக்காரர்களேயெல்லாம் காக்காய் பிடித்து உங்களே இகழ்குழியில் தள்ளித் தான் புகழ் சிகரத்தை எட்ட சூழ்ச்சி செய்ததுபோலவே இங்கும் கங்கணங்கட்டிக்கொண்டு எங்களேயெல் லாம் மட்டந் தட்டவும், தான் மட்டும் உயர்வடையவும் ஒரு துரை மகனின் துணைகொண்டு பத்திரிகைக்காரர்களில் சிலருக்கு லஞ்சங் கொடுத்து எழுதச் செய்துவருகிருள். பாம்பை வெகு மேன்மையான பஞ்சணையில் படுக்கச் செய்தால்மட்டும் அதன் விஷம் போகுமா! அதே போலத்தான் இந்த மகராஜியின் நிலேமையுமிருக்கிறது. இதைக் கவனிக்கவும்"

என்று எழுதியிருந்ததைப் படித்ததும், தேவராஜனின் ஆத்திரம் தலேக்கேறியது. பல்லேக் கடித்தான். தத்திக்குதித்துத் தாண்டவமாடினன். உலகத்திலேயே தாம்தாம் செய்யும் அக்ரமங்களின் சூடு அவரவர்களுக்கு உறைப்பதில்லே. அதே காரியத்தைப் பிறர் செய்வதைப் பார்த்தாலும் அல் லது படாப்பழியாய்க் கூறுவதைக் கேட்டாலும் உடனே கோபம், அகங் காரம், அவமானம் எல்லாம் ஒட்டிக்கொள்வதும் அதற்காகத் துள்ளிக் குதிப்பதும் ஒரு தொத்து வியாதியாகப் போய்விட்டது.

அந்த வியாதி தேவராஜனே மட்டும் விட்டுப் போகுமா? "சண் டாளி...............மானங்கெட்டவள்" என்றெல்லாம் வாய்விட்டுக் கூறினன். அதே சமயம் வெகு ஒய்யாரமாயும் அட்டகாஸத்துட னும் வந்த அகிலாண்டம் கடகடவென்று சிரித்தபடியே "அடேயப்பா! மலேயைக் கல்லி எலியைப் பிடித்தார்ப்போல் இப்போதுதான் அவளு டைய மானங்கெட்டத்தன்மையை அறிந்தீர்களா! கைப்புண்ணுக்குக் கண்ணுடி வேண்டுமா? என்றைக்கோ அவளுடைய பித்தலாட்டங்கள் நன் ருகத் தெரியும்...சரி. இந்த புராணத்தில் இப்போது பொழுது போக்க வேண்டாம். நம்முடைய விவாகத்தை இன்றே முடித்துவிடலாம் என்று அண்ண சொல்லச் சொன்னர். அவருக்கு ஜுரம்; வரமுடியாததால் என்னே யனுப்பினர்" என்ருள்.

பிறகு வீணுக வளர்த்துவானேன்......நான்கு மாதகாலம் சென்றது. தெரியாது கழிந்தது. தேவராஜனும் அகிலாண்டமும் இணைபிரியாத தம் பதிகளாகி வெகு குதூகலமாக வாழ்க்கை நடத்தும் ஜோரில் ரமாவுக்குக் கடிதம் எழுதுவதையும் குழந்தைகளுக்கு தவருது பணமனுப்புவதையும் கடிதமெழுதுவதையும் அடியோடு மறந்தான்.

பணமனுப்பாவிட்டால் விசாலத்தம்மாள் விடுகிருளா? கடிதத்தின் மேல் கடிதம் எழுதுவதும், 'குழந்தைகளேக் கொண்டுவந்து விட்டுவிடுவேன்

என்று, பயமுறுத்துவதும் தன் மகனையனுப்பி நேரில் தொந்தரவு செய்வதுமாகத் தனக்குச் சேரவேண்டிய பணத்தை வாங்கிக்கொண்டு போய் விடுவாள். 'குழந்தைகள் சனியன் பிடித்ததுபோல் இங்குவந்துவிட்டால் தமக்குக் கஷ்டமாயிற்றே!' என்று அகிலாண்டமே பணத்தை அனுப்பி வந்தாள்.

இக்காலத்தின் விநோதங்களில் உலகம் எப்படியிருக்கிறதென்றால் அடுத்த தெருவில் ஒரு அமளி நடக்கிறதென்றால் அது இங்கு தெரிவதில்லை. தெருவெல்லாம் சிரித்தோ அழுதோ வம்பளந்தோ பழகியபிறகுதான் சில சமயம் தெரிகிறது; சில சமயம் தெரிவதே இல்லை. வீடேறி வந்து கூப்பிட்டால், அதுவும் விசேஷகாலமாயிருந்தால்,ஒருவரை ஒருவர் சந்திக்கும் நாகரிகம் முதிர்ந்த முறையில் அண்டைவீடு அயல் வீடுகளின் செய்தி கூடத் தெரிவதில்லை. அங்ஙனமிருக்க ஆயிரக்கணக்கான மைலுக்கப்பாலுள்ள ரமாதேவிக்கு இந்த அக்கிரமங்கள் என்னதெரியப்போகின்றன?

உலகமறியாத குழந்தைகளுக்குத்தான் தந்தையின் விபரீதப் போக்கு என்ன தெரியும்? அவர்கள் அவைகளை அறியும் சக்திதான் ஏது? தாயாருக்குக் கடிதமெழுதவும் அதை யனுப்ப மார்க்கமும் தெரியாததால் அதுவும் விளையாட்டில் மறந்துபோயிற்று.

இந்த அக்ரமங்களெல்லாம் ஹரிதாஸருக்கு நன்றாகத் தெரிந்துதான் இருக்கிறது. என்ன செய்வார் பாவம்! தானோ சன்யாசி. தகப்பனின் குடிப்பழக்கமும் தீய ஒழுக்கமும் தாண்டவமாடும் இடத்தில் குழந்தைகள் இருந்து ஆபாஸங்களைக் கண்ணால் பார்க்காமல் பட்டிக்காட்டில் கிடப்பதே நல்லதென்று அவர் எண்ணினார். "சென்ற காரியம் சீக்கிரம் முடிந்து ரமா எப்போது திரும்பி வருவாள்? என்று குடும்பம் சீர்படும்?" என்று அவர் இதயம் ஏங்கியது. ஹரிஜன வேலையுண்டு; ஹரிநாம ஸ்மரணமுண்டு என்று அவ்விரண்டிலும் மூழ்கிக் கிடந்தார்.

கையிலிருந்த பணம், பாங்கியிலிருந்த தொகை, ரமாவின் நகைகள். வீட்டிலிருந்த உயர்ந்த சாமான்கள் முதலிய சகலமும் பாதி அகிலாண்டமும் நாகராஜனும் களவாடியது போக எஞ்சியதெல்லாம் தம்தம் ஸ்வரூபம் மாறி மதுவகைகளாய் புனர் ஜன்மம் எடுத்து தேவராஜன், அகிலாண்டம், நாகராஜன் முதலியவர்களின் வயிற்றுக்குள் சரணாகதி யடைந்தன.

"நின்று தின்றால் குன்றும் மாளும்" என்பது பழமொழி. ஒரு காசு வருமானமின்றி தின்று தின்று உருட்டியாகிய பிறகு வெறியன், குடியன், மடையன், ஸ்திரபுத்தியற்றப் பன்னாடை முதலிய பட்டங்கள் அவனை ஸ்வீகரித்தனவேயன்றி வேறு பலன்கள் காணவில்லை. தன்னிடம் இருந்த அத்தனைச் சொத்துக்களும் மறைந்து தனக்கு இத்தகைய பட்டங்களைக் கொடுத்திருக்கும் வள்ளலை அவன் அறிந்தானா? அதுதானில்லை. வெறியில் மூழ்கிய நெஞ்சத்திற்கு உணர்ச்சி ஏது? மான அவமானமேது? சாந்திதானேது? சந்துஷ்டிதான் ஏது? எல்லாம் மறைந்து அவனைப் பித்தனாக்கின

22

அன்பின் துடிப்பு—ஏமாற்றத்தின் தவிப்பு

ரமாவின் தேகம் ஏற்கெனவே குச்சிபோல்மெலிந்து வாடி உலர்ந்திருந்தது. இப்போது பின்னும் வற்றியது. எந்திரம்போல் தனக்குள்ள படிப்பை வெகு பிரயாசைப்பட்டுப் படித்து முடித்து பரீக்ஷையும் கொடுத்தாள். தான் உடனே ஊருக்குப்போகவேண்டும்; வருஷம் இரண்டாகிவிட்டது. இனி இருக்கவே முடியாது. தன் கணவனிடமிருந்து கடிதத்தைப் பார்த்தே எத்தனையோ காலமாயிற்று. குழந்தைகளின் நினைவு நிமிடத்திற்கு நிமிடம் கொல்லுகிறது. ஆகையால் தான் போகவேண்டுமென்று தனக்கு மேலுள்ள அதிகாரியிடம் மனத்தைத் திறந்து கூறினாள்.

"பரீக்ஷையின் முடிவு தெரிந்தபிறகுதான் போகவேண்டும். ஒருகால் தேறவில்லை என்றால் கண்டிப்பாய் மறுபடியும் படிக்கவேண்டும். உங்களுக்கு அப்படிக்கொன்றும் நேராது. பரீக்ஷையின் முடிவு தெரிந்ததும் வேலைகூடக் கட்டாயம் கையிலேயே கொடுத்தனுப்பி விடுவார்கள். இன்னும் ஒருமாதம் இருந்தால் போதும்" என்று கூறியதனால் தடுக்க முடியாது இருந்தாள்.

வஸந்தராவின் கடிதம் ஒன்றுதான் சற்று ஆறுதலையளித்தது. இவளுடன்கூட வந்த லேடிடாக்டர் நால்வரில் ஒருத்தி அங்குள்ள ஒரு மைனரின் வலையில்விழுந்து ரிஜிஸ்டர் விவாகம் செய்துகொண்ட விஷயத்தையறிந்த ரமாவுக்கு மானம் சிந்திப்போவதுபோலிருந்தது. எப்போது தனது கடுவு தீரும் என்று எதிர்பார்த்துக்கொண்டிருந்தாள்.

பரீக்ஷை பாஸாகிவிட்டதோடு இவள் ஆராய்ச்சிசெய்து எழுதிய மருந்து முறைகளை அங்குள்ள பிரபல வைத்தியர்கள் கண்டு மிகமிக சந்தோஷமும் ஆனந்தமும் அடைந்து ரமாவை வானளாவப் புகழ்ந்தார்கள். அங்கிருந்து புறப்படுவதற்கு முன்பே சிங்காரப்பட்டணத்திலுள்ள ஒரு பெரிய கவர்ன்மெண்டு ஆஸ்பத்திரியில் வேலைக்கு உத்திரவும் கையில் கொடுத்துவிட்டார்கள்.

இம்மாதிரி ஒரு பாக்யமும் சந்தர்ப்பமும் கிடைப்பதற்கு எத்தனை தவம் செய்யவேண்டும்? இதற்கு எத்தனையோ பேர்கள் எப்படி போட்டியிட்டு அலைகிறார்கள். ரமாவுக்கு அப்பாக்கியம் கிடைத்தும், மனத்தில் பரிபூரண தெம்போ உத்ஸாகமோ இல்லாது விசனமே தலைதூக்கியது. எத்தனை பிரிவுபசாரங்கள், விருந்துகள், புகைப்படங்கள், பிரஸங்கங்கள், அப்பப்ப! சொல்லமுடியாது. ரமா பொம்மைபோல் எல்லாவற்றையும் நடத்திக்கொண்டாள்.

தான் புறப்பட்டுவரும் விஷயத்தை தன் கணவனுக்கும் வஸந்தரா முதலிய எல்லோருக்கும் கடிதம் எழுதினாள். இன்னும் சில தினங்களில் தன்னுருயிர் கணவனையும் குழந்தைகளையும் பார்க்கப்போகிறோம் என்கிற சந்தோஷத்தினால் அவள் இதயம் நிரம்பியது; இவளைப்பற்றிய புகழுரைகளும் பத்திரிகைகளில் கணக்கற்று வந்தன.

தான் புறப்படும் தினத்தை தந்திமூலம் எல்லோருக்கும் அறிவித்தாள். தன் குழந்தைகளுக்கு ப்ரியமான அனேக விளையாட்டுச் சாமான்களை ஏராளமாக வாங்கிக்கொண்டாள். கணவனுக்கும் சில பொருள்கள் வாங்கினாள். அவளுக்குப் பரிசாக அனேகர் அனேகவித சாமான்கள் கொடுத்திருந்ததையெல்லாம் தன் கணவனுக்குக் கொடுக்க ஆவலாய் எடுத்து பத்திரப்படுத்தினாள்,

கப்பலேறியாயிற்று. கருங்கடலில் கப்பல் வெகு வேகமாகத் துளைத்துக்கொண்டு வருவதைவிட ரமாவின் இதயம் வேகமாகத் தன் குழந்தைகளிடமும் கணவனிடமும் தாவிச் செல்லப் பறக்கின்றது. குழந்தைகளும் கணவனும் துறைமுகத்திற்கு வழியனுப்ப வந்ததுபோல் வரவேற்கவும் வந்திருப்பார்கள்; கண்டுகளித்து இன்பக் கடலாடலாமென்கிற எதிர்பார்ப்பும் ஆவேசமும் அவளை ஊக்கின.

தன் தாய்நாட்டைப்பற்றி நினைக்கும்போது பாரதியின் 'செந்தமிழ் நாடு'' என்ற பாடல் அவள்முன்பு சித்திரக்காக்ஷியுடன் ஒலித்தது. அவளை அறியாமலேயே அப்பாடலும், ''பாருக்குள்ளே நல்ல நாடு எங்கள் பாரத நாடு''...என்ற பாடலும் அவள் வாயினின்று தவழ்ந்தன. அந்த மதுரகானத்தின் இனிமையைக் கேட்டு கப்பலில் வரும் சில இந்தியர்கள் அர்த்தம், சங்கீதம் வசியப்பட்டு ரமாவின் முன்பு ப்ரஸன்னமானார்கள். சங்கீத இனிமையில் மட்டும் மனம் லயித்த ஆங்கிலேயரும் சூழ்ந்துகொண்டார்கள்.

வெளி தளத்தில் நின்று கடலையும் வானையும் உற்றுநோக்கி இயற்கை தேவியின் சௌந்தர்யசோபையில் ஈடுபட்டுத் தன் தாய் நாட்டின்பால் கொண்ட தெய்வீக ப்ரேமை ஜ்வாலையால் தாக்கப்பட்டவளாய் மெய் மறந்து பாடும்போது ரமா தன்னையே மறந்தாளென்றால் மிகையாகாது. அவளைச் சுற்றியுள்ளவர்கள் ஆனந்தப் பரவச மேலீட்டால் தம்மை மறந்து ''ஆ ஹா ஹா!...பேஷ்... சபாஷ்'' என்று கூறி கையைக் கொட்டி தாளம்போட்ட சத்தத்தைக்கேட்ட பிறகுதான் ரமாவுக்குச் சுயபுத்தியும், தான் பாடுகின்றோம் என்கிற உணர்ச்சியும் உண்டாயின. சடக்கென்று திரும்பிப்பார்த்தாள். ஏராளமான கூட்டம் தன்னைச்சுற்றி இருப்பதைப் பார்த்து முதலில் சற்று வெட்கினாள். எனினும் தன் தாய்நாடு என்றால் யாருடைய நாக்கில்தான் ஜலம் ஊறாது?...

பாட்டை நிறுத்திவிட்டதும் மற்றவர்கள் பாடும்படிக்கேட்டதால் ரமா மீண்டும் சில ரஸிகர்களுடன் ரஸமான விஷயங்களைச் சம்பாஷித்தவாறு இடையிடையே பாடினாள். தான் முதன் முதல் வெளிநாட்டிற்குப் போகும் போது இருந்த கஷ்டமும் துன்பமும் இப்போது திரும்பிவரும்போது தோன்றவில்லை. தன் குழந்தைகள் கணவன் ஆகியோரின் ப்ரேமைக் கயிற்றில் கட்டுண்டு அதே இன்பத்துடன் கப்பல் ப்ரயாணத்தைமுடித்தாள்.

கப்பல் துறைமுகத்துக்குச் சமீபத்தில் வர வர, ரமாவின் தேகத்திலும் மனத்திலும் பதைபதைப்பும் துடிதுடிப்பும் ஆவலும் அதிகரித்தன கப்பலும் துறைமுகத்தில் வந்து கரையோரமாகவே நின்றது. 'அடேயப்பா! கும்பலான கும்பல் சொல்லமுடியாது. ரமாவின் பேஷண்டுகளில் பலர் ரோஜாமாலையும் பொகேயும், வெள்ளிப்பேழைகளும் கொண்டுவந்திருந்

தார்கள். டாக்டர்களும் அனேகர் வந்தார்கள். வஸுந்தராவும் ஆத்ம நாதனுந்தான் கப்பல் நின்றதும் ரமாவுக்கு மாலைகள் சூட்டி ஆசி கூறி வரவேற்றார்கள்.

ரமாவின் கண்கள் கும்பலில் தன் செல்வங்களையும் கணவனையுமே தேடியலைந்தன. ரமா முதன்முதல் கூற வேண்டிய வந்தனத்தைக்கூட மறந்து "அம்மணீ! என் கணவரும் குழந்தைகளும் எங்கே? வந்திருக்கிறார் களா?" என்ற வார்த்தையையே வஸுந்தராவைக் கேட்டாள்.

வஸுந்தராவுக்குச் சகலமும் தெரிந்திருந்தும், இத்தனை வருடங்கள் கழித்து ஆவலாய் வந்திருப்பவளிடம் முதலிலேயே மூட்டையை அவிழ்க் கக்கூடாதென்று முன் யோசனை செய்திருந்தபடியே, நாங்கள் நேரே வீட்டிலிருந்து வந்துவிட்டோம். இந்த கும்பலில் இருப்பார்கள். பார்க்க வில்லை" என்று புளுகினாள்.

இதற்குள் எத்தனை காமெராக்கள், க்ளிக் க்ளிக் கென்று ரமாவைப் பெட்டியில் பிடித்தடைத்தன! எத்தனை பேபர்காரர்கள் சுற்றிக்கொண் டார்கள்! எத்தனை பேர்கள் மாலை சூட்டி வாழ்த்துக்களும் கூறி பரிசு கொடுத்தார்கள். மாலைகள் ரமாவின் முகத்தைக்கூட மறைத்துவிடும் படிக் குவிந்துவிட்டன.

எல்லோருக்கும் ச்வப்ன உலகிலிருந்து பதில் சொல்வதுபோல் சொல் கிறாளேயன்றி கூட்டத்தில் தன் கணவனையும் குழந்தைகளையும் காணாத தால் இதயம் வெடித்து விடும்போலான வேதனை உண்டாகிவிட்டது. "தயவு செய்து பிற்பகல் மூன்று முதல் ஆறு மணி வரையில் யார் வந்தா லும் பேசுகிறேன், இப்போது மிகவும் அலுப்பாயிருக்கிறது. மன்னிக்க வேண்டும்" என்று ஒரே யடியாய் எல்லோரிடமும் வேண்டிக்கொண்டாள்.

கூட்டத்தில் ஆராய்ந்து பார்த்துப் பார்த்துக் கண்ணும் கழுத்தும் வலி எடுத்துக்கொண்டன, உடைந்த மனத்தின் வேகத்தில் தலை கிறு கிறு என்று சுழன்றது. அவள் கண்களுக்கு எல்லாம் வெறும் சூன்யமாய்த் தோன்றின. நின்ற விடத்தில் நிற்க முடியாது அப்படியே ரமாவின் சரீரம் துவண்டு சாய்ந்தது. எதிர்பார்த்த அன்பின் வேகமென்ன! ஏமாற்றமடை யச் செய்த விதியின் வலிமை என்ன! கடவுளின் சித்தத்தின் விநோ தத்தை யாரால் அறியக்கூடும்? அறியும் சக்திதான் யாருக்கு இருக்கிறது?

23

புசல் காற்றோ! பேரிடி முழக்கமோ!

பத்திரிகையில் ரமாவைப்பற்றி எழுதியுள்ள புகழுரைகளைப் படிக்கப் படிக்க ஹரிதாஸரின் உள்ளம் ஆனந்தப்பூரிதமாகியதோடு, அவள் தாயை எண்ணிக் கண்ணீரும் உதிர்த்தார். அவர் துறவறம் பூண்டு சன் யாசிக் கோலத்தில் இருந்தபோதிலும் அவருடைய கள்ள மனம் அவரை மீறி ரமாவைப் பார்க்கவும் ஆசி கூறவும் துடிதுடித்தது. "இன்று வந்தி

ருப்பாள். அவளுடைய வீட்டு அலங்கோலத்தை அறிந்தால் அவள் இதயம் எப்படித்தான் துடிக்காது! உம்... அவரவர் விதியை அவரவர் அனுபவித்துத்தானே ஆகவேண்டும்'' என்கிற வேதாந்தத்தை வெகு சிரமப்பட்டு ஞாபகமூட்டிக்கொண்டார்.

ரமா பிறப்பதற்காக அவர்கள் தவம் கிடந்ததும், பிறந்தபின் கிடைத்தற்கரிய மாணிக்கம்போல் மதித்து வளர்த்த பெருமையும் அவர் இதயம் மறக்குமா! இப் பெண்ணல் சகலவிதத்திலும் மகிழ்ச்சியைத் தான் அடைந்துவிட்டதாக எண்ணியிருந்த மனக்கோட்டை இடிந்துபோய் தன்னைப் பலவிதத்திலும் சோதனைக்குள்ளாக்கியதைநினைக்க மனது குமுறியது. எல்லாம் நன்மைக்கே என்பதுபோல் அம்மாதிரி மனது முறியாவிடில் தான் இந்த நிலைமையை அடையமுடியுமா! அறம், பொருள், இன்பம், வீடு என்கிற நான்கு புருஷார்த்தங்களின் ஸாரத்தையும் அறிந்தனுபவிக்கவே மனிதனைக் கடவுள் படைக்கிருர்.

மேலே கூறியபடி வேதாந்த விசாரத்தில் ஈடுபட்டு ஹரிதாஸர் மனம் தத்தளித்திருக்கும் சமயம் ஒரு ஹரிஜனப் பெண் அங்கு தோன்றி ''எஜமான்! அம்மா சீமையிலேந்து வந்துட்டாங்க. அம்மாளெ பாக்கணும்னு ஆவல் துடிச்சிகிச்சு. அதுக்காவ கப்பலு வற எடத்துக்குப் போயி பாத்தேனுங்க. அம்மா ஒரு ஈர்க்கு குச்சிபோலேக் கிராங்க. மயக்கம்வந்து உயிந்துட்டாங்க. அந்த பெரிய டாக்டரம்மாத்தான் வந்து தூக்கிக்கிட்டு போனுங்க...

என்று சொல்வதைக் கேட்டதும் ஹரிதாஸரின் மார்பு வெடித்துவிடும் போல் சங்கடத்தை யடைந்தது. ''ஸ்ரீஹரி! ஹரி!... ஸ்ரீராமா! பரந்தாமா!'' என்று நெடுமூச்சுடன் கூறினர். கண்களில் நீர் பெருகுவதை அவர் துறவறத்தால் தடுக்கமுடியவில்லை. வஸுந்தரா வீட்டிற்கு ஆளையனுப்பி விசாரிக்கலாமா என்றும் துணிந்தார். அப்படிச் செய்வதில் தன் விருதத்திற்கு முற்றிலும் விரோதமானதுடன் தனக்கு இன்னும் சங்கடமே உண்டாகும், அவளை பகவான் ரக்ஷிக்கட்டும் என்று தனக்குள் துணிவு செய்துகொண்டார்.

வஸுந்தராதேவி, ரமாவைத் தன் வீட்டிற்கே அழைத்துச் சென்று சிகிச்சைகள் செய்தாள். கப்பல் ப்ரயாணத்தின் அலுப்பு, மனக்கவலை, ஏமாற்றம் எல்லாம் ஒன்றுகூடி அவளைப் பெரும் படுக்கையிலாழ்த்தின. அவளுடைய பேட்டிக்காக வரும் கூட்டத்தை வஸுந்தரா உள்ளே விடவே இல்லை. கடுமையான காயலாகவிருப்பதாயும், ஒருவரும் பார்க்க வரவேண்டாமென்றும் தானே ஒரு செய்தி பத்திரிகைகளுக்கு அனுப்பிவிட்டாள்.

ரமாவின் அதிர்ஷ்டம் எத்தனை உச்சத்தை எட்டியிருக்கிறதோ, அத்தனைக்கத்தனை துர்ப்பாக்யமும் உச்சத்தையே எட்டியிருப்பதை நினைக்க வஸுந்தராவின் இதயம் துடிதுடித்தது. ''ஏமாற்றமா! எனக்கு ஏமாற்றமா?...ஏன் குழந்தைகள் வரவில்லை? என் கணவர் ஏன் வரவில்லை?'' என்று ரமா சதா அலறிக்கொண்டேயிருப்பதைப் பார்க்க வஸுந்தராவினல் இந்த பரிதாபத்தைச் சகிக்கவே முடியவில்லை. எப்படியாவது குழந்தைகளைக் கூட்டிக்கொண்டு வந்து காட்டவேண்டுமென்று ப்ரம்மப்ரயத்தனஞ்செய்தாள். முடியவில்லை.

மத்தியில் 5, 6 தினங்கள் மறைந்துவிட்டன. இதுபரியந்தமும், தேவராஜன் ரமாவைப் பார்க்கவராததால் வஸுந்தரா தேவியின் மனது துடித்தது. அவன் மறு விவாகம் செய்துகொண்டுள்ள விபரீதத்தை இந்த நிலைமையில் ரமா அறிந்தால் உயிர் உடனே நீங்கிவிடும் என்பதையறிந்து அதைப்பற்றிப் பேசவே இல்லை.

ரமாவுக்கு உடம்பில் வியாதியிருந்தாலல்லவோ? மனவியாதிக்கு என்ன செய்துதான் என்ன உபயோகம்? சற்று மயக்கம் தெளிந்ததும் "டாக்டர்! என் குழந்தைகளை, என் கணவனை... கட்டாயம் நான் போய் பார்க்கவேண்டும். இதுபரியந்தம் அவர்கள் வராததால் எல்லோரும் இறந்து விட்டார்களோ என்று எனக்குச் சந்தேகமாயிருக்கிறது; என்னோடுகூட நீங்களும் வாருங்கள். இனி என்னால் சகிக்கமுடியாது" என்று முன்பு ஒருசமயம் கிளம்பியதுபோல் கிளம்பிவிட்டாள்.

இம்முறை வஸுந்தரா அவளைத் தடுக்கவே இல்லை. ரமாவை காரில் அழைத்துக்கொண்டு தானும் புறப்பட்டு, முன்பிருந்த அதே வீட்டிற்குச் சென்றார்கள். ரமா வெகு தைரியமும் தெம்பும் உண்டாகப்பட்டவளாய் உள்ளே தடதடவென்று சென்றாள். குழந்தைகளைக் காணவில்லை. வயிற்றில் பகீரென்றது. "ப்ரேமா!...ராஜு!"...என்று அலறுவதுபோல் கூப்பிட்டாள். பதிலே இல்லை.

அவ்வீட்டில் மனித சஞ்சாரமிருப்பதாகவே அவளுக்குத் தோன்றவில்லை. தன் கணவன் அறைக்கு ஓடினாள். அங்கு மரக்கதவு திறந்திருந்தது. இரும்புக்கதவுமட்டும் பூட்டியிருந்ததுகண்டு, திடுக்கிட்டு எட்டிப் பார்த்தாள். உள்ளுக்குள் ஒரு யுவதி—வெகு சௌந்தரியவதியாகக் காணப்பட்டவள்—தலையை விரித்துக்கொண்டு பயங்கரமான பார்வையுடன் ராமாவைப் பார்த்து எழுந்து கதவருகில் வந்து "கண்டுபிடித்துவிட்டாயா?... உம்... சொல்லு... கடவுளைக் கண்டுபிடித்துவிட்டாயா? ஊஹூம்... கடவுளை உங்களால் கண்டுபிடிக்கமுடியுமா... போடீ பைத்யக்காரி!"...என்று கர்ஜித்தாள்.

இதைப் பார்த்தவுடனே ரமாவின் குடல் நடுங்கிற்று. உள்ளிருப்பவள் பைத்தியம் என்பதை நொடியிலறிந்து கொண்டாள். "இந்த வீட்டில், இவ்வறையில் இருப்பது யார்?" என்று பெரிய சந்தேகமாகிவிட்டது. ஏற்கெனவே திகிலும் கலக்கமும் பாதிக்கத் தான் வந்தவிடத்தில் இத்தகைய பயங்கரத்தைக் கண்டதும் சங்கடம் அதிகரித்தது..."நீ யாரம்மா!" என்று வெகு பொறுமையுடனும் சாந்தத்துடனும் கேட்டாள்.

பைத்:—நான் யாரா! உனக்குத் தெரியவில்லை!...அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகனாகிய கடவுளைத் தேடிப்பிடிக்க வந்திருக்கும் தேவமாது. கடவுளைத் தேடித்தருகிறாயா! உனக்கு மதுபானங்கள் தருகிறேன்—

இந்த பயித்தியத்திற்காகக் காவலிருக்கும் வேலைக்காரி இக் குரலைக் கேட்டு ஓடிவந்தாள். இங்கு ரமாவும் வஸுந்தராவும் நின்றிருப்பதைக் கண்டு "அம்மா! நீங்கள் வெளியே வாருங்கள். இது பைத்தியம். இதோடு வாய் கொடுக்காதீர்கள். நீங்கள் யாரைத் தேடிக்கொண்டு வந்தீர்கள்?" என்றாள்.

"இந்த பைத்தியம் யாரம்மா! இந்த வீட்டில் இன்னும் வேறு யாரிருக்கிருர்கள்! இருந்த டாக்டர் எங்கே? என்று கேட்டாள்.

"உம்... உங்களுக்கு விஷயமே தெரியாதா! ஊரிலிருந்து வருகிறீர்களா?" என்று அவள் சொன்ன உடனே ரமாவை ஒரு கலக்குக் கலக்கி விட்டது. அவளுக்கு ஆகாயமும் பூமியும் அயோமயமாகியதுபோல் தோன்றியது. பதைக்கப் பதைக்க "என்ன சமாச்சாரம்! கிழவி!... சொல்லு...சொல்லு" என்று கெஞ்சிக் கேட்டாள்.

கிழவிக்கு ரமா யார் என்பதே தெரியாதாகையால் பேசத்தொடங்கிய சமயம், இன்னெரு அறையிலிருந்து விகாரமான சப்தம் ஒன்று வந்தது...

கிழவி:—அதோ! கூச்சல் கேட்கிறதே, அதொரு கண்ராவி... இந்த வீட்டிலிருந்த டாக்டரின் சம்சாரம் யாலரயோ வெள்ளேக்காரனே இழுத்துக்கொண்டு சீமைக்கு ஓடிவிட்டாளாம்...

ரமா:—ஹா!... என்ன!... என்ன!... என்று தீயை மிதித்தவள்போல் அலறிருள்.

கிழவி:—ஏம்மா இப்படி அலறுகிறீர்கள்? ஒங்களுக்கு அவர்கள் தெரிந்தவர்களா?... உம். யாராயிருந்தால் என்ன? தங்கம்போல் ரெண்டு குழந்தைகள் இருந்ததையும் கவனியாமல் அவள் ஓடிவிட்டாளாம். அந்த ஐயா இதே இந்தம்மாளே சட்டப்படியான கல்யாணம் பண்ணிக்கொண்டார்.

ரமாவின் காதில் இச்சொல் விழுந்தவுடன் எரிமலேயே தன் தலேமீது புரண்டுவிட்டதுபோல் துள்ளிருள். விஷயத்தை முற்றிலும் அறியும் பொருட்டு மெல்ல தன்னேச் சமாளித்துக்கொண்டு "உம்...அப்படியா!" என்று ஹீன ஸ்வரத்தில் கேட்டாள்.

கிழவி:— அப்பறம் என்னம்மா! அவரோடெ சிநேகிதருக்கு தங்கையாம் இந்தம்மா. இவளுக்கு ஏற்கெனவே கல்யாணமாகி புருஷன் செத்துவிட்டானும். முண்டச்சியே கல்யாணம் செய்துகொண்டு ரெண்டு பேரும் குடின்னு குடியில்லே,... அப்படி குடிக்க ஆரம்பிச்சாங்க.

ரமா:—குழந்தைகள்...

கிழவி:—கொழுந்தைகள்தான் மகா பாவத்தை செய்துட்டதே... அதுக்கு அத்தெ ஒத்தி எங்கோயோ பட்டிக் காட்டிலே இருக்காளாமே அவகிட்டகொண்டு தள்ளி விட்டாங்க.

ரமா:—ஐயோ!... உயிருடன் இருக்கிருர்களா!...

கிழவி:—யாருக்குத்தெரியும்? இரண்டு வருசமாச்சு... இவங்க குடிச்சு குடிச்சு ரெண்டுபேருக்கும் மூளேகலங்கி பயித்தியம் புடிச்சி ஒருமாசமாச்சு அதோ கத்துதே அதுதான் டாக்டரு...

இதற்குமேல் ரமாவால் தாங்கவேமுடியவில்லே. கதறியவாறு அந்த பக்கம் ஓடினுள். கிழிந்த உடையும், தாடி மீசையும். அழுக்குமேனியும், குழிந்து விகாரப்பட்டுப்போன கண்களுமாக தேவராஜனேக் காணும் போது ரமாவின் உள்ளம் எப்படித்தான் துடிக்காது, அதை விவரிக்கமுடியுமா? பெரிதாகச் சத்தமிட்டு "டாக்டர்!...டாக்டர்! இதென்ன கோலம்!" என்று கத்திஞள்.

தேவராஜன் கண்களை அப்படியே மிரளமிரள விழித்தபடியே கத வருகில் வந்து கடகடவென்று நகைத்தவாறு "கடவுளைப் பிடித்துவிட்டாயா! கடவுளைக் காட்ட உன்னால் முடியுமா?... கடவுளைக்கொண்டுவா!" என்று கத்தினன்.

ரமா, "உம். காலதேவதையே! உன் தாண்டவத்தின் பரிபவத்தைக் காணச் சகிக்கமுடியவில்லையே...ஒரே விஷயத்தைப்பற்றி இருவரும் உளறுவதால் ஒரேமாதிரியல்லவா மூளை கலங்கியிருக்கிறது. இம்மாதிரிப் பலவிதத்திலும் சோதிப்பதற்காகவா நீ என்னைப்படைத்தாய்?

ஹே பூமாதேவி! என்னையப்படியே விழுங்கிவிடக் கூடாதா! இந்த கோரமையைக் கண்ணால் பார்த்தும், அபாண்டமான பழியைக் காதால் கேட்டும் என்னுயிர் போகவில்லையே! இத்தகைய பாவத்தைச்செய்த கட்டைகளும் உலகில் உண்டா!' என்று கதறினள்.

கிழவிக்கு ரமாவின் ப்ரலாபத்தைக்கண்டு சந்தேகம் வந்துவிட்டதெனினும் இவள்தான் அவன் மனைவி என்று தெரியாது. வஸுந்தரா தேவி அப்படியே இடிந்துபோய் "சுமார் ஒரு மாதத்திற்கு மேலாகவே இவர்களைக் கண்ணில் காணாமையால் எங்கோ ஊருக்குப் போயிருப்பதாகவன்றோ நினைத்தேன். இந்த கதியா ஆயிருக்கிறது!" என்று துடிதுடித்தாள்.

ரமாவுக்கு அக்கினி மத்தியில் நிற்பதுபோல் தேகம் இதயம் எல்லாம் பற்றி எரிந்தன. மீண்டும் தேவராஜனை நோக்கி "டாக்டர்! டாக்டர்!... இதோ பாருங்கள்!" என்று கத்தினள். விகாரஸ்வரூபத்துடன் பயங்கரமான பார்வை பார்த்தபடியே, "முடியாது. முடியாது...உன்னைப் பார்க்க முடியாது... கடவுள் எங்கே?...புகழ்மாலை எங்கே?...புகழ்மாலை அவளுக்கல்லவா? வெள்ளைக்காரிக்கல்லவா... எனக்கு...குப்பைமாலை... ஹி... ஹி ஹி... அந்த ராக்ஷஸி என்னை ஏமாத்திவிட்டு வெள்ளைக்காரனைக் கல்யாணம் செய்துகொண்டு புகழ்மாலையைச் சூட்டினள்...சீச்சீ!... அது போகட்டும். கடவுள் எங்கே?...சொல்லு... இல்லா விட்டால் சுட்டுவிடுவேன். நான் சோல்ஜர், போர்வீரன் இதோபார்" என்று இரும்புக்கதவில் இடித்துக்கொண்டான்.

இதைக் கண்டு ரமாவின் உயிரே முக்கால்வாசியும் போய்விட்டது போலாகியது. கிழவியை நோக்கி "கிழவி! இவர்களை ஏன் இப்படிப் போட்டு அடைத்திருக்கிறார்கள்? இவர்களுக்கு ஆகாரம் யார் கொடுக்கிறார்கள்? இந்த வீட்டிற்கு நமோது யாரு?" என்று கேட்டாள்.

கிழவி:—நாகராஜய்யாதான் நமோது. ஆகாரமாவது மண்ணாங்கட்டியாவது? ஆகாரமே சாப்பிடுவதில்லை. பலவந்தமாக நான்தான் கொடுக்கிறேன்.

ரமா:—நீயா கொடுக்கிறாய்? ஐயையோ! இப்போது என்ன செய்வேன்? இந்த வீட்டிலுள்ள கோளாறுதான் இந்த குடும்பத்தையே ஆட்டிவைக்கிறது... கடவுளே! நீ இவ்வுலகைவிட்டு எங்கேனும் ஓடிப்போய்விட்டாயா! அன்றி கண்விழிக்காத சமாதியில் ஐக்யமாகிவிட்டாயா! நீ ஒருவன் இவ்வுலகில் இருந்துகொண்டு இத்தகைய பரிதாபங்களையும் கோரமை

களையும் பார்த்து மகிழ்ச்சியடைகிருயா! இதுதான் உனது தர்மமா— என்று கதறிஞள்.

நிறைய பழங்களையும் தின்பண்டங்களையும் ட்ரைவரை வாங்கிவரச் செய்தாள். "கிழவி!... இவர் என்னுடைய கணவர்!... எங்களை வேண்டுமென்று பிரித்துப் பரிபவப்படுத்துவதற்காக அந்தப் பாவி நாகராஜனும் அதோ கிடக்கும் புண்ணியவதியும் சதிசெய்து என்மீது அபாண்டப் பழியைப்போட்டு என்னைக் கொலைசெய்வதற்கொப்பச் செய்துவிட்டார்கள்" என்று கூறும்போது ரமா கதறிவிட்டாள். கிழவி இதைக்கண்டு மனமுருகியவாறு 'அம்மா! கிட்டே போகாதங்கோ! அடிச்சுடுவார்' என்ருள். அதற்கு ரமா "என்னை அவர் அடிக்கட்டும்... எனக்குப் பயமில்லை. நானும் ஒரு டாக்டர்தான்" என்று கூறியபடியே ஆவேசத்துடன் உள்ளே சென்று "டாக்டர்! இதோ பாருங்கள்; ரமா வந்திருக்கிறேன்... உங்களுக்குத் தெரியவில்லை?... உங்கள் ரமா உங்கள் மனைவி"... என்று தொண்டையை அழுத்தும் விசனத்துடன் கூறிஞள். தேவன் அசட்டுப் பார்வையும் சிரிப்பும் சிரித்தபடியே, "ரமா... ரமா... ரமா... ரமா... ரமா... ரமா" என்று ராகமாக இழுத்துப் பாட்டுபோல் பாடிஞன்... ரமாவைப் பட்டார் பட்டார் என்று இரண்டடி வைத்தான். அவள் மண்டையின்மீது செம்மட்டியால் அடிப்பதுபோன்று வேதனை செய்வதற்கு முன்பு இந்த அடி எம்மாத்திரம்?

தேவராஜன் உடம்பில் ஏறியிருந்த அழுக்கையும் தலையின் கோரத்தையும் சகிக்காத ரமா உடனே அவனை நல்லதனமாகத் தட்டிக்கொடுத்து வஸந்தராவின் உதவியைக்கொண்டு பிடித்து இழுத்துச்சென்று கிணற்றருகில் உட்காரவைத்து, தானே நன்ருக சோப்புப்போட்டுத் தேய்த்துத் தண்ணீரைக் குடங்குடமாக ஊற்றி ஸ்நானம் செய்வித்தாள். இவன் திமிராதபடி ட்ரைவரும் வேலைக்காரனும் பிடித்துக்கொண்டார்கள்.

உள்ளிருந்த நல்ல உடைகளை சுத்தமாக அணிவித்து அந்தப் பழங்களை ரஸம்பிழிந்தும், நறுக்கியும் பலவந்தமாக உள்ளே செலுத்திஞள். பாதியைத் துப்பியும் பாதியை விழுங்கியும் ஒருவாறு முடித்தான். தேவராஜனுக்கு நிம்மதியாக தூக்கம் வருவதற்காக ஒரு மருந்தை ரமாவே ஊசி குத்திஞள். அவள் ப்ரதிக்ஞை செய்தபிறகு ஊசிகுத்துவது இதுதான் முதல் தரம். நல்ல படுக்கையைப்போட்டு அவனைப்படுக்கச்செய்தாள். ஆஞல் அவஞ படுக்கிறவன்! பெரிய குரலில் "அகிலாண்டம்!" என்று இங்கிருந்து கத்திஞன்.

உடனே அங்கிருந்த பாதகி "ப்ரம்மாண்டம்!" என்று பதிலுக்குக் கத்திஞள். இருவரும் சிரித்தார்கள். "கடவுளைப்பார்த்தாயோ!" என்ருன் தேவன். "கடவுளை கண்டுபிடித்தாயோ" என்ருள் அவள். இந்த கோரத்தைக்கண்டு சகியாத ரமா துடிதுடித்தாள். அவள் தனது ஆகாரத்தையும் வெறுத்தாள். அயோமயமான நிலைமையில் ஆழ்ந்துபோய் கல்லாய்ச் சமைந்தாள். அவளுடைய கண்ணீர்மட்டும் பெருகிக்கொண்டே இருந்தது.

நிலை கொள்ளா நெஞ்சம்

உலகைப்பற்றை வேரறுக்க அரும்பாடு படும் ஹரிதாஸருக்கு இச்செய்திகள் பூராவும் தெரிந்ததும் நெருப்பில் பட்ட புழுகைப்போல் துடித்தார். அவருடைய வைராக்யங்கள் முற்றும் பறந்துபோய்விட்டன. "எந்த ஒரு பாவத்தையும் மனத்தினலும் நினைக்கக்கூடாது; நினைப்பதே பெரிய குற்றமாகும். பாசத்தை அறவே நீக்கி வைராக்ய மனத்துடன் இருக்கவேண்டும். உள்ளுக்குள் பாசப் ஊசலாட மேலுக்கு இதென்ன காஷாயம்! பாசத்தை ஜெயிக்க சக்தியில்லாத நீயா துறவி? நீயா சன்யாசி நீயா வேதாந்தி!" என்று அவருடைய மனச்சாக்ஷியே அவரைக் குத்தி இடித்துக்காட்டியது.

சற்று தியங்கினர். மீண்டும் வைராக்யத்தை வரவழைத்துக்கொண்டு, உட்கார்ந்தார். முள்ளில் மாட்டிக்கொண்ட சேலையை மெள்ளத்தானே எடுக்கவேண்டும். அதேபோலத்தான் ஹரிதாஸரின் விஷயமும் முடிந்தது. எத்தனை சமாதானம் கூறியும் மனது கேளாததால் "துறவறமாச்சு. காஷாயமுமாச்சு. இந்தசமயத்தில் ரமாவைப் பார்க்காதிருக்க என்னல் முடியவே முடியாது. உன்னை உலகம் நிந்திக்கட்டும். என்னைப் பரிகசிக்கட்டும். இனி நான் சகிக்கமாட்டேன்" என்று கூறிக்கொண்டே கிளம்பி நேரே ரமாவின் வீட்டிற்கு தடதடவென்று வந்தார்.

அப்போதுதான் எதிரில் வந்த கம்பவுண்டரான வெங்கடேசன் அவரை மரியாதையாய்நோக்கி "ஸ்வாமீ! இதென்ன செய்கை! உங்களுடைய துடிதுடிப்பையறிந்த நான் ரமாதேவியிடம் நேரில் சென்று விஷயத்தைக் கூறினேன். அவர்கள் இக்கடிதத்தை எழுதி உமக்குக் கொடுக்கும்படிக்குக் கூறிவிட்டுத் தம் குழந்தைகளைப்பார்க்க கிராமத்திற்குப் போய்விட்டார்கள். தாங்கள் உள்ளே போகவேண்டாமென்று கட்டாயம் சொல்லும்படிக்குக் கூறினர்கள். வாருங்கள்" என்று கையைப்பிடித்துத் தடுத்து அழைத்துக்கொண்டு ஆச்ரமத்திற்கு வந்தான்.

ஹரிதாஸருக்கு ஒன்றுமே தோன்றவில்லை. அக்கடிதத்தைப் படிக்கத் தொடங்கினர்.

"ஸ்வாமீ

ஜன்மா கடைத்தேறுவதற்காக எத்தனையோ நன்மார்க்கங்கள் இருந்தும் அவற்றை அனுஷ்டித்து முத்தியடைய வகையின்றி, மனமின்றி ச்ரத்தையின்றிக் கைவிட்டு மீண்டும் மீண்டும் பாபக்குழியில் வீழ்ந்துழலுகின்றோம். தாங்கள் வைராக்ய சித்தத்துடன் முன்படிக்கட்டில் வைத்த காலைப் பின்னல் இழுப்பதற்குத் துணிந்திருப்பதை நானே வெறுக்கிறேன். அநித்யமான பாச பந்தத்தை அறுத்தெறிந்து நித்ய பதவியை நாடுங்கள். நான் யாரு? நீங்கள் யாரு? ஒரே ரயில் வண்டியில் எத்தனையோ ஜனங்கள் ஏறுகின்றார்கள். அவரவர் ஸ்டேஷன் வரும்வரையில்தான் பேச்சுத்துணை, உரையாடல் எல்லாம். அவரவர் இறங்கவேண்டிய இடம் வந்துவிட்டால்

இறங்கிப்போய்விடுகிற அபூர்வ தத்துவம்தான் மனித ஜென்மாவும். என் தாயார் இறங்கவேண்டிய இடத்திற்குப் போய்விட்டாள், நீங்கள் ஜங்ஷனில் மாறி வேறு மார்க்கத்தில் பிரயாணத்தைத் துடங்கிவிட்டீர்கள். இனி அந்த ரயிலிலுள்ளவர்கள்தான் உங்களுக்குத் துணை. பழைய ரயிலிலிருப்பவர்களை நினைத்துத் தாவுவது முட்டாள்தனமாகும். என் விதி விபரீதமான நிலைமையில் என்னை இழுத்துக்கொண்டு போகின்றது. இந்தக் கண்ருவிகளை நீங்கள் பார்க்கவேண்டாம். இனி இவ்வாசையை அடியோடு விட்டுவிடுங்கள். உங்களை உலகம் வெறுப்பதற்கு முன்பு நானே வெறுத்துவிடுவேன்.

இங்ஙனம்,
ரமா.''

இதைப் படித்ததும் அவர் மனது எப்படித்தான் தத்தளித்ததென்பதைக் கூறவேண்டுமா! தனக்கு நன்மார்க்கத்தை உபதேசித்த நல்குருவாகவே ரமாவின் பிம்பம் தோன்றியது. நன்மகளைப் பெற்றபயனை அவர் உள்ளம் அப்போதே உணர்ந்து, ''அவளுடைய போதனையினாலாவது என் கள்ள மனம் இனி வழுவாதிருக்கவேண்டும்'' என்று பகவானைப் பிரார்த்தனை செய்தபடியே பக்தியிலாழ்ந்தார்.

அச்சமயம் பட்டினத்தடிகளின் பாடல்களைச் சில சிஷ்யர்கள் பாடுவதைக் கேட்ட ஹரிதாஸருக்கு தம்முடைய குற்றத்தையறிந்துதான் இம்மாதிரி அவர்கள் இப் பாடல்களைப் பாடுகிறார்களோ என்று தோன்றியது. தான் செய்ய விருந்த காரியத்தின் அசட்டுத்தனம் அப்போதுதான் நன்ருக மனதில் பட்டதும் வருத்தத்துடன் ''ஸ்வாமீ! ஆண்டவனே! இனி இம்மாதிரி மனது நிலை புரளும்படிக்குச் செய்யாதே.

சித்தத்தில் உறுதிவேண்டும் சிதறாத நினைவுவேண்டும்
சத்தியம் பேசவேண்டும் தருமத்தில் ஒழுகவேண்டும்
கற்றதும் கேட்டதும் என் கடமையில் காட்டவேண்டும்
பித்தன்போல் பாசச்சேற்றில் புரண்டிடா ஞானம் வேண்டும்.

என்று பகவானை வேண்டிப் பாடினர். உள்ளம் பக்திமயமாக மாறி உருகியது.

25

கலாதேவியின் கடினத் தாண்டவம்

ரமாவின் பரிதாபத்தைக் கண்ட வஸுந்தரா தேவியின் இதயம் சங்கடத்தினால் அலைமோதித் தவித்தது. ''ரமா! இப்படியே புலம்பிப் புலம்பி சோர்ந்துவிட்டால் உன்னுடைய காரியங்களைக் கவனிக்கவேண்டாமா! கவர்மெண்டு ஆர்டர் கையிலிருப்பதை மறந்துவிட்டாயா! அதை ஒப்புக்கொள்ள இன்னும் ஒரு வாரந்தானே இருக்கிறது?'' என்று ஞாபகப்படுத்தினள்.

ரமாவுக்கு ஒருபுறம் ஆத்திரமும், ஒருபுறம் வெறுப்பும் ஒருபுறம் தீராத துக்கமும் நெஞ்சைப் பிளந்தன. ஆவேசங் கொண்டவளைப்போல் "டாக்டர்! எனக்கா வேலை...நானா இனி உத்தியோகம் செய்யப்போகிறேன்? இல்லை! இல்லை! இனி ஒருபோதுமில்லை. இதோ, இப்போதே ராஜிநாமாச் சீட்டு அனுப்பிவிடுகிறேன். என் நிலைமையைப் பார்த்தால் எனக்குக்கூட பைத்தியம் பிடித்துவிடும்போல் தோன்றுகிறது. பகவான் என்னை ஒன்று பாக்கி விடாமல் செய்யும் சோதனை போதும். நான் இனி பொறுக்கவேமாட்டேன். இதோ இப்போதே நான் என் குழந்தைகளைப் பார்க்கவேண்டும். புறப்படுங்கள். கூட வாருங்கள்... உம்"...என்று கதறினாள்.

வேலைக்காரக் கிழவிக்கு ஆச்சரியமும், அதிர்ச்சியும் பரிதாபமும், ரமாவின் அபாரமான குணத்தழகைக் கண்டு ப்ரமிப்பும் ஒருங்கே உண்டாயின. வஸுந்தராவின் மூலம் அவள் சகல விஷயங்களையும் அறிந்து கண்ணீர்விட்டதோடு ரமாவையே ரமாவிடம் திட்டியதற்கு வருந்தி மன்னிப்பும் பெற்றாள். நாகராஜனையும் அகிலாண்டத்தையும் கண்டபடி திட்டினாள்.

"கடவுள் எங்கே...கடவுளைக் கண்டாயா!...கடவுளைக் கொண்டுவந்தாயா!" என்று தேவன் கத்தினான். அதே சமயம் "கடவுளைக் கண்டாயா.. கண்டேன்...காணவில்லை...கடவுள் எங்கே?"...என்றாள் அகிலாண்டம். உடனே தேவன் கடகடவென்று நகைத்துவிட்டு "அகிலாண்டம்"...என்று கத்தினான். "ஹா! ஹா! ஹா!...ப்ரம்மாண்டம்"...என்று கூவி நகைத்தாள் அவள்.

ரமாவின் வயிறு பற்றி எரிந்தது. "அந்த பாதகியை உயிருடன் வைத்துக்கொளுத்தினாலும் தோஷமில்லையம்மா! சண்டாளி" என்று கிழவி திட்டியவாறு ரமாவைத் தேற்றினாள். நன்றாகப் படித்த விவேகியாதலால் ரமா 'உம். என் தீவினையை நான் அனுபவிக்கின்றேன். மற்றவரைக் குறைகூறுவானேன்? அவளுக்கும் ஆகாரத்தை கொடு"...என்று பழங்களைக் கொடுத்துத் தானே கிட்டவிருந்து தின்னச் செய்தாள்.

பிறகு வஸுந்தராதேவியுடன் ஊருக்கு ப்ரயாணமானாள். பெத்த மனம் பதறியது. விசாலத்தம்மாள் ஒரு பட்டிக்காட்டில் வசிக்கிறவளெனினும், தன் தம்பி பணமனுப்பியபோதே அதைத் தானும் தன் குழந்தைகளும் தின்று ஏப்பம் விட்டுவிட்டு இந்த குழந்தைகளைக் கவனியாது இருக்கும் உத்தமி. இப்போது அப்பன் நிலைமை இங்ஙனமிருக்க அவைகளுக்குச் சோறுபோட்டு வளர்ப்பதும் அரிதாகிவிட்டது.

எத்தனையோ செல்வமாயும் கிடைத்தற்கரிய மாணிக்கமாயும் வளர்த்த ப்ரேமையின் பொக்கிஷம்போன்ற குழந்தைகள் ப்ரேமாவும், ராஜுவும் இன்று பிச்சைக்காரக் குழந்தைகளிலும் கேடுகெட்ட நிலைமையில் இருப்பதைப் பார்க்க ரமாவின் வயிறு பொறுக்குமா! குழந்தைகளுக்குக் கால் முதல் தலைவரையில் சிறங்கு நெளிகிறது. தலைமயிரெல்லாம் ஜடைபோட்டதுபோல திரிதிரியாய் இருந்தது. ப்ரேமா உடல் முற்றும் கந்தல் பாவாடையுடனும், ராஜு அதுகூடஇல்லாத முண்டமாயும் இருந்தார்கள்.

இரு குழந்தைகளும் வீதியில் மற்ற பட்டிக்காட்டு குழந்தைகள் விளையாடுவதைப் பார்த்துக்கொண்டு நின்றார்கள். இவர்கள் அருகில் வந்தால் "சீச்சீ... தூரப்போ... சிறங்கு ஒட்டிக்கொள்ளும். புழுத்தல், அழுகல் ஐய்யய்யே... நாத்தம் சகிக்கலேயே"... என்றெல்லாம் உதாசீனமாகச் சொல்வதைக்கேட்டுச் சகிக்காத குழந்தைகள் அழுதுகொண்டே நின்றார்கள்.

நாட்டுப்புறத்தில் கார் வருவதென்றால் அதிசயத்திற்குக் கேட்கவேண்டுமா! பெரியவர்களே பல்லை இளிப்பார்கள் என்றால் குழந்தைகளுக்குக் கூறவேண்டாம். கார் ஓசையைக் கேட்டதும் வந்து சுற்றிக்கொண்டார்கள்.

ப்ரேமாவும் ராஜூவும் அந்த கும்பலில் வந்து நின்றார்கள், மற்ற குழந்தைகள் "சீச்சீ... தூரப்போ... புழுத்து நெளியும் பீடைக்கு பேரு ப்ரேமாவாம்... உனக்கு என்ன வேடிக்கை? எங்க மேலே படாதே" என்று வெடுக்கென்று மூலைக்கொரு பசங்கள் கூறுவதைக்கேட்டதும் ரமாவுக்குத் தூக்கிவாரிப்போட்டது.

சிறங்கு நெளிய நிற்கும் குழந்தைகளைக் கண்டதும் அவளால் சகிக்க முடியாது துள்ளினாள். "ராஜூ! ப்ரேமா! நீங்களா இப்படி இருக்கிறீர்கள்? ஐயையோ! நான் என்ன செய்வேன்?... என்னுயிர் இப்படியே போய் விடக்கூடாதா! என் செல்வங்களா!"...என்று வாய்விட்டுக் கதறிவிட்டாள்.

ராஜூவுக்கு முதலில் தெரியவில்லை. ப்ரேமாவுக்கு நன்றாகத் தெரிந்ததும் "அம்மா!"... என்று ஒரே கத்து கத்தி மயக்கம் போட்டவள்போல் விழுந்துவிட்டாள். புத்திர வாத்ஸல்யத்தின் சக்திக்கு முன்பு சிறங்கின் அசங்கியம் நிற்குமா! ஒரே தாவு... அணைகடந்த அன்புவெள்ளத்தின் வேகத்தில் குழந்தையைக் கட்டித் தூக்கிக்கொண்டாள். எத்தகைய கல்நெஞ்சர்களின் மனத்தையும் இந்த பரிதாபக்காட்சி கரையச்செய்தது,

ஆனால் இதயமே அல்லாத ராக்ஷஸி விசாலம் ரமாவின் வருகையை அறிந்து ஆத்திரத்துடன் வெளியே வந்து "ஐயையோ! எங்க குடிக்கு எமனாட்டமா நீ வந்து நாங்க பட்டபாடு போதுமே...நீதான் கெட்டுக் குட்டிச்சுவராகிவிட்டது போதாமல் அவனையும் பயித்தியமா அடிச்சுப்புட்டு சீமைக்கும் ஓடிப்போயிட்டே... இந்த பசங்களையும் பாழாக்கிவிட வந்துவிட்டாயா... ஒனக்கு மானம் வெட்கம் ஒன்னுமில்லையா!" என்று நீதியா, நிர்ணயமா ஒன்றுமில்லாது கத்தினாள்.

ரமாவுக்கு எப்படித்தானிருக்கும்? உலகம் கடகடவென்று நிலையில் நிற்காது சுத்துகிறதுபோல் தோன்றியது..."பகவானே! நீ உண்மையில் சத்யஸ்வரூபனாகிவிருந்தால் நீயே எல்லோருக்கும் பதில் கூறும் முறையில் கூலி கொடு. இதைத்தவிர என் வாயில் ஒன்றும் வரவில்லை... அக்கா!... என் குழந்தைகளை நான் அழைத்துச் செல்கிறேன். இது வரையில் முற்றிலும் சாகாமல் காப்பாற்றியதற்காக மிகவும் வந்தனம். அதற்காக... இதோ... இந்த பணத்தை எடுத்துக் கொள்ளுங்கள்" என்று 100 ரூபாய் நோட்டுக்களாய் 5 வீசி எறிந்தாள். பின்னர் காரை விடச்செய்தாள்.

விசாலம் மாமிசத்தைக் கண்ட நாயைப்போல் நோட்டைப் பொறுக்கும் கைங்கர்யத்திலீடுபட்டு அந்த யோக நிஷ்டையிலிருந்து கண்ணைத்

திறந்து பார்ப்பதற்குள் காரும், குழந்தைகள் உட்பட ரமாவும் பறந்துவிட்டார்கள். "ஐயயோ! குழந்தைகளைக் கொண்டுபோய்விட்டாளே!"... என்று விசாலம் கூறுவதற்குள், அவ்வூர் ஜனங்கள் அவளையே திருப்பிக்கொண்டு வாயில் வந்தபடியெல்லாம் திட்டியும் அவள் அக்ரமத்தைக் கண்டித்தும், ரமாவைப் பற்றிப் புகழ்ந்தும் பேசி விசாலத்தின் முகத்தில் காறித்துப்பினுர்கள்.

முகம் சுண்டைக்காயாய் சிறுத்த விசாலம் பணத்துடன் உள்ளே போய் புகுந்துகொண்டாள். எனினும் அக்கம் பக்கத்திலுள்ளவர்களின் வாயிலிருந்து பெய்யும் சொன்மாரிகள் இவள் காதில் படாதிருந்ததா? நன்ருகக் கேட்கத் தான் கேட்டது. சீ பிடித்த சிறங்கில் குத்தல் எடுப்பது சகஜந்தானே! மனத்தையடக்குகிறவர்கள்தான் மானத்தைக் காக்க முடியும். மானத்தை விட்டவர்களுக்கு மகிமை ஏது?...

26

புனிதவதியின் புதிய யோசனை

தாயைக் கண்ட குழந்தைகள் தம் சுய உணர்வுபெற்று அவளைக் கட்டிக்கொண்டு தேம்பித் தேம்பியழுது தெளிவுபெற அன்று சாயங்காலமாகிவிட்டது. ஏற்கெனவே பலவீனமான நிலைமையிலுள்ள குழந்தைகளுக்கு தகப்பனரின் நிலைமையைக் காட்டினுல் விபரீதமாக முடியுமென்று கருதி, ஆத்மநாதனின் ஆஸ்பத்திரியில் சிறங்கு சிகிச்சைக்காகப் படுக்க விட்டுவிட்டாள்.

'அப்பா எங்கே?' என்று குழந்தைகள் கேட்டதற்கு தன்னைப்போல் அவரும் படிக்க சீமைக்குப் போயிருப்பதாகக் கூறினுள். எதைச் சொன்னுல்தான் குழந்தைகளுக்கு என்ன தெரியும்? உண்மையில் போயிருப்பதாகவே எண்ணினுர்கள். தாயாரைக்கண்ட ஆனந்தமே அவர்களுடைய தளிர்போன்ற இதயத்தில் அமிருதம்போன்று தேங்கிவிட்டதால் அதிலேயே அவர்கள் த்ருப்தியடைந்தார்கள். அதோடு ராக்ஷஸிபோன்ற தம் அத்தையிடம் பட்ட துன்பம் நீங்கி தாம் சந்தோஷமாக வந்ததொன்றே அவர்களுக்கு ச்வர்க்கப்பதவியைப்போல் தோன்றியது.

"அம்மா! இனுமே நீ எங்களை விட்டுச் சீமைக்குப் போகமாட்டயே! அப்பா போனுபோகட்டும்மா! அவருக்கு எங்கமேலே ஆசையே இல்லே, நீ ஊருக்குப் போனப்றம் எங்களே அடிக்கவும் வெய்யவுங்கூட ஆரம்பிச்சுட்டார். அத்தைவீட்டுக்கு நாங்க போகவேமாட்டோம்னு அழுதோம், அந்த அகிலாண்டம்னு ஒரு பிசாசு வந்தது. அதுவும் அப்பாவும் சேர்ந்து அழ அழ எங்களைக் கொண்டு தள்ளிவிட்டார்கள். அங்கு அத்தை என்ன இம்சை பண்ணினு தெரியுமா?" என்று தாங்கள் பட்ட கஷ்டங்களையும் அடைந்த சிறுமைகளையும் கூறி அழத் தொடங்கினுர்கள்.

குழந்தைகளின் பரிதாபத்தைக் கண்ணால் நேரில் பார்க்கும்போது இன்னும் கேட்கவேண்டியது என்ன இருக்கிறது. ரமாவின் மனது துடித்ததால், அவள் விஷயங்களை வேறுவிதமாக மாற்றிக் குழந்தைகளின் கவனத்தைத் திருப்பிவிட்டாள். வஸந்தாவும் ஆத்மநாதனும் குழந்தைகளை வெகு அக்கரையுடன் கவனித்தார்கள்.

ரமாவுக்கு, மூளை கலங்கிவிடுமோ என்ற பயம் உண்டாகியதால் வேலைக்கு ஒப்புக்கொள்ள என்ன செய்வதென்று பெருத்த யோசனையுண்டாகிவிட்டது. தனக்கு உடம்பு சரியில்லை என்றும், இரண்டுமாதகாலம் லீவு வேண்டுமென்றும் கவர்மெண்டுக்கு ஒரு கடிதம் எழுதினாள். அதற்கு அனுகூலமான பதில் கிடைத்ததால் ஒரு சிறிது நிம்மதியுண்டாகியது.

மேல்நாட்டில் வெகு அக்கரையுடன் படித்து, தனக்குள்ள அத்தனை கவலைகளிலும், ரமா வெகு முக்கியமான விஷயங்களை ஆராய்ச்சி செய்து புத்தகமாக எழுதி அதிகாரிகளுக்கு அனுப்பியதை அவர்கள் பரிசிலனை செய்து ஒப்புக்கொண்ட சந்தோஷச் செய்திகூட அவளை சந்தோஷப்படச் செய்யவில்லை, தன் கணவனின் குணத்திற்கு என்ன விதமாக பாடுபடலாம் என்று இரவு பகல் யோசித்து புலம்பிப் புலம்பி அவளுக்கே பைத்தியம் பிடித்துவிடும்போலாயிற்று.

கணவனுக்கு முதலில் க்ஷவரம் செய்துவித்து, அவனுடைய கோரத்தை மாற்றி, நல்ல உடைகளை உடுத்தித் தானே ஆகாரத்தை ஊட்டிவந்தாள். இவளே பெரிய டாக்டரும், அதோடு சீமைக்குச் சென்று சிறப்புடன் திரும்பியிருக்கும் கண்ணியமும் வாய்ந்தவளுமாகையால், இரவு பகல் இவளைப் பார்க்கவரும் கூட்டத்தின் தொல்லையைச் சகிக்க முடியாது தவித்தாள்.

தனக்குத் தெரிந்தவரையில் ஊசி குத்துவது, மருந்து கொடுப்பது முதலியன செய்தும் அவனுடைய மூளைக்கோளாறு வாங்கவில்லை. "இன்னு செய்தாரை ஒறுத்தல் அவர் நாண நன்னயம் செய்துவிடல்" என்ற தமிழ் மறையின்படிக்கு அகிலாண்டத்திற்கும் தலைவிதியை எண்ணிச் சிகிச்சை செய்வதைக்கண்ட கிழவி வியப்புற்று ரமாவை வாழ்த்தினாள்

ரமாவுக்கு ஒரு யோசனை தோன்றியது. நல்ல உபரமான ஒரு கடவுளின் பொம்மையொன்று வாங்கி அதற்கு நகைகள், உடைகள் முதலியன அலங்காரம் செய்து, அதையொரு பீரோவில் வைத்தாள். தேவராஜனுக்குத் தானே சகலமான சிச்ருஷையும் செய்யும்போது அவன் அடிப்பதும், கிள்ளுவதும், பிராண்டுவதும், உடம்பெல்லாம் அப்படியே ரணமாகி காயவடுக்களும் உண்டாயின.

"கடவுள் எங்கே! கடவுளைக் கண்டாயா!"...என்று தேவராஜன் கத்தும்போது, ரமா அவனுக்கு மிகவும் ஹிதமாகப் பேசி, "டாக்டர்! இதோ! கடவுளைக்கண்டேன். நான் நேரில்கண்ணாரக்கண்டேன்" என்றாள்.

தேவ:—என்ன! கண்டாயா! கடவுளைக் கண்டாயா! எங்கே காட்டு! காட்டு!...அகிலாண்டம்!-என்று கத்தினான்.

ரமா, உடனே அந்த பீரோவின் கதவை மெல்லத் திறந்துவிட்டு அரைகுறையாய்க் கடவுளின் பொம்மையைக் காட்டி "இதோ! கடவுள்...

நன்ருகப் பாருங்கள்''...என்று கூறும்போது துக்கம் தொண்டையை அடைத்துக் கொண்டது. "கடவுள்! கடவுள்!...கடவுள்!'' என்று தேவ ராஜன் குதித்தான். உடம்பு தெரியாது அப்படியே விழுந்துவிட்டான்.

அதைக்கண்ட ரமாவின் இதயம் துடித்தது. உடனே அவனைத் தூக்கித் தன் மடிமேலேயே சாத்திக்கொண்டு விசிறியவாறு "ஹரே கிருஷ்ணு! ஹரே கிருஷ்ணு!'' என்று ஒரு பாட்டை இனிமையாகப் பாடினுள். தேவராஜன் கண்ணைத்திறக்கவே இல்லை. வெகுநேரம் மயக்கம் போட்டிருந்தது. இச்சமயத்தில் அவளுக்குத் தெரிந்தவரையில் மருந்துகளை ஊசி குத்தியதோடு உள்ளுக்கும் கொடுத்தாள்.

வெகு நேரஞ்சென்று கண்ணைத்திறந்து பார்த்தவாறு, "கடவுள்! கடவுள் எங்கே?...புட்டிக்குள் கடவுள் எங்கே?''..என்று அலறியதுபோல் கேட்டான். ரமாவுக்கு விஷயம் நன்ருக விளங்கிவிட்டது. "இதோ பாருங்கள். புட்டிக்குள் கூட கடவுளைப் பாருங்கள்'' என்றுகூறி தன் நர்ஸுக்குக் கண்ணைக் காட்டினுள். பெரிய கண்ணுடிக் கிண்ணத்தில் எலுமிச்சம்பழம் ஷர்பத்தைக் கொட்டி அவன் கையில் கொடுத்தாள். பீரோவில் அலங்காரம் செய்திருந்த கண்ணனை கிண்ணத்திற்கு நேரே மேலே தூக்கிப்பிடித்துக் காட்டினுள்.

தேவராஜன் கிண்ணிக்குள் பார்த்தான். "ஹா...கடவுள்...கடவுள் ...அகிலாண்டம்! கடவுள்...கடவுள்''...என்று கத்தினுன். உடனே அந்த பாதகி "கடவுளா...ப்ரமாண்டம்!...கடவுளா! இங்கே வரச்சொல்லு... புகழ்மாலையைக் கொண்டுவரச்சொல்லு...தேவா!...புகழ்மாலை ராணி எங்கே?...கடவுள் எங்கே?''...என்று கத்தினுள்.

தேவ:—புகழ்மாலை...புகழ்மாலை ராணி...கடவுளிடம் இருக்கிருள்... அகிலாண்டம்!...புட்டியில் கடவுளைப் பார்த்தாயா?...

அகி:-ப்ரமாண்டம்!...புட்டி புட்டி ஹாஹ்ஹா!...என்று நகைத்தாள்.

ரமாவின் சங்கடம் உச்சத்தை எட்டியது. கதவைத் திறந்துவிடச் செய்து அகிலாண்டத்தையும் இழுத்துக்கொண்டு வந்து அந்த கடவுள் பொம்மையைத் தனியேயும், புட்டியிலும் காட்டினுள்.

அகிலாண்டத்தின் முகத்தில் முதலில் பயமும், பிறகு வியப்பும் அதன் பிறகு, ஒருவிதமான சந்தோஷமும் உண்டாகி 'ஹ ஹ ஹ ஹ' என்று சிரித்தாள். தேவராஜனின் தலையயிரைப் பிடித்து இழுத்து "கடவுள்...கடவுள் ...பாருடா! பாரு...நன்ன பாரு...உனக்குப் புகழ்மாலை எங்கேன்னு கேளு...இதோ நான் உனக்குத் தருகிறேன்''...என்று கூறி அருகிலிருந்த ஒரு நாற்காலியைத் தூக்கி தேவனின் கழுத்தில் மாட்டிவிட்டாள்.

இமை கொட்டும் நேரத்திற்குள் இம்மாதிரி செய்துவிட்டதால். தேவன் அந்த நாற்காலியைத் தலையில் கவிழ்த்தபடியே கெட்டியாகப் பிடித்துக் கொண்டு "புகழ்மாலை...அகிலாண்டம்!...இதுதான் புகழ்மாலை'...என்று கூவிக்கொண்டே குதித்தான். அவள் "ப்ரம்மாண்டம்! இதுதான் புகழ் மாலை...மாலை...மா ஆ...ஆ...ஆ ஆ...லை ஈ...ஈ...ஈ...ஈ'' என்று ராகம் இழுத்தபடியே அவன் கையைப் பிடித்துக்கொண்டே ஆடினுள்.

இந்த கன்ராவிக் காட்சியை ரமாவினுல் சகிக்கவேமுடியாது தேம்பித் தேம்பி அழுதாள். நாற்காலியை மெல்ல வாங்கப் பிரயத்தனஞ்செய்தாள்.

ஆனல் குரங்குப் பிடியாகப் பிடித்திருக்கும் தேவன் அதைவிடாது ரமாவை நன்ருக அடித்துத் தலைமயிரைப்பிச்சி "புகழ்மாலையைப் பிச்சாதே...புகழ் ...புகழ்...மாலை...மாலை...என்று கத்தினன்.

தலைவிதியை எண்ணி அவனுடன் மல்யுத்தம் செய்த நாற்காலியைப் பிடுங்கி வைத்தாள். அகிலாண்டத்தை அடித்த அறைக்கனுப்பிவிட்டாள். தான் என்ன செய்தால் இந்த சித்தப்ரமை தெளியும் என்ற எண்ணத் துடன் தவித்தாள். இதே ஏக்கத்தில் ரமாவின் தேக நிலைமை மிகவும் கேவலமாகிவிட்டது. நாகராஜன், ரமா வந்தபிறகு இந்தப்பக்கமே எட்டிப் பார்க்கவில்லை. தன் சகோதரியை அழைத்துச்செல்லவுமில்லை. அவனைப் பற்றிய தகவலே தெரியாது திடீரென்று மறைந்துவிட்டதானது எல்லோ ருக்கும் விசித்திரமாகவிருந்தது.

எந்த விதத்திலாவது தன் கணவனுக்குக் குணமாகிவிட்டால் போது மென்ற ஒரே நினைவில் ரமா ஆராய்ச்சிகள் செய்துவந்தாள். அச்சமயம், அவளுக்கொரு யோசனை தோன்றியது: தன்னுடைய தகப்பனரின் பரம சினேகிதரான ஒருவர் பயித்தியக்கார ஆஸ்பத்திரியில் பெரிய டாக்டராக விருப்பது ஞாபகத்திற்கு வந்தது. அவரை நேரில் காண அவள் மனம் தூண்டியது. வஸுந்தராதேவியைக் கூட துணைக்கு அழைத்துக்கொண்டு உடனே கிளம்பினள். காற்றின் வேகத்தைவிட அவளது மனோவேகம் பறந்தது.

27

ஆனந்த தரிசனம்—அதிசய மாறுதல்

என்னவிருப்பினும், ஒரு பெரிய டாக்டர், அனுபவமும் புகழும் நிறைந்த டாக்டர், துரைத்தனத்தாரின் ஆதரவுக்கு லாயக்கான டாக்டர் கேவலம் ஒரு சாதாரணமனுஷிபோல் வந்திருப்பதைக் கண்டதும், பயித்தியக்கார ஆஸ்பத்திரியின் டாக்டரான சதாசிவத்திற்கு மிகவும் ஆச்சரியமும், அவள் உடல் மெலிவைக் கண்டு பரிதாபமும் உண்டாயின.

ரமாவை அவர் குழந்தைமுதல் பார்த்திருப்பவராதலால் பழய வாத் ஸல்யத்துடன், "யாரு...ரமாவா!...சீதாபதியின் செல்வியா! ரமா! இதென்ன காட்சி! ஏன் இப்படி உடம்பு அடையாளந் தெரியாமலிருக் கிருய்?...உட்காரம்மா; உன் குடும்பவிஷயங்களைக்கேட்க மிகவும் விசன மாயிருக்கிறது...அதிருக்கட்டும். சில நாட்களாக உன் கணவனை வெளி யில் பார்க்கவே இல்லையே! அவர் ஊரிலிருக்கிருரா! அன்றி இன்னொரு வதந்தி கேள்விப்படுகிறேன்"...

என்று இழுப்பதற்குள் ரமாவுக்கு அவளைமீறித் தாங்க முடியாத துக்கம் வந்ததால் தலையைக்கவிழ்ந்து கொண்டாள். அவளுடைய கண் ணீர் பூமியில் உதிர்ந்ததைக்கண்ட சதாசிவத்தின் உள்ளம் உருகியது.

சதா:—ரமா!...குழந்தாய்!...அழாதே...அந்த விவரம் உண்மையா யிருக்குமா என்று நான் சந்தேகித்தேன். அதனல்தான் கேட்டேன்.

விதி... அதைக் கூறித்தான் நாம் தேறுதலடையவேண்டும்... அவன் ஓயாமல் குடித்துவிட்டுக் கண்டபடி அலையும்போது நான் மிகவும் பயந்தேன்; சந்தேகித்தேன். குடிப்பதற்கும் மிதமில்லையா! இப்படிக் குடித்துப் பாழாகலாமா என்றுகூட அவனையே ஒருதினம் கேட்டதற்குக் குடிவெறியில் கேவலமாகப் பதில் சொன்னான்; அதோடு நான் அவனிடம் பேசுவதையே விட்டுவிட்டேன். அழாதேம்மா! இப்போது எப்படி இருக்கிறான்?...நீ, ஏன் அவனை உடனே ஆஸ்பத்திரிக்கு அனுப்பியிருக்கக் கூடாது?...

ரமா அல்றி விம்மியவாறு, "டாக்டர்!... இந்தக் கேள்வியை எல்லோரும் சகஜமாகக் கேட்டதுபோல் தாங்களும் கேட்கிறீர்களே! ஐயோ! என்னுடைய பாவத்தின் பலனால் அவருக்கு இந்த கதி நேர்ந்திருப்பினும் பயித்தியங்களோடு பயித்தியமாய் ஆஸ்பத்திரிக்கு அனுப்பிவிட்டு வேடிக்கை பார்க்க என் மனது இடங்கொடுக்குமா! நீங்களே சொல்லுங்கள்... எது எப்படியிருந்தாலும் நான் என்னுயிருள்ளமட்டும் அவரை அப்படி அனுப்பமாட்டேன். டாக்டர்! ஆஸ்பத்திரியைவிட அதிகமான முறைகளை அவருக்கு என் வீட்டிலேயே செய்து கவனித்து வருகிறேன். அதற்கு உங்களுடைய யோசனையையும் நாடியே நான் இங்கு வந்தேன்...

டாக்:—அம்மா! உன் பரிதாபம் என் மனத்தைக் கரையச்செய்கிறது. இப்போது என்னால் உனக்கு எந்தவிதமான உதவி வேண்டுமோ சொல்லு. நான் செய்வதற்குத் தயாராயிருக்கிறேன். அவன் என்ன நிலைமையிலிருக்கிறான்? என்ன பிதற்றுகிறான்? அடித்து உபத்திரவிக்கிறானா?

ரமா:—என்னால் சொல்லவே முடியவில்லை. டாக்டர்! நெஞ்சம் பதறுகிறது. அடிப்பதும் இம்சை செய்வதும் அவ்வளவாக அதிகமில்லை. "கடவுள் எங்கே? கடவுளைக் கண்டாயா!" என்ற கேள்வியைத்தான் அடிக்கடி கேட்கிறார். எனக்குத் தெரிந்தமட்டும் அதற்கு நிதர்சனமாகக் கண்ணுக்குத் தெரியும்படிச் சில முறைகளைச் செய்து கடவுளைப் பாருங்களென்று காட்டினேன். அதில் அவருடைய நிலைமையில் சிறிது மாறுதல் உண்டாகியதைக் கண்டு சந்தோஷப்பட்டேன். பின்னும் சிற்சில விஷயங்களைச் செய்து காட்டத் தீர்மானித்திருக்கிறேன். அதற்கு உங்களுடைய உதவியும், யோசனையும் கேட்கத்தான் வந்தேன். தாங்கள் தயவுசெய்து என்னுடன் கூட வந்து அவரைப் பாருங்கள். பகவான் என்னை ஒரு வழியில் தேர்ச்சி பெறுவதற்குப் படிக்கச் செய்தும், எதிர்பாராத வேறு துறையில் என்னைப் புகுத்தி உழைக்கும்படி ஊக்குகிறார். அதில் நான் வெற்றியடையும்படிக்குச் செய்தால்போதும். தயவுசெய்து வருகிறீர்களா!—என்று கண்ணீர்பெருகக் கேட்டாள்.

டாக்டர் மறுபேச்சின்றி ரமாவுடன் கூடக் கிளம்பினார். ரமாவும் இத்தனை துக்கத்தின் மத்தியில் சிறிது சந்தோஷத்துடன் அவரை அழைத்துக்கொண்டு மாடிக்கு வந்தாள். அதே சமயம் தேவராஜன் பெரிதாக நகைத்துக்கொண்டு "அகிலாண்டம்! கடவுளைப் புட்டியில் கண்டாயா!"... என்று கர்ஜனை செய்தான்.

அடுத்த அறையிலிருந்து "ப்ரம்மாண்டம்!...கண்டேன்! புட்டியில் கடவுளைக் கண்டேன்"...என்று கத்தினாள். இவ்விரண்டையும் கேட்டுக் கொண்டே வந்த டாக்டருக்குப் பகீரென்றது. அகிலாண்டத்தைப்பற்றி ஒன்றுமே தெரியாதாகையால் அதி ஆச்சரியத்துடன் ரமாவை விசாரித்துச் சகலத்தையும் அறிந்து கண்ணீர் வடித்தார். "ரமா! இந்த தரித்திர மூதேவியை இன்னுமா இங்கு வைத்துக் கொண்டிருக்கிறாய்?...உன்னுடைய பொறுமையின் உயர்வு என்னை ப்ரமிக்கச் செய்கின்றதம்மா... பத்தரைமாற்றுத் தங்கத்தைப்போன்ற உன் குணத்திற்குப் பகவான் இத்தனை சோதனைகளைக் காட்டக்கூடாது. அக்கிரமம்...கடவுள் செய்வது மிகவும் அக்ரமம்" என்று உரக்கக் கூறியபடியே தேவராஜன் முன்பு நின்றார்.

தேவராஜன் அசட்டுச் சிரிப்புச் சிரித்தபடியே "கடவுளா!...எங்கேடா கடவுள்! நீயா கடவுள்?...ஊஹூம்...நீயல்ல...அழகாக அலங்காரம் பண்ணின கடவுள் வேறே இருக்கிறார்டா! நீ இல்லை...புகழ்மாலை ...ரமாவுக்குமட்டும் புகழ்மாலை. கடவுளுக்கும் புகழ்மாலை. அகிலாண்டம்! ...புகழ்மாலை வந்ததா?"...என்றான்.

அதே சமயம் அகிலாண்டம் "ப்ரம்மாண்டம்...புகழ்மாலை ரமா தேவிக்குத்தாண்டா! ப்ரம்மாண்டம்...ப்ரம்மாண்டம்" ...என்று கத்தியதைக் கண்டு டாக்டரின் உள்ளத்தில் சங்கடம் வதைத்தது. "ரமா! உனக்கு ஏற்பட்ட புகழைக் கண்டுதான் இவனுக்குப் பொறாமை உண்டாகியிருக்கிறதென்பது நன்றாகத் தெரிகிறது. அந்த பொறாமையின் வேகத்தில் குடித்துக் குடித்து மூளை கலங்கியிருக்கிறது. நீ முதலில் இவ்விருவரையும் தனித்தனியே பிரித்து இவ் வீட்டைவிட்டு வேறு வீட்டிற்கு மாற்றவேண்டுமென்று எனக்குத் தோன்றுகிறது. இந்த வீடே சரியானதல்ல. இதில் குடி வந்த யாரும் உருப்படவே இல்லை" என்றார்.

ரமா:—நானும் பார்த்துக்கொண்டுதானிருக்கிறேன். சரியான இடம் கிடைக்கவில்லை. அக்கம் பக்கங்களில் வீடுகளில்லாதிருந்தால் சௌக்யமாகவிருக்கும் என்பதால் அலைகிறேன்.

டாக்:—ரமா! உன் தகப்பனாரும் நானும் இருந்த சிநேகத்திற்கு நான் உன்னை இந்நிலைமையில் பார்க்கச் சகிக்கவே இல்லை. என்னுடைய பங்களா ஒன்று இம்மாதம் காலியாயிற்று. அதில் நீ உன்னிஷ்டப்படி, உன் பிதாவைப்போல் என்னை எண்ணிக்கொண்டு சுதந்திரமாக இரு. அது உன் விருப்பப்படி அக்கம்பக்கம் வீடில்லாததும் பெரிய தோட்டம் இருப்பதுமான வசதியுள்ள பங்களா. அதில் நீ இன்றே குடியேறிவிடு. உன்னிஷ்டப்படி நான் உனக்கு உதவி செய்கிறேன். சங்கோசப் படாதே—என்றார்.

இதற்குள் தேவன் அந்த டாக்டரை விரைக்க விரைக்கப் பார்த்துப் பல்லைக் கடித்தபடியே ஒரு நொடியில் ஓட்டமாக ஓடிவந்து கழுத்தைக் கெட்டியாகப் பிடித்தவாறு, "அகிலாண்டம்!...கடவுளைக் கண்டாயா? டேய்! நீ கடவுள் இல்லேடா! ஏண்டா இங்கே வந்தே?" என்றான்.

ப்ரம்மப்ரயத்தனப்பட்டு ரமா அவன் கைகளை விலக்கி தூர உட்கார வைத்து உடனே கடவுள் படம் இருக்கும் பீரோவைத் திறந்து "இதோ

கடவுள்! பாருங்கள். கடவுள் சிரிக்கிறார். கையை ஆட்டுகிறார். தெரிகிறதா!'' என்று கூறிக் கடவுள்-பொம்மைக்குக் கொடுத்திருந்த விசையை அழுத்தினாள்.

மின்சார விசையினால் தயார்செய்திருந்த பொம்மை ஆடியும் சிரித்தும் நகர்ந்தும் சுழன்றதைக் கண்ட தேவராஜன் "அகிலாண்டம்!... கடவுள்! கடவுள்! கடவுள் சிரிக்கிறார். கையை ஆட்டுகிறார்... ஹா... ஹா!''... என்று கூச்சலிட்டவாறு குதித்தான். 'ஏ கடவுளே! பேசுடா! ஊமையா நீ!... ஐயோ, பாவம். வாயடைத்து விட்டதா!... சரி ஊசி குத்துகிறேன்... உம். ஊசி எங்கே!'' என்று கத்தினான்.

ரமா ஒரே ஓட்டமாக ஓடி இன்ஜெக்ஷன் செய்யும் ஊசியைக் கொண்டுவந்து கொடுத்தாள். தேவராஜன் முதலில் ஊசியைப் பார்த்ததும் வெருண்டுபோய் விழித்தான். திகைத்தான். சற்று நேரம் கையில் வைத்துக்கொண்டே திரும்பித் திரும்பிப் பார்த்தான். பிறகு சிரித்தான்... ...ரமாவுக்குப் புகழ்மாலை கொடுத்த ஊசியல்லவா!... ஊசி ஊசி... அகிலாண்டம் ஊசி..கடவுளுக்கு ஊசி குத்தப்போறேன்...என்றான்.

"ப்ரம்மாண்டம்!... கடவுளா!... ஊசியா... ஹ ஹ் ஹ!... குத்து. குத்து. நன்றாகக் குத்து''... என்று அவள் கத்தினாள். உடனே தேவராஜன் சிறிதும் தயங்காமலும் முறை தவறாமலும் பொம்மைக் கடவுளுக்கு ஊசியைக் குத்தினான். அது மெழுகினால் செய்த பொம்மையானதால் ஊசி இறங்கி விட்டது. "பேஷ்...பேஷ்... எங்கே பேசு. உம்...பேசு...ஒரு ஊசி போதாதா?'' என்றான்.

ரமாவுக்கு பளிச்சென்று ஒரு யோசனை தோன்றியது. உடனே தன்னுடைய நர்ஸுகளில் ஒருத்திக்குக் கிருஷ்ண வேஷத்தைப்போட்டு இந்த பீரோவுக்குப் பின்னால் கொண்டு நிறுத்தி அவளுக்கு ஏற்கனவே சொல்லிக் கொடுத்திருந்தபடிக்கு ஜாடை செய்யும்படியாகக் காட்டினாள். பொம்மைக் கண்ணை மறைத்துவிட்டாள்.

அந்த நர்ஸைப் பார்த்ததும் தேவராஜன் ஒரேயடியாய் மருண்டுபோய் "ஹ!... ஹ!... சின்னவராயிருந்த கடவுள்... ஒரே ஊசியில் இத்தனை பெரியவராகிவிட்டாரா! அகிலாண்டம்!... ஒரே ஊசி! ஒரே ஊசியில் பெரியவராகிவிட்டார்!''...என்று கத்தியவாறு குதித்தான்.

"ப்ரமாண்டம்! ப்ரமாண்டம்''... என்று அகிலாண்டம் பெரிதாகக் கத்தினாள். ரமா சடக்கென்று அவளையும் அவ்வறைக்கு அழைத்துவந்து நிறுத்தினாள். அவளும் நர்ஸைப்பார்த்தவுடனே "ஹே... ஹா... ஹா... ப்ரம்மாண்டம்... கடவுள் ப்ரமாண்டம்''... என்று கத்தியவாறு விரைக்க விரைக்க விழித்தாள்.

தேவ:—அகிலாண்டம்!... ஒரே ஊசி... கடவுளைக் கண்டாயா... எங்கே கடவுள்?...

அகிலா;—இதோ... இதோ... ப்ரமாண்டம்... கடவுள்... கடவுள் புகழ்மாலை. இல்லை... ரமா உன்னை ஏமாத்தி விட்டாள்...

தேவ:—டேய்... கடவுளே!... இன்னொரு ஊசிபோட்டால்தான் பேசுவாயா... சரி... ஊசி... ஊசி—என்றான், ரமா ஊசியைக் கொடுத்தாள். தேவன் அதில் மருந்திருக்கிறதா என்பதைப் பார்த்தான்... இந்த புதிய

தெளிவு உண்டாகி இருப்பதைக் கண்டு ரமாவுக்குச் சந்தோஷம் பொங்கியது. வெறும் காலி பாட்டலில் நீரை நிரப்பி அதை மருந்தென்று கூறி ஊசியில் ஏற்றிக்கொடுத்தாள்.

உடனே தேவன் அதை முன்போல் இன்னும் பக்குவமாயும் ஜாக்ரதையாயும் பிடித்துக்கொண்டு நர்ஸின் கையில் குத்தினான் ரமாவின் போதனைப்படிக்கு நர்ஸ் "ஹா!...தேவா! வலிக்கிறதே...மெல்ல குத்து"... என்று கணீரென்ற த்வனியில் கூறி தேவனைப்பார்த்து நகைத்தாள்.

உண்மையில் தேவராஜனின் தேகம் நடுநடுங்கி சிலிர்த்ததை ரமாவும், டாக்டர்கள் வஸுந்தரா, சதாசிவம் இருவரும் கண்டு வியப்புற்றார்கள், கண்கள் இப்படியும் அப்படியும் சுழல்கின்றன... ஆச்சரியத்தால் தேகத்தில் படபடப்பும், நரம்புகளின் துடிப்பும் பெருமூச்சும் தூரத்துகின்றன. "பேச்சு... பேச்சு... கடவுள்பேச்சு... ஹா... ஹா... பேசுகிறார்... கடவுள்பேசுகிறார்... கடவுள்... வலிக்கிறதா... ஐயோ! புகழ்மாலை உண்டா?"... என்று கூறும்போது அவன் கண்களில் நீர் பெருகியது. அதன் உணர்ச்சியை அறியும் சக்தி அவனிடமேது?

இதைக்கண்ட ரமா ஓட்டமாக ஓடி ஒரு மாலையைக் கொண்டுவந்து, கிருஷ்ணன் வேஷம் தரித்த நர்ஸிடம் கொடுத்து ஜாடை காட்டினாள். அந்த நர்ஸ் மாலையைக் கையில் வைத்துக்கொண்டு,

மாலை! மாலை! மாலை! புகழ்மாலை! மாலை! மாலை! மாலை!
நாலுவர்ண புஷ்பம் நல்ல மணங்கமழும் புஷ்ப மாலை

என்று ராகமாகப் பாடியபடியே நர்த்தனம் ஆடுவதுபோல் ஆடி ஆடி மாலையுடன் சுற்றிவருவதைக்கண்ட தேவராஜன் கண்கள் பலவிதமான உணர்ச்சிகளுடன் சுழல்வதோடு "ஹா!...ஹா!...மாலை புகழ்மாலை!" என்று அவனும் மூணுமுணுத்தபடியே குதித்தான்.

அந்த வேஷம் போட்ட நர்ஸ் தேவனின் நிலைமையை அறிந்து அம்மாலையைக்காட்டி "பேசவராது வாயடைத்துப்போன எனக்கு ஸ்ரீமான் தேவராஜன் ஊசி குத்திப் பேச வைத்த பெருமைக்காக நானே இந்த புகழ்மாலையைச் சூட்டுகிறேன்" என்று சிரித்தவாறு கூறிக்கொண்டே தேவன் கழுத்தில் போட்டாள். அச்சமயம் 'பேஷ். புகழ்மாலை... புகழ்மாலை... புகழ்மாலை" என்று ரமாவுள்பட எல்லோரும் கூவிக்கொண்டே கையை கலகலவென்று தட்டினார்கள்.

தேவனுக்கு ஒன்றுமே தோன்றாது மாலையைப் பார்க்கிறான்; மிரள மிரள விழிக்கிறான். கண்ணில் மட்டும் தண்ணீர் கொட்டுகிறது. ரமாவின் ஜாடையை அறிந்த டாக்டர் இன்னும் ஒரு மாலையை தேவராஜனுக்குப் போட்டுவிட்டு "மகாஜனங்களே! ஸ்ரீமான் தேவராஜனைப்பற்றி உங்களுக்கு நன்றாகத் தெரிந்திருக்கலாம... அவருடைய திறமையின் பெருமையை வர்ணிக்கவே முடியாது. சாதாரண மனிதர்களுக்குமட்டும் வயித்தியம்செய்து நோயைக் குணப்படுத்துவது ஒரு பெருமையல்ல சாக்ஷாத் கடவுளுக்கே வாயடைத்துவிட்ட மகத்தான நோயை ஒரு ஊசி குத்தலால் குணம் செய்துவிட்ட மகிமை ஸ்ரீமான் தேவராஜனுக்கே உரித்

தாகும். அதற்காக இதோ மற்றொரு புகழ்மாலை''... என்று கூறி இன்னொரு மாலையை அவர் போட்டார்.

ரமாவின் முன்னேற்பாட்டின்படி அங்கு ஏராளமான நர்ஸ்களும் இதர ஆட்களும் ஆளுக்கொரு புஷ்பமாலையுடன் ப்ரஸன்னமாகியிருந்தார்கள். ரமா ஒரு ஜாடை காட்டியவுடனே ஒவ்வொருவராக எழுந்து வந்து "ஸ்ரீமான் தேவராஜனின் அபாரமான செயலுக்கு இதோ புகழ் மாலை சூட்டுகிறோம்... கடவுளைப் பேசச் செய்த பெருமைக்கு இவரைப் பாராட்டுகிறோம்'' என்று கூறியவாறு ஒருவர்பின் ஒருவராக வந்து மாலையைப் போட்டார்கள்.

எல்லோரும் ஏக காலத்தில் "புகழ்மாலை! தேவராஜனுக்குப் புகழ் மாலை தேவராஜனுக்கு ஜே! புகழ்மாலைக்கு ஜே!'' என்று ஒரே குரலாகக் கத்தி ஆரவாரம்செய்தார்கள். இந்தக் காட்சி தேவராஜனை ஒரு ஆட்டு ஆட்டியது. மிரள மிரள விழித்தபடியே "ஹா!...புகழ்மாலைபா!'' என்று கூறியபடியே தன் கழுத்திலுள்ள மாலைகளை திரும்பத் திரும்ப அழகு பார்த்தான். முகர்ந்து பார்த்தான்.

இந்த சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்த ரமா அவன் கையை மெல்லப்பிடித்து அழைத்துச்சென்று பெரிய நிலைக்கண்ணாடி எதிரில் நிறுத்தி "டாக்டர்!...டாக்டர்!... இதோ பாருங்கள்... அடடா!'' என்று கூறியவாறு மற்றவர்களைப் பார்த்துக் கண் ஜாடை செய்தாள்.

எல்லோரும் மறுபடியும் "ஸ்ரீமான் தேவராஜனுக்கு ஜே! புகழ்மாலை தரித்த தேவராஜனுக்கு ஜே!''... என்று கூவியபடியே மற்றும் மாலைகளை, கண்ணாடியின்முன்பு அவனுக்குத் தெரியும்படி அவனால் சுமக்கமாட்டாது மேலே போட்டு ஜே கோஷத்தையும் விடாது செய்தார்கள்.

தேவராஜனுக்கு ஒன்றுமே தோன்றாது ஒரே ப்ரமிப்பும் குழப்பமும் உண்டாகியதால் குதித்தான்..."ஹா! ஹா!'' என்று கூச்சலிட்டான். ஒரு கணத்திற்குள் 'ஹா!' என்று பெரிய சத்தமும் சிரிப்பும் அந்த கட்டடத்தை கிடுகிடுக்கச் செய்தது. அடுத்த நிமிடமே தடாரென்று ப்ரக்ஞையற்றுக் கீழே விழுந்துவிட்டான். வெகு அக்கரையுடன் பக்கத்திலேயே நிற்கும் ரமா அப்படியே அவனைத் தாங்கிப் பிடித்துக்கொண்டாள்,

சதாசிவம் அவனுடைய மாலைகளை முற்றும் களைந்துவிட்டு நிம்மதியாக ஒரு படுக்கையில் படுக்கவைத்துப் பின் ஐஸ் கட்டியை அவன் தலையிலும் முகத்திலும் வைத்துத் தேய்த்தபடியே இருக்கச்செய்து சிறந்த மருந்து ஒன்றை ஊசி குத்தினர்.

"அவர் இம்மாதிரி மயக்கமாக விழுகிற சமயத்தில் இவ்விடத்தை விட்டுக் கிளம்பிவிடுவது நல்லது. விழித்துக் கொண்டால் அவர் வரமாட்டார்'' என்று ரமா கூறியதால், டாக்டர் சதாசிவம் ஆஸ்பத்ரியிலிருந்து ஸ்ட்ரெச்சரும், ஆம்புலன்ஸ் காரும் வரவழைத்து அதில் மெல்ல தேவராஜனைவைத்துக்கொண்டு ரமாவுடனும் வஸந்தாவுடனும் புதிய பங்களாவிற்குச் சென்றார்.

ரமா, தெய்வபக்தியில் சிறந்தவளாதலால் முதலில் தான் இறங்கி அந்த பங்களாவுக்குச் சென்று வீதியில் வாசல்படியில் ஜலம் தெளித்து கோலமிட்டும், பின் ஒரு விளக்கை ஏற்றிவைத்து, கடவுளின்படத்தை

உள்ளே கொண்டுமோட்டி, கடவுளை எல்லாம் வேண்டியபடியே நமஸ்காரம் செய்துவிட்டு, தேவராஜனுக்குப் படுக்கை தயார் செய்து அவனைக் கொண்டுவந்து உள்ளே நல்ல காற்றுவாட்டமான இடத்தில் படுக்கவைத்தாள். தன் தாயாரை வேண்டிக் கண்ணீர் உதிர்த்தாள்.

சதா:—ரமா! நீ இங்கேயே இருந்து கவனித்துக் கொள். நான் அங்குள்ள சாமான்களை எல்லாம் இங்கு அனுப்புகிறேன்.

வஸ,—வேண்டாம்! வேண்டாம்... அந்தவேலையை நான்பார்த்துக் கொள்கிறேன். நீங்கள் இவ்விடத்திலேயே இருங்கள். ரமாவைப் பார்த்தால் அவளும் எங்கே மயக்கமாகிவிடுகிறாளோ என்று பயமாயிருக்கிறது "ரமா! தைரியமாயிரு; நான் போய்வருகிறேன்"—என்று கூறிச் சென்றாள்.

ரமாவுக்கு மனது குழம்பித் தவிக்கிறது. கணவனின் முகத்தைப் பார்த்தபடியே உட்கார்ந்திருந்தாள். சதாசிவம் பின்னும் சில மருந்துகளை ஊசி குத்தினார். ரமாவின் பரிதாபத்தைக் காணச் சகிக்காது அவருடைய மனதும் உருகியது.

28

காரிகையின் யுக்தி—கதாப்ரஸங்கத்தின் சக்தி

ஆத்மநாதனின் ஆஸ்பத்திரியில் விட்ட ரமாவின் குழந்தைகளை ஆத்மநாதனும் அவனுடைய மனைவியும் வெகு அக்கரையுடனும் அன்புடனும் கவனித்து வந்ததால் வெகு சீக்கிரத்தில் சிறங்குகள் குணமாகி நன்றாகத் தேறிவிட்டார்கள். ரமா தினம் இரண்டு வேளையும் வந்து பார்த்துவிட்டுப் போவதில் அவளும் சந்தோஷமடைந்தாள். குழந்தைகளும் ஆனந்தத்துடன் தாயாரிடம் குலாவி மகிழ்ந்தார்கள்.

தகப்பனாரின் நிலைமை குழந்தைகளுக்கு அடியோடு தெரியாமையினால் சீமைக்குத்தான் போயிருப்பதாக நினைத்திருந்தார்கள். ஆகையால் அதைப்பற்றித் தாயாரிடம் கேட்கவே இல்லை. அதோடு தேவராஜன் தங்களைச் செய்த கொடுமையைக் குழந்தைகளின் இளம் இதயம் மறக்கவேயில்லையாதலால் அவனிடம் ஏற்கெனவே இருந்த அன்பும் குறைந்துபோயிற்றென்றே கூறலாம்... எப்படியாவது தங்களுடைய தாயாரைப் பிரியாதிருந்தால் போதும் என்ற ஒரே ஆவலுடனிருந்தார்கள்.

உடம்பு நன்றாகக் குணமாகிவிட்டதால் வீட்டிற்குப் போகவேண்டுமென்கிற ஆசை உண்டாகியதால் அம்மாவைக் கண்டவுடனே வெகு ஆவலுடன் அவளை கட்டிக்கொண்டு "அம்மா! எங்களுக்குத்தான் நன்றாகக் குணமாகிவிட்டதே! நாங்கள் இனி வீட்டிற்கு வருகிறோம்மா! இங்கிருக்கப் பிடிக்கவில்லை... அழைத்துக்கொண்டு போம்மா!" என்று கொஞ்சலாகக் கெஞ்சிக் கேட்டார்கள்.

ரமாவுக்கு தர்மசங்கடமாகிவிட்டது. வீட்டிற்கு அழைத்துச்சென்றல் தகப்பனரின் நிலேமையை அறிந்து குழந்தைகளின் மனது எப்படிக் கலங்குமோ! என்கிற பயமும் திகிலும் உண்டாயின. வீட்டிற்கு வரவேண்டுமென்று ஆசை உண்டாகிய பிறகு அழைத்துப்போகாவிட்டால் அதனல் ஒருவிதமான ஏக்கம் பிடித்து மீண்டும் உடம்புக்கு ஏதாவது வந்துவிட்டால் என்ன செய்வது என்றும் பயம் உண்டாகியது.

சற்றுநேரம் யோசனே செய்தாள். ஒருகால் குழந்தைகளேப் பார்த்தால் தேவராஜனுக்கு பழைய ஞாபகம் ஏதாவது வருமோ! என்று தோன்றியதால் குழந்தைகளே அழைத்துப்போக இசைந்தாள். தந்தையின் நிலேமையை முதலிலேயே சொல்லிவிடவேண்டும். திடீரென்று பார்த்தால் கலங்குவார்களென்று எண்ணியவாறு, குழந்தைகளே வண்டியிலேற்றிக் கொண்டு நேரே புஷ்பக்கடைக்குச் சென்று, நிறைய மாலேகளும் பொக்கேகளும் வாங்கினள்.

இதைக் கண்ட குழந்தைகள் "எதற்கம்மா இத்தனே மாலேகள்? என்ன விசேஷம்?" என்று கேட்டார்கள்.

ரமா:—(தன் விசனத்தை உள்ளடக்கியபடியே பேசத் தொடங்கி)... விசேஷந்தாண்டா கண்ணு! நம்ப வீட்டிற்குப் போனதும் ஒரு சின்ன ட்ராமா நடத்தப்போகிறேம்.

குழ:—என்ன!...ட்ராமாவாம்மா? என்ன ட்ராமா? யார் யார் நடத்தப்போகிறர்கள்?

ரமா:—நாம் எல்லோருந்தான்... இதோ பாரு கண்ணு! நீங்க பயப்படவே கூடாது...நம்ப அப்பாவுக்கு உடம்பு சரியில்லே...எனக்கு முன்னெல்லாம் தினம் எல்லோரும் மாலேபோட்டு மரியாதை செய்வாளே அது உங்களுக்கு ஞாபகமிருக்கிறதா!

குழ:—ஓ! நன்ன ஞாபகமிருக்கெ... அப்பாவுக்கு என்ன உடம்பு?... எதுக்காக நாங்க பயப்படாமலிருக்க வேண்டும்?...

ரமா:—ஒன்றுமில்லேம்மா......எனக்கு அந்தமாதிரி மாலேகள் வருவதைப் பார்த்து அப்பாவுக்குக் கோபமும் பொறுமையும் உண்டாகி அதனல் கொஞ்சம் புத்தி ஒருமாதிரியாயிருக்கிறது.

ப்ரேம:—என்ன...புத்தி ஒருமாதிரின்ன பைத்தியம் என்றுதானே சொல்வார்கள்... அந்த மாதிரியா?...

ரமா:—கொஞ்சம் அப்படித்தாம்மா இருக்கிறர். நீங்க என்ன பண்ணணும் தெரியுமா! அப்பாவைப் பார்த்து பயப்படாமல் "அப்பாவுக்குப் புகழ்மாலே, அப்பாவுக்குப் புகழ்மாலே"... என்று கூறிக்கொண்டே மாலேகளே அவருக்குச் சூட்டுங்கள்: அவருக்குப் பரம சந்தோஷமாகிவிடும். என்ன தெரிந்ததா! சரிதான?" என்றள்.

குழந்தைகளும் அதற்கு ஆமோதித்ததால் மாலேகளுடன் புதிய வீட்டிற்கு வந்தாள். இந்த வீட்டிற்கு வந்து சுமார் ஒருவார காலமாகியது. இந்த ஒருவார காலமாக தினம் பல நர்ஸுகளுக்கு கிருஷ்ணவேஷம் போடுவதும் கிருஷ்ணலீலேபோல் நாடகங்கள் நடத்துவதும், மாலேமேல் மாலே அவனுக்குப் போடுவதும் மருந்துகளே ஊசி குத்துவதுமாகச் செய்ததில் ஒருமாதிரியான சிறு மாறுதல்கள் அவனிடம் தோன்றின.

ஆகாரங்களைத் தானே வாங்கிச் சாப்பிடுவதும், இராக் காலங்களில் சற்று நேரமாவது நிம்மதியாகத் தூங்குவதும், கேட்டதற்கு சில சமயம் சரியாகப் பதில் சொல்வதுமாக விரும்பதைக் கண்ட ரமாவுக்கு ஆனந்தம் கூறத்திறமே இல்லை. குழந்தைகளுடன் உள்ளே ஓடினாள்.

குழந்தைகளும் ஆவலுடன் "அப்பா! அப்பா!" என்று கூவியவாறு அவனிருக்குமிடத்திற்கு ஓடிவந்தார்கள். ரமா கூடையுடன் மாலையை வைத்துவிட்டு அவனிடம் ஓடிப்போய், "இதோ பாருங்கள்... ப்ரேமா... ராஜு... அப்பா பெரிய டாக்டராகி விட்டார். கடவுளுக்கு திடீரென்று வாய் பேசவராது போய்விட்டது. ஒங்கப்பா ரெண்டு ஊசி குத்தினார். கடவுள் உடனே பேசவாரம்பித்துவிட்டார். தெரியுமா?" என்றாள்.

ப்ரேமா தாயாரின் கண் ஜாடையை அறிந்து "அப்படியா! கடவுளை நான்கூட பார்த்தேன்பா... நீங்கள் வயித்தியம் செய்ததினால்தான் வாய் பேசவந்ததாகச் சொன்னார். அதற்காக இதோ புகழ்மாலை ராஜு, 'போடடா!" என்று கூறியபடியே ராஜுவிடம் மாலையைக் கொடுத்தாள் 'அப்பா! அப்பா! இதோ உனக்கு புகழ்மாலையப்பா! இந்தா! இந்தா.... நிறைய மாலை, அப்பாவுக்குப் புகழ்மாலை. அப்பாவுக்குப் புகழ்மாலை" என்று கத்தியபடியே போட்டுவிட்டு ப்ரேமா தகப்பனாரின் முகத்தை இரு கைகளாலும் பிடித்துக்கொண்டு "அப்பா! அப்பா! என்னைத் தெரிகிறதா! என்னைப் பாரு. என்னுடன் பேசு. ஏம்பா நீ பேசமாட்டேங்கிறாய்? நீ கடவுளுக்கு ஊசி குத்தியதுபோல் நான் உனக்கு ஊசி குத்தட்டுமா! அம்மா! ஊசி கொண்டா!' என்றாள்.

தேவராஜன் குழந்தைகளைப் பார்க்கிறான். ஏதோ மாதிரி விழிக்கிறான். தடவிக்கொடுக்கிறான். கண்ணால் ஜலத்தை விடுகிறான். ப்ரேமா ஊசியை எடுத்து தேவனின் கையருகில் கொண்டு போனாள். தேவன் அலறியவாறு "ஐயையோ! வேண்டாம்... ஊசி குத்தவேண்டாம்... எனக்குப் பேசவரும். நான் ஊமை இல்லை" என்று தானே கத்தினான்.

ப்ரேமா ஊசியைப் போட்டுவிட்டு அவனுடைய இரு கைகளையும் பிடித்துக்கொண்டு தட்டாமாலைபோல் சுத்துவதும், ஈட்டி ஆடுவதுபோல ஆடுவதும், குதிப்பதும், அவனுடைய விலாவில் கையைவிட்டு கிசுகிசு செய்வதும், அவன் காதருகில் குற்றென்று கத்துவதும் சிறு துரும்பை காதில் விட்டுக் குடைவதுமான குறும்புகள் செய்து அவனைச் சிரிக்க வைக்க முயன்றாள்.

இவள் இழுத்த இழுப்பிற்கெல்லாம் அவனும் கூட அலைந்தான். சில சமயம் சிரித்தான். சில சமயம் அப்படியே ப்ரமை பிடித்தவன்போல் பார்த்தான். ஆனால் கூச்சலிடவோ திமிரிக்கொண்டு ஓடவோ இல்லை. ப்ரேமா தைரியமாய் ராஜுவை தேவராஜன் முதுகில் ஏறி மூட்டை போல் ஒட்டிக்கொள்ளச் செய்து பின், தான் தேவன் கையை தடதட வென்று இழுத்துக்கொண்டு சுத்தினாள்.

முதுகில் தொத்திக் கொண்டுள்ள குழந்தை கீழே விழாதபடி பிடித்துக்கொள்ளவேண்டுமென்கிற உணர்ச்சி அவனுக்கு இருக்கிறதாவென்பதை அறிவதற்காகவே ரமா இம்மாதிரி செய்தாள். தேவராஜனின் முதுகில் ராஜு அமர்ந்த உடனேயே தேவராஜன் ஒரு கையால் பின்புறம்

கட்டிக்கொண்டு ஒரு கையை ப்ரேமாவின் இடுப்பிற்குக் கொடுத்ததை யறிந்த ரமா மிகவும் சந்தோஷப்பட்டாள்.

இப்படி இரண்டு மூன்று தினங்கள் குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருந்ததில் பின்னும் சில மாறுதல்கள் உண்டாகின. ப்ரேமா ஒரு நிமிடங்கூடப் பிரியாமல் தகப்பனரிடமே இருந்து பேசுவது, கதை சொல்வது, பாட்டுப் பாடுவது, நடனமாடுவது முதலியன செய்தாள். அவைகளுக்கெல்லாம் அவன் பார்த்துக்கொண்டிருந்ததைத் தவிர வேறு வித்யாஸமாக எதுவும் செய்யவில்லை.

ரமாவுக்கு ஒரு புதிய யோசனை தோன்றியது. ப்ரேமாவுக்குக் கட வுளைப்போல் வேஷத்தைப் போட்டு உள்ளே மறைவாக நிறுத்திவிட்டு, ரமா ஓட்டமாக ஓடிவந்து "டாக்டர்! டாக்டர்! கடவுள் உங்களைப் பேட்டி காண வந்திருக்கிறார். சின்னவராய் அழகாயிருக்கிறார்" என்று ஆச்சரி யத்துடன் கூறினாள்.

தேவராஜனுக்கு வியப்பினால் உடல் சற்று சிலிர்த்தது. "என்ன!... கடவுளா! என் பேட்டிக்காகவா வந்திருக்கிறார்!...ஏன்...திரும்பவும் வாயடைத்துவிட்டதா! ஊசி குத்தணுமா?" என்றான்.

ரமா:—இல்லை... இல்லை... வாயடைக்கவில்லை. முன்பு நீங்கள் கொடுத்த ஊசி மருந்தில் வாய் சரியாக வந்துவிட்டது. நன்றாகப் பேசுகி றார். உங்களிடம் சதா இருந்து விளையாடவேண்டுமாம். அதற்காக வந் திருக்கிறார். வாருங்கள்—என்று அவன் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு ஓடினாள்.

ப்ரேமா, எதிரில் கதவைத் திறந்துகொண்டு ஓடிவந்தாள். "தேவ ராஜா! வா! வா! என்னோடு விளையாட வா!...எனக்குப் பொழுதே போக வில்லை. யாருடன் விளையாடலாம் என்று யோசனை செய்து பார்த்தேன். உன் ஞாபகந்தான் வந்தது. அதனால் நேரே கருடன்மேல் ஏறிக் கொண்டு ஓட்டமாக ஓடிவந்தேன். என்ன விளையாட்டு விளையாடலாம்?... நான் யார்? உனக்கு ஞாபகமிருக்கிறதா?...என்று கேட்டாள்.

தேவ:—ஓ! நன்றாக ஞாபகமிருக்கிறது. நான் ஊசி குத்தினது ஞாபகமிருக்கிறதா! நீதானே கடவுள்...கடவுள்..,கடவுள்" என்று கூறிய படியே ப்ரேமாவைத் தூக்கிக்கொண்டு குதித்து "ஏ கடவுளே! நீ எப் போதும் என் கூடவே இருக்கிறாயா! உன்னை நான் விடவே மாட்டேன். நீ என்னை விட்டுப்போகவே கூடாது" என்றான்.

ப்ரேமா;—ஐயையோ! அது முடியவே முடியாது. என் மனைவியை விட்டு அரை வினாடிகூடப் பிரியமாட்டேன். இப்போது அவள் வெளியே போயிருக்கிறாள். அதனால் வந்தேன்...

தேவ:—(வியப்புடன்) மனைவியா! உனக்குக்கூட மனைவி உண்டா!

ப்ரேமா:—ஓ! தாராளமாயுண்டு. என் மனைவி ரமாவைப்போல் உலகில் கிடையவே கிடையாதே...

தேவ:—ஹா!...ரமாவா...உன் மனைவியின் பெயரா ரமா!...உன் மனைவிக்குப் புகழ்மாலை யுண்டா...

ப்ரேமா:—ஏராளமாயுண்டு...என் மனைவியை உனக்குக் காட்டட் டுமா! அவளைப் பார்க்கிறாயா!

தேவ:—உம்...காட்டு...பார்க்கிறேன்...என்ருன். உடனே ப்ரேமா உள்ளே ஓடிப்போய் மகாலக்ஷ்மி வேஷம் போட்டுத் தயாராயிருந்த ராஜுவை அழைத்துக்கொண்டு வந்து "இதோ! என் மனைவி...இதோ புகழ்மாலை பாரு"...என்று காட்டினுள்.

உடனே ராஜு, "தேவா...என் கணவர் மிகவும் நல்லவர். என் புகழ்மாலையைக் கண்டு சற்றும் பொருமையே அடையமாட்டார். இன்னும் மாலை போடுவாரேயன்றி அதற்குக் கேடு விளைவிக்கமாட்டார்" என்று மழலையாய் மொழிந்தாள். தேவனுக்கு ஒருவிதமான கலக்கம் உண்டாகியது. "உனக்குக்கூட புகழ்மாலையா? நீ கூட சீமைக்குப் போனுயா?"...

ராஜு:—ஓ! சீமை எழுகடலுக்கு அப்பாலும் போயிருக்கிறேன். அங்கெல்லாம் புகழ்மாலைகள் பெற்றிருக்கிறேன்...அதோ...காலக்ஷேபம் நடக்கிறது......போகலாம் வாருங்கள்......என்று ப்ரேமாவின் கையைப் பிடித்து இழுத்துச் சென்ருன்.

ப்ரேமா தேவராஜனின் கையைப் பிடித்து இழுத்துவந்தாள். ரமாவின் முன்னேற்பாட்டின்படி ஏராளமான கூட்டம் அங்குக் குழுமியிருந்தது. மத்தியில் ஒரு ஆசனத்தில் பாகவதர் ஒருவர் உட்கார்ந்திருந்தார். அவருக்கு அருகாமையில் ஒரு ஆசனம் அமைந்திருந்தது. அதில் தேவராஜனை உட்காரவைத்து ப்ரேமாவும், ராஜுவும் பக்கத்தில் அமர்ந்தார்கள்.

உடனே "ஜேய்! கோவிந்த நாம ஸங்கீர்த்தனம்......கோவிந்தா கோவிந்தா!" என்று ஒரே கூச்சலாக எல்லோரும் சொன்னுர்கள். அந்த பரிசுத்தமான பகவன்நாமம் நிறைந்த கோஷத்தைக் கேட்டதும் தேவனின் உடலே சிலிர்த்தது. "ஹ ஹ ஹா" என்று ஒரு கர்ஜனை செய்தான். இதைக் கண்ட எல்லோருக்கும் ஒருவிதமான ஆனந்தம் உண்டாகியது. பாகவதர் கதையை ஆரம்பம் செய்தார்.

ஓர் பரம பக்தசிகாமணியாகிய மகான் தமது சிஷ்யர்களைப் பார்த்து ஹிதோபதேசம் செய்கிருர். "பக்தர்களே! நான் இத்தனை நாட்களாக கடவுளின் கல்யாண குணங்களையும் காருண்ய இதயத்தின் மேன்மையையும் உங்களுக்கு எடுத்துச் சொல்லி வந்தேன். இன்று மும்மூர்த்திகளின் முக்ய அம்சங்களைப்பற்றி ஒரு சிறிது கூறுகிறேன்.

பகவான் சேதனனையும் படைத்தான். அசேதனனையும் படைத்தான். இருவர் கண்களுக்கும் படும்படிப் பல வஸ்துக்களையும் படைத்துள்ளான். தம்தம் புண்ய பாபபலன், இரண்டிற்கும் தக்கபடி மனிதரின் புத்தியும் விகசிதமடைகிறது. அவனவன் தன்தன் புத்தியின் பரிபக்குவத்தின்படி அந்தந்த சாமான்களை இச்சிக்கின்ருன். எடுத்துக்கொள்கின்ருன். இதைத் தான் அவனவன் ப்ராப்தம் என்று கூறுகிருேம்...

இதில் சேதனன் சேதனப் பொருளையே விரும்பி எடுத்துக் கொள்கிருன். இதைக்கண்டப் பிறத்தியானுக்கு பொருமை, வயிற்றெரிச்சல்; அதைத் தான் கவரவேண்டுமென்ற ஆசை. அதை நிறைவேற்றப் பல விதத்தில் சண்டாளத்தனங்கள் செய்கிருன். அதற்காகக் கணக்கற்ற பாபத்தைச் செய்து நரகத்திற்கு அதிகாரியாகிருன்.

சில மூடர்கள் பிறத்தியாரைப் பார்த்துப் பொருமை கொள்வதைவிட அதிகமாக தன் தாயார், தகப்பனர், உடன் பிறந்தோர், தான் அக்கினி

சாக்ஷியாக மணந்த மனைவி முதலியவர்களிடமே பொறுமைகொண்டு அவர்களைச் சித்திரவதை செய்கிறார்கள்.

சிஷ்யன் ;—ஸ்வாமிகளே! அம்மாதிரி மனைவியின் மீது கூடப் பொறுமைகொண்டு பாழாகிய மனிதர் யாரேனும் உண்டா! அவர்களை நீங்கள் சொல்லமுடியுமா! பகவானுக்குமட்டும் பொறுமையில்லையா?

குரு:—சிஷ்யா! விவரமாய்ச் சொல்கிறேன் கேள். உலகத்தின் விசித்திரமான மாயை என்னவென்றால், பகவான் ஒரு பாண்டத்தில் அமிருதத்தை வைக்கிறான். ஒரு பாண்டத்தில் கள்ளை வைக்கிறான். அதை எடுத்துக் கொள்ளும் அதிகாரிகளின் பலாபலனைப் பொறுத்திருக்கிறது. இரண்டில் உயர்ந்த அமிருதத்திற்குத்தான் ஏற்றம். அந்த அமிருதத்தைப் போலத்தான் கடவுளின் குணம் இருக்கும். அதனால்தான் கடவுள் உதாரணமாகப் பல உண்மைகளைக் காட்டியிருக்கிறார்கள்.

மும்மூர்த்திகளின் அதிபற்புதமான பெருமையைப் பாருங்கள். அவர்களுக்கு இவ்வுலகத்தில் சகலமான மனிதர்களையும், பொருள்களையும்விட அவளுக்கிணை இந்த உலகத்தில் வேறு ஒன்றுமே இல்லை என்பதை நன்றாகக் காட்டுவதற்காகத்தான் ஸ்ரீ மகாவிஷ்ணு தம் மனைவியைத் தனது உயர்ந்த ஸ்தானமாகிய மார்பிலே சதா வைத்துக்கொண்டு ஆனந்தமாகக் கூத்தாடுகிறார். தனக்குக் கிடைக்கும் புகழ்மாலைகளைக்கூடத் தன் மார்பிலுள்ள மனைவிக்கே சூட்டி மகிழ்கிறார். மனைவியின்மீது கோபமோ, பொறுமையோ ஒரு கடுகளவும் இல்லை...

என்று பாகவதர் சொல்லும்போது தேவராஜன் பாகவதரையும் சபையையும் மாறிமாறிப் பார்த்தான். பக்கத்திலுள்ள ப்ரேமாவைப் பார்த்து "ஏ கடவுளே! உன் மனைவியை நீ மார்பிலா வைத்திருக்கிறாய்?. எங்கே... காட்டு"... என்று எல்லோரும் அதிசயிக்கும்படிக் கேட்டான்,

இதைக்கண்ட ரமா கண் ஜாடைக்காட்டினாள். உடனே ப்ரேமா அவனை இழுத்துக்கொண்டு ஓட்டமாக வெளியிலே வந்தாள்..."அதோ கோயில் இருக்கு பாரு. அங்கு வா நான் பெரியவிச்வரூபம் எடுத்து உனக்குக் காட்டுகிறேன்" என்று கூறியபடியே ரமாவே கார் ட்ரைவ் செய்ய, ப்ரேமா அவனுடன் கோயிலுக்குச் சென்றாள்.

29

தந்திர நாடகம்

இவர்கள் திடீரென்று வெளியே சென்றதைக் கண்ட மற்றவர்களுக்கு வியப்பும் பிரமிப்பும் உண்டாயின. ரமாவின் அதிமேதாவியான புத்திசாமர்த்தியத்தைக்கண்டு புகழ்ந்து பேசாதவர்களில்லை.

கோயில் அதிகாரிகளிடம் ரமாவும் சதாசிவமும் ப்ரத்யேகமாய்ப் பேசி விஷயத்தை விளக்கிப் பிறகு கோயில் கதவைத் திறக்கச்செய்து தேவனை உள்ளே அழைத்துச் சென்றார்கள். ப்ரேமா சந்நிதி மூலஸ்தானத்திற்குள் சென்று மறைந்துகொண்டு "தேவா! இதோ நான் எப்

படி பெரியவனாய் நிற்கிறேன் பாரு. என் மார்பில் லக்ஷ்மி எப்படி ஸ்வதந்திரமாய் சந்தோஷமாய் வீற்றிருக்கிறாள் பாரு. எத்தனை புகழ் மாலை பாரு எனக்கு; நான் மாலை சூட்டி மகிழ்வதைவிட என் தேவி ஸ்ரீலக்ஷ்மிக்கு மாலை சூட்டிக் கண்டுகளிப்பதுதான் எனக்குப் பேரானந்தம். என் மனைவியின் சந்தோஷம்தான் எனக்குச் சந்தோஷம். என் தேவியின் பெருமைதான் எனக்குப் பெருமை. அவளால்தான் எனக்குக் கீர்த்தி...எனக்கு மகிமை...தேவா! உன்னைப்போல் நான் என் மனைவியை சோகச்செய்யமாட்டேன்''...

என்று சொல்வதைக் கேட்டதும், பகவானின் திருமார்பிலுள்ள லக்ஷ்மியைப் பார்த்ததும் தேவராஜனுக்கு ஒரே குழப்பம். ஒரே கலவரம். ஒன்றுமே தோன்றாது துடித்தான்; அவன் நிலைமை பெருத்த மாறுதலடைந்து ''ஹா...ஹா!''...என்று கத்தவாரம்பித்தான்.

பின்னும் பகவான் பேசுவதுபோல் அந்தக் கோயிலின் குருக்களே பேசத்தொடங்கி "தேவா!...பெத்த தாயை அவமதித்தவன் நாயாய்ப் பிறப்பான். கட்டிய மனைவியை கலங்கச் செய்து அவளைச் சந்தேகித்தும் ஹிம்சித்தும் அவளுடைய விருத்தியைக் கண்டு பொறாமைகொண்டும் உபத்திரவம் செய்பவர்கள் கேவலமான நரகலைத்தின்றும் பன்றியாய்ப்பிறந்து தெருத்தெருவாயலைந்து அசுத்தத்தைத் தின்று பலராலும் இழிவுபட்டுக் கல்லடிதாங்கி அவமானப்படுவார்கள். இதற்காகவே நான் மார்பில் என் மனைவியை அமர்த்திக்கொண்டேன். எனது புதல்வனாகிய ப்ரம்மதேவன் எனது நாட்டுப் பெண்ணாகிய கலைராணி என்னும் ஸரஸ்வதியைத் தனது நாக்கிலேயே வைத்துக்கொண்டான். பார்வதியை சிவபெருமான் தனது இடது பக்கத்திலேயே வைத்து மகிழ்கிறார். இதனால்தான் நாங்கள் தம்பதிகள் ஒவ்வொரு நிமிடமும் வெகு அன்யோன்யமாயும் இன்பகரமாயுமிருக்கிறோம்...

என்று கூறுவதைக் கேட்டதும் அதற்குமேல் அதிர்ச்சி தாளாத தேவராஜன், ''ஹா!...மனைவிக்கு இத்தனை ஏற்றமா...உங்கள் மனைவிகள் அத்தனை நல்லவர்களா!''...என்று கத்தினான்.

குருக்கள்:—தேவா!...ஆமாம் வெகு நல்லவர்கள். வெகு நல்லவர்கள். அப்பழுக்கற்றவர்கள், மகா புத்திசாலிகள், மேதாவிகள் எங்கள் உள்ளங்களைக் கொள்ளைகொண்ட ராணிகள், விளக்குக்கு ஜோதி எப்படி முக்யமோ, தேனுக்கு இனிப்பு எப்படி அவச்யமோ, அப்படி எங்கள் வாழ்க்கைக்கு எங்கள் தர்ம பத்தினிகள் அவச்யம். மனைவியை இழிவு படுத்தினால் லக்ஷ்மியையே அவமதிப்பது போன்றதாகும். பூலோகத்தில், அதாவது இம்மண்ணுலகில் புலபாமிகள் குடியினாலும் துஷ்ட நேசத்தினாலும், பிறமாதரின் நட்பினாலும் தம் சொந்த மனைவிகளை இம்சை செய்கிறார்கள். அவர்களை நான் ரௌரவாதி நரகத்தில் தள்ளி இம்சை செய்வேன்.

பெண்கள் சாக்ஷாத் லக்ஷ்மியின் அம்சம் என்பதை யறியாத முட்டாள்கள் அவர்களை இகழ்கிறார்கள், ஒரு மனிதனின் உயிரும் உடலும்எப்படி ஒன்றையொன்று ஒட்டியிருக்கின்றனவோ அப்படி மனைவியும் புருஷனும் இருக்கவேண்டும். மனைவியை இகழ்கின்ற மடையனுக்கு இவ்வுல

கத்திலும் சுகமில்லை. இறந்தபின் அவ்வுலகத்திலும் சுகமில்லை. பெரிய இதிகாஸ புராணங்களிலுள்ளபடி பரம பக்தர்கள் என்னை சரணகதி செய்யவேண்டுமானல் என்னுடைய தேவியின் கருணைக்கும் கிருபைக்கும் பாத்திரமாகித்தான் பிறகு என்னையடையவேண்டும். என்னைக் காட்டிலும் என் தேவிக்கு அத்தனை உயர்வு உண்டு தெரியுமா!

தேவா! உனக்கொரு கதை சொல்லுகிறேன் கேளு. இந்த உலகத்தில் ஒரு மடையன் இருக்கிறன். அவன் பெயர் தேவராஜன். அவன் ஒரு உத்தமியைக் காதலித்துக் கல்யாணமும் செய்துகொண்டான். அவள் பெயர் ரமாதேவி. இருவரும் உயர்ந்த உபகாரமுறையில் சிறந்த டாக்டர் தொழிலை மேற்கொண்டவர்கள். "ரமாதேவி, தேவராஜன், ரமாதேவி தேவராஜன், ரமாதேவி, தேவராஜன்"...என்று குருக்கள் வேண்டுமென்றே நாலைந்து முறைகள் உரத்துக் கூறியதைக் கேட்ட தேவராஜன் "ஹா! ரமாவா! ரமாதேவியா! தேவராஜனு!...சீமையில் வெள்ளைக் காரனை!...என்று பதட்டமாகக் கூறி முடிப்பதற்குள்,

குருக்கள் பேசத்தொடங்கி, "தேவா! நீ நினைப்பது சுத்தபிசகு. ரமா மகா உத்தமி, மகா பதிவ்ருதை, அவள்மீது உனக்கு வேண்டுமென்று குற்றங் கூறி உன் புத்தியைக் கலைத்த மகா பாவிகள் நாகராஜனும், அகிலாண்டமும், சீமைக்குச் சென்ற லேடி டாக்டர்களுமேயாவார்கள். ரமா வெகு பரிசுத்தவதி...ரமா நெருப்புக்குச் சமானமானவள்" என்று சொல்லும்போது தேவராஜனின் உணர்ச்சி உச்சத்தை எட்டியது. "என்ன... ரமா!...எனக்கு த்ரோகம்.

இச்சமயம் ரமா கண்ணீர் பெருக தேவராஜனின் எதிரில் வந்து "டாக்டர்!...இதோ, ரமா இருக்கிறேன். பாருங்கள்...நானு உங்களுக்கு த்ரோகம் செய்வேன்?...டாக்டர்!...பகவானிடம் பேசும் புண்ணியம் உங்களுக்கிருக்கையில் உங்களைவிடப் புண்ணியசாலிகள், பாக்யசாலிகள் வேருருவருமே இல்லை. இதோ பாருங்கள்" என்று வெகு உருக்கமாகக் கூறினள்,

தேவராஜனுல் பதில் ஒன்றுமே சொல்லமுடியாது ஒரே மயக்கம் போட்டுவிட்டது. டாக்டரும், ரமாவும் அவனைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, அந்தக் கோவில் ஸ்வாமி தீர்த்தத்தை வாங்கி முகத்தில் தெளித்துப் பின் வீட்டிற்குக் கொண்டுவந்து படுக்கச் செய்தார்கள். இம்முறை அவன் சதா "ரமாதேவி! தேவராஜன்!...ரமாதேவி! தேவராஜன்!" என்று வாய்ப் பிதற்றுவதைக் கண்ட ரமாவுக்கு ஒரு யுக்தி தோன்றியது.

தான் சீமையிலிருந்த காலத்தில் தன்னைப்பற்றிப் புகழ்ந்து எழுதியிருந்த பத்திரிகைகளை எல்லாம் பொறுக்கி எடுத்தாள். தேவராஜனைப் பற்றியும் புகழ்ந்து தானே எழுதினள். டாக்டர் சதாசிவத்தைவிட்டு இவ்விரண்டையும் மாறி மாறிப் படிக்கச் சொன்னள். ஓயாது ஒழியாது இம்மாதிரி படிப்பதைக் கேட்ட தேவராஜன் கொஞ்சங் கொஞ்சமாகத் தெளிவுற்று "எங்கே இன்னொருதரம் படி; மறுபடியும் மீண்டும் படி" என்று தானகவே கேட்டான். டாக்டர் விடாது படித்தார்.

ஆனல் அதைக் கேட்டுவிட்டு மவுனமாக விருந்தானேயன்றி வேறு ஒன்றுமே சொல்லவில்லை. இப்படி ஒருவாரம் சென்றது. மீண்டும் ரமா

வுக்கு மறுபடியும் ஒரு யுக்தி தோன்றியது. ரமாவின் புகைப்படங்கள் பல வற்றைப் பெரிதாகச் செய்து அவற்றை தேவராஜன் எதிரில் வைத்தாள். அவைகளைமட்டும் தேவராஜன் உற்று உற்றுப் பார்த்து வெகுநேரம் யோசித்தான். "ரமாதேவி!...ரமாதேவி!" என்று கூப்[redacted] ரமாவே மறைவில் நின்றபடி "டாக்டர்!...ஐயோ பாவம்!...ரமாதேவி செத்துப் போய்விட்டாளே...ரமா இறந்தாள்"...என்று கூறினாள்.

அதுவரையில் கண்டிராத பெரிய மின்சாரம் தாக்கியதுபோல் "ஹா ...என்ன!...என்ன!...ரமா இறந்தாளா... இறந்துவிட்டாளா? ரமாவா செத்துவிட்டாள்! ரமா...ரமா" என்று பெரிய கூச்சலிட்டு அவ்வீடு பூரா வும் ஓடித்திரிய வாரம்பித்தான். "ரமா! ரமா" என்று கதறுகிறான். ரமா இவன் கண்ணில் படவே இல்லை.

குழந்தைகளும் ரமாவின் முன்னேற்பாட்டின்படி "அம்மா! அம்மா!" என்று கதறவாரம்பித்தார்கள். "அப்பா!...அம்மா செத்துப்போய்விட் டாளே; அம்மா செத்துப்போய்விட்டாளே!"...என்று கதறுவதைக் கண்ட தும் தேவராஜனின் கலக்கம் நன்றாகத் தெளிந்துவிட்டது, "ரமா!...ரமா! என்னை ஏமாற்றிவிட்டாயே...என் இன்ப ரமா!"...என்று ஓலமிடுகிறான். குழந்தைகளைத் தூக்கிக்கொண்டு கதறுகிறான்...வீடே அல்லகல்லோலப் படுகிறது. டாக்டர் சதாசிவத்திற்கு ஒருபுறம் தேவனின் தெளிவைக் கண்டு ஆனந்தமும், ரமாவின் சாமர்த்தியமான யுக்தியைக் கண்டு அபாரமான ஆச்சரியமும், குழந்தைகளும் திறமையாக நடிப்பதைக் கண்டு சிரிப்பும் ஒன்றுகூடின.

இவரைத் தனித்த இடத்தில் கண்ட ரமா..."டாக்டர்! எனக்கு ஜெயம் கிடைக்குமா! என் பங்கில் பகவான் இருந்து துணைபுரிவாரா!" என்று கண்ணீர் வடித்தபடியே கேட்டாள்.

சதாசிவம் ரமாவைத் தேற்றி முதுகில் தட்டிக்கொடுத்து "குழந்தாய்! உன்னுடைய சாமர்த்தியமும் யுக்தியும் என்னை பிரமிக்கச் செய்து பரவச மாக்குகின்றன. உன்னுடைய அபாரமான திறமைக்கு மெச்சி கடவுள் உனக்கு ஜெயத்தைக் கொடுத்துவிட்டார். இனிமேல் கொடுப்பாரா?" என்று கேட்காதே. ஆஸ்பத்திரியில் இம்மாதிரியான நாடகங்களும், கதைகளும் ஒருபோதும் நடத்த முடியாது. உன்னைப்பிடித்த பீடை விட் டொழிந்தது என்று சந்தோஷமாக ஜெயலக்ஷ்மியை தரிசனஞ் செய்து, அவனெதிரில் போய் காட்சி கொடுத்துத் தேற்று" என்றார்.

இதைக் கேட்ட ரமா, "என் மனோபீஷ்டத்தை நிறைவேற்றிய கடவு ளுக்கு என் மனப்பூர்ணமான வந்தனத்தைச் செலுத்துகிறேன். அந்த ஜெயத்திற்கு பலவிதத்திலும் உபகாரம் புரிந்த தங்களுக்கு நான் அடிமை யாகவிருந்தால் கூட என் நன்றி செலுத்தியது போதாது...அப்பா!...... இனி தங்களையே நான் வாயார 'அப்பா!' என்று அழைக்கப்போகிறேன். இம்மட்டுடன் எனது நாடகம் முடியவில்லை. இன்னும் ஒரு கடைசீ காட்சி பாக்கியிருக்கிறது. அதையும் முடித்துவிடுவோம். அதற்கும் நீங்கள் உதவி செய்யவேண்டும்" என்று காதோடு ஏதோ சொன்னாள்.

30

காட்சியின் முடிவு—கஷ்டத்தின் அழிவு

"உண்மையாகவா! என் ரமாவா இறந்துவிட்டாள்? இல்லை. இல்லை என் ரமா இறக்கமாட்டாள். என்னைக் கைவிடமாட்டாள்... எங்கே... அவளைக் காட்டுங்கள். ப்ரேமா! கடவுளே எனக்குக் காட்டிய ரமா எங்கே! அவளை எனக்குக் காட்டுங்கள்'' என்று தேவராஜன் அலறினன்.

சதாசிவமும் வஸந்தராவும் தேவராஜனை அழைத்து வந்து "உம் தேவரீஜா! கண் கெட்ட பிறகு சூரிய நமஸ்காரம் செய்வதுபோல் இனி நீ ரமாவுக்காக அழுவதில் உபயோகமென்ன? நீ செய்த கொடுமையினுலும் அக்ரமத்தினுலும் இதோ! இதோ! அந்தப் புண்ணியவதி சவமாய்க் கிடப்பதைப் பாரு. என்ன பரிதாபம்!......என்ன கண்ராவி! என்ன கண்ராவி! என்னவிருந்தாலும் உன்னுடைய தர்மபத்தினி உன்னுடைய நிழல்போன்றவளல்லவா! அவளுக்குண்டாகும் புகழ் உனக்கும் சேர்ந்ததல்லவா! இதை நீ அறியாது செய்த சதியினுல்தான் அவளுடைய கதி இப்படியாயிற்று'' என்று கூறியபடியே அங்கு ஒரு கட்டிலின்மீது கிடத்தப்பட்டிருந்த ரமாவைக் காட்டிவிட்டு முகத்தை மூடிக்கொண்டு கதறினர்கள்.

என்னே பரிதாபம்!...என்னே மாறுதல்கள்! "ஹா! ரமா ரமா!''... என்று ஒரே அலறல் அலறியபடியே ரமாவின்மீது சாய்ந்தான். அவனை ஒருவராலும் பிடிக்கவே முடியவில்லை.

ப்ரேமா தேவராஜனைக் கட்டிக்கொண்டு, "அப்பா! அம்மா செத்துப் போய் விட்டாளே! அம்மா சீமைக்குப் போயிருக்கும்போதே நீ அந்த அகிலாண்டத்தைக் கல்யாணம் செய்துகொண்டு எங்களை அத்தையிடம் அனுப்பிப் படாத இம்சையும் படவைத்தாய், அம்மா வந்து அழைத்துக் கொண்டு வரும்வரையில் நாங்கள் பட்ட கஷ்டம் அந்த பகவானுக்குத் தான் அர்ப்பணம்...ராஜு! நாம்தான் பரதேசியாய்விட்டோமே! கிணற்றில் விழுந்து செத்துப்போயிடுவோம். வாடா ராஜு!''......என்று உரக்கக் கூறிப் புலம்பிக்கொண்டே அவன் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு ஓடினள்.

இதைக் கண்ட தேவராஜனின் தலையில் மலை புரண்டதுபோன்ற அதிர்ச்சியும், பயமும் உண்டாயின. கூரிய வாள் கொண்டறுப்பது போன்று குழந்தைகள் கூறிய வார்த்தைகள் இத்தனை மாதங்களுக்குப் பிறகு முழு உணர்ச்சியுடன் சுறீரென்று தைத்து அபாரமான வேதனையைச் சகிக்கமுடியாது உண்டாக்கின. "ஐயையோ! ப்ரேமா! ராஜு!... வேண்டாம்; வேண்டாம்...கிணற்றில் விழவேண்டாம். என்னை நீங்களும் கைவிட்டு விடாதீர்கள். சோதிக்க வேண்டாம். என் புத்தி சிதறிவிட்ட விபரீதத்தை நான் அறிந்தேன். ப்ரேமா! ராஜு!'' என்று அலறிக் கொண்டே ஓடினன்.

அந்த பங்களாவின் பின் பாகத்தில் கிணறுபோலுள்ள, கால்பாகங்கூட ஜலம் நிரப்பாதிருந்த பெரிய தொட்டியில் ப்ரேமா தடாரென்று

குதித்தாள்; ராஜுவும் குதித்துவிட்டான். இதைக் கண்டு உயிரே துடித்த தேவராஜன் "ஐயையோ! மோசம் போய்விட்டேனே!" என்று அலறிய வாறு அவனும் சட்டாரென்று அதே தொட்டியில் குதித்துவிட்டான்.

அவ்வளவுதான் தெரியும். பிறகு அவனுக்கு ப்ரக்ஞையே அற்று விட்டது. அன்று வெகுநேரம் கழித்து அவனுக்கு பழைய உணர்வு, நல்ல நினைவு எல்லாம் உண்டாயின. "ப்ரேமா! ராஜு! ப்ரேமா! ராஜு!" என்று கத்தியவாறு எழுந்தான்.

அதேசமயம் குழந்தைகள் இருவரும் தகப்பனைக் கட்டிக்கொண்டு "அப்பா! அப்பா! இதோ இருக்கிறோம் பாருங்கள்" என்றார்கள். தேவன் இவர்களைக் கண்டு உள்ளம் பூரித்துப் புலகிதமடைந்து "உண்மையாகவா நான் பார்க்கிறேன். நீங்கள் உயிருடன் இருக்கிறீர்களா?" என்.., என்...

ப்ரேமா:—அப்பா! நிச்சயமாய் நாங்கள் உயிருடன் இருக்கிறோம்பா! பயப்படாதே...

தேவ:—ஹா!......உயிரோடிருக்கிறீர்களா! நீங்கள் கிணற்றில்....

ப்ரேமா:—அப்பா! நாங்கள் கிணற்றில் விழுந்தவுடனே நீதானேப்பா குதித்து எங்களை எடுத்துக் காப்பாற்றிவிட்டாய். இதோ பாரு. நம்மைப் பிடித்த பீடை எல்லாம் ஒழிந்துவிட்டது. அம்மாவைக்கூட உனக்காக ஸ்வாமி வந்து உயிர்கொடுத்து எழுப்பிவிட்டார்.

தேவன் தாங்கமுடியாத சந்தோஷமும் படபடப்பும் கொண்டு, "ஹா! ...அம்மா பிழைத்தாளா?... அம்மாவா...எங்கே...என் இன்பக் கண்மணி எங்கே? என் ரமா எங்கே?"...என்று துடித்தான்.

ப்ரேமாவும் ராஜுவும் அவன் கையைப் பிடித்து இழுத்துக்கொண்டு ரமாவிருக்கும் இடத்திற்கு வந்து "அதோ அம்மாவைப் பாரு...ஸ்வாமிக்குப் பூஜை செய்கிறாள்...நீ தூரவிருந்தே பாரு. பூஜையைக் கலைக்கக்கூடாது. இப்படியே இருப்பா!" என்று தேவனைப் போகவிடாது கட்டிப் பிடித்துக் கொண்டார்கள்.

ரமா உண்மையில் தன் கணவனுக்குப் பரிபூர்ணமாய் குணமாகி விட்டதைக் கண்டு உள்ளம் பூரித்து ஆனந்தத்தினால் பரவசமடைந்து இதயம் உருக பகவானைத் துதித்துப் பணிந்து கண்ணீர் மல்க கரங்குவித்து, "ஐயனே, கருணையங்கடலே! ஆபத் ஸகாயா! அநாதைரக்ஷகா! ஜகதீசா! என்னை நீ சோதித்த போதிலும் அடியார்க்கடியன் என்னும் உண்மையை மெய்ப்பித்து என் கோரிக்கைகளை நிறைவேற்றிவிட்டாய். உன்னுடைய அபாரமான கருணையின் மாரியினால் என் பர்த்தாவின் உடம்பு குணமாகி என் வயிற்றில் பாலை வார்த்தாய். நான் கோரியதெல்லாம் அதொன்றே யாகும். அது பூர்த்தியாகிவிட்டது. இனிமேல் இந்தமாதிரி துஷ்ட சக வாஸத்தினால், பஞ்சமகாபாதகங்களைச் சேர்ந்த குடி, பிறஸ்த்ரீநேசம் முதலிய படுகுழியில் அவரைத் தள்ளி பரிதவிக்கச் செய்யாமல் காப்பாற்று.

அவருடைய செல்வங்களை அவர் வைத்து ஆனந்திக்கும்படியாயும், தொழிலில் அபாரமான வெற்றியைக் கொடுத்தும் காப்பாற்று. இனிமேல் நான் வேண்டும் வரன் அவரைப் பொருத்த வரையில் அவ்வளவுதான். மனப்பூர்வமாகக் காதலித்து என்னைக் கடிமணம் செய்துகொண்டதைக் கடைசிவரையில் நான் ஆனந்தமாக அனுபவிக்கக் கொடுத்து வைக்காத

பாவியாகிவிட்டாலும் என்னோடு என் துரதிருஷ்டம் நிற்கட்டும். அவர் ஆசையுடன் ரிஜிஸ்டர் விவாகம் செய்துகொண்ட அகிலாண்டத்தை அவருக்காகவே நான் சிரமப்பட்டு இதயபூர்வமாய் வைத்யஞ்செய்து குணப்படுத்திய விஷயமும் வேறு யாருக்குத் தெரியாவிட்டாலும் உனக்காவது தெரிந்திருக்கும் என்று நம்புகிறேன். உன் மனத்திற்குத் திருப்தியானால் அதுவே எனக்குப் போதும். அவர் இதுவரையில் பட்ட துன்பமெல்லாம் போதும். என்னுடைய பாவத்தின் வேகந்தான் அவரைச் சோதித்து வாட்டியது. இந்த சோதனை இம்மட்டுடன் போதும். இனிமேல் அவரும் அவருடைய ஆசை மனைவியும் வெகு உத்ஸாகத்துடனும் ஆனந்தத்துடனும் வாழ்க்கை நடத்தும்படி நீ கடாக்ஷித்தால் போதும்...

என் ஐயனே! ஆதிபரஞ்ஜோதி! என் வேலை இந்த நிமிடத்துடன் முடிந்துவிட்டது. இனி எனக்கு இவ்வுலகத்தில் ஒரு வினாடி கூட பிடிக்கவில்லை. நாகை விஷத்தைக் குடித்து இறப்பதற்கு உன் சன்னிதானத்திலேயே பலமுறை பிரயத்தனஞ்செய்தும் சாக்ஷாத் லோகமாதாவின் திவ்ய சரிதை என்னைத் தடைகட்டிப் பின்னுக்கு இழுக்கச் செய்தது. ஜகத்ரக்ஷகியாகிய சீதாபிராட்டியே கொடிய ராவணனின் சிறையிலிருந்த காலத்தில், தான் தற்கொலை செய்துகொண்டால் தன் கணவனின் உயிருக்கு ஹானி ஏற்படும் என்றும், தனக்குத் தன்னுயிரைப் போக்கிக்கொள்ள ஸ்வதந்திரம் கிடையாதென்றும் கூறிய பெருமையைப் படித்திருப்பதை மறந்து நான் தற்கொலை செய்துகொள்வது கூடாதென்று பேசாதிருக்கிறேன். அம்மாதிரியான ஒரு பழிக்கு என்னை இலக்காக்காமல் உடனே என்னை உன் திருவடியில் சேர்த்துக்கொள். நீயே பராமுகமாயிருந்தால் என் மனப்பிணி அகலுவதற்கு வழி ஏது?... என்னுடைய ஏனைய விருப்பத்தையும் நீ நிறைவேற்றியதுபோல் என்னுயிரை உன் திருவடியில் இதோ! இதோ! இப்போதே சேர்த்துக் கொள்ளு. உன் சரணாரவிந்தத்தில் என்னுயிரை ஒரு மலராக அர்ப்பணம் செய்கிறேன். ஏற்றுக்கொள்ளு. ஏற்றுக் கொள்ளு" என்று உண்மையிலே ரமா கண்ணீர்விட்டுக் கலங்குவதை தூரவிருந்து பார்க்கும் தேவராஜனின் உயிர் இனிமேல் நிற்காமல் தத்தளித்துத் தவித்தது.

அவளைத் தடுத்துக்கொண்டு நிற்கும் ப்ரேமாவையும் தள்ளிக்கொண்டு வேகமாக ஓடி வந்து, "ஏ பகவானே!... என்மீது உனக்கு தயவு இருக்குமாயின் என் ரமாவின் கடைசி கோரிக்கையை நீ நிறைவேற்றாதே... அவளுடைய உயிருக்கு அதிகாரி நானேயாவேன். இனி என்னை உன் சோதனைக்கு ஆளாக்காதே... ரமா! ரமா! என்னுயிர் ஊசலாடுகிறது. என்னிதயம் நின்றுவிடும்போலிருக்கிறது... அந்தகாரத்தில் மூழ்கி அல்லல் பட்ட என்னை பிரகாச உலகத்திற்குக் கொண்டுவந்த நீயா இப்படிப் பேசுவது? ரமா! ரமா!... புண்ணில் கோலிட்டாலும் பொறுக்கலாம்! வேலைப்பாய்ச்சினாலும் சகிக்கலாம்: தணலையே வாரிக் கொட்டினாலும் தாங்கலாம். உன் பேச்சின் வேகத்தை இனிச் சகிக்கமுடியாது. என்னைக் கொல்லாதே"... என்று கூறியபடியே ரமாவை வாரித் தூக்கிக் கட்டியணைத்துக்கொண்டு சிறு குழந்தையைப்போல் தேகம் குலுங்கத் தேம்பிக் கதறினான். இந்த பரிதாபக் காக்ஷியைக் கண்ட யாருடைய மனதுதான்

உருகாது. கண்ணீர் சொறிந்தது. வானமும் கண்ணீர்விட்டழுவதுபோல் மழை பெய்யவாரம்பித்தது,

31

சென்றவிடமெல்லாம் சிறப்பும் புகழும்

"அடாடாடா! மிகவும் சிலாகிக்கக்கூடிய மருந்து சார்! என்னமோ என்று பார்த்தேன். ஒவ்வொரு டாக்டரும் மனப்பூர்வமாய் ஒப்புக்கொண்டு நற்சாக்ஷிப்பத்திரமும் கொடுத்திருக்கிருர் என்ருல் மருந்தின் அபூர்வசக்தியைக் கூற வேண்டுமா! ரமாவின் திறமையை மங்கச் செய்வதற்காக எத்தனை பெயர்கள் எத்தனை ப்ரயத்தனம் செய்தார்கள்? பலவிதமான துன்பத்தின் மத்தியில் இருந்தபோதே அந்தம்மாளின் ஆராய்ச்சியின் பயன் இத்தனை சிறந்ததாக இருக்கிறதே! அவர்கள் நல்ல சந்தோஷத்துடன் தெம்பாக இந்தக் காரியத்தைச் செய்திருந்தால் இன்னும் எவ்வளவு திறமையாயும் வெற்றிகரமாயும் ப்ரபலப்பட்டிருக்கும்?' என்று ஒரு அனுபவம் நிறைந்த பெரிய டாக்டர் அவருக்கெதிரில் உட்கார்ந்திருந்த மற்ற டாக்டர்களிடம் கூறினர்.

இதைக் கேட்ட மற்ருெரு கிழவர், "சார்! நான் அப்போதே சொல்லவில்லையா! மெடிகல் காலேஜில் ரமா என்னிடம் படித்தபோதே அவளுடைய அபாரமான சாமர்த்தியத்தை நான் நன்ருக அறிவேன். "இவள் பிற்காலத்தில் ஒரு முக்கிய ஸ்தானம் வகிக்கப் போகிருள். இவளைப்போல் நீங்களும் அக்கரையுடனும் சுறுசுறுப்புடனும் வேலை செய்யுங்கள். படியுங்கள்' என்று தேவராஜன் உள்பட நான் வகுப்பிலேயே சொல்வதுண்டு. அதேபோல் அவள் முன்னுக்கு வந்திருக்கிறதைப்பற்றி நான் பரம சந்தோஷமும், த்ருப்தியும் அடைகிறேன். ரமாவின் திறமை இதோடு நிற்காமல் அவள் புருஷனின் குணத்திற்காக அவளுடைய கற்பனையின் சாதுர்யத்தினல் கையாண்ட முறைகளை மிகவும் பாராட்டிப் பைத்தியக்கார ஆஸ்பத்திரியின் டாக்டரான சதாசிவமே என்னிடம் நேரில் சொன்ஞர்" என்ருர்.

இன்னொருவர் பேசத் தொடங்கி, "வாஸ்தவம் சார்! நான்கூட சில தினங்கள் இம்முறைகளை நேரில் பார்ப்பதற்காகப் போயிருந்தேன். அவளுடைய பொறுமையும், கற்பனையின் திறமையும் என்னை ப்ரமிக்கச் செய்தன. சுமார் 4 மாதகாலமாக அந்தம்மாள் அவ்விருவருடனும் பட்ட சிரமத்தின் பலனுக அவர்கள் உடம்பு ஒன்றுமில்லாதிருக்க வேண்டுமே என்று நாங்கள் தினம் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிருேம். இரவு பகல் தூக்கமில்லை. ஆகாரமில்லை. மன நிம்மதி இல்லை. ச்ரமத்தைச் சகித்துக்கொண்டு வெகு பொறுமையுடன் உழைத்ததற்குப் பலனும் கடவுள் கொடுத்தார். அரசாங்கத்தார் இந்த மருந்தை வெகு ப்ரபலப்படுத்தி நற்சாக்ஷிப்பத்திரமும் கொடுத்தது போற்றத்தக்கதாகும். நாமெல்லோரும்

சேர்ந்து அந்தம்மாளுக்குப் பாராட்டு விருந்து ஒன்று நடத்தவேண்டும். அதைப்பற்றி யோசிப்பதற்காகவே நாம் இன்று இங்கு கூடுவதற்கு ஏற்பாடு செய்தேன்'' என்றதை எல்லோரும் ஆமோதித்து 'இன்றே அவர்களிடம்போய் சொல்லிவிட்டு தேவராஜனையும் பார்த்து வரலாம்' என்று முடிவு செய்துகொண்டு ரமாவின் பங்களாவுக்கு வந்தார்கள்.

ஏற்கெனவே ரமாவின் பங்களா வாசலில் ஏகப்பட்ட கார்கள் நின்றிருப்பதைக் கண்டு வியப்புடன் இவர்களும் உள்ளே சென்றார்கள். ஆண்களும், பெண்களுமாக பலபேர்கள் குழுமியிருந்தார்கள். பெரிய ஹாலின் மத்தியில் ரமா சோபாவில் படுத்திருந்தாள். அவள் அருகில் தேவராஜன் வாடி வதங்கிய முகத்துடன் உட்கார்ந்திருந்தான். குழந்தைகள் தாயாரின் அருகிலேயே அவளை யணைத்தபடி உட்கார்ந்திருந்தார்கள்.

ரமாவின் முகத்தில் தாண்டவமாடும் தேஜஸின் அழகை வர்ணிக்கவே திறமில்லை. கண்களில் வீசும் ஒளி அவளுடைய இதயத்தின் தெளிவையும் பரிசுத்தத்தையும் நன்கு எடுத்துக்காட்டியது. புன்னகை தவழும் வதனத்தில் மன நிம்மதியும் விச்ராந்தியும் காணப்பட்டன.

வந்த டாக்டர்கள் ரமாவின் படுக்கையைக் கண்டு ப்ரமித்தவர்களாய் ''என்ன உடம்பு! தேவராஜா! உன்னை இந்நிலைமையில் பார்ப்பதற்கு நாங்கள் வெகு சந்தோஷப்படுகிறோம்...உன்னுடைய இந்த நற்காலத்திற்குக் காரணம் ஸ்ரீமதி ரமாதேவிதான் என்பதில் இனியும் சந்தேகமுண்டா! முன்போல் நீ இனி ரமாவின் புகழைக்கண்டு பொறாமை கொள்ளமாட்டாயல்லவா! பொறாமை என்ற ஒரு உணர்ச்சி உன்னை எத்தகைய படுகுழியில் தள்ளிவிட்டது பார்த்தாயா! எந்த உயர்ந்த பொருளை நீ கேவலமாக எண்ணி அலக்ஷியம் செய்தாயோ அந்த ஒரு ஒப்பிலாத ரமாவால் தான் உனக்கு மீட்சி உண்டாகியது. எந்த மது வகையை நீ வெகு ச்ரேஷ்டமாகக் கருதினாயோ அதே மதுவகைகள் உன்னுடைய உயிரைக் கவருது உனது மானம் மரியாதை முதலிய நற்குணங்களை அடியோடு கொலை செய்து உன்னை ஒரு புழுவிற்கும் கேவலமாக ஆக்கிவிட்டன.

தேவா! இனியாவது வைரத்தை வைரமென்றே நினைப்பாயா! அன்றி வெறும் கல்லென்று நினைப்பாயா!'' என்று கூறுவதைக் கேட்கக் கேட்கத் தேவராஜனின் கண்களில் நீர் ஆறாய்ப் பெருகியது. வாய் பேசமுடியாது அடைத்தது. ''வைரத்தை வைரமாக அறியும் சக்தியும், இதயத்தில் வைரம் போன்ற திட எண்ணமும் உண்டாகாத ஜடமாகவிருந்த என்னை மனிதனாகச் செய்த உத்தமியை இனி என்னெஞ்சம் மறக்குமா! நான் செய்த பாதகமெல்லாம் என்னையும் என் ரமாவையும் இதுபரியந்தம் வருத்தியதோடு நின்றால் போதும். என் ரமாவுக்கு உடம்பு குணமாகி எழுந்துவிட்டால் போதும். அதொன்றைத்தான் நான் அல்லும் பகலும் அனவரதமும் வேண்டுகிறேன்'' என்று பரிதாபத்துடன் கூறினான்.

அதே சமயம் படுக்கையில் படுத்திருந்த ரமா கணவனை நோக்கி ''டாக்டர்! நான் எத்தனை சொன்னாலும் நீங்கள் கேட்கமாட்டேன் என்கிறீர்களே! என் பிணிக்குபரம அவுடதத்தைக் கடவுள் கொடுத்திருக்கையில் ஏன் பயப்படுகிறீர்கள்? நான் ஒருபோதும் சாகமாட்டேன். எத்தனையோ

வருட காலங்களுக்குப் பிறகு தங்களுடைய அன்பைப் பெற்றதும் அதைத் தாங்கமாட்டாது சிறிது அசைவு கண்டதேயன்றி வேறல்ல. கவலை வேண்டாம்'' என்றாள்.

அங்கு கூடியுள்ளவர்களில் அனேகர் ரமாவுக்கு புஷ்பமாலைகளைக் கொண்டு வந்திருந்தார்கள். அவள் படுக்கையிலிருப்பதால் கையில் வைத்துக்கொண்டு தியங்கியதைக் கண்ட ரமா மெல்ல எழுந்து உட்கார்ந்து அவர்கள் முகத்தைப் பார்த்துப் புன்னகை புரிந்தவாறு ''உம் மாலையைக் கொண்டுவாருங்கள்'' என்று கூறினாள்.

இது எல்லோருக்கும் ஆச்சரியமாகவிருந்தது. மாலையை ரமாவே கையில் வாங்கி தன் கணவனுக்குச் சூட்டினாள். தேவராஜனுக்கு இப்போது அவமானமும் துக்கமும் கப்பிக் கொண்டு வந்தன. அவனே மற்ற மாலைகளை வாங்கி ரமாவுக்குத் தன் கைகளாலேயே சூட்டி ஆனந்தக் கண்ணீர் விட்டான். அருகிலிருந்தவர்கள், ''ஜே! ஜே'' என்று ஆரவாரம் செய்தார்கள்.

ரோஜாமாலையாதலால் மலர்கள் புலபுலவென்று உதிர்ந்தன. இதைக் கண்ட ரமா இம்மலர் உதிர்வதுபோல் மனிதர்களின் மனதில் நம்பிக்கையும், அன்பும் உதிர்ந்து போகாமல் இதன் செடியிலுள்ள முள்ளு எத்தனை கூரியதாய் நிற்கின்றதோ, அதேபோல் நின்றால் ஒருவிதமான துன்பமும் இன்றி, இப் புஷ்பம் அச்செடியினின்று உற்பவிப்பதுபோல் பல நற்காரியங்களைச் செய்து ஒழுக்கமின்மை, சந்தேகம், பொறாமை முதலிய தீய குணங்களை இம் மலர் உதிர்வது போல் உதிர்த்துவிடலாம்'' என்று கூறியதைக் கேட்ட எல்லோருக்கும் சந்தோஷமும் வியப்பும் உண்டாயின.

அதில் ஒருவர் ''ஸ்ரீமதி ரமாதேவியின் உபமானமும் அவருக்கே சரியானதாகும். ரோஜா புஷ்பத்தைப் போன்ற சிறந்த அழகும், மணமும் உள்ள அவுடதத்தைத் தன் ஆராய்ச்சியால் செய்தார். அந்த அவுடதத்தை உட்கொண்ட ஏனையோருக்கும் ரோஜா மலர் உதிர்வதேபோல் வ்யாதி உதிர்ந்துபோய்விடும். சரிதானே!'' என்றார்.

''ரொம்ப சரி...ஆக்ஷேபனை இல்லாமல் சரியானதேயாகும்'' என்று எல்லோரும் கைகொட்டி ஆரவாரித்தார்கள். வந்தவர்களெல்லாம் விருந்துக்கு அழைத்துவிட்டு ரமாவை மிகவும் கொண்டாடிப் பின் விடை பெற்றுச் சென்றார்கள்.

இடையில் நாட்கள் சில கழிந்தன. ''ரமா! நீ முதல் தேதி கட்டாயம் வேலை ஒப்புக்கொள்ளவேண்டுமென்று கவர்மெண்டிலிருந்து கடிதம் வந்திருக்கிறது. இன்று 28 தேதியாகிவிட்டது. நாளையே நாள் நன்றாகவிருக்கிறதென்று ஸ்வாமிகள் சொன்னார். பிரயாணத்திற்குச் சித்தமாகலாம்'' என்று தேவராஜன் வெகு குஷியுடன் கூறினான்.

''டாக்டர்! நான் வேலைக்குப் போவதாகவே உத்தேசமில்லை. வேண்டாமென்றுதான் எழுதத்துணிந்துவிட்டேன். வேலைக்குப் போவானேன், வீண் வயிற்றெரிச்சல் உங்களுக்கு வருவானேன்? மறுபடியும் ஒரு மகாபாரதம் நிகழ்வானேன்?...எதுவுமே வேண்டாம். நான் உங்களுக்குப் பாத சேவை செய்துகொண்டு இப்படியே இருப்பதுதான் இனி எனக்கு ப்ரம்மானந்த பதவியாகும்'' என்று ரமா கூறி முடிப்பதற்குள்

தேவராஜன் கண்ணீர் புலபுலவென்று உதிர ரமாவை நோக்கி "ரமா! இன்னுமா என்னைக் குத்திக் காட்டுகிருய்? எனக்கு நீயே புத்தியையும் கற்பித்து அதை சோதித்துப் பரீக்ஷிப்பது அழகா! உன்னுடைய சாமர்த்தியத்தை, முதிர்ச்சியை, மதிப்பை, அன்பை அறியாத மூட்டாளாகி பாவியிலும் பாவியாகி அதன் பலனை அனுபவித்தேன். இனிமேல் என்னைக் குத்திக்காட்டாதே. பொறையில் பூமிதேவியின் அம்சத்தையுடைய நீ என்னையொரு மனிதனுக்கியது மட்டுமின்றி மதிப்பாக வாழ வழியும் செய்துவிட்ட ரகஸியத்தையும் அறிந்தேன்...

ரமா இடைமறித்து "என்ன வழி அது? எனக்கொன்றும் தெரியாதே!" என்று கண்ணைச் சிமிட்டினுள். "ஆமாம். உனக்கெப்படித் தெரியும். ரமா! ஆஸ்பத்திரியில் கண்ணியத்துடன் வேலை செய்யும் யோக்யதை எனக்கு இல்லை என்று தெரிந்தும், உன் பிரேமையின் மிகுதியால் சம்பாதித்து விட்டாய். அதைச் செவ்வனே செய்து சிறப்படைய பகவான் எனக்கு நல்ல புத்தியும், கிருபையும் அருளவேண்டும். இனி நீ தடை செய்யாதே. ரமா! ரமா!... இன்னும் என் மீது கோபம் தெளியவில்லையா! என் பிழைக்காக என்னை மன்னிக்கமாட்டாயா!

"ஹா! ஹா!... இதென்ன வார்த்தை! பகவானல்லவா நம்மெல்லோரையும் மன்னிக்கவேண்டும்...அவரை அனன்யபாவமாக நம்புங்கள். ஒரு குறைவும வராது. அந்தப் படுபாவி நாகராஜன் போன இடமே தெரியவில்லை. என் போராத காலத்திற்கு அவன் மீண்டும் வந்துவிடுவானுல் மறுபடியும் உங்கள்"...என்று ரமா முடிப்பதற்குள் "ரமா! இனி திரும்பிவரமாட்டான். அவன் கதை உனக்குத் தெரியாது. வைத்தியத்திற்கு வந்த ஒரு பெண்ணைக்கெடுத்து நகைகளை அபகரித்துக்கொண்ட ரகஸியம் வெளியாகி அகப்பட்டுக்கொள்வான்போலாகியதும் சமயம் பார்த்து ஓடி, போலீஸார் தேடவாரம்பித்ததை யறிந்ததும் தற்கொலை புரிந்துகொண்டானும். படுபாவி. உலகைவிட்டு ஒழிந்தான்.

ரமா:—ஐயையோ! இந்த விஷயம் அகிலாண்டத்திற்குத் தெரியுமா!

தேவ:—ஐயோ! இனி அப்பெயரை எடுக்காதே. உன்னுடைய உத்தம குணத்தின் அழகினுல் அந்த மகாபாதகியை நீ ஒரு புனிதையாக்கி ஹரிஜன சேவை செய்ய உன் தந்தையின் ஆச்ரமத்தில் சேர்த்தாய். நானுயிருந்தால் இந்த ஊரைவிட்டே திருட்டுச்சாமியாருடன் ஓட்டி இருப்பேன். போக்கிரிச்சாமியார் என்னிடமே வாய்பரப்பு வாங்கி உளவறிந்துகொண்டு அதே விஷயங்களை ஜோஸியம் சொல்வதுபோல் சொல்லிய ரகஸியம் இப்போதல்லவா தெரிகிறது. ரமா! இன்னொரு ரகஸியம் உனக்கு இன்னும் தெரியாதே! உன்னுடைய ஆப்தமான பெரிய டாக்டராகிய வஸந்தராவும் ஆத்மநாதனுந்தான் அந்தச் சாமியாருக்குப் பணத்தைக் கொடுத்து உன்னைச் சிமைக்கனுப்பி படிக்கவைத்து உன்னுடைய புகழை அதிகப்படுத்தவேண்டுமென்ற நல்ல நோக்கத்துடன் கூறும்படிச் செய்தார்களாம். அதனுல்தான் அவன் அப்படிக் கூறினுளும். வாஸ்தவம்! அவர்கள் அச்சமயம் அம்மாதிரி உபாயம் செய்யாதிருந்தால் இந்த நல்ல பெயரும் அழியாத புகழும் உண்டாகியிருக்காது. இன்னும் என்னென்ன அவஸ்தைகள் பட்டிருப்பாயோ! என் பாழும் புத்தி தடுமாற்றத்தில் எத்தகைய விபத்

துக்கள் உண்டாகியிருக்குமோ! யார் கண்டது? உன் தலைவியை நான் உதாசீனஞ்செய்து அலக்ஷ்யமாகப் பேசியதற்கு அவர்களாலேயே எனக்கு என்றும் அழிவிலாத நன்மைகள் ப்ரகாசிக்கும்படி பகவான் செய்து விட்டார். அவர்கள் செய்துள்ள நன்மையின் பயன், இன்று எந்தப் பெரிய ஷாப்புகளில் பார்த்தாலும் ஸ்ரீமதி ரமாதேவியின் புகழ் புகைப்படமும், அவர்களின் மருந்துகளும் ப்ரஸன்னமாகி இருக்கிறதைக் காணும் போது உள்ளம் உவமையின்றி பூரிக்கின்றது. எந்த டாக்டர்களின் சம்பாஷணையிலும் ஸ்ரீமதி ரமாதேவியும் அவர்களின் ஆராய்ச்சியில் உத்பவித்த அவுடதமும் சலக்காமலில்லை. இந்தப் பெருமையை எனக்கு அவர்கள் கொடுத்ததற்காக நான் எனது வந்தனத்தைச் செலுத்தி நன்றி-பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறேனல்லவா!'' என்று தன்போக்காக சந்தோஷ மிகுதியுடன் சொல்லிக்கொண்டிருப்பதைக் கேட்டுக்கொண்டே வந்த வஸுந்தராவும் ஆத்மநாதனும் இன்ப வாரிதியில் மிதந்தார்கள்.

"ஓகோ! இந்த ரகஸியத்தை உங்களுக்கு யார் வெளியிட்டது?'' என்றார்கள். "ரகஸியமாகச் செய்த காரியம் இதோ சாமியாரின் கடிதத்திலேயே வெளியாகியது. அதற்காக மிக்க வந்தனம்'' என்று கூறி தேவன் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்தான். வஸுந்தரா மிகவும் அன்புடன் பேசத்தொடங்கி 'சரி. போனது போகட்டும்...ரமா! உன் தகப்பனாரை தரிசனஞ் செய்துவிட்டு வரலாம் வா! அவருடைய ஆச்ரமத்து ஜனங்கள் உன்னைத் தரிசிக்கப் பேராவல் கொண்டு காத்திருக்கிறார்கள். நான் உங்களைக் குடும்ப சமேதராய் அழைத்து வருவதாகக் கூறி வந்திருக்கிறேன். வாருங்கள்'' என்று அழைத்தாள்.

அடுத்த நிமிடமே வேறு வார்த்தை இன்றி எல்லோரும் கிளம்பி ஆச்ரமத்திற்கு வந்தார்கள். ஆச்ரமத்து ஜனங்கள் தம் தலைவியை ஆர்வத்துடனும் அன்புடனும் வரவேற்று ஜே கோஷம்செய்து மாலைகளைச் சூட்டி ஆரவாரித்தார்கள். வந்தவர்கள் யோகீச்வரரை நமஸ்கரித்துப் பின் "ஸ்வாமி! நாங்கள் அறிந்தும் அறியாமலும் செய்திருக்கும் பிழைகளை எல்லாம் பொறுத்து எங்களை ஆசிர்வதிக்க வேண்டும். காலச் சக்கரம் யாருக்கும் என்றும் ஒரே மாதிரி சுழலாதல்லவா! அதுபோல் நாங்களும் அதன் வயப்பட்டு அல்லலுற்று ஆடிப்பாடி ஓய்ந்து வந்திருக்கிறோம். எங்களை ஆசீர்வதிக்கவேண்டும்'' என்று தம்பதிகள் வேண்டினார்கள்.

யோகீச்வரர் ஆனந்தக் கண்ணீர் முட்ட இதயத்தில் சந்தோஷ வேகம் அலைமோத, மனது களி வெறிகொண்டு தாண்டவமாட "சர்வமங்களானிபவந்து. தீர்க்க சுமங்கலீபவ...தீர்க்காயுஷ்மான்பவ'' என்று ஆசீர் வதித்தார். ஆனால் பதில் பேச்சு பேசவில்லை. மகிழ்ச்சி மயமான இதயத்தைத் திறந்து காட்டுவதேபோல் பார்த்தார். அந்தப் பார்வையில் ஜ்வலிக்கும் த்யாகம், தயை, சாந்தம், உதாரம், அன்பு முதலிய ஜோதியைக் கண்டு எல்லோருடைய இதயங்களும் பூரித்து மலர்ந்தன. ஆனந்தக் கண்ணீர் முட்டியது.

யோகீ:—குழந்தைகாள்! நம்முடைய இந்து தர்மத்திற்கு முக்யமான பல இதிகாஸ புராணங்கள், ராமாயண பாரத பாகவதம் முதலிய அரிய

பற்பல நூல்கள் ஏராளமாயிருப்பினும் அவைகள் பகவானின் பக்தர்களது வாயிலாகப்பிறந்து உருவகமாயின. ஆனல் ஸ்ரீ பகவத்கீதை இருக்கின்றதே, அது சாக்ஷாத் எம்பெருமாளுகிய ஸ்ரீ கண்ணனின் திருவாயிலிருந்தே மலர்ந்தருளிய ஒப்பற்ற மலராகும். ஆதலால் அதற்கு ஏற்றம் அதிகம் உண்டு. பகவானின் ஒவ்வொரு அம்சத்தையும் அறிந்து உலக தத்துவங்களேயும் தெரிந்து, மனிதன் தன் கடமையை உணர்ந்து நடப்பதற்கு பகவத்கீதையைவிட ஸாரமானதும் ஜீவியத்திற்கு அஸ்திவாரமானதுமான பொக்கிஷம் வேறு எதுவுமே இல்லே. ஆகையால் ஒவ்வொருவரும் தவருது பகவத்கீதையைப் படித்துப் பயனடையுங்கள். பகவானின் ஒவ்வொரு விசேஷாம்சங்களேயும் அந்த கீதையின் ஸாரத்திலறியலாம். அதை ஒருவன் நன்கறிந்த பிறகு கெட்டுப்போவதிலும், தன் மக்கள் மனேவியைக் கொலே செய்வதற்கொப்ப இம்சைசெய்வதிலும் அவன்மனம் நாடாது. ஸத்வகுணத்தில் சிறந்த சீலனய் விளங்குவான். இதோ பகவத்கீதை'' என்று கூறி அங்குள்ள எல்லோருக்கும் ஒவ்வொரு கீதை புஸ்தகத்தைக் கொடுத்தார்.

இந்த உபதேசத்தையும் பரிஸையும்பெற்ற பிறகு பேரானந்த நித்ய கல்யாணவைபவ சுகமும் சந்தோஷமும் வேறு வேண்டுமா! எல்லோருடைய மனதில் ஆனந்தம் அலேமோதி களிவெறிகொண்டு கூத்தாடச்செய்தது; மெய்மறந்தார்கள். எல்லோருடைய மகிழ்ச்சியையும் கண்ட அங்குள்ள கீதாசாரியனின் புகைப்படத்தில் புன்னகை அரும்பியதுபோன்ற ஒரு தோற்றத்தைக் கண்டு தம்பதிகளின் உள்ளங்கள் பூரித்தன. கரங்கள் குவிந்தன. கண்ணில் ஆனந்த ஊற்று சுரந்தது. பகவான் தங்களே ஆசீர்வதிப்பது போன்ற ஒரு தோற்றம் உண்டாகியது. இன்பத்தின் உணர்ச்சி தேகம் முற்றும் பரவிப் புலகிதமடையச் செய்தது,

மங்கல மென்ப மனேமாட்சி மற்றத
னன்கல நன்மக்கட் பேறு. —திருக்குறள்

8MKN,P N67

சுபம்! சுபம்!! சுபம்!!!

TAMIL NADU ARCHIVES LIBRARY EGMORE, MADRAS No. 104344

முற்றிற்று

A3167